சூஃபி சொன்ன கதை

■ கே.பி. ராமனுண்ணி

தமிழில் : குறிஞ்சிவேலன்

மலையாளத்தில் வெளியாகி, மிகுந்த சர்ச்சைக்குள்ளான இந்நாவல், இதன் அதிர்ச்சி மதிப்புகளைத் தாண்டியும் பேசப்படுவதற்குக் காரணம், அமைப்பில் மிளிரும் காவியத் தன்மை.

HOUSTON PUBLIC LIBRARY

R01307 70583


Digitized by the Internet Archive
in 2023

https://archive.org/details/isbn_9788183681155

சூ ஃ பி சொ ன் ன க தை

சூஃபி சொன்ன கதை

கே.பி. ராமனுண்ணி

தமிழில் : குறிஞ்சிவேலன்

சூஃபி சொன்ன கதை

Sufi Sonna Kadhai

A Novel by K.B. Ramanunni. Translated from malayalam by Kurinjivelan ©

First Edition : April 2006

184 Pages, Price Rs. 110

Printed in India.

ISBN 978-81-8368-115-5

Kizhakku - 116

Kizhakku, An imprint of
New Horizon Media Pvt. Ltd.,
No.33/15, Eldams Road,
Alwarpet, Chennai - 600 018.
Phone : 044 - 42009601/03/04
Fax : 044 - 43009701

In Madurai: 82, 1st Floor, Dhaanapa Muthali St.,
Madurai - 1. Phone: 0452 - 4230701

Email : support@nhm.in

Website : www.nhm.in

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.

Publisher
Badri Seshadri
Chief Editor
Pa. Raghavan
Editor
A.R. Kumar
Editor-in-charge
Marudhan
Asst. Editor
M.Muthuraman
Sub Editors
Mugil
Sa.Na. Kannan
R. Muthukumar
Balu Sathya

TITLE : Cūkapi conna katai /
AUTHOR STAT : Kē. Pi. Rāmaṉuṇṇi ; Tamiḻil, Kuṟiñcivēlaṉ.
EDITION STAT : 1st ed.
IMPRINT : Chennai : Kiḻakku, 2006
NATURE SCOPE : A novel.
LANGUAGE : In Tamil.
D.K Agencies (P) Ltd. DKTAM-5455
www.dkagencies.com

''இந்த நாய்க்கு எதுக்குடா மசூதி? கட்டி வச்சிருக்கிற கக்கூசுல போயி தொழச் சொல்லேண்டா?''

ஒன்று

சத்தியத்துக்கும் புத்திசாலித்தனத்துக்குமான சதுரங்களில் மனம் சலித்துவிட்ட எங்கள் கிராமத்தவர்களுக்கு எங்கள் ஊர் கடற்கரையி லேயே ஒரு மஸார்* எழும்பியதை அறிந்ததும் மிகவும் மகிழ்ச்சி உண் டாயிற்று. அது ஒரு மூடநம்பிக்கை என்றால் மூடநம்பிக்கையேதான்.

கொஞ்ச காலமாகவே எதார்த்த நிலையின் கரடுமுரடானவற்றை மட்டும் நம்பக் கற்றுக்கொண்டு என்ன பலன்? மாயத்தோற்றமுள்ள திட்டுக்களையெல்லாம் கிளறி மூடி, ஊரே வறண்டுபோய்க் கிடக்கிறது. மையலின் சுருக்கங்களில்தான் என்றாலும் வழுக்கிக் கொண்டிருந்த எங்களின் மனம் இன்று மழுங்கிப் போய் இருக்கிறது. ஜாதிமத வேறுபாடுகளைத் தாண்டி கிராமத்தவர்களுக்கு ஆறுதல் அளித்துக் கொண்டிருந்த மூஸான் தங்ஙளுடையதும்,** கண்டேன் சிறைக்கல் பகவதியினுடையதுமான புனித சக்தி, என்றோ வடிந்து போய்விட்டது. அவற்றுக்கு பதில் புதியது எதையாவது பிரதிஷ்டை செய்தால் என்ன? வேண்டாம். அதற்குப் பதில் இன்று வந்து சேர்ந்திருக்கும் பீவியை அதனுடைய எல்லா கற்பனைக் கதை களோடும் கடற்கரையில் மட்டுமல்ல, மனத்திலும் நாங்கள் குடியமர்த்தப் போகிறோம்.

பீவியின் மஸாருக்கு எதிரே நம்பிக்கை இல்லாதவர்கள் அச்சிட்டு வீசியிருந்த நோட்டீஸின் பிரதியை நான் கோபத்துடன் குப்பையில் எறிந்தேன். மிகவும் கஷ்டமாக இருக்கிறது. புதியதொரு எதிர்

---

* மஸார் - புனித சமாதி

** தங்ஙள் - முஸ்லிம்களின் புனிதர்

பார்ப்பின் துளிர் என்றாலும் அதை முளையிலேயே கிள்ளி எறிவதற்கு நீங்கள் இப்புவியில் அனுமதிக்கக் கூடாதல்லவா?

அந்தத் தென்றலில் மிதப்பதுபோல் பீவியின் மஸாரை நோக்கி நான் நகர்ந்தேன். கடற்கரைக்குப் போகும் சாலையில் ஏறியதும், கடலின் கர்ஜனை தீராத் துன்பங்களுக்கான மழை மேகங்களை உணர்த்தியது. காரணமற்ற துன்பங்களின் பிடியில் அகப்பட்டுக் கொண்ட எங்களை, கரையேற்றுவதற்காகவே பீவி கடற்கரைக்கு வந்திருக்கிறாள் என்பதை நினைத்தபோது எனக்கு அழுகையே வந்துவிட்டது.

ஒரு ஜாதிக் கலவரத்துக்கும் தெருச் சண்டைக்கும் பின்புதான் எல்லா அனர்த்தங்களுமே ஏற்பட்டன. ஓணத்துக்கும் பெருநாளுக்குமாக மாறி மாறி விருந்துண்டு திரிந்துகொண்டிருந்த எங்களுக்கு திடீரென என்னவோ நேர்ந்துவிட்டது என்பதை இப்போது நினைத்துப் பார்த்தாலும் பிடி கிடைக்கவில்லை. ஒரு கெட்ட சகுனத்தின் போதாத காலம்போல் இப்போது கடைத் தெருவிலும் காலரா பரவிக் கொண்டிருக்கிறது.

தாங்கள் கொண்ட பகையை, போக்கிக் கொள்வதுபோல் ஆகாயத்தில் உயர்ந்து நிற்கும் மேகத் தூண்கள் எங்கள் கடல்வெளியை இடியுடன் இறங்கி கடித்துக் குதறின. நேசித்தால் இதயத்தையே பறித்துக் கையில் கொடுக்கவும், தவறினால் திட்டுவதுடன் அடித்து உதைக்கவும் கூடிய நல்ல இதயமுடையவர்களான மீனவர்கள் பலர், கடலில் செத்து மடிந்தார்கள்.

வெளுத்தின் காவுகளில்* நன்கு கொழுத்து அழகுக் கூட்டங்களாகத் திரிந்துகொண்டிருந்த குள்ளநரிகள் கூட்டம், வெறி பிடித்து வீட்டு நாய்களை கடித்துக் குதறின. அந்த வீட்டு நாய்களால் கடிபட்ட சில இந்துக் குழந்தைகள் மருத்துவமனையில் அடைக்கலமாயினர். அங்கு சேர்ந்த குழந்தைகள் ஒன்றன்பின் ஒன்றாக வெறிபிடித்து, தண்ணீர்கூட அருந்தாமல் இறந்தார்கள்.

ஏதோவொரு விட்டகுறை தொட்டகுறையின் சங்கிலி வளையங்களைப் போல், துன்ப வளையங்கள் பல இடங்களிலும் வட்டமிட்டன.

---

* காவு - அடர்ந்த வனப்பகுதி

அக்காலத்தில் மதச் சண்டைகளை மறந்து பிரியாணி தின்று கொண்டு இருந்த மன்சிலுக்குள் இந்துக்களும், அதற்குப் பதில் பாயசம் அருந்திக்கொண்டிருந்த வீடுகளுக்குள் மாப்பிள்ளைகளும் சந்தித்துக் கொண்டிருந்த வீடுகளுக்குள், மாப்பிளைக்களும் சந்தித்துக் கொண்டிருந்தாலும், எங்களின் இதயத்தில் வெப்பம் எஞ்சியிருந்தது. மனம் முறிவுபடும்போது சொந்தங்களிலிருந்து ஒருபோதும் திரும்ப எடுக்கமுடியாத சக்திதான் ஆவியாகப் போய்விடுகிறது.

இவையனைத்தையும் பார்த்து மனமுருகிய இக்கிராமத்தின் தாய்மை தான் இறுதியில் பீவியாக அவதரித்துள்ளது. சந்தனப் பத்தியும் தேங்காய் எண்ணெயுமாக மஸ்ஜிதை அடைந்துவிட்டால் போதும். அதன் பின் இந்து என்றோ முஸ்லிம் என்றோ வித்தியாசம் இல்லை. அதற்கான பலாபலன்களும் சமமாகத்தான் இருக்கும்.

நலிவுற்ற அந்த மக்களோடு சேர்ந்து நானும் பீவி நகரை நோக்கிச் செல்லும் மணல் பாதை வளைவில் திரும்பினேன்:

''பீவி.. தாயே பீவி...''

சுவாசங்களில் ஜுரமலைகள் சுருக்கிட்டு என் தொண்டை இடறியது. மாலை நேரம் மங்கியிருந்தது. கறுக்கும் கடலின் கூம்பும் கரங்கள் பீவியிடமுள்ள நெருக்கத்தைக் காண்பிப்பதற்காக உயர்ந்து எழும்பின. கானகம் வழியாக வரும் ஏதோவொரு சூறாவளியின் செத்தைக் கூளங்களைப் போல் ஆகாயத்திலிருந்து குளிர்ச்சி இறங்கி வந்தது.

அங்குமிங்கும் கட்டப்பட்டுள்ள ஓலை வேய்ந்த கடைகளிலிருந்து சூரிய ஒளி ஒளிர்ந்துகொண்டிருந்தது. இளமையிலிருந்தே பெட்ரோமாக்ஸின் ஒளி என்னுள் மேன்மையானதொரு மகிழ்ச்சியை நிறைத்திருந்தது. எதிர்பார்ப்புகளின் பிரதிபலிப்புதான் எங்கும் விசேஷங்களுக்குக் காவல்புரியும் பெட்ரோமாக்ஸ்கள்.

''பீவிக்கான தேங்காய் எண்ணெய். பீவிக்காக தேங்காய் எண்ணெய் வேணுமா?... வாங்க, வாங்க. இங்கே வாங்க.''

கடை வியாபாரிகள் பீவியின் பக்தர்களான எங்களை அழைத்துக் கொண்டிருந்தார்கள்.

இடுப்பிலும் கைகளிலுமாக மொட்டைச் சிறுவர்களுடன் ஒரு மாப்பிளா பெண் கடைக்குள் நுழைந்தபோது, நானும் அவர்களுக்குப் பின்னால் சென்றேன். தற்செயலாக வந்துசேரும் சகபயணிகளுடன் கபடமற்ற நெருக்கமும், அவர்களுக்குப் பின்னால் நடந்து செல்லும் பணிவும் என்னுடைய பலவீனமாகும். அந்த முஸ்லிம் சகோதரி சிறிய கேனில் நூறு மில்லி தேங்காய் எண்ணெயும் பெரிய அளவில் சந்தன பத்தி பாக்கெட்டையும் வாங்கியபோது, நானும் அதே அளவிலும் தரத்திலுமாக பொருள்களை வாங்கினேன். வாங்கிய பொருளைக் காட்டியும் காட்டாத தன்மையில் பின்னால் நெருங்கி நிற்கும் என்னை, அவள் வாஞ்சையுடன் உற்று நோக்கினாள்.

பொடி மணலில் புதைந்து நடந்த எங்களின் பாதங்கள் தூக்கத்தில் நடப்பவர்களுடையதைப் போலாகிவிட்டன. மஸ்ஜிதுக்கு அருகில் நெருங்கியதும், தளும்பி வழிந்த வெளிச்சப் பாய்ச்சலில் நான் அவள் முகத்தைக் கவனித்தேன். ஐந்தாறு சிறுவர்களை இழுத்துக் கொண்டு நடக்கும் கடும் வேதனையைவிட, பீவியிடம் கொண்ட தனித்துவமான கடனைத்தான் அவளிடம் நான் கண்டேன். அடக்கிய முணுமுணுப்பைப் போல் மஸ்ஜிதிலிருந்து வெளியேறும் மந்திர ஒலிகளில் மூழ்கியவாறே அவளும் அழைத்தாள்:

''பா...டி, ...இங்க, ...பாடி'' (வாடி... இங்க... வாடி)

பின்னால் தத்தித் தத்தி வந்த பீவிகள் வேகமெடுத்து முன்னோக்கி பறந்தோடினார்கள். பெண்களுக்காக ஒதுக்கியுள்ள பகுதியை நோக்கி அவர்கள் வட்டமாக நகர்ந்தபோது, நான் அவ்வழியிலிருந்து விலகி நடந்தேன்.

தேங்காய் எண்ணெயின் மணமும் சந்தன பத்தியின் புகையும் கலந்த திரவச் சூழலாக இருந்தது மஸ்ஜிதுக்கள். அந்த இளம் வெப்பமுள்ள குழைச்சலில் கைகால்களை அடித்து உதைத்துக் கொள்ளும் அனுபவத்துடன் நான் ஒரு குழந்தையாகவே உருமாறினேன்.

கபருஸ்தானுக்கு* முன்னாலுள்ள கியூவில் நகரும்போது, தலைக் கட்டும் வட்ட தாடியும் உடைய வெள்ளாடை அணிந்தவர்கள் கிரந்த பாராயணமோ மந்திர ஜெபமோ செய்வது தெரிந்தது. அவர்களின்

---

* முஸ்லிம்களை புதைக்கும் இடம்.

விரல்களுக்கிடையே முத்துமாலைகள் நழுவின. அவர்களுக்கு முன்னால் பொறுமையிழந்தவனாக நான் சென்று சேர்ந்ததும், என் கையிலிருந்த தேங்காய் எண்ணெய் பாத்திரத்தை ஒரு முஸ்லியார் வாஞ்சையுடன் பெற்றுக்கொண்டார். பின் அதிலிருந்து சிறிய அளவில் மஸாரில் ஊற்றி அர்ப்பித்துவிட்டு, எஞ்சியதை என்னிடமே திருப்பித் தந்துவிட்டார்.

பீவியின் மஸாரைத் தொடுவதற்கான அடக்கமுடியாத ஆவலினால், ஒழுங்காக நகர்ந்து கொண்டிருந்த வரிசையில் நான் குழப்பத்தை உண்டாக்கியதாகத் தோன்றுகிறது. தூரத்தில் ஒதுங்கி நின்றிருந்த ஒரு தாடிக்காரன் என் சாதுரியங்களைக் கவனித்துவிட்டு முன்னால் வந்தான். என் விரல் நுனியைப் பிடித்து மஸாரின் மேல் தொடவைத்து, கியூவிலிருந்து விடுவித்து மற்றொரு வழியின் மூலம் என்னை நகர்த்தவும் செய்தான்.

நான் வெளியே வந்த பின்பு மஸாரிலுள்ள சூழல் உருக்கத்தின் குழம்புபோல் என் அகத்தளங்களில் கெட்டிப்பட்டுக் கிடந்தது. ஜாதாரியான அந்தத் தாடிக்காரன் அப்போதும் என் உள்ளங்கைகளை உஷ்ணத்தோடு பிடித்துக்கொண்டே பின்தொடர்ந்தான். ஓவியங்கள், சிற்பங்கள், பழைய மண்டையோடுகள் எனவெங்கெல்லாமோ இவனை நான் பார்த்து மறந்து விட்டதுண்டு. இவன் கை விரல்களில் கிடக்கும் கல் மோதிரங்கள் பலமுறை ஒளிர்ந்து, என் கண்களைக் கூசச் செய்ததுண்டு.

பல நூறாண்டுகள் வாழ்ந்து கடல் கடந்து வந்திருக்கும் ஒரு சூஃபியாகவோ சித்தனாகவோ இருப்பானோ இவன்? மதார்த்த நிலையின் உலகிலிருந்து எழும் ஒரு மாற்றம்தான் இது என்று அறிந்ததும், நான் என் மகிழ்ச்சியைப் பரிமாறினேன். மந்திர ஜாலத்துக்கோ பாஷாண பிரயோகத்துக்கோ இவன் என்னை இரையாக்கி விடுவானோ எனும் சாத்தியத் தன்மையை நினைத்தும்கூட எனக்குப் பயம் தோன்றவில்லை.

அங்கிருந்து விலகிச் சென்ற நாங்கள் கடலை நோக்கி அமர்ந்தோம். வைர மோதிரங்கள் சுழலும் விரல்களில் தொடங்கி, கைகளின் வழியாக மார்பில் வரி முக்கோண வடிவிலான தாடை வழும்பில் துருத்திக்கொண்டிருக்கும் ரோமங்களின் மூலம் பயணித்து,

அவனுடைய தடாகம் போன்றுள்ள விழிகளையடைந்து நின்றன என் கண்கள். அப்போதுதான் அவன் முதன் முதலாகப் பேசினான்:

''கொழந்தே, நீ இந்த ஊர்க்காரனா?''

''ஆமாம்.''

''இந்துதானே?''

''ஆமாம்.''

''பீவிக்களுடையதும் பகவதிகளுடையதுமான கதைகளை தெரிந்துகொள்ளத்தானே நீ இங்கே சுத்திக்கிட்டிருக்கே?''

''ஆமாம். அதேதான்!''

''நம்ம ஊரிலேயே மறைஞ்சு போய்விட்ட நூறு நூறு கதைகளைப் பற்றி கேக்கறியா?''

''ஐய்யோடா... வேணும், வேணும்.''

வயதைக் கண்டுபிடிக்க முடியாத இந்த மனிதனின் அற்புத ஞானத்தில் எனக்குக் கொஞ்சம்கூட அதிசயம் தோன்றவில்லை. இக்கிராமத்தின் ஸ்தல வரலாறுக்காக ஏங்கிக்கொண்டிருந்த நான், அவன் பேச்சைக் கேட்டதும் ஒரு நாய்க்குட்டியின் வாஞ்சையுடன் அவனுக்குள் அடைக்கலமானேன்.

''மகனே, இது எத்தனையாவது பீவின்னு உனக்குத் தெரியுமா?''

''தெரியாது.''

''இது நம்ம ஊருக்கு வர்ற மூணாவது பீவியாக்கும். அப்புறம் வராளமான பகவதிங்களும் உண்டு. தேவன்களும் உண்டு. அவுலியாக்களும் உண்டு. அவங்களுக்கெல்லாம் தனித்தனியான புராணங்களும் உண்டு.''

''இவர்களெல்லாம் யாருக்குச் சொந்தம்?''

''நம்ம எல்லாருக்கும்தான்.''

''.....''

''கரெக்ட்! இந்தப் பீவிகளெல்லாம் உன்னோடவைதான் மகனே. நீ ஒரு இத்துவா இருந்தாலும், உன்னோடவைதான் மகனே! அதே மாதிரி நான் முஸ்லிமா இருந்தாலும், இந்தத் தேவன்களும் பகவதிகளும்கூட என்னோடவைதான்.''

''மொதல் பீவி வந்ததும்கூட உன்னோட சமுதாயத்திலேர்ந்துதான் மகனே. ஆமாம், ஒரு நாயர் குடும்பத்திலேர்ந்துதான். மேலே புல்லாரக் குடும்பத்தைப் பத்தி நீ கேள்விப்பட்டிருக்கியா? சரி. இல்லேன்னா, அந்தக் கதையையும் நானே சொல்லிடுறேன்.''

மறந்துவிட்ட ஒரு மந்திர ஒலியைப் போல் அந்தக் குடும்பத்தின் பெயர் என்னுள் எதிரொலித்தது கேட்டது. பிரபஞ்ச கதாநாயகனான முனிவரின் நிழலில் நிற்பதுபோல், மெய்மறந்து அமர்ந்திருந்தபோது வார்த்தைகள் ஓவியங்களாகப் பிரவாகிக்கத் தொடங்கின.

மேலே புல்லாரத் தறவாட்டை* நோக்கி வளைந்து நெளிந்து செல்லும் செம்மண் பாதைகள், மெல்ல மெல்ல தெளியத் தொடங்கின. அந்த மனிதனின் முடியப்பட்ட தடிமுடிகளும் தடாகம் போன்றுள்ள விழிகளும் எல்லாவற்றுக்கும் சாட்சியாகத் தோன்றின.

---

*தறவாடு - குடும்பப் பெயர்

இரண்டு

பனி சூழ்ந்த ஆகாய நீலத்தில், எட்டுக் கட்டின் மேற்கூரைகள் கை தொழுது நிற்கின்றன. இயற்கையும் ஆகாயமும் ஒன்றிணைந்து எதையோ உற்றுநோக்குவது போலிருந்தது. கொழுந்துவிட்டு எரியும் மஞ்சள் ஒளி எட்டுக் கட்டிலிருந்து வெளியேறி, தளும்பித் தெறித்துக் கொண்டிருந்தது.

நடுநிசியை கோபிக்கும் விதத்தில் புதியதாகப் பிறந்த ஒரு குழந்தையின் அழுகுரல், கீழுள்ள வடக்கு அறையிலிருந்து தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருந்தது. அது ஒரு பிரவச அறை. வேதனை குறைந்ததும் மிகுந்த திருப்தியுடன் அம்மாளு திரும்பிப் படுத்து குழந்தையைத் தடவினாள். பிறந்தது பெண் குழந்தைதான் என்று அறிந்ததும் புதியதொரு செழுமைக்குள் குடும்பம் நிமிர்ந்தது. இல்லை. இங்கே தலைமுறை தொடர்ச்சி முடிவதில்லை.

பிரவச அறையின் வாயிலை மெல்லத் திறந்த அம்மாளுவின் தாய் மெல்லிய குரலில் கேட்டாள்:

''பெண் குழந்தைதான்னு சங்குவுக்குத் தெரிவிச்சிட்டீங்களா?''

புதிய உயிரின் ஒலி இவ்வுலகைத் தொட்டதும் சங்குமேனன் 'நாழிகைச் சிரட்டை'* நீரில் நேரம் பார்த்தான். பிரசவம் நட்ட நடுநிசியில். நேரத்தைத் துல்லியமாகக் கணிக்கவேண்டும். மார்க்கெட் போய்விட்டது என்று எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில் மேலே புல்லாரத் தறவாடுக்காக விதைகள் விழ, யோனிமுகம்

* அக்கால நேரம் பார்க்கும் கருவி

விரிந்துகொண்டிருக்கிறது. இங்கே அதிர்ஷ்டம், அதிர்ஷ்டமற்றவை களில் எந்தக் கிரகச் சேர்க்கை அவளின் பிறப்பினுடைய விதியாக இருக்கும்?

வேகமெடுக்கும் தன் விரல்களைக் கட்டுப்படுத்தினான் சங்குமேனன். எல்லாமும் நிச்சயிக்கப்பட்டு முடிந்துவிட்டன. சந்தேகமோ ஆர்வமோ எதுவும் எதையும் மாற்றிவிடவில்லை. தலைக்கு மேல் குத்து விளக்கு ஒன்று எரிந்தது. நாழிகைச் சிரட்டை ஒவ்வொரு முறையும் நீரில் மூழ்கும்போது மேனன் ஒவ்வொரு நெல்மணியாக இடம் மாற்றி வைத்தான். மீண்டும் சிரட்டை, நீரில் சிந்தியது. கனவுகளிலேயே நேரம் நழுவியதால், இரவின் நீளத்தை அறிய முடியவில்லை. மேலும், நாழிகைகளால் கணித்துக் கொண்டிருப்ப தால் இரவு முடிவதாக இல்லை. இது காலத்தின் சகிக்க முடியாத தன்மை.

கிழக்கில் உதயமானதும் சங்குமேனன் பெருமூச்சுடன் கையை ஊன்றி எழுந்துகொண்டான். நாழிகைச் சிரட்டையை எடுத்து வைத்துவிட்டு நெல்மணியை எண்ணினான். அன்று இரவு முழுவதும், மேலே புல்லரித் தறவாடு உறங்கவே இல்லை. அம்மாவும் உறவினர்களும் மிகுந்த ஆவலுடன் முன்னால் வந்ததும் அவன் சொன்னான்:

''நாம ஏன் வீணாகக் குழப்பமடையணும். அதனால குழந்தையோட விதி மாறப் போறதா என்ன? நேரத்த குறிச்சு வைச்சிருக்கிறேன். ஆனா, கணிக்கவில்லை.''

மனம் ஒன்றை நிரூபிக்கும்போது, வயல்களிலிருந்து வரும் மண் புழுக்களின் ராகங்களுக்கு அவனுடைய கவனம் பறந்து செல்வதாக இருந்தது. குரங்கைப் போன்றிருக்கும் மனத்தை கயிற்றால் கட்டிப் போட்டால், கோரைப் பற்களுடன் குள்ள நரிகளின் ஊளைகள்! கிரக நிலையை உறுதிப்படுத்திவிட்டு வேறு வகைகளில் சிந்திப்பதற்கு சங்குமேனன் தைரியப்படவில்லை.

யோசித்துப் பார்த்தால் மிகவும் மகிழ்ந்து உற்சாகம் கொள்ள வேண்டிய நேரமல்லவா இது? அதனால்தான் பயம். மேனன் அறிந்துகொண்ட வரையில் இந்த மனித உயிர் அந்த அளவுக்கு தன் இறுதிக்காலத்தில் சுபமுடிவாக இருப்பதற்கு இல்லை என்றுதான் நம்ப வேண்டிய திருக்கிறது.

இல்லையென்றால் வேறு எதனுடைய கஞ்சத்தனத்தாலோதான் இங்கே ஒவ்வொரு பெண் சந்ததிகளாகவே மேலே புல்லாரத் தறவாட்டுக்குக் கிடைத்துக்கொண்டிருக்கின்றன. பத்துப் பன்னிரண்டு பெண் சந்ததிகள் பிறந்து, அச்சந்ததிகளுக்கெல்லாம் அத்தனைக்கு அத்தனை பெண்கள் பிறந்து பெருகிக் கொண்டிருந்தாலும், அந்தத் தறவாட்டுக்கு முடிவுறாத வகையில் நிலங்களும் உரிமையுடைய தாகவே இருந்தன.

ஆதிரச்சேரி தம்புராக்களிடமிருந்து உரிமைபெற்ற இருநூறு ஏக்கர் நஞ்சையையும், ஆனைக்கரை குன்றின் சரிவையும் தாண்டி, கும்பிடியையும் கடந்து பாரதப் புழை வரையில் பரவிக் கிடக்கின்றன. எல்லாவற்றிலுமே குத்தகைதாரர்கள்தான் பயிரிடுகிறார்கள்,

தறவாட்டு பறம்பைத் தவிர மற்றவைகளெல்லாம் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளன. குத்தகைக்குக் கொண்டு வருவதை அளந்து வாங்குவதற்குக் கூட தேவையான அளவுக்கு சங்குமேனன் கவனம் செலுத்துவதில்லை என்பதுதான் உண்மை.

குத்தகைதாரர்களான தியர்*களுக்கும் குத்தகையில் குறைத்துக் கேட்க ஒவ்வொரு முறையும் ஏதாவது காரணம் உண்டாகிவிடும்.

''இந்த தடவ மட்டும் பொறுத்துக்கணும் தம்புரான்.''

பாதாளம் வரையில் கீழே விழுந்து கும்பிட்டு அவர்கள் யாசிக்கும் போது சங்குமேனனும் யோசிப்பான். இந்த முரடனிடமிருந்து குத்தகையைக் குறைக்காமல் அளந்துவிட வேண்டும் என்று நினைத் தான். அதனால் என்ன பலன்? தன்னுடையதோ தறவாட்டினுடைய தேவான விதி மாற்றப்படுமா? அவையெல்லாம் போகட்டும். தானோ, தன் சகோதரியோ, தாயோ அளவுக்கு அதிகமாக சோறாவது உண்ண முடியுமா? இவ்வாறான தர்க்க சாஸ்திரத்தின் இறுதித் துளிகளில் மனம் உடைபட்டிருக்கும்போது தன் முகத்தில் ஒரு கவுரவத்தை வரவழைத்துக் கொண்டு,

''சரி, சரி. இந்த முறை மட்டும்தான்...'' என்பான் சங்குமேனனும்.

---

* கேரளாவின் மலபார் பகுதிகளில் ஈழவர்களை அழைக்கும் சொல்.

நான்கு சகோதரர்களின் அகால மரணத்துக்குப் பிறகு கண்களுக்குப் புலப்படாத துக்கப் பீதிகள் மேனனை பயமுறுத்தத் தொடங்கியிருந்தன. தறவாட்டில் என்னவெல்லாமோ நேரப் போகிறதே எனும் ஓர் எண்ணத் தோன்றல். தன் கணவனிடம் விரிசல் பட்டு பிரிந்த மீனாட்சியின் சம்பவத்துக்கு யாதொரு காரணத்தையும் அவனாலேயே கண்டுபிடிக்க முடியவில்லை. எதுவொன்றுக்கும் எந்தவொரு காரண காரியமும் இல்லாதது போன்ற தோன்றல்.

பெண் குழந்தைகள் பிறப்பால் தறவாடு பலன்பெறும் இந்தச் சந்தர்ப்பத்திலும், உளம் நிறைந்து மகிழ்ச்சிகொள்ள மனத்துக்குள்ளே உள்ள உணர்வுகளால் மேனனை சம்மதிக்க வைக்க முடியவில்லை.

வடக்கு அறையைத் தாண்டித் தலத்தைச் சுற்றி வந்து, நடு முற்றத்தின் வலப்புறமாக நடந்து, அம்மாளுவின் பாட்டி பிரசவ அறையை அடைந்தாள். ஐந்து ஆண்களுக்கு மத்தியில் ஒரே பெண்ணாக வளர்ந்து வாழ்ந்தவள் அந்தப் பாட்டி. வதோவொரு நிர்ப்பந்தத்தின் சூழ்ச்சியைப் போல் அவளுக்கும் ஐந்து ஆண் பிள்ளைகளுக்கு நடுவே ஒரே பெண்ணாகத்தான் அம்மாளுவின் தாய் பிறந்தாள். அம்மாளுவின் தாய் பிள்ளை பெறத் தொடங்கியபோது வீட்டுக் காரர்கள் மட்டுமல்லாமல் ஊர்க்காரர்களும் அற்புத சுழற்சிக்காகக் காத்திருந்தார்கள். சங்கு மேனனுக்குப் பின் ஐந்து ஆண் குழந்தைகள் பிறந்தன. அதன் பிறகுதான் ஒரேயொரு சங்கு அம்மாளுவின் தாயிடம் மலர்ந்தது. அதுதான் அம்மாளு.

ஆனால், அம்மாளு பிள்ளை பெறத் தொடங்கியபோது முதலிலேயே பெண் குழந்தைதான். ஜென்ம ஜென்மாந்தரங்களின் நூலிழை அறுந்து போகாமல் இப்பெண் குழந்தை கிடைத்ததில் யார்தான் மேலே புல்லாரத் தறவாட்டில் மகிழாமல் இருப்பார்கள்?

பிரசவ அறையிலிருந்து மிகவும் ஆவேசமான முனகல்கள் கேட்டுக் கொண்டிருந்தன. ஒரு புழை* முழுவதையும் உள்வாங்கிக் கொண்டு, கடல் முழுவதையும் தழுக்கடித்துப் பிறந்த குழந்தையை குளிப் பாட்டும் சத்தம். அரைவிழிப் பார்வையுடனும், இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எல்லாவிதப் பொருள்களிடமும் நேசம் தரும்பும் மனமுமாகக்

* ஆறு

கிடக்கிறாள் அம்மாளு. பேசிக்கொண்டும் பேசாமலும், அழைக்கும் போதெல்லாம் ஓடியாடிச் சுற்றிவரும் வேலைக்காரப் பெண்கள்.

ஆத்மாவின் பந்தத்தைப் புதுப்பித்துக் கொள்ள ஒரு தங்க விக்கிரகம் அம்மாளுவின் அருகில் படுத்துக்கொண்டு கைகால்களை அடித்து உதைத்துக் கொள்கிறது. அதை நோக்கியவாறு நின்றபோது, மரணத்தின் செங்குத்தான உச்சிக்கு அப்பால் பசுமை தவழும் ஏதோவொரு அனாந்தர வெளியை அடைந்துவிட்டது போல்தான் பாட்டி தன்னையே மறந்து விட்டவளானாள். சுயஅனுதாபத்தின் நுற்றுக்கணக்கான குமிழிகள் மகிழ்வுடன் நுரை பொங்கின.

உயிரின் இழப்புக்குப் பயந்து புதியதொரு பெண்துளிரின் முளை விடுதலுக்காகத்தான் இத்தனை ஆண்டுகளாகவும் தான் இறக்காமல் கிடக்கிறோம் என்பது யாருக்காவது தெரியுமா? இனிமேல் நிம்மதியடையலாம். இந்த உடலை உலர்ந்த பாசியைப் போல் தூக்கியும் எறியலாம். புத்தம் புது உடலின் மூலம், புதிய சிலிர்ப்புடன் பிறந்து வாழலாம். யோனித் துவாரங்களிலிருந்து வெளியேறி, மேலே புல்லாரத் தறவாட்டின் வம்ச மரபின் மூலம் பயணிக்கலாம்.

யாருடைய கவனத்திலும் படாமல் பிரசவ அறையிலுள்ள ஒரு மூலையில் நின்றிருந்த பாட்டி திடீரென மூர்ச்சித்து விழுந்தாள். வெள்ளாடையின் குவியலைப் போல்தான் அவள் தரையில் சுருண்டு விழுந்தாள். அங்குமிங்கும் ஓடித்திரியும் அம்மாளுவின் தாயோ, வேலைக்காரப் பெண்களோ நடந்த நிகழ்ச்சியை சிறிதுநேரம் வரையில் அறியவில்லை. காலின்மேல் என்னவோ திடீரென இடறியபோதுதான் சங்குமேனனின் மனைவி அம்முக்குட்டி அம்மாள் அலறிக் கூச்சலிட்டாள்.

உடனே எல்லோரும் ஓடிவந்து பாட்டியைத் தாங்கி தூக்கிச் சென்று வடக்கு அறையின் மூலையில் கிடந்த கட்டிலில் படுக்க வைத்தார்கள். இது ஒரு அபசகுனமாகிவிடுமோ என்று அம்மாளுவின் தாய் சந்தேகப் பட்டாள்தான். ஆனால், தாயின் கண்களில் மகிழ்வின் முத்துக்கள் பெருகின. தளர்ந்த மார்பகத்தின் மத்தியில் வழிந்து, தொப்புளில் நிறைந்து வெளியேறிய நீர்க்கோடுகள் மீண்டும் கீழ்நோக்கி ஓடின.

சகுனங்களின் பலன்களைப் பற்றிச் சிந்தித்து முன்னுக்குப் பின் முரணாகாமல் சங்குமேனன் ராசி பார்த்தான். ஆமாம். விதியின் ஒரே

வரிசைப் புள்ளிகளிலேயே அனைத்தும் ஒருங்கே சென்றடை கின்றன.

சங்குமேனனின் கண்களிலிருந்து ஒரு நரம்பு புடைத்து வெளியே சிதறியது. இரத்தக் கோடுகள் கைவழியாக வழிந்தன. முகத்தில் ஒளிர்ந்த வெண்ணிற ஒளியில் குத்துவிளக்கு ஒளியற்றதாக இருந்தது. சோழி பையைத் தூக்கி மூலையில் வீசிவிட்டு அவன் சூறாவளியைப் போல் எழுந்துகொண்டான். பத்தாயப்புரை* மாடியிலிருந்து கீழ்நோக்கி வேகமாக இறங்கினான். மட்டுக் கட்டின் உள்தளம் வரையில் நடந்து சென்றடைந்ததும், மண்ணங்களுக்கு அமைதியான கடிவாளம் விழுந்தது. அவன் எவற்றிலும் ஆர்வமில்லாதவனானான்.

சங்கு அண்ணன் இப்போதே குழந்தையைப் பார்க்க வருவான் என்று யாரும் நினைத்திருக்கவில்லை. மருத்துவச்சியும் பணிப் பெண்களும் நீராவியைப் போல் மறைந்து போனார்கள். ஒளிவீசும் அச்சிறு கண்களை சகோதரி நீட்டியபோது அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். பிரசவ அறையில் சங்குமேனன் தயக்கத்துடன்தான் நின்றான்.

வளர்ச்சிக் கட்டங்களை வெகுவேகமாகப் பின்தள்ளிய அம்மாளுவின் குழந்தை, இரட்டை நாடியாகவும் புஷ்டியுமாக சுறுசுறுப்புடனும் படுத்திருந்தாள். தாய்மாமனைக் கண்டதும் அவள் சிரிப்பதுபோல் தோன்றியது. இப்போதுதான் பிறந்த குழந்தை என்பதற்குப் பதில், அருவருப்பான ஒரு நிர்வாணம்தான் அவனுள் அனுபவப்பட்டது. அவளை கவனித்துக் கொண்டிருக்கும்போதே கால்களை அகட்டி நீர்வீழ்ச்சியைப் போல் மூத்திரம் பெய்தாள். சங்குமேனன் வியர்த்து வெளிறினான். அந்த மூத்திரத்தின் தெறிப்புகள் உடலில் எங்கெல்லாமோ பட்டிருந்தன. அறையை விட்டு வெளியேறிய பின்பும், அவன் முகத்திலும் மார்பிலுமாக அடிக்கடி துடைத்துக் கொண்டான்.

நியோக உறவுகள்** என்பது எந்த அளவுக்குக் கணிசமாகத் தொடங்கி விட்டன என்பதை சங்குமேனன் சிந்தித்துப் பார்த்தான். கிரகங்கள்

---

* களஞ்சிய அறை

** ஆண்மையில்லாத ஒருவனின் மனைவியுடன் உறவினன் தாம்பத்திய உறவு கொண்டு குழந்தை பெறும் முறை.

நிற்பதையொட்டிதான் பலன்களும் கிடைக்கின்றன. ஆனால், இந்தக் கிரகங்கள் ஏன் இப்படியெல்லாம் வந்து நிற்கின்றன. அதுவும், மேலே புல்லாரத் தறவாட்டு சீமந்த புத்திரையையே இலக்கு வைத்துக் கொண்டு. பதில்தான் கிடைக்கவில்லை.

பெருமழையால் வெள்ளப் பெருக்கெடுத்து ஓய்ந்தபிறகு, வறட்சியினாலும் மக்கள் உலர்ந்து இறக்கிறார்களல்லவா? அதுபோல்தான், அம்மாளுவுக்கும் இப்படிப்பட்ட கிரகநிலையில் ஒரு குழந்தை பிறந்ததுகூட சம்பந்தமில்லாத ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

பத்தாயப்புரையின் மாடியை அடைந்த சங்குமேனன் மீண்டும் கிரகங்களின் சிறையில் அடைபட்டான். ராசிச் சக்கரத்தில் சோழிகள் நவக்கிரகங்களாகப் பயணித்தன.

''சங்கு, நல்லா கணிச்சு முடிச்சிட்டியா? உயிருக்கு ஒண்ணும் ஆபத்தில்லையே?''

சீமந்தபுத்திரனின் குழப்பத்தை முகர்ந்தறிந்துவிட்ட தாய், மாடிப் படிகளில் ஏறி பத்தாயப்புரையில் தேடினாள்.

''ஆங்! அதெல்லாம் ஒண்ணும் தப்பில்ல. வர்றதெல்லாம் நல்லதுக்காகத்தான் இருக்கும்.''

மேலும் விவரிக்காமல் அவன் தாயை அனுப்பிவைத்தான்.

தலையை ஆட்டிக்கொண்டே உச்சக்கட்டத்தை அடைந்தபோதுதான் தனக்குள்ளேயே ஒரு நகைச்சுவை உணர்வு சங்குமேனனுக்குள் உதித்துக்கொண்டிருந்தது. அடுவடுப்பு நிறைந்த சில சம்ஸ்கிருத ஸ்லோகங்களை நினைவிலிருந்து முணுமுணுத்தவன் வெறுமனே சிரிக்கத் தொடங்கினான். கண்முன்னே என்னவெல்லாமோ தெரிவதைப் போன்று, ஒவ்வொரு நீண்ட நெடிய சிரிப்பின் உச்சத்திலும் சுவாசக் கோளங்கள் நிறைந்து வெடித்தன. அதன் வலி இதயத்தையடைந்தபோது, அவன் முகத்தை மூடி கவிழ்ந்து படுத்தான். பூஜையறையிலுள்ள பகவதியை உச்சத்தில் அழைத்தான்.

உச்சிவெயிலின் உருக்கத்தில், கொடூரமான ஜீவனற்ற வாழ்க்கையில், தறவாடும் சூழலும் மூழ்கிக் கிடக்கின்றது. நடுநிசியின் வகாந்தத்துவம் எங்கும் நிறைந்திருந்தது. மாடியிலுள்ள நிலவறையிலிருந்து

ஆரம்பித்து மடிப்படிகளின் வழியாகவும் பத்தாயப் புரையின் மதிலின் வழியாகவும் குழப்பமான கால்டிகள் சாவதானமாக நடமாடின. ஒரு பயங்கர உருவத்தின் சலனத்தை எல்லோருமே அறிந்தார்கள். கட்டுப்படில்லாமல் கலைத்த தலைமுடிகள் உச்சிவெயிலில் ஒளிர்ந்து கொண்டிருந்தன. கவிழ்ந்து படுத்திருக்கும் சங்குமேனனின் உணர்ச்சி, பூஜையறை பகவதியின் காலடிகளுக்கு வற்றாற்போல் அடிமேல் அடிவைத்து நகர்ந்தது.

''அவளும் நகர்ந்து கொண்டிருக்கிறாள்... ஆமாம், அவளும் நகர்ந்து கொண்டிருக்கிறாள்தான்'' - என்று அவன் மனத்துக்குள் முணு முணுத்தான்.

தன் மார்பகத்தில் சுப்பியே, நிமிடத்துக்கு நிமிடம் நெளிந்து நிமிர்ந்து பெரியவளாகி வரும் குழந்தையைக் கவனித்த அம்மாளு பிரமித்து விட்டாள். அடக்கமுடியாத வெற்றிக் களிப்புடன், தன்னுடைய யோனி உதடுகளைப் பிளந்துகொண்டு இவள் வெளிவந்தது வரையிலான விஷயங்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் பின்னோக்கிச் சிந்தித்தாள். நேரம் என்னும் நதி அம்மாளுவின் மூளையில் திரும்பி ஓடத் தொடங்கியது. ஒவ்வொரு அனுபவச் சித்திரங்களும் மீண்டும் மறுபிறவி எடுத்தன.

இவள் சிலமாதங்களுக்கு முன்பே பொறுமையிழந்தவளாக வயிற்றில் நடத்திக்கொண்டிருந்த மற்போர்கள் ஆத்மாவில் ஏற்படும் ஒரு திடுக்கிடலைப்போல் கர்ப்பத்தின் முதல் சலனத்தின் அனுபவம் – தலை முழுகி பதினொன்றாம் நாள் கர்ப்பப்பை குழலில் நிகழ்ந்த நிசப்தமானதொரு பூகம்பமாகும்.

தன்மேல் படர்ந்து மூடிக்கொண்ட அந்த மனிதனின் உப்பு மணத்துடன் வேறு என்னவெல்லாமோ சேர்ந்து உடலில் இறங்குகின்றன. ஒவ்வொரு உறுப்புகளும் செல்களும் உணர்வற்று தோல்வியை ஏற்றுக் கொள்கின்றன. அனைத்துக் கோள்களினுடைய ஒளிவெள்ளத்தையும் தலைக்குள் புகுத்திக் கொண்டு, ஆயிரம் கண்களால் ஒளிபாய்ச்சி ஆயிரம் வால்களால் சுழட்டியடித்து வட்டமிடும் அந்த உயிரணுக்கள் மிகுந்த ஆக்ரோஷத்துடன் ஆரவாரிக்கின்றன. இடவப்பாதியாகி, சூறாவளி யாகி, திருவாதிரை நாற்றங்காலாகி தன்னை ஈரப்படுத்தி நிறைத்துவிட்டு, இறுதியில் அந்த முனிவன் நிழல்போல் விலகி விடைபெறுகிறான்.

தன்னை மீண்டும் அழைக்கக் கூடாது என்று முன்னெச்சரிக்கையும் அளித்துவிட்டு, தேசாந்திரம் செல்வதாகவும் அறிவித்திருந்தான்.

அவன் சென்ற பின்பும் அந்த உப்பு நாத்தம் தன் உடலிலும் ஆடைகளிலும் சில நாள்கள் வரையில் மொட்டாக நிலைத்திருந்தது. நினைவுகளின் வேதியியல் பிரிவில் வெளியேறி ஆவியாகி, அதன்பின் ஆத்மாவிலும் பூஞ்சையாகப் படிந்தது.

தறவாட்டின் ஆத்மத் துடிப்புகளை எங்கோ மறைத்துவிட்டு, அவனை வெளியேற்றுவதற்குத் தொடங்கியிருந்தான். அது எதனால், எப்படி என்றுதான் தன்னால் அறியமுடியவில்லை என்று நினைத்தாள். சங்கு அண்ணனுடனான ஒற்றுமையில்லாமைதான் இருவரின் முகத்திலும் கீறல்களாக வெளிப்பட்டன.

அந்த ரிஷியுடனான இறுதிச் சந்திப்பில் வீசியெறிந்த விதைதான் தன்னுள் இப்போது கனியாக முதிர்ந்து உயிர்பெற்றிருக்கிறது. அன்றைய சரீர சங்கமத்தில் அன்பின் வெப்பத்துடன் இணைந்து, சாபத்தின் தீவிரத் தன்மையும் ஏற்பட்டிருந்ததாக இப்போது தோன்றுகிறது. எல்லாம் முடிந்துவிட்டன எனும் நீண்ட நெடிய மூச்சுடன் வாயிற்கதவை இழுத்து மூடிவிட்டு அறையிலிருந்து வெளியேறிவிட்டான். அதன்பிறகு அவனை அவ்வூரில் யாரும் பார்க்கவில்லையாம்.

அம்மாளுவின் கண்களிலிருந்து தளும்பி இறங்கிய கண்ணீர்க் கோடுகள் பாரதப் புழையிலும், காவிரியிலும் கங்கையிலும், தன் கணவன் மூழ்கி எழும் தீர்த்தங்களிலுமெல்லாம் கலந்து தேடித் திரிந்தன. அனாதைகளின் எலும்புக்கூடுகளும் மண்டையோடுகளும் மட்டும்தான் மண்மேடுகளைப் பிளந்து கொண்டு வெளியே வந்தன. மீண்டும் மீளமுடியாத வெகு தூரங்களில்தான் அந்த உருவம் தாடியும் முடியும் வளர்த்துக் கொண்டு நிற்பதாகத் தோன்றியது.

இனி வரப் போவதில்லை -

ஊற்றுபோல் கொப்பளித்து வெளியேறிய அம்மாளுவின் கண்ணீர் வெப்பம் அதிகரித்து நீராவியாக மாறியது. மேலே புல்லாரத் தறவாடும், அதன் சூழலும் மூச்சு முட்டியது. முலைக் காம்பிலிருந்து உதடுகளைப் பிளந்துகொண்ட குழந்தை அலறி அழுதது. அம்மாளு

வின் தாயும் பணிப்பெண்களும் ஓடிவந்தார்கள். தன் வீட்டுக்குப் போவதற்கு வாசலில் இறங்கிய சங்குமேனனின் மனைவி மீண்டும் திரும்பி வந்தாள். அரைத் தூக்கத்திலிருந்து விழித்த சங்குமேனனும் பத்தாயப்புரை மாடியிலிருந்து கீழே இறங்க வேண்டுமா என்று சந்தேகித்தான்.

பிறப்பு இறப்புகளின் மற்ற இறக்கங்களில் நுழைந்துள்ள பாட்டியின் உணர்வு மட்டும் உடலுக்குள் திரும்பி வரவில்லை. ஒற்றைத் துடிப்பை மட்டும் சுமந்துகொண்டு அது வடக்கு அறையின் மூலையிலுள்ள கட்டிலில் உலர்ந்து கிடந்தது.

மூன்று

கிரக யோகங்களின் மற்றொரு தற்செயல் நிகழ்வாகத்தான் மேலே புல்லாத் தறவாடின் பிறப்பும். அன்றைய வளர்ச்சியில் தற்செயலாகத் தான் நியோகமும் அத்தறவாடில் நுழைந்தது. சங்குமேனனின் ஐந்து தலைமுறைகளுக்கு முன்னால்தான் இந்த செயல்திட்டமும் உருவானது.

கிரகங்களின் போர்த் திறன்களையும் சதிகளையும் பற்றி அப்படியே ஏற்றுக்கொண்ட மகா பண்டிதரான ஒரு பிராமணர், தன் முயற்சிகளை நூலில் உள்ளவற்றைப் போன்ற வாசித்து கிரகித்திருந்தார். முப்பத் திரண்டாம் வயதில் சமூகத்திலிருந்து தள்ளி வைக்கப்பட்ட யோகம் முழுமையானதுதான். வெறுமனே அதைத் தடுக்க முயற்சி செய்யா மல், இணங்குவதற்கான விவேகம் அவருக்கு அப்போதே ஏற்பட்டு விட்டது.

கெட்ட காலத்தின் தொடக்கம் சில மாதங்களுக்கு முன்புதான் அத்தறவாட்டை நோக்கத் தொடங்கியிருந்தது. அதற்கான லட்சணங் களாக சாஸ்திரம் விவரிப்பது தீய சகவாசம், மனச்சஞ்சலம் என பலவகையாக இருந்தன. பகைக் கிரகங்களால் மாரக ஜாமத்தின்* இறுதியில் ஜாதகி சமூகப் புறக்கணிப்புக்கு ஆளாக நேரிடும்.

வாளமான வைதீக முறைகளில் காலத்தைத் தள்ளிக்கொண்டிருந்த மகா பிராமணர், தன்னுடைய எதிர்காலப் பலன்களைப் பார்த்துவிட்டு திகைத்துவிட்டார். ஆகிப் பள்ளி தம்புராக்களான தங்களுக்கு தெய்வத் தொண்டு மட்டும்தான் குலதர்மமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

* ஒருவன் இறக்கும் தருவாய்.

தங்களுக்கும் சமூகத்துக்கு மட்டுமல்ல, எல்லா உலகங்களுக்குமாக தெய்வத்திடம் பிரார்த்திக்க வேண்டும், வேண்டிக்கொள்ள வேண்டும். அதுதான் தர்மம். மேலும், பஞ்சபூத உலக விவகாரங்களுக்காக சாஸ்திர உபதேசங்களும் வேள்வி கர்மங்களும் நடத்திக் கொடுக்கவும் வேண்டும்.

இவ்வாறு குலதர்மத்தின் வழிதவறாத பாதையின் மூலம் வாழும் தன்னிடமும் கிரகங்கள் இவ்வாறு செயல்படுகின்றனவோ யோசிக்க யோசிக்க மனம் பதறிக் கொண்டிருக்கிறது. அபகார நேரக் கூட்டுக்குள் தள்ளப்பட்ட கருங்கல் குலையல் உருகிக் கசிந்து ஒன்றாவதுபோல் இருக்கிறது.

தான் அனுபவிக்க வேண்டியதை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டாம் என்று தீர்மானித்தார். நிர்ணயிக்கப்பட்ட முகூர்த்தத்துக்கு முன்பே இல்லத்திலிருந்தும் இறங்கிவிட்டார்.

கடும் நீலநிறமுள்ள அந்த இரவில் நதிநீரின் அழகை ரசித்துக் கொண்டே பாரதப் புழையில் தனியொருவராக மிதந்து திரிந்தார். கலங்கலாகவும் அம்மணமாகவும் ஓடிமறையும் பாரதப்புழையை வெகுதூரம்வரை நடந்தும் ஆகாய கங்கை கைநீட்டி அணைத்துக் கொள்கிறது. தான் மிதக்கும் வள்ளத்துக்குச் சமமாக ஆகாயத்திலும் ஒரு மேகக் கீற்று வழி தேடுகிறது. நண்பனைப் போல் அதைப் பின் தொடர்ந்து துடுப்பைத் துழாவினார். கருமையுடன் கொஞ்சம் புஷ்டியான பெரியதொரு மேகப் பிம்பத்தில் அது இணைந்து லயித்தபோது பிராமணருக்கும் தம் ஏகாந்தத் தன்மை அனுபவப்பட்டது. அத்துடன் குழப்பமும் தோன்றியது. அப்போது, கசக்கும் கஷாயத்தைப்போல் பாரதப் புழையும் கறுத்து நின்றது. பூமியிலும் மக்களில்லாத இடமான தால் கடும் குளிர்.

மட்டை வள்ளத்தை* கரையில் கட்டிவிட்டு வெளிச்சம் தேடி சதுப்புச் சேற்றின் வழியாக அவர் தளர்வுடன் நடந்தார். முற்றிலும் அறிமுகமில்லாத பிரதேசம். எப்போதும் கொஞ்சிக் குலவும் புழைகாண் இப்போது தன்னை மிகவும் அடித்துப் போட்டிருக்கிறது. ஆகாயத்திலுள்ள நண்பர்களையும் அவரால் காணமுடியவில்லை. வெளிச்சமும்

* மட்டை வள்ளம் - தோணி

உணவும் உள்ள ஒரு கீற்று குடிசையாவது தென்பட்டால் போதும் என்றாகிவிட்டது அப்பிராமணருக்கு. உதிரும் இலைகளைப் போல் குளிரின் சிம்புகள் உடலில்பட்டு தெறித்து விழுந்துகொண்டிருந்தன.

அங்கே கொஞ்ச தூரத்தில் மரக்கூட்டங்களுக்கு மத்தியில் பனிமூட்டத்தில் சிவப்பானதொரு ஒளி தென்பட்டது. குனிந்து பார்க்கும்போது ஒளிவெள்ளமாகத் தெரிந்த விளக்கு, தலை நிமிர்ந்தால் புலப்படாமல் போய்க்கொண்டிருந்தது - கண்ணாமூச்சி ஆடுவதுபோல். இது, ஆளை தலைகுனியச் செய்யும் விளக்காயிற்றே என்பது சகுனம் பார்க்கும் அந்தப் பிராமணருக்கு அப்போது தோன்றவில்லை.

சிவப்பு ஒளியைத் தேடி சதுப்பு நிலத்தின் வழியே முதுகை வளைத்து நெளிந்து அவர் தீவிரத்துடன் நடந்தார். தன் பயணத்தின் நோக்கமே அவருக்கு மறந்துவிட்டிருந்தது. இங்கு மனிதவாடை உண்டு என்பதை உறுதி செய்துகொள்வது மட்டுமே அவருக்கு அப்போதைய ஆவலாக இருந்தது.

கரிப்புகையைக் கக்கியவாறு கொழுந்துவிட்டு எரியும் அந்தச் சிவப்பு ஒளி கருமானின் திண்ணையில் வைத்திருக்கும் தகர விளக்குதான். கருப்பனுக்காகக் காத்திருந்த தகர விளக்கு கருகி தீர்ந்து கொண்டிருந்தது. கள்ளைக் குடித்துவிட்டால் போதும், எல்லா உலகங்களும் ஒன்றாகி அவனுக்குச் சொர்க்கமாகிவிடும். அப்புறம் அவன் குடிசைக்கு வருவதே நிலையற்றதாகிவிடும். அதில் அவனுக்கு பெரிய விசேஷமாக எதுவும் தோன்றாது.

ஏதாவது வேலியின் மேலோ குண்டுகுழிகளிலோ விழுந்து கிடப்பான். சில சமயம் குடிசையின் வாசல் வரை வந்து அங்கேயே தட்டுத் தடுமாறி விழுந்து விடுவான்.

கொஞ்ச நேரம் வரையில் காத்திருந்துவிட்டு களைப்படைந்து விடும் கருமாத்தி, உறக்கத்தில் அலங்கோல ஆடைகளில் அரை நிர்வாணத்துடன் படுத்திருப்பாள். தனக்கு பிரசவம் நேரப் போகிறது என்னும் கனவுகண்ட வேகத்தில்தான் அவள் திடுக்கிட்டு கண்விழிப்பாள். ஆனால், மூத்திரப்பை நிறைந்ததால்தான் இந்தக் கனவு என்பதைப் புரிந்துகொண்டு சிறுநீர் கழிப்பதற்காக வெளியே போவாள். போய் வந்தபின்தான் இந்தக் கருமான் இவ்வளவு நேரமாக எங்கே போயிருப்பான் என நினைத்து மிகவும் தவித்துப் போவாள்.

சில நாள்களில் சிறுநீர் கழித்துவிட்டுத் திரும்பும்போது ஒரு நிழலாக வராந்தாவில் படுத்திருக்கும் கருமானைக் கண்டுவிட்டால் அப்புறம் கருமாத்தி உள்ளே போகமாட்டாள். கருமானை கட்டியணைத்துக் கொண்டு அங்கேயே படுத்து விடுவாள். அந்தப் பிடியின் இறுக்கத்தில் கருமான் விழித்துக்கொண்டு அவளிடம் சில்மிஷங்களுக்கு முயற்சி செய்வான். அவளும் சிறிதுநேரம் சிணுங்கிவிட்டு, அவனுக்கு தன்னை விட்டுக்கொடுப்பாள். இதுதான் வழக்கம்.

வெப்பத்தையும் வெளிச்சத்தையும் தேடிவந்த பிராமணருக்கு கருமானின் திண்ணையைப் பிடிப்பதற்குள் சோர்வாகிவிட்டது. தான் ஆதிரப் பள்ளி தம்புரான் என்னும் விஷயத்தையே மறந்துவிட்டிருந்தார். தகர விளக்கை இழுத்து நகர்த்திவிட்டு, நீண்ட நெடுங்கிடையாக மல்லாந்து படுத்தார். இங்கு மனிதர்கள் இருக்கிறார்கள் என்ற உணர்வே அவர் உறங்குவதற்கு தைரியத்தை அளித்தது.

ஓலைக்கீற்று ஓட்டை மூலம் கண்களுக்குத் தென்படும் நட்சத்திரங்கள், வானத்தை தி நுப்தியாக விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தன. இருண்டு கிடக்கும் புவியின் பரப்பு ஆகாயத்தை நோக்கி நெடுமூச்சு விட்டுக்கொண்டிருக்கின்றது. ஆற்றில் அலைகள் உலையும் ஓசை குழப்பமானதொரு தாளத்தை எட்டியது.

மேகத்தின் மெல்லிய முனைகளைப் பிடித்துக் கொண்டு யாரோ கீழே வருகிறார்களே! பூமியை முழுமையாக ஆசுவாசப்படுத்துவதற்காக ஆகாயத்திலுள்ள சொர்க்கத்தின் தூதர்கள் தங்கள் அரசனின் உத்தரவின் பேரில் இறங்குகிறார்களோ?

பிரசவிக்க முட்டுவதாக கனவுகண்ட கருமாத்தி உறக்கத்திலிருந்து எழுந்து சென்று சிறுநீர் கழித்துவிட்டு வரும்போதுதான் வழக்கமாக திண்ணையில் தன் கணவன் படுத்திருக்கிறான் என்று நினைத்தாள். வழக்கம் போலவே அவனை அப்படியே கட்டிப் பிடித்து அணைத்துக் கொண்டு படுத்தாள். மனித உடலின் வெப்பம் பட்டு மயக்கம் தெளிந்த மகாப் பிராமணர் அவளைக் குதறியபோதுதான், தன் உடலிலுள்ள எந்தவொரு பகுதியும் தொடுவதற்கு மிச்சமில்லை என்று அவளுக்குப் புரிந்தது. நடந்த அனுபவம் எதையும் அவள் ஆலோசிக்கவில்லை. அதற்குப் பதில் மிகுந்த பரவசமாகிவிட்ட அந்த கருநீல பாரதப் புழையை ஆகாய கங்கை கைநீட்டி ஏற்றுக் கொள்ளும் சித்திரமாகத்தான் அந்த நேரத்தில் அவள் மனம் முழுவதும் பரவியிருந்தது.

இரண்டு மூன்று இரவுகளில் ஏற்படும் அனுபவத்துக்குண்டான அந்த அளவற்ற இன்பம் தன்னுள் அணை உடைவதுபோல் உணர்ந்த போதுதான் தடுமாறிவிட்ட கருமாத்தி கண் விழித்தாள். ஆண்மையின் ஆளுகையை அப்பட்டமாக வெளிப்படுத்திய அந்த நெடிய மனிதன் தன்னுள் அளவற்ற ஆர்வத்துடன் ஊடுருவுவதை உணர்ந்தாள்.

இரும்பைவிட உறுதியான வேறு எந்தவொரு உலோகத்தையும் அந்த ஏழை இதுவரை கண்டதே இல்லை. பயத்தோடும் பக்தியோடும் இணைந்த குரலில், தாங்கள் யாரென்று கேட்டாள்.

''எதையும் கேட்க வேண்டாம். பயப்படவும் வேண்டாம். மாபெரும் திறமைசாலியாக உனக்கொரு மகன் பிறப்பான்.''

அந்த நெடிய மனிதர் இதை மட்டும் சொல்லிவிட்டு எழுந்து நடந்தார். பொழிந்ததைச் சேகரித்துக் கொண்டது போன்றிருந்த கருமாத்தி, குடிசையின் மூங்கில் தூணில் சாய்ந்து நின்றாள். மங்கும் கருமைக்குள் அந்த மகாப் பிராமணர் மரங்களுக்கிடையே படகை இறக்கும்போது, பாரதப் புழைக்கே மகா சமுத்திரத்தின் கம்பீரம் வந்து விட்டதென்று அந்தக் கருமாத்திக்குத் தோன்றியது.

மேகக் கீற்றுகளைப் பிடித்து இறங்கிய சொர்க்கத்தின் தூதர்கள் மீண்டும் வேகவேகமாக ஆகாயத்தை நோக்கியே ஏறினார்கள். விளையாட்டுப் பொம்மைகளையெல்லாம் வாரிக்கொண்டு நட்சத்திரங்கள் பின் வாங்கிக் கொண்டன. புவியின் நெடுமூச்சுக்கள் மட்டும் மிகவும் முரட்டுத்தனமான தாளத்தில் மீண்டும் மீண்டும் இழுத்துக் கொண்டிருந்தன.

நான்கு

கருமானுக்கு உலைக்களத்தில் மிகவும் வேலைப் பளு. கருமாத்தியின் பிரசவ வலியும் இந்த நேரத்தில்தான் இணக்கமாக இருந்தது.

முற்றிலும் அந்நியமான பொருளைப்போல் அந்தக் கரு எப்போது வேண்டுமானாலும் தன்னிடமிருந்து வெடித்துச் சிதறலாம் என்று சில நாள்களாகவே கருமாத்திக்குத் தோன்றியிருந்தது. வலி தோன்றியதும் யாருக்கும் காத்திருக்காமல் அவள் பிள்ளையைப் பெற்றாள். அதன்பிறகு, ஒளிர்ந்துகொண்டிருக்கும் தங்க விக்கிரகத்தை சற்று நகர்த்திவிட்டு, முட்டிப் போட்டு தவழ்ந்து சென்று கருமாத்தி கருமானை அழைத்தாள். முதலில் அவள் குரல் அவனுக்குக் கேட்கவே இல்லை. அதன்பிறகுதான் கவனித்துவிட்டு தன் பணி ஆயுதங்களை எடுத்து வைத்துவிட்டு, கரிபுரண்ட உடலுடன் வந்து வாயிலில் பாதி மறைந்து நின்று எட்டிப் பார்த்தான்.

பழுத்த இரும்பைவிட உக்கிரமான சிவப்பழகு. தங்கத்தைக் கண்ட கருமான் அந்நியனைப் போல் முகம் கறுத்து பின்வாங்கினான். எதுவும் பேசவில்லை. மீண்டும் உலைக்களத்துக்கே திரும்பிச் சென்று பணியைத் தொடர்ந்தான். பாரதப் புழை கடலாக மாறுவதையும் அதில் ஒரு சூரிய விக்கிரகம் தோன்றி எழும்புவதையும் கருமாத்தி நினைவுபடுத்துபவளாக அமர்ந்திருந்தாள்.

தன் குடிசையில் ஓர் ஆண் குழந்தை வளர்ந்து வருவதையே கருமான் கவனிக்கவில்லை. காலை நேரங்களில் கள்ளின் களைப்பிலிருந்து போதை தெளியும்போது, தேஜஸ்வி நிறைந்த குழந்தை அவனுக் கருகில் விளையாடிச் சிரித்து மிக மகிழ்வோடு அமர்ந்திருக்கும்.

இதைக் கண்ணுறும் கருமானோ, இடம் காலம் பாராமல் குழப்பத்துடன் திகைத்துப் போவான். தான் யார் என்பதையோ, எங்கே இருக்கிறோம் என்பதையோ தனக்குத் தானே தெரிந்துகொள்ள முடியாமல் குழப்பத்தில் ஆழ்ந்து விடுவான்.

உன்னதப் பிறப்பான அந்த தளிர் உடல் கருமாத்தியின் மேல் ஏறி யிறங்கி விளையாடும்போது, தன் சொந்த மனைவியையே அவனால் அடையாளம் காணமுடியாது.

அப்படிப்பட்ட நேரங்களில் உடனே உலைக்களத்துக்கு ஓடிப்போய் கருத்துத் துருவேறிய இரும்பிடம் அடைக்கலம் தேடுவதுதான் அவனது ஒரே பரிகாரமாகும். அப்போதுதான் அவனால் தன் சொந்த பலத்தை திரும்பப் பெறமுடியும். அந்த அளவுக்கு வெறுப்பாக இருந்தது - கருமானுக்கும் குழந்தைக்குமான பிறப்பின் ரகசிய மாகும்.

தாற்காலிக இருப்பிடத்தின் அமைதியில்லாமையை உலைக்களத் திலும் அதன் சுற்றுச் சூழலிலுமாக அந்தப் பிராமணச் சிறுவனால் உணரமுடிந்தது. பிறப்பின் பிரகாச சக்திகள் அவனுக்கான திசைகளை வேறுபடுத்திக் காட்டிக்கொண்டிருந்தன. கனவின் உச்சத்தில் விளைந்த புதையலைப் போல் மகனை பேற்றி வளர்த்தாள் கருமாத்தி. அவனுடைய இரத்தச் சிவப்பு போன்ற உதடுகளை, ஆச்சரியத்தை வெளிப்படுத்தும் விழிகளுடன் பார்த்தாள் அவள். அந்த இளம் மேனியின் மினுமினுப்பில் கண்களைப் பதித்து மறுபக்கத்தை பார்க்க முயன்றாள்.

பாரதப் புழை மகா சமுத்திரமாகி இருக்கிறது. தன்னுடைய செழுமை, சொர்க்கச் சீமைகளில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அவளுக்கு தன் மகனின் அருகாமையே, இகழ்வுகளை உடைத்தெறியும் இறுமாப்பான நிமிடங்களாக இருக்கும். தண்டிக்கவோ நேசிக்கவோ கூடிய எண்ணத்தைக்கூட கருமாத்தியால் ஊகிக்க முடியவில்லை.

விடியற்காலையில் பாரதப் புழையின் நரம்புகளில் நீந்திக் கரையேறும் சிறுவன், இரவில் சால்தாவின் கோயிலிலிருந்து திரும்பி வருவான். அதுவரையில் சுற்று வட்டாரத்திலுள்ள சமுதாய மடங்களில் ஏறி இறங்கிப் பிராமணப் பிள்ளைகளுடன் நட்பு கொள்வான்.

ஜாதி வேறுபாடுகளின் எல்லைகளை உடைப்பவர்களுக்கு சாமூதிரி* யிடமிருந்து தண்டனை கிடைத்துக்கொண்டிருந்த காலமாக இருந்தது அப்போது. அவ்வாறு இருக்கும் போதுதான் கருமாத்தி மகன் பிராமணச் சிறுவர்களோடு நட்பை வற்படுத்திக் கொண்டான். அதிலும் பிரமிக்கும் வகையில் புராணங்களையும் சாஸ்திர சித்தாந்தங் களையும் நூலிழையில் கற்றுக்கொண்டான். எவ்வாறெல்லாமோ வார்த்தெடுக்கும் சமூகத்தில் துவாரங்களை உண்டாக்குவதும் கூட அதிலேயே பிறப்பெடுக்கும் அறிவாளிகள்தானே!

* கோழிக்கோடு ராஜா

ஐந்து

ஐயப்பன் கோயிலைச் சுற்றிலும் நிரம்பி தளும்பிக் கிடக்கும் பாரதப் புழையின் நீரில், ஒரு நாள் பெரும் ஏற்ற இறக்கம் ஏற்பட்டது. பல வருஷங்களுக்குப் பின் அங்கே வந்து சேர்ந்த அந்தப் பழைய மகா பிராமணனுக்கு தன்னுள் என்னதான் நிறைந்து வழிகிறது என்று புரியவில்லை. காற்றில் அலைந்து உதிர்ந்த ஆலம் இலைகள் ஒவ்வொன்றாக பூமியை அடைவதற்கு போட்டி போட்டுக்கொண்டிருந்தன. ஐயப்ப தரிசனம் முடிந்தது. ஆலம் சாம்பலின் மணல் மேட்டில் ஏறி நின்றபோது, கிழவரின் உடலுக்குள் நூறாயிரம் சிவப்பு எறும்புகள் வேகமாக ஏறின. மகா பிராமணன் சிலிர்த்துப் போய் விலகி நின்றதும், எதிரில் தேஜஸுடன் ஓர் இளைஞன்.

கிரகங்கள் தன் விளைச்சலை எடுப்பதற்காக அவனை அனுப்பின என்பதை கிழவர் அறிந்திருக்கவில்லை. இளைஞனிடம் நலம் விசாரித்துவிட்டுத் திரும்பும்போது கோயிலிலுள்ள யாரோ ஒரு கிராமத்தலைவன் சாப்பாட்டுக்காக சத்திரத்துக்கு அழைத்தான். தனக்கான வருங்கால வேத உபகரணங்களை வெளியில் எடுக்குமாறு இளைஞன் கூறினான்.

சர்க்கரைப் பாயசம் கிடைக்கும். அனுபவிக்க வேண்டியதையெல்லாம் துல்லியமாக அனுபவித்தாலும் மூத்த வேதத்தின் உரிமையாளரான கிழவரல்லவோ அழைப்பு விடுக்கிறார்! அவரே பதிலும் அளித்தார்.

''ஆனால், தீஞ்சுதான் போயிருக்கும்.''

சொன்னதைப்போல் சாப்பாட்டுக்கு சர்க்கரைப் பாயசம் இருந்தாலும், அடுக்களை சமையல்காரனின் கைப் புண்ணியத்தால் தீஞ்சு போய்தான்

இருந்தது. ஆச்சரியப்பட்ட இளைஞன் கூடா நண்பனாகி கிழவரின் எதிரில் திகைத்து நின்றான்.

வாஞ்சையுடன் ஆராய்ந்தபோது இளைஞனின் கண்களில் வெகு தூரத்திய சிவப்பு ஒளி. கிழவர் மனமுடைந்துவிட்டார். பார்த்துக் கொண்டிருக்கும்போதே பச்சை இரும்பின் நெடி எழும்பியது. பனியின் செதில்கள் பொரிந்து விழுந்தன. புவியின் பெருமூச்சுகள் நுரைத்துப் பொங்கின.

அந்நியோந்நியம் கைமாறிய இறந்தகால உலகங்களில் அவர்கள் தங்களையே மறந்து ஆச்சர்யப்பட்டார்கள். மகனின் முன்னால் பாவமன்னிப்பு கோரி தன் சக்தியை இழக்கும்படி ஆகலாம். கிழவர் மிகவும் சோர்வுற்றார். நரம்புகள் முறுக்கேற, அவருடைய கரங்கள் இளைஞனின் விரல்களை பலமாகப் பிடித்தன.

தண்ணீர் வடிந்ததும், கிழவரும் இளைஞனும் ஆற்றைக் கடந்தார்கள். நீரோட்டத்தை எதிர்த்துச்சென்ற அப்பயணத்தின் இறுதியில் இருவரும் பொடி மணலில் தளர்ந்து அமர்ந்தார்கள்.

'இனிமே நீ அக்கரைக்குப் போகாதே.'

தந்தை பேசினார்.

அரை மனதுடன் தலையை ஆட்டிய இளைஞன் புழையில் தலை முழுவதும் முங்கி எழுந்து வந்தான். நீர்த்தாரைகளின் மூலம் பாரதப் புழையை தரிசித்தான். அக்கரையில் நிழல்கள் கறுக்கத் தொடங்கி யிருந்தன. பலியிட்டுவிட்டுத் திரும்புபவனைப்போல் அவனுடைய முகம் வீங்கி வியர்த்தது. தலையிலிருந்து வடிந்து இறங்கிய ஆற்று நீருக்கு புளிப்புச் சுவை தோன்றியது.

'ஐசுவரியத்துக்கு பிற்காலச் சிந்தனைகள் என்பதே இல்லை. நீ ஆற்றில் நீந்தி தாண்டியவனாக்கும்.'

கிழவர் மீண்டும் கூறியபோது, இளைஞன் ஊமையாகி பிரமித்து நின்றான்.

பித்ருவத்தின் அறியாமையில் பாதி உண்மைகளைச் சொல்ல பிரா மணக் கிழவர் தயங்கவில்லை. உலைக்களச் சிறுவனை மேன்மை யான ஒரு ஜாதிக்காரனாக சாமூதிரிக்கு அறிமுகப்படுத்தினார். வேத

சாஸ்திரங்களை அறிந்த பண்டிதன் என்னும் நிலையில், ஆதிரச்சேரி தம்புரான்களிடமிருந்து நிலம் பதிவு செய்து கிடைத்தது. வெகு தூரத்திய நாயர் குடும்பத்திலிருந்து நல்ல நிலையில் மணஉறவு கொண்டான். இரு நிலை மாளிகை அமைத்தான்.

ஆனைக்கரையிலுள்ள மேடுபள்ளம் நிறைந்த பகுதிகளில் புதியதொரு நிலச்சுவான்தாரின் உதயமாக அது இருந்தது. பின்னாள்களில் அங்கிருந்த பரம்பரை மேலே புல்லாரத் தறவாட்டின் பெரிய மேனன்களின் உடைமையாகிவிட்டது.

ஆற்றுக்கு அப்பால் பழக்கமான சில நிழல் கூட்டங்கள் மிச்சமிருந்தன. அதில் ஒன்று மட்டும் சிலகாலம் வரையில் உயிர்ப்புடன் அலறித் திரிந்தது. பெரும் கடலாக இருந்த பாரதப் புழை பருவ மாதத்துக்கு முன்னால் ஒரு வாய்க்கால்போல் சுருங்கின. அமாவாசை சந்திரன்கள் மட்டும் அதில் உதித்தும் மறைந்து கொண்டும் இருந்தன.

பிரசவவலி கனவு கண்டு திடுக்கிட்டு விழிக்கும்போது கருமாத்தி பிரமித்துப்போய் மகனைத் தேடினாள். மீண்டும் உறக்கத்தில் மயங்கும்போது கர்ப்பப்பையை இழக்கும்படியான பயங்கரக் கனவுகளைக் கண்டுவிட்டு பயந்தாள். கருமானும் கருமாத்தியும் பரஸ்பரம் கண்டும் காணாததுபோல் குழப்பத்தில் தடுமாறினார்கள். மின்னும் மதிய சூரியனை இமை சிமிட்டாமல் நோக்கி நிற்கும் பைத்தியம் கருமாத்திக்கு தொடங்கியது.

உலைக்களத்தில் உழன்ற கருமான் தன் இருமலை என்னவென்று புரியாமலேயே இரத்தம் கக்கி துவண்டு விழுந்தான். கடைசியில் பாரதப் புழையின் தண்ணீர் பரப்புக்கு மேலாக மந்திர ஆவேசத்துடன் ஓடிச் சென்ற கருமாத்தியைத்தான் மக்கள் திடுக்கிட்டு நோக்கினார்கள். தாழ்த்தப்பட்டவர்களின் தாம்பத்திய பாக்கியங்கள் அப்படியெல்லாம் தான் இருக்கும் போலும்.

ஆறு

தாய் பிரசவக் கட்டிலிலிருந்து எழுந்த நேரத்திலேயே பிள்ளையும் எழுந்துகொண்டது என்று சொல்லும் வகையில்தான் அம்மாளுவின் குழந்தை விஷயமும் இருந்தது. நினைத்துப் பார்க்க முடியாத வளர்ச்சி. கார்த்தியாயினி என்று அவர்கள் அவளை அழைத்ததற்கும், கார்த்தி என்று அவள் தன்னையே அழைத்துக்கொள்ளத் தொடங்கியதற்கும் இடையே எத்தனை நாள்களின் இடைவெளி உண்டென்று சங்கு மேனனுக்கே ஆச்சரியமாகி விட்டது. குழப்பமான நினைவுகளுக்குள் அவனுடைய மனம் மூழ்கியது.

காலரா கண்டு ஐந்து பிணங்களை தறவாட்டு தளத்தில் வரிசையாக கிடத்திய காலத்திலேயே அத்தறவாட்டின் வளர்ச்சியில் இப்படிப் பட்ட திடீர் விரிசல் உண்டாயிற்று. சங்குமேனனின் நான்கு தம்பிகளும் ஒருவர் பின் ஒருவராக செத்து விழுந்தார்கள். ஒவ்வொரு மரணம் நிகழும்போதும் தறவாட்டுப் பறம்பில்* செழுமையின் உற்சவம் கொடிகட்டிப் பறப்பதாக இருந்தது.

பலாவும் மாவும் காய்கறிப் பழங்களும் பறம்பு முழுவதும் நிறைந்து வழிந்தன. தூக்கியெறியும் காய்கறிகளின் விதைகள் நாலாபுறமும் முளைத்துப் படர்ந்து பழங்களை உதிர்த்தன. கால உணர்வையும்கூட இழந்த நிலையில்தான் கொடிகளும் செடிகளும் கருத்தரிக்கும் சம்பவமாக இருந்தன.

இந்த பெருத்த அழிவுக்குப் பதிலாகக் கிடைக்கும் கடன்களாகத்தான் அவற்றையெல்லாம் சங்குமேனன் மூடத்தனமாக ஏற்றுக் கொண்டான்.

---

* பறம்பு - தோட்ட மனை

மிகவும் கோபம் கொப்பளிக்கும் போதெல்லாம் கூடை கூடையாக காய்கனிகளை வீட்டுப் பறம்பில் குழிதோண்டிப் புதைத்தான். மீதியை அணில்களும் பறவைகளும் தின்று தீர்த்தன.

ஆண்டுகளின் வயது முதிர்வில் ஒரு வரத்துக்குள்ளேயே சங்குமேனனின் முகத்தில் கூடு அடைவதாக இருந்தது. ஒரு பிணத்தை புதைத்துவிட்டு வருவதற்குள் அடுத்ததற்கான நேரமாக இருந்தது. நான்கு சகோதரர்களையும் அடக்கம் செய்தபின் அவன் தறவாட்டு வீட்டின் படி தாண்டினான்.

அதிகாரிப் பணியின் ஜம்பத்தைக் காண்பிக்கத்தான் துக்கநேரத்தில்கூட அவன் வீட்டில் இருக்கவில்லை என்று ஊர்ப்பார்கள் குசும்பு பேசினார்கள். உணர்ச்சிகொள்ளும் நிமிடங்களிலெல்லாம் அலுவலகப் பணிகளில் மூழ்கிவிட வேண்டும். சங்குமேனனின் உத்தேசமும் அதுவாகத் தான் இருந்தது.

நிறுவனத்தார்களின் புதிய சட்டத்தின் கீழ் வருவாயின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தி வந்த காலமாக அது இருந்தது. சார்பற்ற தன்மையிலும் தெரிந்த முகம் என்று பாரமலும்தான் பொறுப்புகளை நிறைவேற்றும் உறுதி அவனுக்கு ஏற்பட்டிருந்தது. ஆனால், எங்கேயோ வைத்து சார்புத் தன்மையின் கட்டைகள் நெளியத் தொடங்கின. அதிகாரி வேலையே ஒரு சாபச் சுரப்பியைப்போல் மனசாட்சியில் நஞ்சைச் சுரந்தது.

அடுத்த கிராமங்களிலுள்ள அதிகாரிகளுக்கெல்லாம் என்ன செய்வது என்னும் வகையில் ஒரேயொரு நிருபித்தலை மட்டுமே சொய்ய வேண்டியதாக இருந்தது. அதுவும் துரையின் கட்டளைப் பிரகாரம்தான். கம்பெனியார்களின் சட்டங்களையிற்றே?

சங்குமேனனைப் பொறுத்தமட்டில் துரையின் சட்டதிட்டங்கள் தனக்கு உதவ முடியாத ஒரு சந்தர்ப்பமும் உண்டாயிற்று.

தறவாட்டு வராந்தாவில் சாய்வு நாற்காலியில் படுத்திருக்கும்போது மூட்டை கட்டியதுபோன்ற ஒரு தனிமை. அங்குதான் நூறாயிரம் கேள்விகள் சுற்றுமுற்றிலுமிருந்து கொத்திப் பிடுங்கும். தவறும் உண்மையும், பிடிக்குள் அகப்படாதப் புள்ளிகளாக அலைகழிக்கும். பதிலில்லாமல் பதறும் நேரத்தில், தாமே திருடன் என்னும் கோபம்கூட கொப்பளிக்கும். அன்றன்றைய கர்மங்களைப் பிய்த்துப்

பிரித்து பங்கிடும்போது தீமையின் பக்கத்தில்தான் முழுப் பங்கும் தாழ்ந்து தொங்கிக்கொண்டு இருக்கும்.

அப்போதுதான் ஆழமானதொரு துன்பம் மேலனுக்குள் உறுதியாக இறங்கும். இவற்றிலெல்லாம் எதற்காக நாம் உட்பட வேண்டும்? நன்மை இல்லையென்று உறுதியாகியுள்ள விஷயங்களுக்காக நம் உடலையும் உள்ளத்தையும் ஏன் இழக்க வேண்டும்?

ஈரேழு பதினான்கு உலகங்களிலும் தங்கள் வீரதீர பராக்கிரமங்களைக் காண்பித்த நான்கு சகோதரர்களின் நிலைமையும் என்னவாயிற்று? அவர்களின் பிணங்களை மரணம் தன் முன்னே கொண்டுவந்து போட்டபோது, நேரா நேரத்துக்கான உணவைப் போன்றல்லவா இருந்துவிட்டது.

அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணமில்லாத அந்தத் தீவிரத் தன்மையில் துரையின் மேன்மைகளெல்லாம் வெறும் நீர்க்குமிழி களாகத்தான் தோன்றுகிறது. அப்படி இல்லையென்றால் வெகுவாகப் புகழப்படும் துரையின் சார்பற்ற தன்மை என்னவாகும்? சுயநலத் தன்மையோடு இணைந்து கொண்டு மற்றவர்களிடமெல்லாம் நடுநிலையோடு இருக்கிறான் என்பது அல்லவோ இங்கு உண்மை யாக ஆகிவிடும்! துரையின் சுயநலத்தன்மையை நியதிகளாக்கி அதிகாரியான தங்கள் அல்லவா வருமானத்தை பிரித்துக்கொள் கிறான். எதாவது சில இடங்களில் குறை வந்தால்கூட திசையெங்கும் முழங்கும் வகையில் பெரும் கடினத்தன்மையை அல்லவா உயர்த்துகிறான்?

பொருளாதார நிலை தாழ்ந்துபோன குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், கருணைக்காக கலெக்டரின் பங்களாவை தஞ்சம் அடையும்போது, தங்களையே இழக்கும்படியான நிலை உருவாவதற்கும் தங்கள்தான் கூட்டு நிற்கின்றான். துரை செய்ய வேண்டிய எந்தக் காரியமும் அப்போது அலங்காரமாக பரிணமித்துவிடுகிறது.

ரகசிய விசாரணை சமயத்தில் கடுமையான அலுவலக சட்ட திட்டங் களை நிர்வகிக்கும் சங்குமேனன், உள்ளுக்குள் ஒரு வெடிகுழாய் மருந்தைப் போல மென்மையாக இருந்தான். உள்ளுக்குள் கிடக்கும் வெடிமருந்துக்குப் பயந்துகொண்டேதான் அப்போது மேலதிகாரி களுடனும் அவன் பழகிக்கொண்டிருந்தான்.

கலெக்டரின் பங்களாவில் பயங்கரமான கோபக் குரலில் பேச வேண்டியதாகிவிட்டது. கும்பிடி கிராமத்தின் நிதிப் பிரிவைப் பற்றி பேசிப் பேசியே துரை சம்பந்தா சம்பந்தமில்லாததை எல்லாம் பேசத் தொடங்கினான். முகத்துக்கு நேராகவே கெட்ட வார்த்தைகளைப் பொழிந்தான். முணுமுணுக்கும் உதடுகள் மதுவின் போதையில் தளர்ந்து குழைந்து உணர்வற்றதாயிற்று. விழிகள் நீலநிறக் குளத்தில் மூழ்கின.

குங்குமத்தைப் பொழியும் நீர்க்குழம்புக்கு எதிரே இருளில் கருத்த விரல்கள் விலகியதுபோல் இருந்தன. திரும்பிப் பார்த்தபோது கண்முன்னால் என்னவோ தெரிந்தது. அப்பா, பாட்டன், முப் பாட்டன்களின் முடிவுறாத பரம்பரைகள் துரோகங்களிலிருந்து தன்னை பின்னோக்கி இழுக்கின்றன.

அதன்பின் ஏற்பட்ட கோபப் பிரகடனமெல்லாம் இதயம் நெகிழும் படியான இடங்களுக்குள் இழுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தன்னுடையதும் மற்றவர்களுடையதுமான கர்மங்களையெல்லாம் சாமி அறையிலுள்ள பகவதியின் திருமுன்பு வைத்து விவரித்தான். நெருக்கமில்லாத நுண்ணிய உபகரணங்களால் நூல்பிரித்துப் பார்க்கும்போது பிரச்னை மிகவும் குழப்பமாகியிருந்தது. துரையின் செயல்களிலிருந்து பிரித்தெடுத்த சுய நலங்கள் தன்னுடைய உள்ளங்களிலும் மறைந்து கிடக்கின்றனவே!

மேலும் தாமதிக்காமல் தன்னுடைய ராஜினாமா கடிதத்தை வேலாயி மூலம் கலெக்டருக்கு அனுப்பி வைத்தான்.

மனிதச் செயல்களின் மூலங்களைத் தேடி இன்று நாம் எங்கேபோய் சேர்ந்திருக்கிறோம்? கார்த்தியாயினிக் குட்டியின் வளர்ச்சியைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிய சங்குமேனன் தன் தம்பிகளின் மரணம் முதற்கொண்டு ஒவ்வொரு நிகழ்வுகளையும் மனதில் ஆராய்ந்தான்.

வயல்களிலும் குடிசைப் பகுதிகளிலும் சுற்றியலைந்து கொண்டிருந்த அவனுடைய முகத்தில் நினைவுகளின் மிச்சங்கள் நுரையிட்டுப் பொங்கின. நூற்றுக்கணக்கான சூரியன்களிடமிருந்து பெறும் வெயிலின் புதுமை, வெறும் நிலா வெளிச்சம்போல் அனுபவப்பட்டது. உதடுகளில் முணுமுணுப்பும் விரல்களில் சைகையுமாக தறவாட்டு முற்றத்தை நோக்கி மூச்சு இரைத்துக் கொண்டு வந்தான். சாய்வு நாற்காலியில் இடம்பிடித்ததும் வியர்வை முத்துக்கள் நீரோடையாக ஒழுகின.

தெச்சி* கூட்டங்களும் இளம் மாமரங்களும் எல்லையாக நின்று பரப்பளவு மிகுந்த ஒரு முற்றமாகத்தான் இருந்தது தறவாட்டு வீடும். சங்குமேனன் ஏறி வந்த முக்கியப் பாதை வீட்டு முற்றத்திலிருந்து வயல்களின் மத்தியப் பகுதியை நோக்கி சரிந்து செல்கிறது. இடைவழி என்று அழைக்கப்படும் பாதையின் இருபக்கங்களிலும் மூவாண்டன் மாவின்** கன்றுகள் வரிசையாக நிற்கின்றன. மேல்நோக்கி உயர்ந்த கிளைகள் பிரிந்து பாதைக்கும் மேலே பந்தல் போட்டிருக்கின்றன. இடைவழியின் முடிவில் வயலில் உற்பத்தியாகும் பொருட்களை நோக்குவதுபோல் பெரியதொரு நுழைவுவாயில் கட்டிடம் இருந்தது. மிக உயரமான சமதரையில் தறவாட்டுப் பறம்பு இருப்பதினால் வயலின் தமனிகளைத் தாண்டிவரும் மனிதர்களை தூரத்தில் நின்றவாறே பார்க்கலாம். வீட்டுப் பறம்பிலிருந்து வயலை நோக்கிச் சரிந்து செல்லும் வேலிச் சரிவில் பெரியதொரு எட்டிக்கொட்டைமரம் நெடுநெடுவென உயரமாக நிற்கிறது.

நுழைவாயிலை வந்தடையும் முக்கியப் பாதைக்கு அப்பால் முற்றத்திலிருந்து வடக்கே ஒரு சின்ன நடைபாதை இறங்கிச் செல்கிறது. செங்குத்தாகக் கட்டி எழுப்பிய குளப் படித்துறையைச் சேர்ந்ததும் அது திடீரென முடிந்துவிடும். அந்தப் பாதையின் எல்லைகளில் மந்தார மரக்கூட்டங்களும் முல்லைக்கொடிகளும் கட்டியணைத்துக் கொண்டு மின்னின.

அப்போது வீசிய இளம் காற்றோடு சேர்ந்து ஏழு வயது பெண்குழந்தை குளப் படித்துறையிலிருந்து முழு நிர்வாணமாக ஓடிவந்தாள். குளிப்பாட்டி நிற்கவைத்த தாயிடமிருந்து உதறிக்கொண்டு பாய்ந்தோடி வந்தவள் அவள். தலையிலிருந்து ஒழுகும் நீர் முத்துக்கள் முகத்தில் நீலக் கண்ணாடியாக இருக்கும் எண்ணெயின் மினுமினுப்பு சிவந்து தடித்திருந்த இளம் மார்பகங்கள் மிகவும் பரவசத்துடன் துருத்தி நிற்கின்றன.

தீயைப் போன்ற சிவப்பு நிறம் சரீரவெண்மையில் தெரித்துப் பரவுகிறது. மூச்சிழப்பின் வேகத்தினால் நாசியின் முனை சிறியதாக துடிக்கிறது. வளரும் செல்களின் தூண்டுதலால் நடுக்கம் தோன்றுகிறது.

---

* ஒருவகை பூஞ்செடி; ** மா - மாமர வகைகளில் ஒன்று

அம்மாளு அவளுக்குப் பின்னாலேயே ஓடிப்போய்ப் பார்த்தாலும் கார்த்தியாயினியைப் பிடிக்க முடியவில்லை. சாய்வு நாற்காலியில் வியர்த்து அமர்ந்திருக்கும் சங்குமேனன் இடைவழியின் தொடக்கத்திலிருந்தே இந்த காட்சியைக் கண்டுகொண்டிருந்தான். வெயிலில் நடந்தபோது தோன்றாத உஷ்ணம் இக்காட்சியைக் கண்டதும் அவனுக்கு அனுபவப்பட்டது. அசாதாரணமான இளமைக்கு முன்னே அடிமைப்படுவதுபோல் அவன் சரீரம் அமர்ந்திருந்த இடத்திலிருந்தே தானாக மேலெழும்பியது.

கார்த்தி இன்னும் வராந்தாவை அடைவதற்கு மூன்று இளம் மாங்கன்றுகளின் தூரம்தான் மீதமிருந்தது. அழகின் அதிக அழுத்தத்தால் உடலின் செல்கள் நெறிக்கப்பட்டு அவன் ஒரேயடியாக வியர்த்துக் குளிர்ந்தான்.

ஓடிவந்ததும், அவள் கர்க்கிடக* மாதமாகி பொழிந்து தள்ளுவதும் தன் மேலாகத்தான் இருக்கும். வெப்பத்தின் வியர்வையினால் பழுத்துக் கிடக்கும் தன்னுடைய தசைகளின்மேல்தான் அவளுடைய மிருதுவான மேனி உரசுவதாக இருக்கும். பத்தாயப் புரைக்கு ஓடிச் சென்று தப்பிக்கலாமா எனும் எண்ணம் திடீரென்று தோன்றியது. அப்படியே செய்யலாம் என்று தீர்மானித்த பின்பும் உடல் அங்கேயே இருந்து அவளுக்கு வாய்ப்பு கொடுப்பதாகத்தான் இருந்தது.

கார்த்தி உடலின்மேல் ஒட்டியவாறு ஏறி தன் தலையைப் பிடித்து ஆட்டியபோதுதான் தியான நிலையில் இருந்த மேனனின் விழிகள் பயத்தோடு திறந்தன. தூய்மையான வெண்மையில் நீலக்கோடுகள் ஊர்ந்த உடல் பிரதேசத்தில்தான் கண் இமைகள் உரசுகின்றன. அவனுடைய விழிகள் மீண்டும் மயங்கிச் சொருகினாலும், அந்தத் தடிமனும் மிருதுவும் அவன் பார்வைக்குள் ஈர்க்கப்படுகின்றன. அவன் தலையின்மேல் கால்களை விரித்து அமர்ந்துகொண்டு, தன் சிறு விரல்களால் உடல் முழுவதிலும் கிக்கிளி மூட்டிவிட்டு அவள் மெல்ல இறங்கினாள்.

சிறிதுநேரம் வரையில் கார்த்தியை அணைத்துக்கொண்ட மேனன் பின் சட்டென விடுவித்து எதிரில் நிற்க வைத்தான். அதன் பின் அவனுக்கு அங்கே இருக்க எண்ணம் உண்டாகவில்லை.

---

* ஆடி மாதம்

பத்தாயப்புரையின் மேல் ஏறியதும் குழப்பமான சத்தங்கள் கேட்டன. மாடிப்படிகளில் அசையக்கூடிய பகுதியின் காலடிகள்தான் அவை என்று சந்தேகம் தோன்றியது. கவனமாக உற்றுக் கேட்டபோது அது ஒன்றுமில்லை என்று தெரிந்தது. அக்கலவரமான உரசல்கள் தன் மனதுக்குள் இருந்துதான் கேட்டிருக்கின்றன என்று புரிந்தது.

கார்த்தியுடன் எதிர்க்க முடியாத வாத்சல்யம் எங்கிருந்தோ தன்னை தளர்வடையச் செய்கிறது. இந்த வயதில் தன்னுள் சுரந்த திரவங்களைப் பற்றி மேனன் முதன் முதலாக சந்தேகப்பட்டான். மனத்தின் படுகுழி முதல் ஆத்மா வரையில் சென்றுவிட்ட அவன் ஒவ்வொரு மூலகங்களாகப் பொறுக்கி எடுத்தான். இதயத்தின் சாணக்கல்லில் வைத்து பலமுறை தீட்டிப் பார்த்தான். வைரங்கள் கரித்துண்டுகளாகவும் மீதி இருப்பவைகள் சூன்யமாகவும் உருவகப்படுகின்றன.

நன்மை தீமைகளைப் பற்றியும் சரி தவறுகளைப் பற்றியுமான நூறாயிரம் உண்மைகளை சேகரித்து வைத்திருந்தவன்தானே! ஆனால், அவை எல்லாம் இப்போது எங்கே போயிற்று? தான் எதையும் அறிந்திருக்கவில்லை என்னும் புரிதல்தான் மிகப்பெரும் சாதனையாக இறுதியில் கிடைக்கிறது. ஒரு கோமாளியைப் போல் தலையைச் சொரிந்துகொண்டு பத்தாயப்புரையின் மேல் உலாத்தினான் சங்குமேனன்.

ஏதோவொரு தளத்தை அடியொற்றி விம்மியழுது கொண்டிருந்தாள் கார்த்தி. சட்டென்று தன்னை விட்டெறிந்து விட்டு பத்தாயப் புரையின்மேல் சங்கு மாமன் போனதும் அவளுக்கு கஷ்டமாகி விட்டது. கண்களில் குளம்போல் நீர் கோர்த்தது.

அத்தடாகத்திலிருந்து தாவும்பி, மார்பின் வழியே வடிந்து தொப்புளையும் தாண்டி தரையில் ஓடி அம்மாவுவின் உடலை அது தொட்ட போது, அவள் அந்நீரின் உஷ்ணத்தை உணர்ந்தாள். மகளை திகைப்புடன் நோக்கியபோது, அவளின் கண்களிலிருந்து ஆவி மேகங்கள் பொங்கின. தன் கோபத்தால் கீறப்பட்ட தொடைகளில் இரத்த புஷ்டங்கள் கொப்பளித்து உப்பின.

''என்னால இவளை வைச்சிருக்க முடியலியேம்மா.''

அம்மம்மாவிடம் கார்த்தியை ஒப்படைத்துவிட்டு அம்மாவு மெல்ல விலகிச் சென்றாள். மகளினுடைய ஓட்டத்தின் காலடி எடைக்

கல்லைப்போல் அவளின் மார்பில் தொங்கிக்கொண்டு இருந்தன. குளப் படித்துறையிலிருந்து முழு நிர்வாணமாக ஓடிச்சென்ற பெண் தன்னுடைய சிறுமி கார்த்தியாகத்தான் இருக்குமோ?

தன் கைகளால் அப்பம் சுட்டுக் கொடுத்து முடிகளை சிக்கெடுத்து அம்மாளுவின் தாய் கார்த்தியை அமைதிப்படுத்த முயன்றாள்.

''நான் சங்கு மாமாகிட்டே போகணும்.''

அவ்வளவு விரைவில் அடங்குவதற்கு அவள் தயாராக இருக்க வில்லை. அழுகையின் எதிரொலிகள் பத்தாயப் புரையின் மேல் தேம்புதலாகத் தெளித்தன. ஜோல்னா பையைப் போல் மனத்தை தோலில் போட்டுக்கொண்ட சங்குமேனன் சட்டென காதுகளைப் பொத்திக்கொண்டான்.

''அப்படின்னா சரி. நேத்து சொன்ன கதையோட மீதிய சொல்றேன்...''

அம்மாளுவின் தாய் தந்திரமாக விஷயத்தை மாற்றினாள். பஞ்சாக்னிக்கு நடுவே நின்று சிவனை நோக்கி தவம் செய்யும் பார்வதியின் கதையைத் தொடர்ந்தபோது கார்த்தியின் விழிகளி லிருந்து பட்டாம்பூச்சிகள் பறந்தன. முகத்தில் உலர்ந்த கண்ணீர் கோடுகளில் ரத்தினச் சாம்பல் மின்னியது. கேட்கும் வார்த்தைகளை ஓவியங்களாக்கி கனவு விழிகளால் அவள் ஒத்தியெடுத்தாள்.

பத்து வயதை அடைந்தபோது அம்மாளுவைவிட கார்த்தி உயரமாகி இருந்தாள். நிசப்தமானதொரு தீவிரத்தன்மையும் கட்டளையிடும் தன்மையும் அவளின் முகத்தில் ஜொலித்து நின்றன. தன்னுடைய இருப்பு எல்லோரிடத்திலும் கிரகணம் போல் நிழலடிக்கிறது என்று அவளுக்குத் தோன்றுவதுண்டு. நட்பானாலும் பாதுகாப்பானாலும் உள்ளிருட்டை மட்டும்தான் வீட்டிலுள்ளவர்கள் தனக்கு அளித் துள்ளார்கள் என்றும் புரிந்தது.

ஆயிரம் வானவில் பளிங்குகளாக மின்னும் முடியுடன் குளித்து ஏறி வரும்போது சாமி அறையிலுள்ள பகவதியும் கண்ணிமைக்காமல்தான் பார்த்துக்கொண்டு நிற்பாள். எவ்வித சத்தமும் இருக்காது. அம்மாவும் அம்மம்மாவும் சொல்வதையும் பேசுவதையும் கேட்பதைத் தவிர பகவதியின் நடமாட்டத்தையோ அடவுகளையோ அவள் இதுவரை கேட்டதில்லை. பயமோ திகிலோ ஒருபோதும் தோன்றியதுமில்லை.

பாவம், மிகப்பழைமையான பகவதி! தறவாடு உண்டான காலம் முதற் கொண்டே சாமி அறையிலும் மாடிப் படிகளிலுமாகவே அது அவ்வாறுதான் காலம் தள்ளிக்கொண்டிருக்கிறதாம்.

பகவதியின் ரகசியப் பயணத்தைக் காண்பதற்காக எத்தனையோ நாள்கள் பொய்யான உறக்கம் கொண்டு நடித்தபடி படுத்திருப்பதுண்டு. மாடியில் சந்து பொந்துகளின் வழியாக சாய்த்தும் எட்டியும் பார்த்ததுண்டு.

நீர்க்குமிழிகளின் வெடிப்புகளைப் போல் வெள்ளிக்கிழமை இரவுகளில் முழக்கமிடும் பகவதியின் அழைப்புகளுக்காக அம்மம்மா காது கொடுத்து படுத்திருப்பாள். 'என்ன அம்மம்மா யோசிச்சிக்கிட்டு இருக்கிறே' என்று கேட்டுக்கொண்டு அவள் அருகில் செல்லும் போதே திடுக்கிட்டு எழுந்து விடுவாள்.

''நான்தான் பகவதியா அம்மம்மா?''

கார்த்தி சிரித்துக்கொண்டே கேட்பாள்.

''தெரியலியேம்மா.''

அம்மம்மா பேத்தியின் செழுமையான வளர்ச்சியை கட்டிப்பிடித்து தழுவிக் கொள்வாள். அவள் வந்துவிட்டால்போதும் அப்புறம் பகவதியுமில்லை, மற்றவர்களுமில்லை. கால் அடவுத் தாளங்களும் நீர்க்குமிழிகளின் வெடிப்புகளும் கானல் நீரைப்போல் மறைந்துவிட்டிருக்கும்.

கார்த்திக்கு படிப்பு சொல்லிக்கொடுக்க வந்துகொண்டிருந்த எழுத்தச்சன் மாஸ்டர் கொஞ்ச நாள்களாகவே வருவதில்லை. பக்கவாதம் பாதித்து ஒரு பக்கமாக குறுகிப்போய் படுத்திருக்கிறாராம்.

அதனால், சங்கு மாமனிடம் பாடங்களைக் கேட்டு கற்றுக் கொள்வதற்காக அம்மம்மா அவளை அவனிடம் அனுப்புவதுண்டு.

பத்தாயப்புரையின் மேல் ஏறிச்செல்வதென்பது அவளுக்கு மிகவும் பரவசம் ஏற்படுத்தும் நிகழ்வாக இருக்கும். ஒழுங்காக வைக்கப் பட்டுள்ள மேஜை நாற்காலிகளும், சுவரிலிருந்து துருத்திக்கொண்டு இருக்கும் பெரிய கலைமான் கொம்பும், ஷெல்பில் அடுக்கப் பட்டிருக்கும் புத்தகங்களும் மிக அழகான 'பவுண்டன் பேனா'வும் அவளுக்கு ஆனந்தத்தை அளித்தன.

அந்தப் பேனாவில் ஆடிவிளையாடும் மையின் நிறப்பை ஒவ்வொரு முறை செல்லும்போதெல்லாம் அவள் அளந்து பார்ப்பாள்.

பத்தாயப்புரை மச்சிலுள்ள சூழலை விரல்களால் தொடுவதற்கும், திரும்பி வரும்போது அவற்றை உள்ளங்கையில் அடக்கிக் கொள்வதற்கும் ஆர்வம் தோன்றுவதுண்டு. வாசனை விபூதியிலிருந்து உயரும் வகையில் காரசாரமான ஒரு சுகந்தம்தான் அங்கே தங்கி இருக்கும். சங்கு மாமாவின் உடலுக்கும் அதே பரிமளம்தான். சுலோகம் சொல்லி பொருள் கூறும் சங்கு மாமாவைப் பார்த்துக் கொண்டிருப்பதற்கே ஒரு சுகமாக இருக்கும். ஆனால் அதற்கு அதிக நேரம் கிடைப்பதில்லை. எழுதிப் படிப்பதற்கான வார்த்தைகளையும் சொல்லித் தெளியக்கூடிய சுலோகங்களையும் கற்றுக்கொடுக்கும் சங்குமாமன் சிறிது நேரத்தில் முறுக்கேறி மனம் மாறுவார். அப்படிப் பட்ட நேரங்களில் தன்னுடைய சொந்த விருப்பத்தினால் அப்படி வேறுபட்டு நிற்கவில்லை என்பது மட்டும் அவருடைய உடல் சலனங்களைக் கண்டால் தெரியும். புலப்படாத ஏதோவொரு நிர்ப்பந்தம் குறுக்கிட்டு அவளை ஈர்த்துக் கொள்கிறது.

''சங்குமாமா, நில்லுங்க. சங்குமாமா சும்மா நில்லுங்க'' என்று ஆரம்பத்திலெல்லாம் கார்த்தி சொல்லிப் பார்த்ததுண்டு. சொன்னால் அனுசரித்துச் செல்வான் என்றாலும், அந்த நேரத்திய மூச்சுத் திணறலையும் பரிதாப நிலையையும் கண்டால் பொறுக்க முடியாது. ஏதோவொரு கும்பூதம் தன் சாட்டையினால் அடித்து அவரை தன்னிடமிருந்து பிரித்துக்கொண்டிருக்கிறதே!

அந்த நிமிடங்களிலெல்லாம் அவள் அதனைப் பற்றி தனக்குத்தானே கேள்வியாக கேட்டுப் பார்ப்பாள்.

படித்த புத்தங்களை திருப்பிக் கொடுத்துவிட்டு புதிய புத்தகங்களை பெறுவதற்காக மீண்டும் பத்தாயப்புரையின் மச்சுக்குப் போவாள் கார்த்தி. மிகவும் வெறுப்பை வெளியிடும் சங்குமாமனின் நெற்றியைக் காணும்போது வேதனையுடன் திரும்பிவிடுவாள்.

''நீ போயிடுமா. நீ போயிடுமா..'' என்று சொல்லி தோளில் தட்டினாலும், அவள் சிறிதுநேரம் வரையில் அங்கேயே தயங்கியவாறு நிற்பாள். மாடியிலிருந்து இறங்கி கடைசிப் படியை அடைந்ததும்

திரும்பிப் பார்ப்பாள். களைப்புற்ற கண்களால் சங்குமாமன் தன்னைப் பின்தொடருகிறான் என்று அவளுக்கு நன்றாகத் தெரியும்.

ஒருநாள் வெகுநேரமாகியும் குளப் படித்துறையிலிருந்து கார்த்தி திரும்பி வரவில்லை. அம்மாளுவின் அம்மா குழம்பிப் போய் அவதிப்பட்டு அம்மாளுவிடம் விசாரித்தாள். அடுக்களையில் வேலைசெய்யும் இத்துக்குட்டி அம்மாளிடமும், வெளிவேலைக்காரி பாருவிடமும் விசாரித்தாள். தங்களுக்குள் கேட்டுக்கொள்ளும் பெண்களின் கண் சுழற்றல்களிலிருந்து ஊகித்துவிட்டு அம்மாளு வாணம்போல் வெளியே ஓடினாள். சலனத்தின் தீவிரத்தன்மையில் பாதையோரத்திலுள்ள மந்தாரக் கூட்டங்கள் காற்றில் உலைந்து இலைகளைக் கொட்டின.

கல் படிக்கட்டுகளில் பூத்துக் குலுங்கும் குவளை மலர்களும் பறந்து விளையாடும் பட்டாம்பூச்சிகளும் கார்த்தியை மூடியிருக்கும் காட்சியைத்தான் அம்மாளு கண்டாள். அவைகளைப் பார்த்துக் கொஞ்சிக் கொண்டு கல்படியில் கருணை முகத்துடன் குனிந்து அமர்ந்திருந்தாள் கார்த்தி. இரண்டு மூன்று படிகள் வரையில் இறங்கிச் சென்ற அம்மாளு திடீரென கூச்சலிட்டு தலைசுற்றி கீழே விழுந்தாள்.

கார்த்தியின் கால்கள் சிவப்புக் கம்பளத்தால் கட்டப்பட்டு அதன் வழியாக ஒரு சிவப்பு நிழல்கோடு வடிந்து இறங்கிக் கொண்டிருந்தது, அதை குளத்திலுள்ள தண்ணீர் சவகாசமாக அழித்துக் கொண்டிருக்கிறது. சிவப்புக் கும்பாரம் துளிகளாகப் பிரியும்போது நீர்ப்பரப்பில் சிறுசிறு மீன்கள் போட்டிப் போட்டுக்கொண்டு அவற்றைக் கொத்திச் செல்கின்றன.

தாயின் கூச்சலைக் கேட்டவுடன் கார்த்தி மோகநித்திரையிலிருந்ததுபோல் திடுக்கிட்டுத் துள்ளியெழுந்தாள். கல் படிக்கட்டுக்களில் ஏறி வந்தாள். தன் தாய் கீழே கிடக்கும் காட்சியை நிமிஷ நேரம் பார்த்துக்கொண்டு நின்றாள். படிகம்போன்ற கண்களில் நீர் கோர்த்திருந்தாலும் அதிலிருந்து ஒரு துளிகூட கீழே விழவில்லை.

கல் படிக்கட்டுகளில் கிடந்த அம்மாளுவைத் தாங்கியபடி மேலே நடத்திவரும்போது அவள் தனக்குள் ஆலோசித்தாள். இவரை

யெல்லாம் பயப்படுத்தவேண்டும் என்ற விஷயங்கள் தன் மனத்தில் சிறு சஞ்சலத்தைக்கூட ஏற்படுத்தவில்லை. அதற்கு நேர்மாறாக, 'ஐயோ பாவம்' என்ற எண்ணத்தைதான் உண்டாக்குகிறது. அதுவும் புரிதலுக்கான அழகை தேடுவது போல்.

அம்மம்மாவுக்கும் அம்மாவுக்கும் சங்குமாமாவுக்குமெல்லாம் முன்பே தான் பிறவியெடுத்து அவர்களுடன் சேர்ந்திருந்திருப் பேனோ?.

மயக்கம் தெளிந்து உணர்வு வந்ததும் தன் வாயினுள் இரத்தம் சிவப்பதாகத்தான் அம்மாளுவுக்கு அனுபவப்பட்டது. அவளுடைய தலைக்குள் இரத்த நதிகளும் ஊற்றுக்களும் பெருகி வந்து குளமாகி வெகுவாக ஆரவாரித்துக் கொண்டிருந்தன. வயதுக்கு வந்த மகளுக்கு மாதவிடாய் எனும் சாதாரண நிகழ்ச்சிதான் நடந்ததென்றாலும், மகளின் பார்வைக் கூர்மை அம்மாளுவை வாட்டி வதைத்து விட்டிருந்தது.

மேலே புல்லாரத் தறவாடின் நல்ல பரப்பு மிகுந்த அறைகளில் ஒன்றில் அரிசிமாவின் கோலங்கள் வட்டமிட்டிருந்தன. தென்னையின் பூக்குலையும் நிறைநெல்லும் பறையில் இருந்தன. குத்துவிளக்கின் அருகில் கார்த்தி அமர்ந்து ஒளிர்ந்தாள்.

ஒவ்வொரு காரியங்களுக்கும் அம்மாவும் அம்மம்மாவும் அவசர அவசரமாக துரிதப்பட்டு ஓடியாடி வேலை செய்துகொண்டிருந்தார்கள். ஏதோவொரு பெரிய விசேஷம்போல்தான் அவர்களின் பார்வைகள் தன்னுடைய உடலின்மேல் வந்து பதிகின்றன. எதுவும் நேராததுபோல் கண்களில் அனுதாபத்தின் அலைகளாக அவள் அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்தாள்.

உறவினர்களும் சம்பந்திகளுமாக பலரும் வந்து வீடே நிரம்பின. சங்குமாமனின் மனைவி தன்னைவிட்டு விலகவே இல்லை.

இவ்வளவு நேரமாகியும் சங்குமாமனை மட்டும் காணமுடியவில்லை. அவள் அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். என்னென்னவோ நிர்ப்பந்தத்தின் தீய சக்திகள் அவரை தடுத்துக் கொண்டிருக்கலாம். அவ்வாறு சிந்தித்ததும் அவளுடைய இதயத்தில் ஒரு மகா சமுத்திரமே உறுமியது.

திடீரென ஒரு பதற்றத்தின் அலைபோல் சங்குமாமன் அங்கு தோன்றினான். வேடம் பூண்டிருந்த மருமகளை ஒரு மாதிரியாக பார்த்தான். தாளம் தவறிய இதயத் துடிப்புகளுடன் உடனே திரும்பியும் போய்விட்டான்.

சங்குமாமனின் முடியிழந்த தலையும் தத்தளிக்கும் கண் இமைகளும் குளப் படித்துறையில் பதறிப்போய்ப் பறக்கும் வண்ணத்துப் பூச்சிகளின் நினைவைத்தான் கார்த்திக்கு உண்டாக்கியது. அவற்றைக் கொஞ்சி அடக்கி தன்னுடைய வசந்தத்தில் உணவிட்டு வளர்க்கலாம் என அவளுக்கு ஒரு தவறான தோன்றல். ஆனால் உள்ளுக்குள் என்னவோ பலமாக ஓர் அலை வெட்டுகிறது. தன்னுள் வழியும் வாத்சல்ய பரப்பை சபித்த கார்த்தி அதற்காக திடீரென வருத்தமுற்றாள்.

காரணத்துக்கும் அகாரணத்துக்கும் அணை உடைந்து வடியும் ஈரத் தன்மையாகவே இருந்தது. மாதவிடாய் வந்ததுக்குப் பின் கார்த்தியின் வேதனை பயம் தேன்றவேண்டிய பகவதியிடம்கூட அவளுக்கு கனிவும் கருணையும்தான். கனிவுக்குக் கீழே உறைந்துபோகும் எண்ணம் எப்போதும் துக்கமாகத்தான் இருக்கும்.

தடங்கல்களோ கட்டுப்பாடுகளோ இல்லாமல் ஆராதனை மூர்த்தியாக யாராவது தன்னை நினைத்துத் திரியும்போது மனத்தின் அடித்தட்டில் என்னவோ சுமை ஏறி தாழ்ந்து விடுகிறது. வணங்கப்படும் தெய்வங்களுக்கெல்லாம் அவை நிரந்தரமான குணமாகவும் துக்கமாகவும் இருக்கலாம்.

இவற்றையெல்லாம் தான் யாரிடம் பங்கிட்டுக் கொள்வது? அம்மாவிடமும் சங்குமாமனிடமுமா? அவர்களெல்லாம் சின்னஞ்சிறு குழந்தைகளாகத்தான் அவளுக்கு அனுபவப்படுகிறார்கள்.

மஞ்சள் நீராட்டு விழாவை முன்னிட்டு மேலே புல்லாரத் தறவாட்டில் மேன்மையான விருந்து தயாரிக்கப்பட்டிருந்தது. உறவினர்களும் சுற்றத்தார்களும் சாப்பிட்டுவிட்டு போனபின்பும் ஏழை எளியவர்களுக்கான உணவின் புளிப்பும் காரமும் மாலை வரையில் நீண்டு நின்றன. ஜாதியின் அடுக்குகளை அனுசரித்து ஆட்கள் வெவ்வேறு வளையங்களாக பின்னால் நின்றார்கள்.

ஜன்னல் கம்பிகளின் வழியாக பார்வையை ஓட்டியவாறு அமர்ந்திருந்த கார்த்தியால் பசியின் விழாவாகத்தான் அதைப் பார்க்க முடிந்தது.

கிழிந்த இலைகளிலும் மேல்துண்டின் விரிப்புகளிலும் குவிந்திருக்கும் சோறின் கூம்பாரங்கள். சாம்பார், ஓலன்*, காளன்** என்பவைகள் குவிந்திருக்கும் நாலாவித வகைகள். பவுர்ணமி நிலவை நினைவூட்டும் பெரிய அப்பளங்கள். ஆவலோடு அவைகளை பிட்டு விழுங்கும் கருப்பு முகங்களிலுள்ள குகை வாயில்கள்.

வெகுநேரமாக இக்காட்சியை கண்டு கொண்டிருந்தாலும் கார்த்திக்கு அக்காட்சியிலிருந்து கண்களைத் திருப்ப முடியவில்லை. ஏதோவொரு முழுமையின் இல்லாமை வேதனையின் மெல்லிய ஆடை படிந்து தன் இதயத்தில் தாழ்ந்து நின்றுகொண்டிருந்தது.

முற்றத்திலும் பறம்பிலும் உள்ளவர்கள் போனபின்பும் வெளிப் பறம்பின் விளிம்புகளில் கருப்புத் தலைகள் தெரிந்து கொண்டு தானிருந்தன. காரியஸ்தர்கள். கித்தான் விரிப்புகளில் சோற்றை கொட்டிவிட்டுத் திரும்பினால் கருப்புத் தலைகள் உள்ளே வந்து சோற்றை வாரிக்கொண்டு செல்கின்றன.

புலையர்களாக இருப்பார்கள் - கார்த்தி நினைத்துப் பார்த்தாள். இதுவரை அவர்களின் முகத்தைக்கூட தான் கண்டதில்லை. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சங்குமாமனின் விரலைப் பிடித்துக் கொண்டு வயல் வரப்புகளில் நகரும்போதுதான் அப்படியொரு இனமும் உண்டென்று அறிந்துகொண்டாள். தூரத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த கருப்பு உருவம் ஒன்று ''பூ... பூ...'' என்று ஓசையெழுப்பியவாறு ஓடி மறைந்தபோது அவள் என்னவென்று விசாரித்தாள்.

'அது புலையனாக்கும்.'

சங்கு மாமன் பதில் கூறினான்.

அவன் பெயர் என்னவென்று கேட்டபோதுதான், புலையனுக்குப் பெயர் இல்லை என்பது தெரிந்தது. மாமரத்துக்கும் பலா மரத்துக்கும் பெயர் ஏது? மா, பலா என்பதுதானே. நாய்க்கும், பூனைக்கும் பெயர் ஏது? நாய், பூனை என்றுதானே. அவைகளைப் போல்தான் புலையனும் என்றான்.

வெளிப்பறம்பின் விளிம்புகளில் திரியும் புலைய மக்களின் முகங்களை இருளில் அடையாளம் காண்பது சிரமமாக இருந்தது. தற்போதைக்கு

---

* காய்கறிக் கூட்டு வகை ; ** தயிர் கலந்த பச்சடி

அடங்கிய பசியின் நிறைவை மட்டும்தான் அந்த யதார்த்தங்கள் உணர்ந்து அகன்று சென்றன. தொழுவத்துக்குள் இருந்த எருமைகளும் பசுக்களும் கூட தலையையாட்டி அவர்களைப் போலவே செய்தன. அவைகளுக்கு முன்னாலுள்ள தொட்டிகளிலும் எஞ்சிய காய்கறிகளும் தண்ணீரும் நிரம்பியிருந்தன.

இருட்டத் தொடங்கும் அந்தியிலிருந்து கண்களை விலக்கிய பின்பும் கார்த்தியின் மனத்தில் குளிர்ந்த கதிர்கள் எஞ்சி நின்றன. அதன் நிறம் அனுதாபத்தின் பனிமூட்டமாக இருந்தது. எல்லாவற்றையும் சேர்த்து அணைத்து தனக்குச் சொந்தமாக்கிக் கொள்வதற்கான பூமாதேவியின் பொறுமையாகவே அவளின் இதய வேதனையும் இருந்தது.

வேலைகளெல்லாம் முடிந்து வேலைக்காரர்களுக்குப் பட்டுவாடா முடிந்தபின்தான் சங்குமேனன் பந்தம் கொளுத்தினான், மனைவி வீட்டுக்குச் செல்ல. அதுவும் இரண்டு பந்தம் எரிந்து முடிந்த பின்தான் தறவாட்டிலிருந்து இறங்கவே முடிந்தது. எல்லா விஷயங்களையும் தானாகவே கவனித்து நடத்தவேண்டியது இருக்கிறது? நேரம் நடுநிசியை நெருங்கிக் கொண்டிருந்தது. மனைவியின் வீட்டில் எண்ணெய் தீர்ந்த விளக்கு ஒளி மனத்தில் தெளிந்தபோது மேனனின் கால்களுக்கு வேகம் அதிகரித்தது.

நடக்கும்போதே மூன்று முறை திரும்பி நோக்கினான். எந்தவொரு சத்தமும் சந்தடியும் இல்லை. சந்துவழி முடிந்து கேட்டை அடையும் வரையில் பகவதி பின்தொடர்ந்து வருவது வழக்கம். அதன்பின் அவள் வேலிச் சரிவிலுள்ள எட்டிமரத்தின் கீழே மறைந்து விடுவாள். இன்று அக்காட்சியை காண முடியவில்லை. மிருதுவான மெல்லிய காலடிகளைக்கூட கேட்க முடியவில்லை. நீண்டு கிடக்கும் பாதையின் வெளிறிய பிரேதம் மட்டும் பின்னால் இருந்தது. பந்தத்தின் சொட சொடப்பும் தீ நாளத்தின் பெருமூச்சுக்களும் அச்சூழலின் மவுனத்தை உடைத்தெறிகின்றன.

பகவதி இல்லாமையை நினைத்து மனம் மிகவும் மோதிக்கொள்ள முயற்சி செய்யவில்லை. இயந்திர ஊஞ்சலிலுள்ள இயந்திரக் கூண்டுகளைப்போல் தறவாட்டில் உண்டாகிய காட்சிகள் மாறி மாறி கண் முன்னால் வந்தன. பல மணி நேரம் நடந்த வரவேற்பும் விருந்தும் நினைவில் தோன்றின. இளமை அனைத்தும் ஒருங்கிணைந்துள்ளது போல் அணிவகுத்திருக்கும் மருமகள். அவளின் கண்ணோரங்களில்

தளும்பும் வசீகரத்தின் நீரொழுக்கு. அதில் ஏராளமான வாத்சல்யத்தின் தோணிப் படகுகள். இன்னும் கொஞ்சம் நேரம் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தால், தான் அதில் நிலை தடுமாறி விழுந்து விடுவ தாகவே தோன்றியது.

இதோ, இவள் இப்போது வசதியாக இருக்கிறாள். சங்குமேனனின் சிந்தனை சுற்றித் திரிந்து மீண்டும் மீண்டும் கார்த்தியை அடைந்தது.

விருந்தெல்லாம் முடிந்து நேரத்தோடு வீட்டுக்குத் திரும்பிய மேனனின் மனைவி கனவுகளில்லாத உறக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். அழைப்பதற்கோ பேசுவதற்கோ காத்திருக்காமல் அவன் அவள் உடலின்மேல் பரவி முக்குளியிட்டான். தோலுரிக்கத் தாமதித்த பாம்பின் வெறியுடன் காமம் அவனை குத்திக் கிழித்துக் கொண்டிருந் தது. உடனே ஒரு வடிகால் இல்லாவிட்டால் தான் சின்னாபின்ன மாகிவிடுவோம் என்றும் மேனனுக்குத் தோன்றியது.

இது எதார்த்தமான காமமாக இல்லை. ஏதோவொரு முறுக்கலின் வடிகாலாக இருந்தது. இவ்வாறெல்லாம் சிந்தித்தான் என்றாலும் உதடுகளும் விரல்களும் அவள் உடலின் பல இடங்களிலும் வேகமாகத் தேடிச் சென்றன.

நீர்க்குமிழிகளாக உணர்வு தெளிந்ததும் தன்மேல் பாசியைப்போல் கணவன் படர்ந்திருப்பதைத்தான் அம்முக்குட்டி அம்மாள் கண்டாள். அவள் மேனனை தள்ளிப் பார்த்தாள். முடியவில்லை. தவிர்க்க முடியாத விதத்தில் அவளுடைய உடல் அள்ளிப் பிடிக்கப் பட்டிருந்தது.

இந்த அளவுக்கு தான் ஏன் வேகப்பட வேண்டும்? ஓரளவுக்காவது வேகத்தைக் காட்டாமல் இருக்கக் கூடாதா? சுய மௌனத்தின் கடிவாளத்தை சட்டென்று தேட முயன்றான் மேனன்.

எல்லைகளை இழந்து வெண்ணையைப் போல் உருகியொழுகும் கார்த்தியின் உடல்தான் அவன் மனம் முழுவதும். இரத்தம் உறிஞ்சி விரிந்துள்ள உதடுகள். குளப் படித்துறையிலிருந்து ஓடிவந்து குளுமை யாக தன்னுள் படர்ந்து இறங்கிய மென்மை. மார்போடு ஒட்டிக் கொண்டிருக்கும் சின்னஞ்சிறு முலைகள். கார்த்தியிடமிருந்து பரவிக் கொண்டிருக்கும் ஒருவகை கடும்நெடிகூட அதே போன்றுதான்.

மேனன் அம்முக்குட்டி அம்மாளின் நிர்வாணத்தில் நங்கூரம் இழந்து தளர்ந்து மூழ்கினான். வடிகால் தாமதம் பிராண வேதனையாயிற்று. எதையும் சாதிக்க முடியவில்லை.

''சீ... போதும்.''

அம்முக்குட்டி அம்மாளின் வெறுப்பு வாய்ச்சில் சிதறல்களாக வெளியேறின. முழங்காலை ஊன்றி எழுந்து நின்ற அந்தப் பெண்மணி அவனை ஒரு முறை முறைத்துவிட்டு காணாமல் போனாள்.

கார்த்தியின் அழகு அதன்பின் வந்த இரவுகளையும் சங்குமேனனின் காமத்தை சீர்குலைக்கத் தொடங்கியது. உடலுறவுக்காக சரீரம் ஏங்கும் சமயங்களிலெல்லாம் மனம் பலவீனமாயிற்று. வெண்வெணையைப் போல் உருகி ஒழுகும் உடலும், இரக்தம் உறைந்த உதடுகளும் உணர்சியற்ற மனத்தில் பயத்தை ஏற்படுத்தின.

சில பரிசோதனைகளில் தோல்வியடைந்த அவன் மனைவியைக் காணும்போதெல்லாம் விலகிச் செல்லும் குணமுள்ளவனானான். அபரிமிதமான பொலிவுடனிருக்கும் மருமகளின் சோபைக்கு முன்னால் சங்குமேனன் ஒரு அலியாக மாறிவிட்டிருந்தான்.

ஏழு

வெடித்துச் சிதறிய ஏதோ ஒரு வால்நட்சத்திரத்தின் சிதறல்கள் பிரபஞ்சத்தின் கணிசமான நன்மை தீமைகளுக்கு அடிமையாகி மேலே புல்லாரத் தறவாடின் சுற்றுப்புறங்களில்தான் பரவியுள்ளன. உயிருக்காகப் போராடும் சூரியக் கதிர்கள் காற்று மண்டலம் வழியே நழுவி ஊர்ந்து இறங்கின.

அனைத்தும் அம்மை நோய்க் கிருமிகள்.

நொறுங்கிச் சிதறியவைகள் மீண்டும் மீண்டும் உடைந்து இன்னும் சிறியதாயின. தனி உருவமாக மீண்டும் மாறிய பொருளற்ற தூதுவர்கள். இடம் காலம் எனும் தொடர்போ, வடும் வராது எனும் சவால்களோ கிருமிகளுக்கு இல்லை.

அம்மாளுவின் ஜீவனுள்ள உடல் அவைகளுக்கு வெறும் இரத்த அணுக்கள் நிறைந்திருக்கும் பீப்பாயாகிவிட்டது. அதில் அவை பல்கிப் பெருகின.

அவ்வாறு அந்த உயிரணுக்கள் அதிகரிக்கப்பட்ட ஒரு நிலையில்தான் அம்மாவுக்கு உடல் வலியும் ஜ்வரமும் பொறுக்கமுடியாமல் போயின. அவள் வடவண்ட* அறையின் மூலையில் வெந்து பொழுது கழித்தாள். அம்மாளுவின் தாய் மட்டும் அடுக்களை காரியங்களுக்கிடையே அவளை மீண்டும் மீண்டும் வந்து பார்த்தாள்.

உடல் சிவந்து தடித்து குங்குமப் பூவைப் போன்றதொரு நிறம் படர்ந்திருந்தது. மூன்றாம் நாள் உடல் முழுவதும் நிறை முத்துக்கள்

---

* வடக்கு

போட்ட பின்தான் சங்குமேனனுக்கு விவரத்தை அறிவித்தார்கள். கட்டில் கால்களைப் பிடித்து சகோதரியை குனிந்து பரிசோதித்த அவன், மெல்ல முனகியவாறு திரும்பி நடந்தான். அந்த சமயத்தில்தான் கார்த்தி அறைக்குள் நுழைந்த வேகத்தில் காற்றுப் பிரவாகம் அனைத்தையும் அசைத்தது. 'அம்மாவுக்கு பக்கத்தில் வர வேண்டாம்பா' என்று சொல்லி திருப்பி அனுப்ப மேனனுக்குத் தோன்றினாலும், கார்த்தியின் முகத்திலுள்ள உறுதியைக் கண்டதும் ஒன்றும் பேசவில்லை.

தேவைப்பட்டால் மருத்துவரை சுமந்துவரக்கூடிய பல்லக்கைக்கூட அவர்கள் வைத்திருந்தார்கள். ரோல்வுட் மரத்தைப் போன்ற கால்களால் பாய்ந்து செல்லும் தியர்களோடு சேர்ந்து ஈடு கொடுத்து ஓட முடியாத காரியஸ்தன் வேலாயுதன் நாயர் மூச்சு வாங்கினான். சிறிது தூரத்திலேயே தளர்ந்தும் போனான். நாக்கு வெளியே வந்து கண்கள் பிதுங்கின.

''ஏறுங்க கம்மள்* நாங்க அப்பவே சொல்லலே? இந்தப் பல்லக்குலேயே ஏறுங்க கம்மள்.''

வேலாயுதன் நாயரைத் தூக்கியவர்கள் பல்லக்கில் போட்டுக் கொண்டு ஒரே ஓட்டமாக ஓடினார்கள். வெளியேயுள்ள பறம்புகளும் வயல்களும் நொடியில் பின்னோக்கி ஓடி, பொடிமணல் குழையும் சத்தம் தொடங்கியது. பாரதப் புழையிலிருந்து வேகமாக வீசும் படர்ந்த காற்றில் மருத்துவரின் வீட்டிலுள்ள பச்சிலை மருந்துகள் மணத்தன.

இயல்பாகவே கர்வமுடையவனான நாணு வைத்தியன் யாரைக் கண்டாலும் முகத்தில் அடிப்பதுதான் வழக்கம். வேலாயுதன் நாயரிடமும் முதலில் அவன் சிறிது முகத்தால் அடித்தாலும், மேலே புல்லாரத் தறவாட்டிலிருந்து வந்தவன் என்பதை அறிந்தவுடன் அவனுக்கு சாவதானமாக கோபம் தணிந்தது.

நாணு வைத்தியரை பல்லக்கில் ஏற்றிக்கொண்டு தியர மக்கள் திரும்பி ஓடினார்கள். வேதனையுடைய கால்களை சபித்துக் கொண்டு வேலாயுதன் நாயரும் மிகவும் பின்னால் பின் தொடர்ந்தான்.

---

* கைமள் என்பதன் வழக்குச் சொல். நாயர் சமூகத்தில் ஒரு பிரிவினர்.

அம்மாளுவின் சரீரத்தைக் கண்டதும் நாணு வைத்தியன் பின் வாங்கினான். வாயில் சோற்றுருண்டையை உருட்டுவது போல் என்னவோ சொல்வதற்கான திருபுறப்பாட்டைக் கண்டுபிடித்த சங்குமேனன், வைத்தியரிடம் தோண்டித் துருவ ஒதுக்குப்புறமாக அழைத்தான். அந்த வகையில் வாசலுக்கு தள்ளிச் சென்றான்.

''அவளுக்கு எதுவும் கேட்க வேணாம், சிரங்குதான்னு சொன்னா போதும்.''

''என்ன வேணும்னாலும் சொல்லலாம். ஆனால் இது தீவிர வகைதான். அப்பட்டான வைசூரி. பெரியம்மை.''

அந்தப் பேச்சை கேட்டுக்கொண்டு நின்ற அம்மாளுவின் அம்மா சுட்டெரிக்கும் ஓர் உஷ்ணக் காற்றையும் இழுத்துக் கொண்டார். பின்பு அதை சுவாசக் காற்றாக வெளியேற்ற அவர்களால் முடியவில்லை. அது ஆவிப் புகையைப்போல் உள்ளுக்குள் எங்கேயோ தடைப்பட்டுக் கிடந்தது.

வைத்தியன் குறித்துக் கொடுத்த மூலிகை மருந்துகளை அம்மாளு ஆசுவாசத்துடன் அருந்திக்கொண்டிருந்தாள். சகோதரன் சொல் வதைவிட அதிகமாகச் சிந்திப்பதில் என்ன பலன் இருக்கிறது. சிரங்குதான். இருந்தாலும் சில நாள்களில் உண்டான சில நிகழ்வுகளின் நினைவுகளை மேம்போக்காக நோக்கியபோது இந்தச் சிரங்கின் வேர்கள் மிகவும் ஆழத்தில் இருக்கின்றன என்று அம்மாளுவுக்குத் தோன்றியது. முளைத்தெழுந்த குமிழிகளின் ஊடாக மறுபக்கத்தைப் பார்ப்பதற்கு அவள் விம்மலுடன் முயன்றாள். வெப்பம் மிகுந்து பொங்கிற்று. கண்களுக்குள்ளும் குமிழிகளின் கொதிப்பு. பலவீனமாகி அரைத் தூக்கத்தில் மயங்கும்போதும் மனத்தின் அந்தரங்கம் சிரங்கின் பருக்குகளை விலக்கிக்கொண்டிருந்தது. அதனால் அம்மாளு தப்பித்துக் கொண்டாள். அம்மாவும் கார்த்தியும் கொண்டுவந்து கொடுக்கும் பானங்களைக் குடிக்கவும், நகங்களால் உடல் முழுவதிலும் ஊடாடி தடவவும் தொடங்கினாள்.

இருந்தும் உள்ளிருந்து வெளியேற்றப்பட்ட பயத்தின் ஆவி அம்மாவினுள் குளிரவில்லை. தன்னுடைய இரத்த நாளங்களில் எங்கேயோ வைசூரி பதிந்துள்ளது என்று அவளால் உணரமுடிந்தது.

''முதல்தரமான வைசூரி...''

வைத்தியன் இந்த வார்த்தைகளை உச்சரித்ததும் அது தன்னுடைய தாகவே ஆகி விட்டிருந்தது. இன்னும் நோய்க்குறிகள் மிச்சம் உள்ளன. வைசூரியின் வரவை எதிர்நோக்கி இரவுபகலாக உள்ளுக்குள்ளேயே அந்த வயதானவள் கழித்து வந்தாள்.

மகள் எழுந்து உட்கார்ந்ததற்கு சரியாக ஐந்தாம் நாள் உள்ளுக் குள்ளேயுள்ள உஷ்ணம் அம்மாவின் உடலுக்குள் உடைந்து வெளி யேறியது. மயிர்க்கால்களில் கடும் ஜ்வரத்தின் அணுக்கள் பரவின. ஸ்படிகக் குடுவைகளில் உள்ளதுபோல் கருவிழிகள் மின்னி மறைந் தன. துரைத்துச் சுற்றும் பெரும் சுழல்போல் பயங்கரமான வைசூரியின் உருவம் மனத்தில் தெளிந்து வந்தது.

பெருக்கம் நிறைந்த குமிழிகள் வெளியேறும்போது பயத்தின் ஒவ்வொரு மூச்சும் உள்ளுக்குள்ளேயே தடுத்து நிறுத்தப்படுகின்றன. உள்ளுக்குள் இழுத்துக்கொண்ட குமிழிகள் எலும்புகளுக்கு வெளியே பூத்து உடைகின்றன. தோல் சதையிலிருந்து பிரிந்து அடுக்குகளாக உப்பத் தொடங்கின. வைசூரி ஜ்வரம் உள்ளாழங்களில் வெந்து நுழைந்தது.

சூளையிலுள்ளது போல் நிற்கமுடியாமல் அம்மாளுவின் தாயின் உயிர் கடைசியில் சிறகடித்து வெளியே பறந்தது.

கழுத்தில் சாம்பல் நிறமுடைய காகம் ஒன்று புளியங்கிளையில் அமர்ந்து நிறுத்தாமல் கரைந்ததைக் கேட்டுக்கொண்டேதான் கார்த்தி அன்றைய தினத்தில் கண் விழித்தாள். அம்மம்மா தன்னை அழைப்பதாக அவளுக்கு கனவு மிஞ்சியிருந்தது. மூலிகை மருந்துடன் வடக்கு அறையை அடைந்தபோது ஜ்வர மேகங்கள் வெளியேறி கலைந்துகொண்டிருந்தன.

அம்மம்மாவின் முகத்தில் நிம்மதியின் விழிப்படலங்கள் அடர்ந்து கிடக்கின்றது. அவள் இறந்துவிட்டதாக அறிந்துவிட்டாலும், அந்த முகத்தைக் கண்டதும் முதன்முதலாக ஏற்பட்ட அந்த எண்ணம் சமா தானம் ஆகிவிட்டது. இவ்வளவு நாளும் நரகத்தீயில் இருப்பதுபோல் வெந்த அம்மம்மாவைப் பார்த்துக்கொண்டிருந்த கார்த்திக்கு மனம் கெட்டுப்போயிருந்தது.

ஊன்றுவதற்கு ஓர் ஊன்றுகோல் இல்லாமல் சங்குமேனன் தவித்தான். நோயை அறிந்ததும் வீட்டுக்கள் யாரும் வரக்கூடாது என்று உறவினர்

வீடுகளுக்கு செய்தி அனுப்பினான். ஏதாவது கேட்பதற்கும் பேசுவதற்கும் வேலாயியை அழைத்தால் அவன் பூங்கொத்தைப் போல் பயந்து நடுங்கிக் கொண்டுதான் அவன் முன்னால் செல்வான். குடும்பத்தில் வைசூரிநோய்தான் என்று அக்கம்பக்கத்து வீட்டார்களுக்கோ வேலைக்காரர்களுக்கோ அறிவிக்கவில்லை.

கண்களை இறுக மூடி இந்திரியங்களைச் சேகரித்து வெகு ஆழத்தில் மூழ்கடித்த சங்குமேனன், 'பகவதித் தாயே! பறக்கும் முடிகளாகவோ, கால் நடமாட்டமாகவோ வெறுமனே ஒரு துடிப்பாகவோ உன் இருப்பை ஒருமுறை காட்டு தாயே' என்றான்.

விழிகளைத் திறந்தபோது காத்தியின் நெடுக்கமான அருகாமை கண்சிமிட்டாமல், ஓர் ஆலமரத்தைப்போல் தன்னைச் சுற்றிலும் படர்ந்து பந்தலாக நிற்கிறாள். சரீரத்தையும் ஆத்மாவையும் மெல்ல சரியவிட்டான் மேனன். தலைமுடியில் விரல்களால் கோதினான். மார்போடு சேர்த்து அவள் தழுவிக்கொண்டிருந்தபோது அவன் ஒரு தாயின் அன்பை அனுபவித்துக்கொண்டிருந்தான். சக்தி சொரூபிணியாக பாலின் ஊற்றுப் பெருக்கெடுத்து சீராட்டும் தாய்மை. அவன் தலையை காத்தியின் மார்பகத்தில் சுழற்றினான்.

துர்நாற்றம் வீசுவதற்கு முன்பு பிணத்தை புதைத்துவிட வேண்டும். யோசித்துக்கொண்டிருக்கும் குடும்பத் தலைவனின் முகத்தை நோக்கியவாறு காரியஸ்தன் வேலாயி பணிந்து நின்றான். சங்குமேனன் என்னவோ உரத்த குரலில் கூறியதும் திடீரென அவன் திடுக்கிட்டும் போனான்.

நடுங்கும் உடலில் பதறும் மனத்துடன் வேலாயி உடனே ஓடிவிட்டான். அருகிலுள்ள குடிசைகளில் தேடியும் இரண்டு மூன்று தியர்களை கூட்டி வந்தான். அவர்களிடம் விஷயம் எதையும் சொல்லவில்லை. களத்தின் வாசலில் அமரச் செய்து பழங்கள்ளை குடிக்கக் கொடுத்தான். அவர்கள் கள்ளின் போதையில் தள்ளாடத் தொடங்கியதும் மீதியிருந்த கள்ளை வேலாயியும் குடித்தான். பின்பு வேகமாக மேலே புல்லரத் தறவாட்டுக்கு அழைத்து வந்தான். தியர்களை உள்ளே நுழைய வைப்பதையும் பிணத்தை தொடச் செய்வதையும் நினைத்து சங்குமேனன் மிகவும் அரண்டுவிட்டான். நூறாயிரம் சந்தேக ஊசிக்குழல்களின் மூலம் சஞ்சரித்து விட்டுத்தான் இறுதியில் அவன் அப்படியொரு தீர்மானத்துக்கு போக வேண்டியிருந்தது.

முற்றத்தின் வேலியைத் தாண்டி தாவாட்டுக்குள் நுழைவதற்கு தியாக்களுக்கும் கூச்சம் உண்டாயிற்று. ஜாதி எனும் லட்சுமணக் கோட்டை உடைப்பதற்குத் தைரியமில்லாமல் பயத்துடனேயே அவர்கள் நுழைய முயன்றார்கள்.

கள்ளின் போதையும் தம்புரானின் கட்டளையும் இணைந்ததும் சட்டென்று ஒரு பலம் கிடைத்தது. தியாக்கள் உள்ளே புகுந்தார்கள். தருமறும் காலடிகளுடன் அவர்கள் அம்மாவுவின் தாயை கட்டிலிலிருந்து பிடித்து இழுத்தார்கள்.

இறந்த பின்புதான் என்றாலும் அந்திய ஆண்களின் அண்மையை தன் தாய் பொறுத்துக்கொள்ள மாட்டாள் என்று சங்கு மேனனுக்குத் தெரிந்திருந்தான். இருந்தும் கார்த்தி அந்த அறைக்குள் செல்லத் துணிந்தபோது அவன் அவளை தடுத்து நிறுத்தினான். துடிக்கும் இதயத்துடன் இடைகழியின் ஓரத்துக்கு கார்த்தியை அழைத்துச் சென்று விலக்கி நிறுத்தினான்.

வாசல் அறையில் ஒரு நிழலுருவம் மறைந்து நுழைந்தபோது சங்கு மேனனுக்கு நிச்சயமாகத் தெரிந்துவிட்டது. தன் தாய் சண்டையிடுவதற்காகத்தான் வருகிறாள் என்று. இறந்தவள் எழுந்து வருகிறாளே எனும் ஆச்சரியமென்றும் தோன்றவில்லை. அம்மாவின் விழிகளும் விபூதியணிந்த நெற்றியும் ஆகாயத்தில் பறந்து வந்தது. குற்றம் சாட்டும் கருக்கங்கள் நெற்றியில் தெளிந்தபோது வைதூரியின் வடுக்கள் அப்பட்டமாகத் தெரிந்தன.

உனக்கு இவ்வளவுதான் தெரியுமா? பழக்கமில்லாதது எதையும் என்னால் பொறுத்துக்க முடியாதுன்னு உனக்குத் தெரியுமில்லே. நான் தெய்வங்களைக்கூட மூட முடியாம அப்படியேதானே செத்துட்டேன். அப்படி இருக்கிறப்போ மூணு தியாளுங்களை எங்கிட்டே அனுப்புறதுக்கு உனக்கு எப்படித் தோணுச்சி? சரி, நடந்தது நடந்துட்டுது. ஆனா, அவங்களை இனிமேலும் மேலக்கா வைக்க வேணாம், வா.''

அம்மா பின் வாங்கியதும் சங்குமேனனும் முட்டாள்தனமாக பின் தொடர்ந்தான். 'நான் அப்போதே சொன்னேனில்லவா' எனும் அர்த்தத்தில் கார்த்தியும் தலையை அடிக்கடி குலுக்கினாள். பிணத்தின் கையும் காலும் தலையும் காணாமல் போயிற்று. தியா

மக்கள் இடத்தைக் காலிசெய்தனர். இங்கே கிடப்பது பிணமல்ல என்று முனகிக்கொண்டே தங்கள் பணியைத் தொடர்ந்தார்கள்.

வைசூரிக்கு வழங்கியதைவிட மேலும் உற்சாகமாகவே கார்த்தியின் அம்மம்மா எல்லா இறுதிக் கிரியைகளுக்கும் படுத்துக் கொண்டே ஒத்துழைத்தாள்.

அந்தியாகும் முன்பே முட்செடிகள் நிறைந்த பன்னிப்பறம்பின் சரிவில் பிணம் குழிதோண்டி புதைக்கப்பட்டது. எரிக்கவில்லை. பெரிய அம்மையாயிற்றே.

பாட்டி இப்போதும் குற்றுயிருடன் வடக்கு அறையின் தரையில் சுருண்டு படுத்திருந்தாள். சுவாசம் உடம்பிலும் உணர்வு சொர்க்கத்திலுமாக எஞ்சியிருந்த அவளின் முகத்திலும் அம்மைக் கொப்புளங்கள் போட்டு மறைந்திருக்கின்றன. ஆனால் அவை பரவாயில்லை என்கிற மட்டில் இருந்தன. அம்மாளுவின் அதிகச் சோர்வினால் கார்த்திதான் அவளையும் தேவையான அளவுக்கு பேணிப் பாதுகாத்தாள்.

இடுகாட்டிலிருந்து திரும்பும்போது மேனன் திரும்பியே பார்க்கவில்லை. தன்னுடைய தாயின் ஆவியோ மற்றேதோ வந்து தன்னைத் தொந்தரவுபடுத்தும் சாத்தியத்தை நினைத்தும் விசனப்படவில்லை. பயப்படுத்தும் விஷயங்கள் எதையும் அம்மாவால் பொறுத்துக் கொள்ள முடியாது என்பதில் அவனுக்கு நம்பிக்கையுண்டு. அதை அவர்கள் செய்யவும் மாட்டார்கள்.

அம்மாவின் மரணத்துக்குப் பின் அம்மாளு பைத்தியம் பிடித்த வளைப்போல் ஆனாள். தன்னுள் பொங்கி எழும்பிய சிரங்கின் பெயரே ஒரு அலறலுடன் அவளுடைய ஆத்மாவில் இரைந்து இறங்கியது.

கார்த்திக்கு ஜ்வரம் வருமோ என்பதுதான் சங்குமேனனின் சந்தேகம். தறவாடு முழுவதும் வைசூரியின் பற்றுகள் விதைகளாக எஞ்சியுள்ளன என்று அவனுக்குத் தோன்றியது. வந்து பார்க்க முயன்ற உறவு வீட்டார்களை கறாராகத் தடுத்தான். இல்லை, இன்னும் முழு விதைகளும் ஒழியவில்லை. மூலை முடுக்குகளில் மிஞ்சிய தீயவைகளுக்காக வேகமாக நடந்தான். துர்நாற்றம் தங்கி தயங்கி மூக்குத் துவாரங்கள் குகைபோல் ஆகிவிட்டன.

திடீரென்று ஏதோ நினைவு வந்ததுபோல் பூஜையறைக் கதவைத் தள்ளித் திறந்தபோது சவப்பெட்டியில் இருப்பதுபோல் வீங்கி அழுத்தப்பட்டு பகவதி கிடந்தது. அறைக்குள்ளே காலெடுத்து வைப்பதற்குக்கூட இடமில்லை. சீழ் பிடித்து தடித்து வீங்கிய பகவதிகள் அறை முழுவதும். தேகம் முழுவதும் காளான் அளவில் எழும்பி நிற்கும் கொப்புளங்கள். சில கொப்புளங்களிலிருந்து நீர் வடிந்து கொண்டும் இருந்தது. அனுதாபத்தின் ஒளிவட்டம் உடைய பெரிய கண்கள். அவற்றில் முழுவதும் விரக்தி.

சில தினங்களாக இவளை தான் நினைக்கக்கூட இல்லையே என்பது மேனனுக்கு குற்றவுணர்வை உண்டாக்கிற்று. அன்று இரவு தறவாட்டு வீட்டுக்கு கொப்புளங்கள் தோன்றுவதையும் அவை பயங்கரமாவதையும் மேனன் தன் கலவில் கண்டான். குமிழிகள் நிறைந்த கார்த்தியின் தொடைகள் முரட்டுத்தனமாக அவனை அடித்துக் கொண்டிருந்தன. அழகான அவளின் முகம் உருக்குலைந்து லாவாபோல் உருகி வடிந்தது.

மறுநாள் மேனனுக்கு தன் முறை. அவன் காலையிலேயே தன் முறைக்காக காத்திருந்தான். ஜுரத்தின் அக்னி எங்கிருந்து பற்றியெரியத் தொடங்கியது என்று தெரியாமல் உடல் முழுவதும் மனம் விதைவிதைத்தது. மதியமானதும் ஒரு சுழியைப்போல் உஷ்ணம் காதுக்குள் அதிகரித்துப் புகுந்தது. அங்கிருந்து பிரவாகம்போல் தேகம் முழுவதும் நிறைந்து மோதியது. வலிப்பின் உஷ்ண நீரிலிருந்து நுரைகள் நுரைத்து குமிழிகள் எழும்பின. நுரைபொங்கும் நீரின் கொதிப்பை அவன் ஆசையுடன் நோக்கி அமர்ந்திருந்தான். மனதிலுள்ள சித்திரங்களுக்கு ஈடாக மேனனின் தேகத்திலும் கொப்புளங்கள் எழும்பின. வேப்பிலையின் உருண்டைகளை கார்த்தி அவன் வாய்க்குள் போடும்போதெல்லாம் வைசூரி ஒரு எஞ்சிய எதார்த்தமாகவே மாறியிருந்தது.

மேலே புல்லாரத் தறவாட்டில் வைசூரிதான் சுற்றி சுழன்றடிக்கிறது என்னும் ரகசியம் கசிந்ததும் அப்பிரதேசம் முழுவதும் கொப்புளங்கள் எழும்பின. நுரைத்து வடிம்யும் கண்ணீரிலும், தேங்கி நிற்கும் குளத்திலும் அலறி ஆர்ப்பரிக்கும் காற்றிலுமெல்லாம் குமிழிகள் எழும்பின. அம்மாளுவின் தாயைப் புதைத்த தியய்களின் வீட்டில் தான் முதலில் யாரோ ரகசியத்தை உடைத்ததோடு ஜுரத்திலும் படுத்தார்கள்.

பல இனத்திலும் ஜாதியிலும் நோய் புகுந்து விளையாடியது. நோய் வராதவர்கள் அதை எதிர்நோக்கிக் காத்திருக்கும் நிலையைகூட சிறிதும் தாங்க முடியாமலாயிற்று. சிலருக்கு வெறுமனே ஜ்வரம் அடிப்பதாகத் தோன்றியது. அவர்கள் போர்த்திக்கொண்டு பாலுண்ணி களுக்காக தேகம் முழுவதும் தேடி களைப்படைந்தார்கள்.

கணவர்களின் மனத்தில் கனத்து தொங்கிய அம்மை பயம் நாளாக நாளாக மனைவிகளிடமும் விதைகளாக வழுக்கி இறங்கின. இரண்டு மூன்று உடலுறவுகளுக்குப் பின் அவர்கள் எல்லாவற்றையும் சகஜநிலையில் எடுத்துக் கொண்டு உறங்கினார்கள். தலைப்பிரட்டைகளைப் போல் வாலசைத்து நீந்தியவிந்துணுக்கள் பெண்ணுக்குள் பெண்மையை காத்துக்கொண்டு கர்ப்பக் குழல்களிலும் கர்ப்பப் பையின் சுவர்களிலும் மூச்சு வாங்கி நின்றன. அம்மை வந்து சென்ற ஆத்மாக்களின் மூலம் பல்கிப் பெருகியவை பெண்களின் கர்ப்பப் பைகளில் உயிர்பெற்று வந்தன.

பகலின் நிழல்களாகவும் இரவின் கும்மிருட்டாகவும் பிணங்களும் அவைகளைச் சுமப்பவர்களும் வரிசையாக நகர்வதை சங்குமேனன் முன் வராந்தாவில் அமர்ந்து பார்த்துக்கொண்டிருந்தான். உதிர்ந்து விட்ட தன்னுடைய பாலுண்ணிகளுக்குமேல் வாஞ்சையுடன் நகக் கொக்கிகளைப் போட்டு இழுத்துக்கொண்டிருந்தான். அவன் ஒவ் வொன்றைப் பற்றியும் அடிக்கடி முணுமுணுக்கவும் கைவிரல்களால் சைகை காண்பிக்கவும் செய்தான். தறவாட்டிலுண்டான காலராவி னுடையதும் அம்மையினுடையதுமான காரணங்களை இழைபிரித்து எப்படியெல்லாமோ அவன் ஆராய்ந்து பார்த்தான்.

பன்னியூர் கோயிலில் வழிபாடுகளோ, கிராம தேவதைகளுக்கு இரத்த பலியோ செய்யவேண்டுமென்று சில பிரமுகர்கள் வீடு தேடிவந்து கேட்டபோதுதான் இவ்வளவு நாள்களாகவும் அந்த விஷயங்களை நினைக்காததில் மேனன் ஆச்சரியப்பட்டான்.

மேலே புல்லாரத் தறவாட்டின் வெளி வேலைக்காரி பாருவின் மகள் சிருதைக்கு நோய் ஆரம்பித்துவிட்டதென்று கேட்டவுடன் கார்த்தி மவுனிக்கவில்லை. பன்னிப்பறம்பின் தென் எல்லையைத் தாண்டி சிருதையின் குடிசைக்கு உடனே போக வேண்டுமென அவருக்குத் தோன்றியது.

இந்தக் குழந்தை என்ன சொல்கிறாள்? மேலே புல்லாரத்தறவாட்டு பெண்கள் இதுவரை ஒருதியக் குடிசையில் நுழைந்ததில்லை என்பது ஒன்று. இரண்டாவது வைசூரி வந்த வீடு.

மார்பில் அடித்துக்கொண்டும் கூச்சலிட்டுக்கொண்டும் அம்மாளு கலவரம் செய்து பார்த்தும் கார்த்தியின் உறுதி குலையவில்லை. இமையசைக்காத விழிகளுடன் அவள் தாயை நோக்கி நின்றாள்.

'இந்த அவமானம் எங்கிருந்து படையெடுக்கிறது. இத்தனை வருஷத்திய வாழ்க்கை இவர்களுக்கு எந்த ஒரு நிறத்தையும் அளிக்க வில்லையா? ஆனால், தன் மனம் எவ்வளவோ உயர்ந்த இடமாக அல்லவோ இடுக்கிறது' - என்று இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில்தான் கார்த்திக்குத் தோன்றுகிறது.

இனிமேல், அம்மா சமாதானம் அடைவதற்காக சங்குமேனன் ஈடுபடவேண்டியது இருக்கும். சொன்னதுபோலவே மேனனின் கால் நடமாட்டம் நெருங்கி அருகில் வந்தது. சிறிது நேரத்திய மவுனத்துக்குப் பின் என்ன விஷயம் என்பதைப் புரிந்துகொண்டு அவன் பேசினான்.

''மச்சி அம்மாவுக்கே வந்தும்கூட கொப்புளம் அவளை நெருங்க முடியாமலாகிவிட்டதல்லவா? அதனால் பரவாயில்லை, கார்த்தி சிருதையை பார்த்துட்டு வரட்டுமே...''

உற்காசம் அளித்த பதிலாக இருந்தும்கூட அதில் கார்த்திக்கு எவ்வித மகிழ்ச்சியும் கிடைக்கவில்லை. பகவதியம்மாவைப் போன்று கவனிப்பாரற்ற மூலைக்கு தானும் தனிமைப்பட்டுக் கொண்டிருப்பதாக சில தினங்களாகவே அவளுக்கு தோன்றியது.

பின்வந்த நாள்களில் வாழ்சையின் ஒரு துளியைக்கூட மகளின் விழிகளில் மலரச் செய்வதற்கு அம்மாளுவால் சாதிக்கமுடியவில்லை. அவளைப் பார்க்கும்போதெல்லாம் அந்தத் தாயின் கண்களில் ஒருவித பீதியோ, ஒரு மரியாதையோதான் நிறைந்திருந்தது.

பகவதியைப் போன்று தன்னை நோட்டமிட்டு கவனிக்கும் சொந்தத் தாயும், என்னவோ பிடிவாதத்தினால் விலகி நிற்கும் மாமனும்தான் அருகில் இருந்தார்கள். மனத்தின் வாசல்களை சிறிதாவது திறந்தவள் அம்மம்மாவாகத்தான் இருந்தாள் என்று இப்போது தோன்றுகிறது.

தன்னைத் தழுவிக்கொண்டிருந்த அம்மம்மாவின் விரல்கள் பன்னிப்பறம்பிலுள்ள மின்னும் புற்களாக கார்த்தி கற்பனை செய்துகொண்டாள். அங்கே விசிலடிக்கும் காற்றில் அம்மம்மா சொல்லும் கதைகளின் மாற்றொலிகளைக் கவனித்தாள்.

போதாத காலத்துக்கு அதற்கேயுரிய சில நிர்வாகச் சட்டங்களும் உண்டு. சங்குமேனன் சிந்தித்துக் கொண்டிருந்தான். புனையலாட்டிய* முற்றம் போன்றுள்ள பதிரையும் தூசையும் அணிந்து வைசூரியின் களம் மட்டும்தான் மிஞ்சியிருந்தது. அப்போதைக்கு அதுதான் இன்னுமொரு பயம். கம்பெனிக்காரர்களின் புதிய சட்டத்தின் கீழே குத்தகை நிலத்தை புதுப்பிக்க வேண்டும் என்று நிர்ப்பந்தப் படுத்தியிருக்கிறார்கள். சட்டம் என்று பார்க்கப் போனால் அப்படியொன்றும் இல்லைதான். துரையினுடைய விருப்பு வெறுப்புகள் என்றுதான் இதற்கு அர்த்தம். அந்த விருப்பு வெறுப்புகள் உயிர்பெறுவதும்கூட வெளிப்பகட்டுகளின் ஆசைகளிலிருந்துதான். இதற்கிடையே மூலங்களைப் பற்றி தன்னால் அதிகமாக ஆராய்ச்சி செய்ய முடியாமல் ஆகிவிட்டது. தர்மஅதர்ம சிந்தனை தொடங்குவதற்குள் மனமும் படமெடுத்து தானாகவே திருப்பிக் கொத்தும். உள்ளுக்குள்ளேயுள்ள மூச்சுத் திணறல்களை கீறிக் கீறி நியாய அநியாயங்களை விவாதித்து விவாதித்து ஆக மொத்தத்தில் சோர்வடைவான்.

எது எப்படியிருந்தாலும் குத்தகை நிலத்தின் குத்தகைப் பத்திரம் ஒரு அந்நியமாக சீறி அடிக்கிறது. மேலே புல்லரத் தறவாட்டுக்கு கிடைத்துள்ள இருநூறு ஏக்கர் குத்தகை நிலத்தில், வரக்கூடிய வருமானத்தில், இருபது விழுக்காடு குத்தகைப் பணமாக சென்றுவிடும். அது முழுவதையும் பத்திரமாக எழுதி எவ்வளவு வேண்டுமென்றாலும் உயர்த்தி காட்டிக்கொள்ளலாம். அதிகாரம் இல்லாத அதிகாரியானதினால் சலுகையொன்றும் எதிர்பார்க்க முடியாது. நேர்மாறாக திருட்டு எண்ணம் காண்பிக்காமல் இருந்தால் போதும். தன்னுடைய இடத்தின் தியாகத்தினால் அதிகாரி பதவி பெற்ற கருணாகர குருப்புக்கு நன்றி இல்லை. அதற்குப் பதில் அகங்காரம்தான் அவன் செய்கையிலுள்ளது.

செயல்பாடு குறைவாக உள்ள முல்லப்பள்ளித் தறவாட்டிலும் வடக்கன் தரையிலும் இன்னும் என்னவெல்லாமோ நடந்ததாம். குத்தகையை நிச்சயிப்பதற்காக ஏறி இறங்கும் தாசில்தாரும் அவ

---

* வைக்கோல் போரடித்தல்.

ருடைய கூட்டத்தாரும் படுக்கை அறையில்தான் அதிகம் ஆராய்ச்சி யிலிருந்தார்களாம். மிதமான குத்தகைத் தொகையை நிச்சயப்படுத்து வதற்காக தறவாட்டுப் பெண்கள்தான் மிகவும் வியர்க்க வேண்டிய தாகிவிட்டதாம். பலவீனமான குடும்பத் தலைவர்கள் மார்பைத் தடவியவாறு ராமநாமம் ஜெபித்து மேற்கு முற்றத்தில் இடம் வலமாக நடந்தார்கள்.

சங்குமேனன் தனது எல்லாவித ஆசாபங்கங்களுக்கும் கார்த்தியைத்தான் மூலதனமாக்கி இருந்தான். அவளை காப்பாற்றக் கூடிய வழியைப் பற்றி அவனிடம் தீர்மானம் எதுவும் இல்லாமலில்லை. இருந்தாலும் ஏதாவது ஒரு பகுதியிலிருந்து கலாசார இழப்பின் சிறியதொரு விரல் நுனி தீண்டல்... அதிகாரி என்று இல்லை, தாசில்தார் என்று இல்லை, அந்த கலெக்டரேயானாலும் தான் சம்ஹார ருத்ரனாகிவிட வேண்டிய திருக்கும். ஆசாபத்தின் குருகேஷத்திரத்தில் குதித்து காண்டீபம் வளைத்து போர் செய்தான். அப்போது அங்கிருந்துதான் சொல்லவொண்ணாத ஒரு நடுக்கமும் தொடங்குகிறது.

அது ஒருபோதும் பகையாளியின் பலத்தை நினைத்து இல்லை. பகையாளி முகமில் தன்னை இழந்து, ஆசாரக் கோபத்தின் அம்புகளை எற்றுதானே வேதனையில் துடிக்க வேண்டியதாக வரும்போது, அந்தச் சூழலை பொறுத்துக்கொள்ள முடியவில்லை. மருமகளிடமுள்ள அதிகாரத்திலும் பொறுப்புணர்விலும் தன்னுடைய தார்மீக பலம் எல்லாம் எப்போதோ அழிந்துவிட்டிருக்கிறது.

அன்றைய தினம் ஒரு வெள்ளிக்கிழமை. குத்தகைப் பணத்தின் கணக்கை முடிப்பதற்காக வருவாய் அதிகாரிகள் வரும் விவரத்தை சங்குமேனன் முன்கூட்டியே அறிந்திருந்தான். தான் அதிகமாக ஒன்றும் அறிந்திருக்கவில்லை என்றாலும் வருத்தப்பட வேண்டிய ஏதோ வொரு விஷயம்தானென்று புரிந்துகொண்ட காரியஸ்தன் யாரிச்சல் அடைந்தான்.

''அம்மா, அவங்க வரும்போது நீ இங்க நிக்க வேணாம். மாடியிலாவது வேறெங்கேயாவது கதவைச் சாத்திக்கிட்டு உக்காந்தா போதும்.''

விடிந்தபின் இந்த வாசகங்களை கார்த்தியிடம் நான்கு முறையாவது சங்குமேனன் சொல்லியிருப்பான். கேள்விக்குறி வடிவத்தில் அவ ளுடைய புருவங்கள் வளைந்தபோது அவன் தைரியமற்றவனானான். குரலை தாழ்த்தி முணுமுணுத்தான்.

''ஜனங்க மோசமானவங்க, படுமோசமானவங்க.''

இந்த வார்த்தைகளுக்கு மெல்ல மெல்ல வடிவம் மாற்றப்பட்டு விசாலமானதொரு அர்த்த தளத்தில் அவை கொடூரமாக முழங்கப் பட்டன.

''மனுஷன் மோசம். ஆமாம், மனுஷன் மோசம்தான்...''

சங்குமேனன் திடீரென உதவியற்றவனாகி தசை நார்களெல்லாம் உருண்டு சுருண்டு பார்க்க சகிக்கமுடியாத தரத்தில் விகாரப்பட்டான். அமைதிப்படுத்துவதுபோல் பதிலளித்த கார்த்தியின் வார்த்தைகள் அவனை மேலும் குழப்பத்தில் ஆழ்த்துவதாகத்தான் இருந்தன.

''என்ன, அவங்க என்னைத் துண்கிண்டு போயிடுவாங்களா, அழைச்சுண்டு போயிடுவாங்களா?

ஒவ்வொரு முறையும் ஆழமான குறும்புச் சிரிப்போடுதான் அவள் மறுகேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

அதிகாரி கருணாகர குருப்பும், தாசில்தார் அச்சுதன் நாயரும் மேலே புல்லாரத் தறவாட்டின் பத்திர கட்டுகளை திருப்பியும் புரட்டியும் பரிசோதித்தார்கள். களத்துமேட்டிலும் களஞ்சிய அறையிலும் ஏறி இறங்கியும் திருப்திப்படாமல் தறவாட்டிலுள்ள ஒவ்வொரு அறைக்குள்ளும் சரிந்தும் சாய்ந்தும் எட்டிப்பார்த்தார்கள்.

பின்தொடரும் சங்குமேனனின் முகபாவத்தை சாத்தானும் கடவுளும் பங்கிடுவதாகத் தோன்றியது. சிறிதுதூரம் கட்டுப்பாட்டினால் மகிழ்வு என்றால், அடுத்த நிமிடம் கலவரத்தின் நச்சுப் படிவத்தால் முகம் சோகமுற்றது.

வடக்கினி*த் களத்துக்குள் காலெடுத்து வைத்ததும் தாசில்தாரும் அதிகாரியும் பின்னோக்கிப் பாய்ந்தார்கள். அம்மாளுவின் வைகூரித் தழும்பு முகம் மேலும் மேலும் அவர்களை துரத்துவதாக இருந்தது. திரும்பி நடந்த அச்சுதன் நாயரின் நாசித் துவாரங்கள் எதையோ மோப்பம் பிடித்து முகர்ந்தன. மாடியின் வாசற்படியை அடைந்த போது அவன் இரண்டு மூன்று முறை தயங்கி நின்றான். கவுரவ

* கேரளத்தின் பழைய முறை நாலு கட்டு வீட்டின் வடக்குப் பக்கத் தளம்.

திரையிட்டுத் திரியும் கருணாகர குருப் கண்களாலேயே சம்மதம் கேட்டான்.

சங்குமேனனின் முகபாவனைக் கட்டுப்பாட்டை முழுமையாகவே சாத்தான் பற்றுக்கொண்டிருந்தது. முகத்தசைகள் உருகத் தொடங்கி, மீசைகள் தேள்களாகவும் மாறிற்று.

கருணாகர குருப் மாடி வாயிற்கதவைத் தள்ளித் திறந்ததும் இருளின் பலகைகள் பின்புறம் மடிந்தன. கற்பனையில்கூட மறுபடைப்பு செய்ய முடியாத காட்சியைத்தான் உள்ளே சென்ற அந்த இருவரின் கண்களும் கண்டன.

அகல்விளக்கில் பற்றியெரியும் திரியின் சிகப்பில் கார்த்தி ஓரேயடியாக உருகிப்போய் நின்றாள். முடிமுனைகள்கூட வியர்வை முத்துக்களைப் பொழிந்துகொண்டிருந்தன. தேகத்தின் வியர்வை நீர் பட்டாடைகளை நனைத்துவிட்டு வெளியே தளும்புகிறது. என்னவோ ஒரு துக்கத்தைப்போல் மார்பக முனையிலிருந்து நீர்த்துளிகள் சொட்டுச் சொட்டாக வீழ்ந்தன. அந்தச் சமயத்தில் அவள் உதடுகளில் கடும் சிவப்பில் சிரிப்பு பரவிக்கொண்டிருந்தது. நெருங்கமுடியாத விதத்தில் கண்களில் நெருப்பு ஒளிர்ந்தது.

அச்சுதன் நாயரும் கருணாகர குருப்பும் தட்டுத் தடுமாறி ஒரு வழியாக மாடிக்குச் சென்றார்கள். இருளின் இரு பலகைகள் அவர்களின் சிந்தையினுள் பிரிந்து விழுந்தன. சுவரில் தலையைச் சாய்த்து தூக்கத்திலிருந்து எழுந்து வந்ததுபோல் அச்சுதன் நாயர் கேட்கத் தொடங்கினான்:

''யாரு... அவ யாரு?

சில கேள்விகளுக்குப் பின் மறுகேள்வியாகவே சங்குமேனனும் பதிலளித்தான்:

''மாடி அறையில யாரெல்லாம் இருப்பாங்க?''

ஜுரத்தில் கொதித்துப் பொங்கிய அச்சுதன் நாயரின் உயிர் இரண்டு மூன்று நாள்களில் துளித்துளியாக மடியத் தொடங்கியது. நாணு வைத்தியன் மட்டுமல்ல, பொன்னானியிலிருந்து அழைத்து வந்த

அலோபதி மருத்துவரால்கூட குணப்படுத்த முடியவில்லை. அப்புறம் எப்படியோ வெளியே தெறித்து விழுவதற்குப் பதிலாக ஜீவன் உடலிலேயே உறுதியாக நிற்கத் தொடங்கியது.

தறவாட்டு மாடி அறையில் அச்சுதன் நாயர் மிரண்ட விவரம் ஊர் முழுவதும் பரவியது. அதனால் பகவதியம்மனுக்கு விளக்கு ஏற்ற எண்ணெயையும் திரியையும் பக்கத்து வீட்டார்கள் மேலே புல்லாரத் தறவாட்டுக்குக் கொடுத்தனுப்பினார்கள்.

விசித்திரமான சில கற்பனைகளில் மூழ்கிய கார்த்தி மீண்டும் மீண்டும் தனிமைப்பட்டுக் கொண்டிருந்தாள். வீட்டார்களிடமிருந்தும் ஊரார் களிடமிருந்தும் வேறுபட்டு, மிதந்து மிதந்து கண்களுக்குப் புலப் படாமல் போவதாக அவள் தனக்குத்தானே கற்பனை செய்து கொண்டாள். இதேபோன்று தனித்ததொரு ஜீவனாகத்தான் இனி இருக்கவேண்டும். தான் உடல்நலிந்த பகவதியாகத்தான் இனி வசிக்கவேண்டும்.

நாள்கள் செல்லச் செல்லதானும் புலப்படாமல் போகும்போது மக்கள் தன்னையும் ஆராதிப்பார்கள். விளக்கேற்றுவார்கள். எண்ணெயும் பூவும் கொடுத்தனுப்புவார்கள். வேண்டுதல்களுக்கு காது கொடுத்து கேட்கவும் அனுக்கிரகிக்கவும் மட்டுமாக விதிக்கப்பட்டு, இறப் பதற்குக்கூட உரிமையில்லாமல் வாழவேண்டியதாகிவிடும்.

எட்டு

கடல் தெய்வங்கள் அளித்த காற்றைப் போன்றுள்ள முஸலியார் மடத்தில் பீத்தான் மாமுட்டி பொடி மணலைத் தாண்டி வந்தான். ஆண்மையின் பலத்துடனும் உறுதியுடனும் முஸலியார் மடத்தின் பீத்தான் மாமுட்டி பாரதப் புழையையே அணிந்து வந்தான்.

கைகள் வளர்ந்து முற்றி அரக்க உருவமானான். காட்டின் கட்டுக்களை உடைத்து, குன்றுகளை நெறுக்கி உருட்டினான். இரண்டு மூன்றடி களிலேயே நெல்வயல்களை சிறு களங்களாக்கினான். ஒரே மூச்சில் குன்றுகளையும் மலைகளையும் தாண்டிவந்து இறங்கினான்.

நரம்புகளில் சூடேற்றி, சதைகளில் முறுக்கேற்றி, இதயத்தில் கனிவுகொண்டு முஸலியார் மடத்தில் பீத்தான் மாமுட்டி ஓடோடி வந்தான். அச்சமில்லாத கண்களும் வாய் நிறைந்த சிரிப்புமாக முஸலியார் மடத்தில் பீத்தான் மாமுட்டி தலைநிமிர்ந்து வந்தான்.

வேலாயுதன் நாயர்தான் சங்குமேனனிடம் விவரம் சொன்னார். 'பொன்னானியிலிருந்து ஒரு மாப்பிளை பாக்கையும் தேங்காயையும் வாங்குவதற்காக ஊருக்கு வந்திருக்கிறான். வைசூரியின் விதைகளை நோம்பிப் புடைத்து மிஞ்சிய காய்களையும் கனிகளையும் அவன் மூங்கில்கூடையில் நிறைத்துக்கொள்கிறான்' என்று.

விளைச்சல்களை வாங்குவதற்கு ஆளில்லாமல் பணத்தின் வலிமை அதிகரித்த காலம் அது. சங்குமேனன் மகிழ்வுற்றான். களத்திலும் மொட்டை மாடியிலும் கொப்பரைத் தேங்காயும் பாக்கும் குவிக்கப் பட்டிருந்தன. போதாக்குறைக்கு குத்தகை நிலத்தின் குத்தகைப் பத்திரம் சம்பந்தமாக கொஞ்சம் அதிகமாகவே பணம் சம்பந்தப்பட்ட ரிக்கார்டுகளும் இருந்தன.

வேலாயுதன் நாயர் பீத்தான் மாமுட்டியை அழைத்து வந்தான். பத்தாயப் புரையின் வராந்தாவில் சாய்வு நாற்காலியில் அயர்ந்திருந்தான் சங்குமேனன். அச்சமயத்தில் அவனைப் பற்றி அகராதிப் பொருளில் சொல்வதானால் உடைந்துபோனான் என்றுதான் சொல்ல வேண்டும். ஒன்றரை ஆள் மட்டத்தில் ஒரு நீண்ட மனிதன் வினயத்தோடு தலை குனிகிறான். பொருள் நன்றாக இருக்கிறதென்றால் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ள மாமுட்டி தயாராக இருந்தான். பொன்னானி சந்தை பாதாறம்பில்* இருந்து அந்திய தேசத்துக்கு சரக்குகளை ஏற்றுமதி செய்வதுதான் அவனுடைய தொழில்.

புதியதாக முளைத்த மாப்பிளா பணத்தின் கொழுப்பு அவன் முகத்தில் தெரிந்தது. சிறியதாக வெட்டப்பட்ட முடியும் குட்டைக்குட்டையாக கத்தரிக்கப்பட்டுள்ள வட்டவடிவத் தாடியும் கவுரவ பாவனையும் சிரித்துக் கொண்டிருக்கும் தோணி போன்றுள்ள பெரிய உதடுகளும் அவனுக்கு இருந்தன. பொருள்களை இனம் பிரிக்கவும் மூட்டை கட்டி ஏற்றவும் ஒரு தங்குமிடம் வேண்டும் என்பதுதான் மாமுட்டியின் முதல் நிபந்தனையாக இருந்தது. தன்னுடைய களத்துமேட்டை உபயோகித்துக் கொள்ளலாமென்று மேனன் சொன்னதும் மாமுட்டி மனம் திறந்து சிரித்தான். கைகால்களின் கட்டுகளை அறுத்துக்கொண்டு ஆயாசத்துடன் மேலே புல்லாரத் தறவாட்டின் வராந்தாவில் அமர்ந்தான். அம்மைநோய்க் கிருமிகளை அகற்றிக்கொண்டிருக்கும் தென்றல் காற்று அங்கே வீசிக்கொண்டிருந்தது. அதில் அகப்பட்ட பீத்தான் மாமுட்டியின் முடி இழைகள் பறந்து விளையாடின.

''எல்லாம் நடக்கும், ஆனா சரக்குக்கு வந்த விலையும் இருக்கணும்.''

சங்குமேனன் மாப்பிளாவிடம் கவுரவதொனியில் கூறினான். பீத்தான் மாமுட்டி சிரித்தபோது பொன்னானிக் கடற்கரையில் கடல் சீறியது. அலைகளுக்குள்ளே மூத்த கடல்தாய் பொக்கையைக் காட்டினாள். ஏற்றுக்கொள்ளக் கூடியதும் கூடாததுமான சத்தான்கள் கைகோர்த்துக் கொண்டு நடனமாடின.

திடீரென்று கடல் அலைகள் நிச்சலனமாயிற்று. பொங்கிய அலைகளும் அடித்த காற்றும் அதே மாதிரி தொடர்ந்தன. கார்த்தி பாத்திரத்துடன் சங்குமாமாவின் அருகே வந்து அமர்ந்து கொண்டாள்.

* பாதாறம்பு - பொன்னானியில் சந்தை நடைபெறும் இடம்.

சங்கிலிகளால் கட்டுண்டதுபோல் அவளை அப்படியே நோக்கிக் கொண்டு நின்றுவிட்டான் மாமுட்டி. எவ்வளவு முயன்றும் அந்த அழகிலிருந்து பார்வையை விலக்க அவனால் முடியவில்லை.

தன்னுடைய கண்களுக்குள்ளும் உடலுக்குள்ளும் ஒருவன் இந்த அவலுக்கு ஊடுருவி நோக்குவதை கார்த்தி முதன்முதலாக அனுபவித்துக்கொண்டு இருந்தாள். பொங்கியெழும்பி புலப்படாமல் போகும் ஆகாயத்திலிருந்து உடல் இப்போது பூமிக்கு வருகின்றது. தீப்பொறி பறக்கும் முகத்துடனும் முறுக்கேறும் நரம்புகளுடனும் அமர்ந்திருக்கும் மாமுட்டியை சாவதானமாக அவள் மறந்துபோனாள்.

ஆடையில்லாத தன் உடல்தான் மாமுட்டியின் பார்வையில் படுகிறது என்று தோன்றுகிறது. இத்தனை அழகான அற்புதமான ஒரு தேகமா தனக்கு இருக்கிறது! மதம் கொண்ட யானையை போன்றுள்ள கார்த்திக்கு தன்னைப்பற்றி புதிய புதிய உணர்வின் உலகங்கள் தெளிந்து வந்தன. தனக்கான ஒரு வாழ்க்கையும் உடலும் இதோ பக்குமடைந்து கிடைத்திருக்கின்றது. மற்றவர்களை மின்சாரம் போன்று பாதிக்கும் உடலை உடைய ஒருவன். வழிபாடு பயம் சிறிதும் இல்லாமல், குற்றவுணர்வின் கீறல்கள் இல்லாமல் கண்களில் நட்சத்திரங்கள் ஒளிரும் அழகு. நிமிஷந்தோறும் ஆனந்த போதையில் மகிழ்ந்தாள் அவள்.

''கார்த்தி, நீ இங்கேர்ந்து உடனே போ...''

திகைத்துப் போய் மெய்சிலிர்த்து நின்ற அவளை கடைசியில் சங்குமேனனின் சத்தம்தான் உணரச் செய்து வெளியேற்றியது.

சுமக்க முடியாத ஒரு மழைமேகத்திரளின் அழிவற்ற தன்மைதான் மாமுட்டியையும் பித்தனாக்கியது. சங்குமேனனிடமும் வேலாயுத நாயரிடமுமான உரையாடலிலும் சிறிப்பிலுமெல்லாம் பீத்தான் மாமுட்டியால் மனம் திறந்து பேசக்கூடமுடியாமல் ஆகிவிட்டது. குரலில் ஆழங்களின் எதிரொலி முழங்கியது. கட்டினாலும் அடங்காத அலைகளின் வேகமும் முகத் துவாரத்தின் இழுப்பும் தன்னுள் உண்டென்று மாமுட்டி அறிந்தான். புழுவால் கடிபடும் தமனிகளின் மேல் திரவங்கள் தீப்பிடிக்கத் தொடங்கின. வாய்விட்டுச் சிரிக்கும் சிரிப்புடன் பொன்னானியிலிருந்து வந்துள்ள மாமுட்டி, அற்புத வேதனைகளின் வாயையும் மூடிக் கொண்டு சங்குமேனனின் களத்தில் அன்றிரவு உறங்கினான்.

புத்தம் புதிய பூமி கிடைத்த கார்த்திக்கு தன்னுடைய உணர்வைப் பற்றியும் உடலைக்குறித்தும் கட்டுப்படுத்தமுடியாத ஆர்வமாகவே இருந்தது. தன் சொந்த வாழ்க்கை முறையைப் பற்றி இந்த அளவுக்கு இதுபோல் ஒரு வடிகால் தோன்றியதில்லை. ஒருவனை உன்மத்தனாக்கக்கூடியதும் கண்களை நட்சத்திரங்களாக்கக் கூடியதுமான அற்புதக் காட்சிகள் தன்னுள் எங்கே மறைந்திருக்கின்றன?

மாடியை நோக்கி ஓட்டமாக ஓடி ஏறிய அவள் அதை அறிவதற்கான ஆர்வத்தில் பொறுமையை இழந்தாள். நிலைக்கண்ணாடிக்கு முன் நின்று மெல்ல மேலாடைகளைக் களைந்து தரையில் போட்டாள்.

அதன்பின் எல்லாமும் அங்கே மிக வேகமாகவே நடந்தன. முதன்முதலாக அணை உடைந்த தன் காதல் எனும் அருவிகளின் கொக்கிகளைக் களைந்த வேகத்திலேயே மேலாடைகளையும் உருவி எறிந்தாள். குலுங்கிய மார்பகங்களிலிருந்து அடர்ந்து வெளியேறிய உயிர்த்துடிப்புடைய சுகந்தம் தறவாடு முழுவதும் பரவியது. அதன் போதையில் பாம்புகளாகவும் எலிகளாகவும் மாறிய நாலாவித ஜந்துக்களும் தங்கள் இணைகளுக்காக பாடாய்ப் பறந்தன.

அவிழ்த்தாலும் அவிழக்க முடியாமல் சுற்றப்பட்ட சுற்றுக்கள்தான் தன் சேலைக்கு உள்ளது என்று கார்த்திக்குத் தோன்றியது. நிலைக் கண்ணாடிக்கு முன் நின்றவள் வியர்வை முத்துக்களை அணிந்தாள். சேலையைக் களைந்ததும் ஒரு நிமிடம் ஆலோசித்தாள். வேண்டுமா? காமாந்தரத்தில் மூழ்கியிருக்கும் என் மனத்துக்கு அதைத் தாங்கக் கூடியதற்கான சக்தி வற்படுமா? இறுதியில் இரண்டையும் நினைத்து கீழாடைகளையும் முற்றிலும் உருவி கீழே விட்டாள். உயர்ந்து எழும்பிய பிரதிபிம்பம் வண்ணத்திலும் தடிமனிலும் பரிபூர்ணமாக இருந்தது.

ஒன்பது

கண்ணாடியிலுள்ள உருவத்தைக் கவர்ந்து, மோக வளையத்துக்கு உள்ளாக்கிய கார்த்தி களைப்படைந்தாள். கணக்கில் அடங்காமல் அதனை நேசிப்பதற்கும் அன்போடு கொஞ்சுவதற்கும் பரபரப்பு கொண்டாள். இந்த உலகத்திலுள்ள எந்தக் கொடூரத்தையும் பொறுமையோடு ஏற்றுக்கொள்ளும் பூமாதேவியின் கனிவுடன் அவள் தரையில் மல்லாந்தாள்.

மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியதோடு மார்பகத்தின் முனைகளும் விரைக்கத் தொடங்கின. விழிகளுக்குள்ளே வண்ண உலகங்களில் தன்னுடைய ஒவ்வொரு அவையங்களும் வேறுபாடான தனித்துவம் பெறுவதையும் அழிந்துபோவதையும் கார்த்தி அறிந்தாள்.

உதடுகள் பட்டாம்பூச்சிகளைப் போல் காட்டின் வனாந்தரத்தைத் தேடிப் பறக்கின்றன. கன்னங்கள் வெவ்வேறாகப் பிரிந்து பூந்தோட்டங்களில் மலர்ந்து நிற்கின்றன. முலைகள் குவிந்து பிரிந்து மார்பிலிருந்து இறங்கி பர்வதமுகட்டில் ஏறி அமிர்தகலசங்களைச் சுரக்கின்றன. பிரதேசங்களையும் இனங்களையும் பால் ஊட்டி நனைத்து அவை திருப்திப்படுகின்றன. ஏதோவொரு உயிரின் சிதறலை மனம் தியானித்ததும் அண்டம் முழுவதையும் கருவுறச் செய்த நிறைவின் அனுபவம் அதற்குள் அவளுடைய தேகத்தின் வனப்பு அக்கிராம எல்லைகளிலும் பெரும் ஊர்களிலும் பரவி விட்டிருந்தன.

எப்படிப்பட்டதொரு சொந்தத்தின் லஹரி! விசாலத்தனத்தின் அகம்பாவம்! கரைகாணாத கடலின் தன்னம்பிக்கை! கார்த்தியின் உள்ளூறுப்புகள் கர்வத்தினாலும் ஆனந்தத்தினாலும் வெடித்துச் சிலிர்த்தன.

சில நிமிடங்களுக்குப் பின் மேலே புல்லாரத் தறவாட்டிலேயே மிகச்சிறிய பெண் தான்தான் எனும் எதார்த்த உணர்வு திரும்பக் கிடைப்பதற்குள் அவளுக்குத் தன்னைப்பற்றியே அனுதாபம் தொடங்கியது. இதய நேசத்தின் உச்சக்கட்ட முடிவில் உள்ளார்ந்த அனுதாபம் கண்ணீர்மயமாகி இருக்கிறது. கார்த்தியின் விழிகள் அந்த நீரில் இளகி இறங்கின.

நினைவின் ஆரம்பப் பூஞ்சைப் படிவங்களை சுரண்டி எடுத்து அவள் பரிசோதித்தாள். இழக்கப்பட்டவைகளினுடையதும் வெடித்துச் சிதறியதினுடையதுமான மிச்சங்கள் மட்டும்தான் எஞ்சியுள்ளன. ஆத்மாவும் சரீரமும் தனித்தனித் துண்டுகளாகி எத்தனையோ காலம் இருளில் தனிமைப்பட்டு கிடந்துள்ளன. அவைகளை தேடிப்பிடிப்பதற்கோ சேர்த்து வைப்பதற்கோ யாரும் இப்போது தயாராக இருக்கவில்லை.

உற்சாகம் ததும்பும் நிமிடங்களில் சங்குமேனனின் அருகே சென்றால் மூச்சுத் திணறலால் துடிப்பவனுடைய முகபாவமாகத்தான் இருக்கும் என்றாலும், உடனே அங்கிருந்து போகாமல் மேலும் கொஞ்ச நேரம் அங்கேயே சுற்றிக்கொண்டிருப்பாள். நெருங்க முயற்சிசெய்யும் போதெல்லாம் விலகுவதற்கான முயற்சிகளில்தான் இருப்பார் அவளுடைய அன்புக்குரிய தாய் மாமன். கடைசியில் முடிகோட்டி, நடை தடுமாறி பரிதாபமாக இறக்கும் ஜந்துவாக அவர் மாறிவிடுவாரோ என்று பயம் தோன்றும் சந்தர்ப்பத்தில்தான் அவள் திரும்பி வருவாள்.

அதன்பின் அம்மாவை நெருங்கும்போதும் அவளுடைய தேகமும் உடலுறுப்புகளும் உருகத் தொடங்கும். எல்லாமும் ஒழுகி வடிந்தபின் அற்புத உடலாகவுள்ள என்னை ஆராதிக்கும் இரண்டு விழிகள் மட்டும் எஞ்சி இருக்கும்போதுதான் வெறியேறி அடங்கும். அப்போது நேரே செல்வது பன்னிப் பறம்பின் ஆழங்களை நோக்கித்தான். அங்கே சென்று அம்மம்மாவை அழைக்கும்போது 'நீ பயந்துடுவே' என்று கூறி அவளும் எழும்பி வருவதற்கு ஒத்துக் கொள்ள மாட்டாள். 'நீங்கள் இறந்துபோன பெண் என்பதினாலோ தேகத்தில் தழும்புகள் உள்ளதினாலோ எனக்கு யாதொரு பயமும் இல்லை' என்று ஆயிரம் முறை சபதம் செய்தாலும் அம்மம்மா நம்புவதில்லை.

இறந்தவர்களால் எழுந்து வருவதற்கு முடியாதாம். இது எப்படிப் பட்டதொரு குருட்டு நம்பிக்கையாக இருக்கிறது.

பீத்தான் மாமுட்டி யாரென்றோ, என்ன செய்கிறான் என்றோ அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் கார்த்திக்கு அனுபவப்பட வில்லை. தன்னுடைய உடலுறுப்பு வெளிப்பாடுகளை கூர்மை யாகவும் மரியாதையாகவும் அவன் பார்க்கும்போது, தான் இன்னும் உயிரோடுதான் இருக்கிறோம் எனும் எண்ணம் மட்டும் தொடர்ந்து புதுப்பிக்கப்படுகிறது.

மீண்டும் மீண்டும் அவள் தன்னையே அறிமுகப்படுத்திக் கொள் கிறாள். பீத்தான் மாமுட்டி தறவாட்டுப் பறம்பில் நடமாடினாலும் களத்து வரப்தாவில் சாய்ந்தாலும் அவனுடைய கவனமும் உயிர்மூச்சும் தன்னைச் சுற்றிதான் என்பதை அவளால் உணரமுடிந்தது.

நாள்கள் நகர நகர சரக்கு வாங்குவதில் பீத்தான் மாமுட்டியின் ஆர்வமெல்லாம் ஒடுங்கி வருகின்றன. பாக்கையும் தேங்காயையும் வெறுமனே இனம் பிரித்துக்கொண்டு சதா நேரத்தை மேலே புல்லாரக் களத்திலேயே கழித்துவந்தான்.

பயமில்லாமல் கூச்சமில்லாமல் களத்து முற்றத்துக்குச் சென்று பீத்தான் மாமுட்டியை நெருங்கும்போது அவனுடைய விருப்பமின்மை கார்த்தியை விலக்கவில்லை.

மாமுட்டியைத் தேடியலையும் மருமகளின் செயலை சில தினங் களாகவே சங்குமேனன் கவனிக்கத் தொடங்கி இருந்தான். அவளைத் தடுக்கக்கூடிய சமுதாய உணர்வுத்துடிப்புகள் பல சமயங்களிலும் பலம் பெற்று அவன் மனதை வரிசைப்படுத்தும். தமனிச் சுவர்கள் கிழிந்து இரத்தம் கொட்டும் வேதனையில் மனம் படம் எடுத்தாடும். அடுத்த நிமிடத்திலேயே எதார்த்த நிலையின் உண்மையான பிரச்னையை உள்ளம் ஏற்றுக்கொள்ளும்; சுயநலமில்லாமல் போகும்.

கிரகங்களின் தவிர்க்க இயலாத சூழ்ச்சியில் இப்படிப்பட்ட ஏதாவது ஒன்றை நான் எதிர்பார்த்ததுதானே? அப்புறம் அவள் என்னுடைய பாதுகாப்பிலிருந்தும்கூட அளவுக்கு அதிகமாகத்தான் எல்லை மீறி இருக்கிறாள். படுக்கை அறைகளில் நுழைந்து வெளியேறிய துஷ்டர்களிடம் கார்த்தி அதைத் தெளிவுபடுத்தவும் செய்திருக்கிறாள். மிரட்டவும் ஒதுக்கவும் கூடிய ஒழுக்கத் தூய்மையோ பலமோ தனக்கு இல்லை. அவளின் தாயான அம்மாளுவுக்குக் கூட அது இருக்கு மென்று தோன்றவில்லை.

பீத்தான் மாமுட்டியை உடனே அனுப்பிவிட வேண்டும் எனும் உருப்படியான யோசனை சங்குமேனனை பலசமயங்களிலும் ஈர்த்ததுண்டு. நிவாரணமில்லாத துக்கம் கொஞ்சம் அதிகரித்து நெருக்கத் தன்மையை உண்டாக்கத்தான் அது உதவும் என்று மனம் அவனை ஒதுக்கியது. கார்த்தி அதற்குத் தயாராகிவிட்டால் யாராலும் தடுக்க முடியாது என்றும் சங்குமேனனுக்கு நன்றாகவே உறுதியாகி விட்டிருந்தது. தன்னுடைய பலத்தையும் அழகையும் பலவீனத்தையுமெல்லாம் செலுத்தி கார்த்தியின் அசைவுகளை அவன் ஒளிந்தும் மறைந்தும் கவனித்து வந்தான். ஜீவனின் நுண்ணுயிர்களைப் பிளந்து வேதனை அனுபவித்து அனுபவித்து அதிலிருந்து ஒருவகை போதை தேடும் குணத்தைத்தான் அவன் இறுதியில் அடைந்தான்.

எதிர்பார்த்த அந்த விடியற்காலையும் மலர்ந்தது. உயிரின் விரைவான மூலகங்களுக்கு மூச்சு பெறலாம் என்ற வகையில் கார்த்தி களத்து மேட்டுக்குச் சென்றாள். சுத்தமான காற்று வேகத்தில் முடியிழைகளும் உடுத்திய சேலைகளும் பறந்து விளையாடின. பீத்தான் மாமுட்டியை தேடிச் செல்லும் அவளுடைய பயணம் ஒரு வழக்கமாகவே ஆகி விட்டிருந்தது. அம்மாவும் மாமனும் இவற்றையெல்லாம் தெரிந்திருக் கிறார்கள் எனும் விஷயம்கூட எந்தவொரு குற்றவுணர்வையும் அவளுக்குள் உண்டாக்கவில்லை.

தேங்காய் குவியலின் அசாத்தியமானதொரு பர்வதத்தின் கீழே அமர்ந்து பீத்தான் மாமுட்டி மட்டையையும் காம்பையும் பிய்த்து எறிகிறான். கார்த்தியின் அருகாமையை அறிந்தும் கட்டப்பாறைக்கு உச்சியில் அவன் புயல்காற்றை எழுப்பினான். தோள் எலும்புகள் சிறகுகளை விரித்தன. புஜ தசைகளிலிருந்து குதிரைகள் உற்பத்தி யாயின. நிமிடத்துக்கு நிமிடம் மெலிந்துவந்த பர்வத சமதளம் கார்த்தியிடம் ஆச்சரியத்தை வற்படுத்தியது. பெரியதொரு இமாலயம் அதோ கொஞ்சம் தேங்காய்களாக உருவம் பெற்றிருந்தன.

எல்லாம் முடிந்ததும் கட்டப்பாறை உருமாறி, தன் கம்பீரத்தின் ஏறுமுக உச்சியிலிருந்து உருகி விழுந்து பீத்தான் மாமுட்டியாக பூமியில் அமர்ந்திருந்தது. சாவதானமாக அவன் தன்னையே கட்டுப்படுத்தி மனத்தை பலத்துடன் ஒதுக்கினான். நயவஞ்சகக் குணங்களிலில்லா மல், புன்னகையோடு அனாவசியமில்லாமல் பார்த்துக்கொண்டு நிற்கும் கார்த்தியிடம் அவன் கேட்டான்:

''நீ வருகிறாயா?''

''வருகிறேன்'' அவள் பதில் அளித்தாள்.

''எங்கே போகலாம்?''

''எனக்குத் தெரியவேண்டாம்.''

பொன்னானி கடலலைகளின் உறுமல் ஆனைக்கரை வரையில் கேட்டதாக அந்தச் சமயத்தில் மாமுட்டிக்குத் தோன்றியது.

தன்னுடைய பலமும், மிதப்பும் எல்லாம் இந்த அழகைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்வதற்காகத்தானோ இந்த பிறவியை எடுத்திருக்கிறோம்? பொன்னானி பெண்களுக்கெல்லாம் ஆராதனை மூர்த்தியாகிய நான் அவர்களுக்கு எதிரில் குருடனாகவும் மனம் வெறுத்தும் திரிந்துகொண்டிருந்தது இவளின் மனத்தில் இடம் பிடிப்பதற்காகத்தான் என்பது இப்போது புரிகிறது.

ஆனால், எவ்வளவு தாராளமான சக்தியை அவளுக்கு முன்னால் வெளிப்படுத்தினாலும் அந்தக் கண்களிலிருந்து வரும் ஜீவசக்தியின் ஊற்றில் திடீரென குறுகிவிடுகிறேன். அடிதடுமாறும்போது குழந்தை களைப்போல் குறும்புத்தனம் காண்பித்து தப்பிக்க முயல்கிறேன். வாஞ்சையின் கும்பங்களை உடைத்து கார்த்தி சிரித்துத் தொலைக்கும் போது அதனுடைய குளிர்ச்சியில் என்னையே மறந்துவிடுகிறேன்.

வெளியூரிலிருந்து புழையை கடந்துவந்த மாமுட்டியின் சேகரிப்புகள் மேலே புல்லாரக் களத்துமேட்டில் குவியத் தொடங்கியிருந்தன. தங்கம் போன்றுள்ள பாக்குப் பழங்களும், எண்ணெய் வடியும் கொப்பரையும் குவிந்துள்ளன. கொண்டு போனதும் பயன்படுத்தக் கூடிய பக்குவத்தை சரக்குகள் அடைந்திருந்தன. தான் புறப்படுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பே மாமுட்டி சங்குமேனனின் கவனத்துக்கு விவரம் அனுப்பினான்.

''மாப்பிளா பொன்னானிக்குத் திரும்பத் தயார். மீதியுள்ள கணக்கு களையெல்லாம் முடிச்சுக் கொடுத்துடுங்க.''

அன்றிரவு பத்தாயப் புரையின்மேல் படுத்திருந்த சங்குமேனனுக்கு தூக்கமே வரவில்லை. நம்பிக்கையில்லாதவனாக ஒவ்வொரு மணி

நேரத்துக்கும் ஒருமுறை அவன் மாடிப்படி வாயிலுக்கு வெளியே வந்து எட்டிப் பார்த்தான். இதுநாள் வரையில் தான் சேகரித்த கட்டுப்பாடு எனும் சொத்துக்களெல்லாம் விழலுக்கு இறைத்த தண்ணீரைப்போல் வடிந்து வீணாகப் போகப் போகிறது. துக்கம் நிச்சயம்தான் என்றால் அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய மனத்துக்கும் உறுதி வேண்டும். இல்லையென்றால் அதை எதிர்கொள்ளக்கூடிய தைரியமாவது வேண்டும். கார்த்திக்கு எதிராக விரல் நுனியைக் கூட அசைக்கமுடியாத எனக்கு வேதாந்திரியாகப் போகும் வழி ஒன்றுதான் இப்போது உள்ளது. விரக்தியைப் பற்றிச் சிந்திக்கு முன்பே மனத்தைப் பற்றியும் மாற்றமில்லாத உறுதி வேண்டும். இன்றுவரை பார்க்காத நெளிவுகளும் சுளிவுகளும், கரையுடையும் இந்த மனமும் என்னுடையதுதான் என்று எனக்குத் தோன்றியதில்லை.

தகர்ந்து பொடிப் பொடியானதொரு நிலையில் உடனே ஓடிப்போய் அம்மாளுவிடம் விஷயங்களையெல்லாம் சொல்லி அறிவுரை பெற தோன்றியது. அப்புறம் வேலாயியோடெல்லாம் கூட அழுது புலம்பி என்ன செய்யலாம் என கண்டுபிடிக்கச் சொல்லவேண்டும் என்று தோன்றியது. சே, சே என்னது இது? எவ்வளவோ மேன்மையானவன் என்று கருதப்படும் நான் தங்கையின் முன்னாலும் காரியஸ்தன் முன்னாலும் போய் கண்ணீர் வடிப்பதா?

ஒவ்வொரு முறையும் புழைக்கதவு* வாயிலுக்குச் சென்று நோக்கும் போதெல்லாம் நிலவின் வெளிர் நிறமும் இருளின் கும்மிருட்டும் பெண்ணும் ஆணுமாக பரிணமிக்கிறது. காண்பது நிழலும் வெண்மையும்தான் என்று புரிந்து உறுதி கொண்டாலும் சங்குமேனனின் மனம் ஆண் பெண் உருவங்களை தேடிக் கொண்டிருக்கிறது. மீண்டும் மீண்டும் ஆண் பெண் உருவங்கள் கண்முன் தோன்றுவதை கற்பனை செய்து அவனுடைய தசைநார்கள் பத்தாயப்புரையின் மேலிருந்து கீழே குதிக்கத் துணிந்தன.

எவ்வளவு முயன்றாலும் புழைக்கதவு வாயிலில் இருந்து மாறுவதற்கோ தூங்குவதற்கோ முடியவில்லை என்பது உறுதியாகி இருந்தது. இந்த நிலையே மீண்டும் தொடர்ந்தால் என்ன செய்வது என்பதிலும் உறுதி ஏற்படவில்லை.

---

* துளைக் கதவு

காற்றும் மழைமேகங்களும் அலைக்கழிக்கும் மனத்தில் திடீரென்று ஒரு எண்ணம் மின்னியதும் சங்குமேனன் மாடிப்படிகளில் வேகமாக இறங்கினான். கீழே படுத்திருக்கும் வேலாயியைப் பிடித்து குலுக்கி எழுப்பினான். பரண்மேல் தேடி பெரிய இரும்புச் சங்கிலிகளையும் பூட்டையும் கொண்டுவந்தான். புழைக்கதவு வாயிலுக்கு எதிரே இருக்கும் யானை நாற்காலியில் அமர்ந்தபின் சங்கிலியால் தன்னைக் கட்டிப்போடுமாறு வேலாயிக்கு உத்தரவிட்டான். மேதாவித்தனத்தின் பிரமையில் உடைந்துபோன வேலாயி பொம்மையைப் போல் அவன் சொல்லுக்கு அனுசரித்தான்.

இரும்புச் சங்கிலிகளால் கைகால்கள் கட்டப்பட்டு ஆண் பெண் உருவங்களுக்காக கண்களை உருட்டிக்கொண்டிருக்கும் சங்குமேனன் ஆலோசித்தான். தத்துவ விமரிசனம் எனும் வாழை நாரினால் எவ்வளவுதான் இறுகக் கட்டினாலும் அந்த சமயத்தில் தன்னுள் ஏற்படுவது அறுந்துபோகும் சக்தி சிதறலாகத்தான் இருக்கும். வேண்டாததைப் பார்க்காமல் இருப்பதற்கான பலமில்லை. பார்க்கும் போது தனக்கு ஏற்படும் பரிணாம அனுகூலங்களைப் பற்றி உறுதியுமில்லை. தன்னையே அறிய முடியாதவனின் உடல் கார் இரும்புக்குத்தான் அடிமையாகிறது.

மறுநாள் விடிந்தபோது வேலாயி வந்து மேனனின் சங்கிலியை அவிழ்த்து விட்டான். அதற்கடுத்த ஐந்து இரவுகளிலும் அதேபோன்றுதான் சங்கிலியால் பிணைக்கப்பட்டு கண்சிமிட்டாமல் புழைக்கதவு வாயிலுக்கு வெளியே நோட்டம் விட்டுக்கொண்டிருந்தான்.

ஆறாவது நாள் இரவில் நிலவு சிறிது மங்கியிருந்தது. இரவுக்குள் மீண்டுமொரு அந்தி கருப்பதுக்கான அறிகுறிகள் காணத் தொடங்கின. இத்தனை நாள்களாக சங்குமேனனின் மனத்தில் புகுந்து உருவாகியிருந்த உருவங்கள் உண்மையிலேயே முற்றத்தில் இறங்கிக் கொண்டிருந்தன. பீத்தான் மாமுட்டியின் நிழல் கார்த்தியை முழுமையாக ஆவாஹித்து இருக்கிறது.

திடீரென உருவாகிய சிலிர்ப்பை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு உறுதியான உணர்வை மேனன் தனக்குத்தானே விதித்துக் கொண்டான். கெட்ட கனவுகளிலுள்ள துக்கத்தைப் போல் இல்லையே எதார்த்தத்திலுள்ளவை. சிறிய இடைவழிப் பாதையின் மூலம் நடந்து முன் வாயிலை கார்த்தி அடைவதற்குள் மஜ்ஜையையும் சதையையும்

இழந்து எலும்புக்கூட்டுக்குள் தனிமைப்பட்ட இதயத்தைப்போல் அவன் சிறிது துடித்தான்.

அதன்பின் எதுவும் நினைவுக்கு வரவில்லை. எப்படியாவது அவளை இழப்பிலிருந்து பாதுகாப்பதற்கான அடிப்படை விஷயங்கள் அவனுடைய இரத்த நாளங்களிலிருந்து ஆயிரக் கணக்கில் மின்னின. செல்கள் நொறுங்கிப் படர்ந்த சக்திப் பிரளயத்தில் அவன் அரக்கனானான். பத்தாயப்புரை மாளிகையிலிருந்து காற்றின் வழியே காலடிகளை அழுத்தினான். முன் வாயிலுக்குச் சென்று முக்குளியிட்ட தேகம் வேகமாகப் பாய்ந்தது.

எஃகு இரும்புச் சங்கிலிகள் அலறிக் கூச்சலிட்டு பிரிந்து முறுக்கின. எதிர்ப்பின் எல்லைகளில் கூடேறிப் பழுத்தவை சொல்லவொண்ணாத முறையில் கலகலப்பு கூட்டின. மாடியின் நட்ட நடுவில் நிரந்தரமாக இடம்பெற்றிருந்த யானை நாற்காலியின் உறுதியான மரங்கள்கூட வெடித்துச் சிதறின.

இறுதிப் போரில் மேனனின் மனமும் பாதுகாப்பில்லாமல் உடலில் இருந்து வெளியேறியது. இயக்காற்றல் விதிகளை தூக்கி எறிந்து விட்டு முன் வாயிலைத் தாண்டும் கார்த்தியின் அருகில் சென்றான்.

''நீ போகத்தான் போகிறாயா?''

தொட்டுக் கூப்பிட்டது போன்று இறுதியாக ஒருமுறை பின்னால் திரும்பி நோக்கினாள் கார்த்தி.

அந்தச் சமயத்தில் கைகால்கள் இரத்தமயமாகி, கழுத்தில் ஒரு பெரிய நரம்பு மட்டும் துடித்தது. வியர்த்த மேனனின் உடல் பத்தாயப் புரையின் மேல் உணர்வற்றுக் கிடப்பதுபோல் இருந்தது.

மங்கிய நிலவொளியில் எட்டுக்கட்டின் உருவ கம்பீரங்கள் எலும்புக் கூட்டைப் போல் எஞ்சியிருந்தன. ஆஜானுபாகுவான மரங்கள் இருளின் பாதுகாப்புக் கவசமாக மேலே புல்லரவளாகத்துக்கு காவல் நின்றன. பன்னிப்பறம்பின்* மண்ணடுக்குகளிலிருந்து அம்மையின் சக்தியுடன் கூடிய சூடான மூச்சுக்கள் வெளிப்பட்டன. கண்களுக்குப் புலப்படாத தூரங்களில், நிலையில்லாததொரு விடியலின் அடுக்கு

* ஒரு மனையின் பெயர்

துரகுகளை நோக்கி பீத்தான் மாமுட்டியும் கார்த்தியும் நடந்து மறைந்தார்கள்.

பீத்தான் மாமுட்டியின் ஆண்மை மிளிரும் பாதங்களுக்கு இணையாக ஒரே எண்ணத்தின் உருவமாக கார்த்தி அவனுடன் நிழலைப்போல் அணைந்து சென்றாள். இவ்வளவு வேகமாக அவள் தன்னோடு நடந்து வருவாள் எனும் உண்மை அவனுக்கு மேலும் மேலும் நம்பிக்கை வராமல் இருந்தது. சோர்வற்ற நேரத்தில் அவன் கார்த்தியை அப்படியே தோளில் தூக்கிவைத்துக் கொண்டான். இப்போது பீத்தான் மாமுட்டிக்கு தன்னுடைய உடலுறுப்புகளில் உறுதி தோன்றியது. தொடையிலுள்ள எலும்புகளிலிருந்து தசைகள் பிரிந்தன. இடைவிடாமலும் தடங்கல் இல்லாமலும் அலைகள் உருவாயின.

சாபமோட்சம் பெற்ற தூசிப் படலங்கள் பீத்தான் மாமுட்டியின் அடிச்சுவடுகளில் மறுபிறவியெடுத்தன. நினைவுகளின் எஞ்சியவைகளைப் போல் அவை அவர்களுக்குப் பின்னால் மேலே புல்லரத் தறவாடு வரையில் நீண்டு கிடந்தன.

வயல் வரப்புகளிலிருந்து நடைபாதைகளிலும், நடைபாதைகளிலிருந்து குன்றுகளில் ஏறி இறங்கும் வெட்டு வழிகளிலுமாக அவர்கள் நடந்து சென்றார்கள்.

மாமுட்டியின் பெருமூச்சுகள் வெப்ப வீரர்களாக கார்த்தியின் தொடைகளை சூடேற்றிக்கொண்டிருந்தன. ஒரு பாதாளத்திலிருந்து ஒடி ஏறி சமவெளியை அடைந்துவிட்டால் அதன்பின் கால்கள் தடுமாறும் சரிவுகள் வந்துவிடுகின்றன. சேற்றில் பொங்கும் ரஸத்துளிகளைப் போல் தூரத்தில் பாரதப்புழை அலையடிப்பது பார்வையில் பட்டதும் அவன் நின்று மூச்சு வாங்கினான்.

புழையைப் பார்த்த கார்த்தி தோளிலிருந்து இறங்குவதற்கு முயன்றாள். உரசிக்கொண்டு இறங்கும்போது எரிமலைத் தடத்தைப்போல் மாமுட்டியின் வாயிலிருந்தும் நாசியிலிருந்தும் வெளியேறும் உஷ்ணம் அவளுள் பதிந்தது. அவள் அதை அனுபவித்தாள். ஆயாசத்துடன் அவர்கள் ஈரத் தரையில் தட்டுத்தடுமாறி நடந்தார்கள்.

சமவெளியைத் தாண்டிய பாரதப்புழை குன்றுகளிலும் குழிகளிலும் ஏறிஇறங்கி பாய்ந்தோடுகிறது. ஈர்ப்பதைப் போன்றுள்ள அதனுடைய பொறுமையின்மை கார்த்தியிடம் துடிப்புகளை உருவாக்கின.

நுரையின் பயங்கர வியூகங்கள் பெரும் கரையைப் போல் பிரிந்தும் கூடியும் நீர்ப்பரப்புகளில் பிரவாகித்து மிதக்கின்றன. எந்த மலை இப்படி வெடித்துச் சிதறி நிரில் மூழ்கி கலங்கி வருகின்றதோ! தன்னுடைய விலை மதிப்பிட முடியாத இந்த நிதியைச் சுமந்து நதியை நீந்திக்கடக்கும் விஷயத்தில் மாமுட்டிக்கு சந்தேகம் இருக்கவில்லை. திறனின் முடிவு களுக்கு தீ மூட்டி ஜ்வாலிக்க வைக்க அவன் தயாரானான்.

குனிந்து நின்று பாறையாகவுள்ள தன்னுடைய தோள்பட்டை தசைகளில் ஏறிக்கொள்ளுமாறு கார்த்தியிடம் கேட்டுக்கொண்டான் மாமுட்டி.

வேறு முடிவு இல்லாமல் ஏதோவொரு தீர்மானத்தின் நெருக்கமாக நீரோட்டத்தின் வேகத்தையும் சுழலின் வலுவையும் பார்த்து அறிந்துகொண்ட அவள் உணர்வற்றவளானாள்.

''பயப்படாதே, என்மேல் ஏறிக்கொள். நான் உன்னையும் சுமந்து கொண்டு ரெண்டு தடவை கூட இந்தப் புழையைக் கடப்பேன்.''

''சரிதான். ஆனா, புழையோட வெறித்தனத்துக்கு அது தெரியாது, இருந்தாலும் நான் வர்றேன். அதுக்கு முன்னாலேயே...''

முழுமையாவதற்கு முன்பே யாகத்தில் அர்ப்பணிக்கும் நெய்யைப் போல் கார்த்தி பீத்தான் மாமுட்டியின் உஷ்ணத்துக்குள் ஒட்டி நெருங்கினாள். அவளுக்கு அது தேவையாக இருந்தது. அது அத்தியாவசியமாகவும் இருந்தது. ஈரமுள்ள உதடுகளுடன் அவள் பீத்தான் மாமுட்டியின் மார்புக்குள் முக்குளியிட்டு புதைந்தாள்.

புழையைத் தாண்ட முடியாது போனால்? அந்த அளவுக்கு சாகஸமு மில்லை, பரிகாசமுமில்லை தன்னுடைய வாழ்க்கை. கார்த்தியின் சிந்தனைகள் அப்படிப்பட்டதொரு திசையில் மேய்ந்துகொண்டு இருந்தன.

நடுங்கும் உதடுகளுடன் மாமுட்டியின் மார்பில் கார்த்தி முகம் புதைத்துக்கொண்டிருந்தபோது, அவனுடைய கைகள் குவிந்து வளைந்து அவளை திருப்படுத்தின. அவனிடமிருந்து எல்லாவற்றை யும் ஏற்று அனுபவிக்க கார்த்தி தோதாகப் படுத்தாள். பெண்மையின் சகல அம்சத்தோடும் கூடிய ஒரு வார்ப்பு பாரதப்புழையின் ஈரமணலில் வார்த்தெடுக்கப்பட்டது. அவளுடைய ஒவ்வொரு ரோமக் கால்

களிலும் மாமுட்டியின் உஷ்ணம் ஊர்ந்து நகர்ந்தது. கழுத்திலும், உதட்டிலும் மார்பகத்தின் மத்தியிலும் தொடையின் மென்மையிலுமாக மாறிமாறி இன்ப வெள்ளத்தின் மொட்டுகள் மலர்ந்து சுருங்கின. இறுதியில் உடலுறவில் இறங்கியபோது தீச்சூளையின் மூலம் அவள் அரை மயக்கத்தின் அடுக்குகளை அடைந்தாள். சின்னாபின்னமாக்கப்படும் தன்னுடைய தசை மடிப்புகளின் எல்லைகளை அறிந்து, பொறுத்து, எதிர்பார்த்துப் படுத்திருந்தாள்.

மகத்தானதொரு அடிபணிதலின் உச்சக்கட்ட மகிழ்ச்சியில் இருந்துகொண்டு, கார்த்தி எழுந்து நோக்கியபோது, ஆனந்தத்தின் எட்டமுடியாத உயரத்திலுள்ள சூரியன்கள் உள்ளார்ந்த அறிதலின் கண் சிமிட்டும் காட்சியென்றாலும், அப்போது அவளுக்கு அனைத்தும் கிடைத்துவிட்டிருந்தன.

''வாங்க, இனிமேல் ஆபத்தான ஆறோ கடலோ எதுவாக இருந்தாலும் சேர்ந்தே தாண்டலாம்.''

இறங்குமுகப்படிகளில் இறங்கும் மாமுட்டியின் சரீரத்தை மெல்ல வருடி அவள் அழைத்தாள். பரபரட்டுகளைப் பெற்ற சிறுவனின் குறும்புத்தனத்துடன் தன்னை கவனிக்கும் கார்த்தியிடமிருந்து அவன் முகத்தை மறைத்துக்கொண்டான். ஆற்று வெள்ளத்துக்குள் அங்கப் பிரதட்சணம் செய்து தன் நிர்வாணத்தை மறைத்தான். அவனுடைய வெளிப்படையான சிரிப்பை ஆற்றுநீர் இரைச்சல்கள் எடுத்துச்சென்று பல இடங்களிலும் கண்ணாடித் துண்டுகளைப் போல் மின்னச் செய்து காட்டின.

பளிங்குநீரில் அலைகளை எழுப்பி வளைந்தும் நெளிந்தும் கலங்கலாகவும் தெரியும் மாமுட்டியின் அங்க ஒவியங்களை நோக்கிக் கொண்டு ஆற்றங்கரையில் அமர்ந்திருந்தாள் கார்த்தி.

இந்த மனிதருக்குத்தான் எப்படிப்பட்டதொரு உடல்வாகு! அவள் ஆச்சரியமடைந்தாள்.

சில நிமிடங்களுக்கு முன்புதானே இவ்வுடல் முழுவதும் தன்மேல் மூடிக்கிடந்தது? அவளால் நம்பவே முடியவில்லை. நம்பிக்கையின்மையின் இன்னுமொரு கனவாக மாமுட்டியை ஆறு அடித்துக்கொண்டு சென்றுவிடுமோ என்பதை நினைத்ததும் திடீரென தண்ணீரில் இறங்கிய கார்த்தி அவனை அப்படியே அள்ளிக்கொண்டாள்.

கார்த்தியை தன்மேல் படுக்கவைத்துக்கொண்டு, மாமுட்டி ஒரு ஒற்றைப் படகாக பாரதப்புழையைக் கடந்தான். அள்ளிப் பிடித்துக் கொண்டிருக்கும் கார்த்தியின் மிக மென்மைத் தன்மையானது, அவள் கடற்கன்னியாக உருமாறிவிட்டாளோ என்று கற்பனை செய்து கொள்ள அவனுக்கு இன்பமாக இருந்தது. நீந்தும்போதே அவளுடைய உடல் ஸ்பர்ஸம் செதில்களாக ஊர்ந்து அவனை கிச்சுக் கிச்சு மூட்டியது.

குத்திச் சுழலும் இழுப்புகளை ஒதுக்கிவிட்டு ஆற்றின் நடுவே கைகளால் துழாவும் போதும் மாமுட்டிக்கு பிரத்யேகமாக எதுவும் தோன்றவில்லை. மேலே புல்லாரத் தறவாட்டில் பற்றி எரிந்து கொண்டிருந்த கவலையும் பயமும் வேறு எங்கேயோ படம் வரைந்து இருந்தது. மரணபயம் கூட அந்த நழுவலோடு வழிந்து இறங்கியது போலவும் இருந்தது. இன்றுவரை அனுபவிக்காத முதிர்ச்சியும் அமைதியும் அவனை உறுதிமிக்க அறிவு ஜீவியாக்கியது.

பத்து

பொன்னாளியை நெருங்க நெருங்க மாமுட்டியின் உள்ளுக்குள் நூற்றுக்கணக்கான ஆனந்தச் சிமிழ்கள் வெடித்து வெடித்து திறந்து கொண்டிருந்தன. அருகில் நடந்துவரும் கார்த்தியுடன் அந்த உற்சாகத்தை பங்கு போட்டிருந்தாலும், மனதுக்குள்ளேயே வைத்துக் கொண்டு அவளிடமிருந்து சற்று விலகியே நடந்தான். முதலிலிருந்து தொடங்கும் வாழ்க்கையை எண்ணத் தொடங்குவதுபோல் சென்றகால ஓவியங்களும் நிகழ்வுகளும் மனத்தினுள் புகுந்து வந்தன.

தன்னை நிக்காஹ் செய்து கொள்ளுமாறு வீட்டில் உள்ளவர்கள் மட்டுமல்ல, ஊரும் சேர்ந்து எத்தனையோ வருஷங்களாக முனைப்பாக இருக்கிறார்கள். பொன்னாளிக்காரர்களின் கண்ணுக்குக் கண்ணான பல வீடுகளுக்கும் போகவேண்டிய நிலை வரும்போது எத்தனையெத்தனையோ கருவிழிகள் கொத்தி இழுத்ததுண்டு. பாதி மூடப்பட்ட முகத் தட்டுக்குள்ளே இருந்து கொண்டு எத்தனையோ முகங்கள் மறைந்து விளையாடியதுண்டு.

வசீகரித்தவர்களுக்கெல்லாம் இதுதான் இனிமை என கற்றுக் கொடுக்கும் வகையில் இதுவரையில் பொன்னாளியே காணாத ஓர் அழகோவியத்தோடுதான் நான் இப்போது ஊருக்குள் வருகிறேன். கார்த்தியை ஒரேயொரு முறை கண்ட பொன்னாளியிலுள்ள மனிதர்கள் மட்டுமல்ல, மணல் துகள்கள்கூட மெய் சிலிர்க்கும். நூற்றுக்கணக்கான அந்த அற்புத விழிகள் ஆசீர்வாதங்களுடன் வணங்கி வரவேற்கும்.

இக்காக்கா*வின் நிக்காஹ்** வுக்காக கண்களில் எண்ணெயை ஊற்றிக் கொண்டு அமர்ந்திருக்கும் ஆயிஷாவுக்கு இது எப்படிப்பட்டதொரு ஆச்சரியமாக இருக்கும்! நான் வழிவிட்டுக் கொடுக்காததினால் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கும் பீராலுக்குக்கூட ஒரு மெய் சிலிர்ப்புடன் இது முடிந்துவிடும் அல்லவா! இல்லையென்றாலும் அவர்கள் என் விஷயத்தில் தனிப்பட்ட மோகங்களையும் வேகங்களையும் காணாமலாவது இருப்பார்கள்.

இளமையில் உம்மாவும் வாப்பாவும் இறந்தபின் நான்தானே அவர்களுக்கு எல்லாமாக இருந்து வளர்த்துக்கொண்டு வந்தேன். குழந்தைப் பருவத்தில் நாங்கள் அனாதைகள் என்னும் குறையை அனுபவிக்க ஊரார்கள் சம்மதிக்கவில்லை. முஸ்லியார் மடத்தில் இந்த பீத்தான் மாமுட்டி, அவர்களுக்கு எப்போதும் நல்லவனாகவும் நம்பிக்கையுள்ளவனாகவும் இருந்துள்ளான். வளர்ந்தபின் அடிதடியில் இறங்கியபோது எல்லா விஷயங்களுக்குமே இந்த பீத்தான் மாமுட்டிதான் முக்கியமாக தேவைப்பட்டுள்ளான்.

சாதாரணமானவர்களால் மறக்கமுடியாத விஷயங்கள் என்றால் சொல்லவும் வேண்டாம். வேற்று கிராமத்தவர்களுடன் கடலில் தகராறு மற்பட்டுவிட்டால் அடிதடியில் இறங்குவதற்கும், கடலில் மக்கள் காணாமல் போய்விட்டால் தேடிச் செல்வதற்கும் என எல்லாவற்றுக்குமே இவன்தான் முக்கியம்.

அசாதாரணமானதொரு இடத்தில் நிற்கும் எனக்கு நிக்கா விஷயத்திலும் ஒரு விசேஷத்தன்மை வேண்டுமல்லவா? இதோ கொண்டு வந்திருக்கிறேன். கேள்விப்படாத ஊரிலிருந்து இதுவரையில் காணாத அழகான ஒரு குரேஷியை...!

உணர்ச்சிக் குழம்புகளில் ஆனந்தத்தின் மத்தாப்புகள் எரிந்து எரிந்து அவ்வொளியிலேயே கடைத்தெருவை அடைந்ததை மாமுட்டி அறியவில்லை.

திடீரென்று கண்களைத் திறந்து நோக்கியபோது சுருங்கி முழுமையடைந்துள்ள கடைத் தெருக்களில் அரை மூச்சைப் போல் நிசப்தம்

---

* தமையன் ; ** திருமணம்

குலைந்து இருந்தது. நிர்வாணப் பாதங்களுடன் கார்த்தியும் மாமுட்டியும் வீதிகளில் மேற்கு நோக்கி நடந்து நெடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

மாமுட்டியைத் தெரியாதவர்கள் பொன்னாலி கடைத் தெருவிலேயே யாரும் இருக்கமாட்டார்கள் என்பது உறுதி. ஆனால் ஒரு பெண்ணோடு சேர்ந்து வரும் தன்னை ஆச்சரியத்துடன் வரவேற்க யார் யாரை எல்லாமோ மாமுட்டி எதிர்பார்க்கிறான்.

உச்சந்தலையில் மறைந்துள்ள உயிரைப் போல் சலனத்தின் புலப் படாத தன்மை அவனை திக்குமுக்காட வைக்கவில்லை. அதற்குப் பதில் தான் பார்ப்பது உண்மைதானா எனும் சந்தேகத்தைத்தான் ஏற் படுத்தியது. கடைத் திண்ணையிலும், ஜன்னல் வெளியிலும் தென் படும் முகங்களிலிருந்து என்னவெல்லாமோ உதிர்ந்துகொண்டிருக் கின்றன. எல்லா இடங்களிலும் முற்றிலும் அந்நியத் தன்மை.

சலனமற்ற சிற்பங்களைப்போல் சாலையின் இருபக்கமும் உறைந்து போன மனிதர்களை இளக வைப்பதற்காக மாமுட்டி கைகளை உயர்த்தினான். மனத்தை உலுக்கி, நேசத்தை வெளிப்படுத்தினாலும் சத்தம் என்னவோ எழும்பவில்லை.

'அடேய் சுலைமான், ஆலி முகம்மது, உங்களுக்கெல்லாம் என்னைத் தெரியலையாடா!' அவர்களையெல்லாம் இவ்வாறு கூப்பிட்டு அலறவேண்டும் என ஆவல்பட்டாலும் தனக்குள்ளேயுள்ள பலம் எங்கெங்கெல்லாமோ பிளந்து சிதறுகின்றன. இரு காதுகளிலும் முக்குளியிட்டு முழங்கும் சொல்லொண்ணாத செவிட்டுத் தன்மை. காதல்களுக்கு அப்பாலுள்ள கடலின் ஆரவாரம்கூட தலையில் ஏறவில்லை. இதயமற்ற வீழ்ச்சியில் பெரும் வரிகளாக கடல் அலைகளும் கெட்டிப்பட்டிருக்கின்றன.

மாணிக்கத்தைப் போன்றுள்ள மிக அபூர்வமான பெண்ணை சுமந்து கொண்டு ஆற்றைக் கடந்துவரும் தன்னை வரவேற்பது ஊரின் எதிர்ப்புத் தன்மையாகி விடுமோ? முனைகளும் முள்களும் உடைந்து, பற்கள் முளைத்த இயற்கைக்குக்கூட மாறுபட்ட உணர்வு வந்திருக்கிறது. இடது புறத்தில் நடந்துவரும் கார்த்தியின் கந்த வளையத்தை விலக்கி விட்டால் தான் முற்றிலும் அநாதையாகி விடுவோமோ என்றுகூட ஒரு நிமிஷம் மாமுட்டிக்குத் தோன்றியது. அவன் தன்னை அறியாமலேயே அவளுடன் சேர்ந்து நடந்தான். அவ்வூரிலேயே பயில்வானாக இருந்த தன் உடல் தசைகளை நினைத்து தைரியத்தை மீட்டுக் கொள்ள

முயற்சித்தாலும் என்னவோ ஓர் இடைஞ்சல் தன் பலத்தை நழுவ விட்டிருக்கிறது.

முஸலியாரகம் வீட்டின் வாயில் தூணில் அமர்ந்திருந்த இரண்டு காகங்கள் இடைவெளியில்லாமல் மெதுவாகக் கரைந்து கொண்டிருந்தன. ஒருவரோடு ஒருவர் இணைந்தவர்களாக ஆணும் பெண்ணும் உள்ளே நுழைந்த அந்த வாயுவேகத்திலேயே அவை சிறகடித்து காணாமல் போயின.

மாமுட்டி திரும்பிப் பார்த்தபோது தென்புறப் படிக்கட்டில் பயந்துபோய் தயங்கும் கார்த்தியின் கால் விரல்கள். அவனுடைய பார்வைக் கோணத்திலிருந்து பலம் பெற்றதுபோல் அவள் திடீரென்று அசைந்தாள். வெண்ணெய் கற்கள் பாவிய வராந்தா தரைமேல் அவள் ஏறி வந்தாள். கண்ணாடிக் கூண்டின் உள்ளே நிறைந்து நிற்கும் 'கஅபா'* கல்லின் புகைப்படம். மக்காவிலும் மதினாவிலுமுள்ள மினார் கோபுரங்கள். எல்லாவற்றுக்கும் நடுவே வண்ணக் கதிர்களால் வரையப்பட்ட பெரிய அரபி எழுத்துகள்.

மறைமுகமாக விளக்கமளிக்கும் அவற்றுக்குள் தன் தலையெழுத்தை நோக்குவதைப் போல் கார்த்தி உற்றுநோக்கினாள்.

ஒருவருக்குப் பின் ஒருவராக வீட்டின் உள்ளேயிருந்து பெண்களும் குழந்தைகளும் வெளியே வந்தனர். அவர்கள் மாமுட்டியையும் கார்த்தியையும் நடுவில் நிறுத்தி வட்டமிட்டு நிலைகொண்டனர். தங்கை ஆயிஷாவை நோக்கி மாமுட்டி பேசத் தொடங்கினான்.

''மொத்தச் சரக்கு வாங்கும்போதுதான் இவளும் கிடைச்சா! இனிமே இவ என்னோட மனைவி.''

ஆயிஷாவின் பெரிய கண்களிலிருந்து கருவிழிகள் உதிர்ந்து விட்டிருந்தன. அதனுடைய இடத்தில் விளிம்பு இல்லாத ஒரு குழல் உள்ளுக்குள் இறங்கி சூனியமாகக் கிடந்தது. எதிர்ப்பு காணாததைக் கவனித்து சகோதரியை அதிகநேரம் பார்த்துக் கொண்டிருக்க மாமுட்டிக்கு பொறுமை இல்லை. கண்டவுடனேயே கழுத்திலும் தோளிலும் தொங்கி மூடிக் கொள்ளும் மருமக்கள்களும் அந்நியரைப் போல் விலகியே நிற்கிறார்கள்.

---

* மக்காவிலுள்ளது. முஸ்லிம்கள் தொழும் இடம்.

மாமுட்டி எல்லோருடைய முகங்களையும் மாறிமாறி பார்த்தான். குழப்பம் எங்கோ நேர்ந்திருக்கிறது. முகங்களிலிருந்து முகத்துக்குத் தாவிக் கொண்டிருந்த அவனுடைய பார்வைகள் இறுதியில் மேலைக் கடலில் பாய்ந்து விழுந்தன. ஆச்சரியம். கடல் இப்போதும் நிச்சலன மாக படமெடுத்து ஆடுவது போல் நிலைத்து நிற்கிறது. கடற்காற்றின் சிறகுகள் முறிந்து சிதறி இறகுகளாகி மணல் பரப்பில் பரவிக் கிடக்கின்றன.

பொன்னானியின் நீரிலும் வளமையிலும் இதயம் நெகிழ்ந்தவனை அந்நியனாக்குவதற்கு இவ்வளவுதான் வேண்டும். எல்லோரும் சேர்ந்து ரகசியமாக உருவாக்கிய சதிதான் இது.

வராந்தாவின் உலாத்தலுக்கு வேகத்தை அதிகரித்த மாமுட்டியிடம் ஒரு குண்டு வெடித்துச் சிதறுவதற்கான மருந்துச் சேர்க்கைகள் முழுமை யாக சேரத் தொடங்கியிருந்தன. பொறுமையின் வாறுகள் அறுந்தன. அவன் திடீரென்று கர்ஜித்தான்.

''என்ன, உங்களுக்கு என்னைத் தெரியுமா? இல்லே, நாக்கு உள்ளே இழுத்துக் கிட்டதா?''

சத்தத்தின் கடுமையில் முஸலியார் மடம் வீட்டின் தரையிலிருந்து பொடி மணல் மேலேழும்பி வெளியே பரவியது.

அதே சமயத்தில் நுழைவு வாயிலில் தூண்களைத் தாண்டி பீரானும் அவரு முஸலியாரும் வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தார்கள். பீரானைக் கண்ட மாமுட்டி உணர்ச்சி வேகத்துடன் ஓடிச்சென்று அவன் தோள்களில் தன் கனமான கையால் அழுந்த பதித்துக் கேட்டான்.

''சொல்லு, பீரான். உனக்காவது என்னைத் தெரிகிறதா? கடைத் தெரு வில் யாருக்கும் என்னைத் தெரியலே. ஏன், பொன்னானி முழுவதுக் குமே என்னைத் தெரியலே.''

தன் சகோதரனும் சிநேகிதனும் ஒருவனே எனும் தன்மையில் பீரானை மாமுட்டி கடைசி துரும்பைப்போல உற்றுநோக்கினான்.

பல பக்கங்களிலும் நழுவிக்கொண்டிருந்த சிந்தனைகளை ஒருங் கிணைக்கும் அவசரத்திலிருந்தான் பீரான். மாமுட்டி காக்காவிடமுள்ள நேசிப்பை விட அதிகமாகவே விஷயங்களிலுள்ள தவறான அணுகு முறை குழப்பம்தான் அவன் மனம் முழுவதும் வியாபித்து இருந்தது.

பொன்னானி தெருக்கள் பாடத் தொடங்கியுள்ள திடுக்கிட வைக்கும் கதைகளை சூட்டோடு சூடாக தெரிந்துவரும் வழிதான் அது.

என்றாலும் ஓர் உள்ளுணர்வின் அழைப்பைப்போல் அவன் புலம்பினான் :

''மாமுட்டிக்கா, உங்களத் தெரியாத பீரானுண்டா?''

எலும்புகள் நொறுங்கும்படியான ஒரு தழுவலிலிருந்து மாமுட்டி பீரானை அமைதியாக விடுவித்தான். திருப்தியடையாமல் இடமும் வலமுமுள்ள தோள்களில் மீண்டும் மீண்டும் கட்டிப் பிடித்தான்.

மாமுட்டியின் முன்னால் எதிர்த்தாக்குதலின் கோட்டைகள் தகர்ந்து விழத் தொடங்கின. புத்தொளி வீசும் கருவிழிகளில் விளக்கு பிரகாசித்தது. ஆயிஷா முன்னே வந்தாள். கள்ளச் சிரிப்போடு குழந்தைகளும் ஒவ்வொருவராக மாமுட்டி காக்காவின் விரலையும் ஜிப்பாவையும் பிடித்துத் தொங்கியவாறு முகர்ந்து நோக்கினார்கள்.

ஒரேயடியாக ஸ்தம்பித்து நின்றிருந்த கடலுக்கு திடீரென்று உயிர் வந்தது. அது பழைய நிலைக்கே திரும்பிற்று. மணல் பரப்பில் சிதறியிருந்த இறகுகள் ஒன்றிணைந்து காற்றுப் பறவைகள் மீண்டும் பிறப்பெடுத்தன. பருவங்களில் கட்டுண்டு கிடந்த சுற்றுச்சூழல் மீண்டும் தன்னிலைக்கு வந்தது.

ஒரு நீண்ட பெருமூச்சு வெகு ஆழத்திலிருந்து வித்தியாசத்துடன் வெளியேறியதும் மாமுட்டி தன்னிலை பெற்றான். கார்த்தி சிரித்ததும் பொன்னானி கடைத்தெருவில் உச்சி வெயில் சட்டென்று கருத்து மங்கியது. துவளாத விசாரணைகளும், விளக்கங்களுமாக முஸ்லியார் வீட்டில் உள்ளவர்களெல்லாம் மாமுட்டியைச் சூழ்ந்தார்கள்.

இழந்தவைகளெல்லாம் திரும்பவும் கிடைத்த அவன் மனத்தில் மீண்டும் சில சந்தேகங்கள் மிச்சமாக நின்றிருந்தன. தொட்டாலும் உணரமுடியாத விதத்தில் நேரிடையானதொரு குளிர்ச்சி ஆயிஷாவின் முகத்தில் மிச்சமாக நிற்கிறதோ? பீரானின் கண்களில் எப்போதும் எரியும் தீபங்களுக்கு பிரகாசம் குறைந்திருக்கிறதோ? அல்லது கார்த்தியினுள் எரியும் சூரியனில் இவை எல்லாமும் ஒளிமங்கித் தோன்றுகிறதோ?

கார்த்திக்கு 'கலிமா'* சொல்லி அங்கி அணிவிக்கும் காரியத்தைப் பற்றி மிகவும் உற்சாகத்துடன்தான் மாமுட்டி அவரு முஸலியாருடன் பேசினான். முஸலியாரகம் வீட்டின் நண்பரும் நலன் விரும்பியுமான அவரு முஸலியார்தான் அவ்வகைக் காரியங்களில் உபதேசம் பெறுவதற்கான உகந்த மனிதர்.

ஈமான் பள்ளிவாசலில் 'பாங்' கொடுப்பதும் கடைத் தெரு மாப்பிளாக்களின் ஆன்மீகக் காரியங்களுக்கு தலைமை தாங்குவதும் அவர்தான்.

வெகுவான மன எழுச்சியோடு அமர்ந்திருக்கும் மாமுட்டியிடம் தயங்கித் தயங்கி மரியாதையுடன் அவர் காரியங்களைப் பற்றி பேசினார். கலிமா சொல்லி மார்க்கத்தில் சேருவதிலுள்ள மகத்துவத்தைப் பற்றியும், பதினோரு அத்தியாயங்களின் புனிதத்தைப் பற்றியும் விலாவாரியாகச் சொன்னார். நீளமாக நீண்டுகொண்டிருந்த வாக்கியங்கள் மெல்ல மெல்ல கனம் குறைந்து திடீரென்று மவுனமானார் முஸலியார்.

சொந்த மூலதாயத்தின் மடத்து வீடும் மாமுட்டியின் தறவாடான முஸலியாரகமும் மூன்று நான்கு தலைமுறைகளுக்கு முன்புதான் மார்க்கம் சேர்ந்திருந்தன. என்னவென்று சொல்லமுடியாத சில நினைவுகளின் திணறல் கார்த்தியின் முகத்தைக் கண்டதும் முஸலியாரிடம் எரிச்சலை எழுப்பியிருந்தது. இப்பிறவியில் அனுபவிக்காத விஷயங்கள்கூட மனிதனுள் நினைவுகளாக வஞ்சி இருக்குமோ?

இனம் புரியாததொரு சாயலின் நெருக்கம் தேடி பலமுறை அவன் கார்த்தியை நோக்கிக் கொண்டிருந்தான். கண்விழித்த உடனேயே, மீண்டும் எதையோ தேடி அவனுடைய பார்வைகள் அவளை அடைந்தன.

'கண்டேன் சிறைக்கல் பகவதி'யின் ஊர்வலத்துக்குப் போகும்போதுதான் இப்படியொரு கந்த சக்தினய முஸலியார் அனுபவித்திருந்தார். யானைமேல் இருந்த திடம்பு**க்கும் வெளிச்சப்பாடின்*** முகத்துக்கு மெல்லாம் எங்கேயோ பார்த்து மறந்த பழக்கத்தன்மை தோன்றும். சொல்லப்போனால் குழந்தைப் பருவத்தில் கூட அவனை யாரும்

---

* முஸ்லிம்களின் பிரமாண வாக்கு. ** விக்கிரகம் ; *** சாமியாடி.

தாலப்பொலியையோ* பூரத்தையோ** காண்பதற்கு அழைத்துப் போனதில்லை.

''அல்லாஹு அக்பர்
அல்ஹந்திலுள்ளா...''

முஸலியார் சட்டென மனத்தை ஒதுக்கிவிட்டு உணர்வைத் தோண்டி எடுத்தார். இரட்டை எண்ணங்கள் அனைத்தையும் அல்லாஹ்வில் அர்ப்பணித்துவிட்டு ஆத்மாவைச் சுத்தமாக்கினார். மறுநாளே கார்த்தியை மார்க்கம் சேர்ப்பதற்கான வாக்கை உறுதிப்படுத்தி முஸலியாரகம் வீட்டிலிருந்து விடைபெற்றார்.

சில நாள்கள் வரையில் முஸலியாரகம் வீட்டின் படுக்கையறையிலேயே மாமுட்டி பொழுதைக் கழித்தான். மாறிமாறி வரும் இரவுக்கும் பகலுக்கும் ஒரேமாதிரியான நிறம்தான் என்று கார்த்திக்கும் தோன்றத் தொடங்கியது. துளித்துளியாக உருகி ஒழுகிய ஆரஞ்சு நிறம் எல்லா இடத்திலும் பரவி இருந்தது. சுற்றுச் சூழலிலுள்ள ஒவ்வொரு அணுவிலும் மாமுட்டியின் வாசனையும் வியர்வையும் கலந்து கிடந்தன. அவை மீண்டும் மீண்டும் தன்னுள் இறங்குவதை கார்த்தி விநம்பி ஏற்றாள். தன் சொந்த உடலிலும்கூட அவள் மாமுட்டியை முகர்ந்தாள். அவனுடைய உடலின் மேல்தோல்களும் வறண்ட ரோமங்களும் பார்த்தறியாத ஒரு துளிகூட அவளுடைய உடம்பில் இல்லை என்பதாகி விட்டது.

மீண்டும் மீண்டும் ஏற்பட்ட தாம்பத்திய உறவில் அவளுடைய இருப்பேகூட ஆத்மாவைத் தவிர மற்றவை கூடுபோல்தான் - அவளுக்கு பல சமயங்களிலும் அனுபவப்பட்டுக் கொண்டிருந்தது. மனத்திலுடையதும் எண்ணத்திலுடையதுமான பலுவை தாங்க முடியாமல் மிக லாகவமாக குதிக்கும் நிலைதான்.

ஆணாதிக்கத்தின் மிதியலில் எல்லாவற்றையும் அளித்துவிட்டு இடிந்து சோர்வுறும்போது மரணத்துக்குப் பின்னுள்ள உடல்நிலையும் இப்படித்தான் இருக்குமோ என்று கார்த்தி கற்பனை செய்துகொண்டாள். என்றாலும் அந்த உடல்நிலைக்கு ஆவேசத்தின் மத்தாப்புகள் இல்லை.

---

* அலங்கரித்த தட்டுக்களில் தீபமேந்தி பெண்கள் வணங்கும் சடங்கு; ** பூரம் திருவிழா.

எதார்த்தத்திலுள்ள வாழ்க்கையைவிட ஜீவிதத்தைப் பற்றிய கற்பனை களுக்குத்தான் வண்ணமும் மதிப்பும் அதிகம் உண்டாகும்.

இதற்குள் கார்த்தி கலிமா சொல்லி, பதினோரு அத்தியாயங்களையும் படித்து, முழங்கை வரையில் நீளமுள்ள அங்கிகளில் அகப்பட்டிருந் தாள். நேரா நேரத்துக்கான தொழுகைக்கும் ஆயிஷா அவளை நினைவு படுத்தினாள். ஸித்தாரா எனும் புதியதொரு பெயரும் அவளுக்கு பதியப்பட்டு கிடைத்தது.

ஏழாவது நாள் இரண்டு மூன்று தலைக் கட்டுக்காரர்கள் மாமுட்டியைத் தேடி வீட்டுக்கு வந்தார்கள். சில வியாபார விஷயங்களை சமாதானம் செய்வதற்காக சில நாள்களாகவே அவர்கள் அவனைத் தேடிக் கொண்டிருந்தார்களாம். மாமுட்டியின் நண்பனும் கூட்டாளியுமாக இருந்த கோழித்தரை அப்துல் ரஹ்மான்தான் அந்த தலைக்கட்டுக் காரர்களின் தலைவன்.

''என்ன, புதுப்பொண்ணோடு சதா சர்வகாலமும் அடைபட்டு விட்டாயோ?''

அப்துல் ரஹ்மான்தான் மாமுட்டியை கேலியுடன் கேட்டான். சொந்தக் கடைக்கும் வியாபாரத்துக்கும் அப்பால் மற்றவர்களின் விஷயங்களுக் கும் மாமுட்டி போக வேண்டியதாக இருக்கும். அதுவும் வெள்ளைக் காரனுடனான பேச்சு வார்த்தை என்றால் சொல்லவும் வேண்டாம். கண்டிப்பாக, பொன்னானி மாப்பிளாக்கள் தங்கள் பக்கத்திலிருந்து துருப்புச் சீட்டாக அவனைத்தான் இறக்கவேண்டும். அதற்கு அதற்கே யுரியதான பலனும் கிடைக்கும். எந்தவொரு வெள்ளைக்காரன் முன்னா லும் நிமிர்ந்து நிற்கும் கம்பீரம். பொன்னிற நிறமும், உயிர்ப்புடைய பேச்சும் எல்லாம் சேர்ந்து மாமுட்டி யாரிடமும் சோபிப்பான். போதாத தற்கு அரைகுறை ஆங்கிலமாக இருந்தாலும் வெள்ளைக்காரனிடம் அதை கூச்சமில்லாமல் தட்டி விடுவான். இன்னும் சொல்லப்போனால் ஆங்கிலமென்னும் நிலையில் மாமுட்டி மலையாளத்திலேயே சொன்னாலும் வெள்ளைக்காரனுக்கு அது புரியவும் செய்யும்.

சாவக்காட்டில் ஒரு விஷயத்தைப் பேசி முடிப்பதற்காகத்தான் மாமுட்டியை அழைத்துச் செல்வதற்கு அப்துல் ரஹ்மான் வந்திருக் கிறான். எதற்கும் துள்ளிப் புறப்படும் சுபாவம் உள்ளவன் என்றாலும் அன்றைய தினத்தில் அவன் அவர்களிடமிருந்து விடுபடுவதற்குத்தான்

முயன்றான். ஆனால், அப்துல் ரஹ்மானும் கூட்டாளிகளும் விடுவ தாக இல்லை.

இனி தப்பிக்க முடியாது என்று புரிந்துகொண்டதும்தான் உள்ளே சென்று கண்களாலேயே கார்த்தியிடமும், பாசமிக்க ஆயிஷாவிடமும் விடைபெற்றான். கைலியை மடித்துக் கட்டிக்கொண்டு முஸ்லியார்கம் வீட்டின் வாசல் தூண்களை தாண்டினான்.

இடையிடையே தெளிந்துவரும் உணர்வின் துளிகளை சேகரித்துக் கொண்டு மாமுட்டி இல்லாமல் முதன் முதலாக அன்றிரவு நன்றாகத் தூங்கினாள் கார்த்தி. மறுநாள் உப்பிய கண் இமைகளுடன் முஸ்லியாரகம் வீட்டில் இன்னும் பார்க்காத பகுதிகளை பரிசோதித்து நடந்தாள்.

ஆணும் பெண்ணுமாக உள்ள ஆயிஷாவின் ஆறு குழந்தைகளின் முகச்சாடைகளை அன்றுதான் அவள் முதன் முதலாகப் புரிந்து கொண்டாள். அவ்வளவு நாள்களாகவும் தான் எப்படி இருந்தோம் என்று எழுத்து வடிவப் பொருளில் சொல்வதானால், படுக்கை யறையிலல்லவா இருந்திருக்கிறோம்!

கார்த்தி உற்றுக் கவனித்ததும் அக்குழந்தைகள் வெட்கப்பட்டு ஒளிந்துகொண்டார்கள். பலவகை கண்ணாமூச்சி விளையாட்டு களுடன் வெளிப்பட்டு அவளுடைய கவனத்தை மேலும் மேலும் பிடித்துக்கொள்ளவும் சிணுங்கினார்கள்.

சில தினங்களுக்குப் பின் தன்னுள் சிந்தனைகளும் நினைவுகளும் உருவம் கொள்வதும் கூட உயிரணுக்கள் இணைவதுபோல்தான் என்று கார்த்தி ரகசியமாக அனுபவிக்கத் தொடங்கிக்கொண்டு இருந்தாள்.

அவள் இப்போது மேலே புல்லாரக் தறவாட்டு கார்த்தியாக மாறி விட்டிருந்தாள்

இதயத்துடிப்புகளின் வெளிப்பாட்டு கணக்காக, உணர்ச்சி எல்லை களைத் தொடும் வகையில் அந்தத் தறவாடின் மங்கிய உள்ளறைகளில் நடுங்கியவாறு நடக்கிறேன். ஆயிஷாவின் குழந்தைகளை நோக்கிக் கொண்டிருக்கும்போதும் என் கண்முன்னே தெளிந்து வருவது நீண்டு கிடக்கும் இடைகழிகளும் பத்தாயப்புரையும் குளக்கரைக்குப் போகும் பாதையோரத்திலுள்ள மந்தாரைக் கூட்டங்களும்தான்.

எல்லாவற்றுக்கும் மேலாக சூரிய ஒளியைப் போல் பரந்து கிடக்கும் சங்கு மாமனின் முகபிம்பத்தையும்தான். தறவாட்டில் வாழ்ந்திருந்த காலத்தில் இப்படி எதுவும் இத்தனை நுட்பத் தன்மையிலும் தெளிந்த முறையிலும் அங்குள்ள ஒவ்வொரு மூலையையும் நான் பார்த்திருக்க வில்லை. அதனால், அவற்றில் சொல்லவொண்ணாத மனத்தயக்கமும் புறக்கணிப்புமே தான் இருந்தன. ஒரு விஷயம் மட்டும் இப்போது சந்தேகமில்லாமல் புலப்படுகிறது. மேலே புல்லாரையிலுள்ள கல்லும் மண்ணும் சுற்றுப் புறமுமெல்லாம் வெறும் ஸ்தூல வடிவமாக இருக்கவில்லை. என்னுடைய உணர்ச்சிப் படைப்பிலுள்ள தெய்வீகச் சேர்க்கையாகத்தான் இருக்கிறன.

அதோ, என்னுடைய உள்காட்சிகள் மனோகரமாக நகர்வது தறவாட்டு வீட்டிலுள்ள மாடியின் உட்புறத்துக்குத்தான். கதவைப் பலமாகத் தள்ளித் திறந்ததும், தீப்பற்றும் முடிக்கற்றைகளுடன் பகவதி சுற்றித் திரிவதுதான் புலப்பட்டது. தாகத்துடனான உதடுகளின் மேல் கோரைப் பற்களைப் பதித்து கோபத்தையும் துக்கத்தையும் வெளிப் படுத்தும் முகம்தான் தெரிந்தது. தறவாட்டில் இருந்த சமயத்தில்கூட இத்தனை தெளிவாக நான் பகவதியைக் கண்டதில்லை. அவளுடைய தொங்கும் முடியிலிருந்து பறந்த அக்னி மேலே புல்லாரத் தறவாட்டுக் கும் பரவி தீ பிடித்திருக்கிறது. தீக்குண்டத்திலிருந்து அக்னி சொரூபங் களாகி ஏராளமானோர் வெளியேறி பாய்ந்தோடுகின்றனர். ஒரு சூரியனையே முழுமையாக உட்கொண்டு பழுத்து வீங்கியிருக்கும் தலை மண்டையுடன் சங்குமேனன். உலர்ந்து வறண்ட கண்களுடன் அவனுக்குப் பின்னால் பாட்டி. கொப்புளம் எழும்பிய முகத்தோடு அம்மாவும், அலறி அடித்தவாறு அம்மாவும்.

இல்லை. முடியவில்லை. இன்னும் யாரெல்லாமோ துள்ளிக் குதித் தோடுகின்றனர். வம்சப் பரம்பரைகளின் அடுக்குகளாக இன்னும் எத்தனையோ ஆத்மாக்கள் தறவாட்டில் வசித்துள்ளன என்று இப்போதுதான் தெரிகிறது. தீப்பிடித்து அலறி ஓடும் ஒவ்வொரு ஆத்மாவையும் நான் எண்ணுவதற்கு முயன்றேன். அக்னி வடுக்கள் உண்டென்றாலும் அவர்களில் ஆண் பெண்களின் வித்தியாசத்தை நன்றாக அடையாளம் காணமுடிந்தது.

அக்னிச் சிவப்பை நோக்கி கண்கள் குவிந்து இருந்தபோது என் அருகி லும் வெப்பம் உணரப்பட்டது. திரும்பி நோக்கியபோது எனக்குள்ளே யும் தீப்பிடித்தது. ஓர் அக்னி சொரூபம் அதிலிருந்து ஓடித் தப்பிக்கிறது.

பொறுக்கமுடியாததொரு நிலையில் கார்த்தி படுக்கை அறை/யில் இருந்து வெளியே வந்தாள். இந்த இருப்பிலேயே மேலும் இருந்தால் தன்னுடைய பிரக்ஞையே வெடித்துச் சிதறும் என்று தோன்றியது. உணர்வோட்டங்களிலுள்ள சித்திர வியூகங்/களைத் தடுப்பதற்கு அவள் ஏதாவது செய்துகொண்டிருக்க வேண்டும்.

முஸலியாரகம் வீட்டின் உட்புறங்களில் சிறிது நேரம் தேடித் திரிந்தாள். என்ன வேண்டும் என்று யாதொரு பிடிப்பும் கிடைக்க வில்லை. கடைசியில் ஒரு மூலையில் கிடந்த மிகக் கனமானதொரு இரும்புப் பெட்டியைத் தூக்கி திசைமாற்றி வைத்தாள். தன் ஆயுளிலேயே இவ்வளவு கனமானதொரு பொருளை கார்த்தி தூக்கியது இதுதான் முதன்முறையாகும். கைகால்களிலுள்ள தசை களை சுருக்கி வளைத்து பரிதாபமாக வியர்வைத் துளிகளை வழிய விட்டாள் அவள். எலும்புகள் வரை நொந்து துடித்த அந்தக் கடின பிரயத்தனத்திலும் ஆசுவாசம்தான் தோன்றியது.

அடுக்களையை அடைந்ததும் அங்கே கிடக்கும் அம்மிக்கல்லை தூக்கி இடம் மாற்றுவதற்கான உற்சாகம்! மிகப் பளுவாக தோன்றியது. ஆயிஷாவும் குழந்தைகளும் பார்க்கவில்லை என்னும் உறுதியை வரவழைத்துக்கொண்டு பின் அம்மிக்கல்லின் ஒரு மூலையைப் பிடித்து இழுத்துப் பார்த்தாள். எவ்வளவு முயன்றும் ஓர் அங்குலம் கூட அது அசையவில்லை. வேதனையின் முனகல்களில் உடல் தளர்ந்து இருந்தாலும் மனம் விட்டபாடில்லை. இறுதியில் சர்வ சக்தியையும் பிரயோகித்து அதையும் நிறைவேற்றினாள்.

நினைவுகளில் பெருகி தலைக்குள் கனத்திருக்கும் ஏதோவொரு மனச்சுமையை இறக்கிவைக்க வேண்டுமென்று அவளுக்குத் தோன்றி யது. மதச் சம்பந்தமான ஒரு நிறைவேற்றுதலைப் போல் முஸலியாரகம் வீட்டில் சுமையாக இருக்கும் ஜடப் பொருள்களை அங்குமிங்குமாக எடுத்து மாற்றுவதற்கு அவள் மூச்சு வாங்க நடந்தாள். அதனுடைய ஆயாசத் தளர்வில் தான் நினைத்ததை நிறைவேற்றுவதற்காக சிறு வழி கிடைத்தாலும், தலைக்குள்ளே மீண்டும் பளுவான சேகரிப்புகள் சேர்ந்துகொண்டே இருந்தன. இன்னுமொரு தனித்துவம் தன்னுள்ளே வேறுபட்டு மாறுவதை புகைப்படலத்தைப் போல் கார்த்தி அறிந்தாள்.

முற்றிலும் களைப்படைந்துவிட்ட அவள் படுக்கை அறையில் கவிழ்ந்து படுத்தாள். மனத்திலுள்ள சுமையை உடலுழைப்பின் மூலம் வெளிப்

படுத்தி பிராயச்சித்தம் தேட முடிவு செய்தாள். தலையில் கடிக்கும் பேன்களை வதம் செய்தவாறே அப்போதைக்கு தூங்க முயன்றாள். அவ்வகையில் மனத்தை மாற்றுந்தோறும் தலையில் பேன் கூண்டுகளின் குமிழிகள்தான் பெருகிக்கொண்டிருந்தன. மூளையின் உள்ளறைகளிலிருந்து பிறப்பெடுக்கும் சிறு உயிர்களைப் போல் அவை தலை முடிகளில் குதித்து விளையாடின. பிடுங்கியும் நசுக்கியும் கொன்றும் தீர்த்த பேன்களின் சவங்களை, கார்த்தி ஒரு பாக்கெட்டில் போட்டு யாரும் காணாத வகையில் முஸ்லியார்கம் வீட்டின் வெளிப்புறத்துக்கு அப்பால் கொண்டுபோய் அங்கேயே குழி தோண்டிப் புதைத்தாள்.

மாமுட்டி சாவக்காட்டுக்குப் போய் இரண்டு நாள்கள்தான் ஆகி இருந்தன. ஆனால், கார்த்தி அனுபவித்ததோ இரண்டு யுகங்களாக இருந்தது. நினைவுகளையும் சிந்தனைகளையும் ஒதுக்கியவாறு கனவுலக வாசியைப் போல் அவள் முஸ்லியார்கம் வீட்டின் சுற்றுப் புறங்களில் அலைந்து திரிந்தாள்.

ஆயிஷாவுடனும் குழந்தைகளுடனும் நெருங்குவதற்கு அவளுக்கு ஆசை இல்லாமல் இல்லை. அதேபோல் அவர்களுக்கும் புதுப் பெண்ணுடன் சேர்ந்துகொள்ள மோகம் உண்டாகியிருந்தது. ஆனால் கதவு இல்லாத குகைக்குள் செல்வதுபோல் கார்த்தியின் முகத்தை நோக்கும்போது அவர்கள் பயந்து விடுகிறார்கள். அவள் எதாவது பேசும்போதும், தேவைப்படும்போதும் அவளின் அபாரமானதொரு மேதாவித்தனத்துக்கு அடிமைப்பட்டு வாயைப் பிளந்து கொண்டு ஒன்றும் செய்யமுடியாதவர்களாகி விடுகிறார்கள்.

விளையாடித் திரியும் குழந்தைகளில் ஒருத்தியாகத்தான் அவர்களின் அம்மாவான ஆயிஷாவும் இருந்தாள். கண்டும் காணாமலும் ஆதரவோடும் கார்த்தியைக் காணும்போது அவளும் பிரத்யேகமான இடைவெளியை அனுசரித்தாள்.

முஸ்லியார்கம் பறம்பிலுள்ள செடிப் புதர்களின் ஊடாக ஒரு நாள் மாலையில் கார்த்தி நடந்துகொண்டிருந்தாள். எதையோ மிதித்ததாகத் தோன்றியதும் மிதிப்பட்டதிடமிருந்து திடீரென ஒரு கூச்சல் சத்தம். அந்தச் சத்தம் மனிதனுடையதா, எதாவது ஜந்துவினுடையதா என்னும் விஷயம் ஒருபுறம் இருந்தாலும் அந்த அழுகையின் சுயரூபம் அதன் சத்த அலைகளால் உண்டாக்கப்பட்டதா என்றுகூட உறுதிப்

படுத்த முடியவில்லை. அந்த அளவுக்கு அது அசாதாரண தன்மை யாகத்தான் இருந்தது.

புதர்களுக்கிடையே கையை விட்டு தான் மிதித்த பொருளை, ஒரு பிறந்த சிசுவைத் தொடும் லாவகத்துடன் வெளியே எடுத்தபோது, மண் புற்றால் மூடப்பட்டிருக்கும் ஒரு கருங்கல் சிலை!

கேட்ட குரலின் விசேஷத்தைப் பற்றிய அற்புதம் கார்த்தியிடம் மறைந்தது. விரல் முனையால் மண்புற்றை சுரண்டித் துடைத்தாள். நாடித் துடிப்புகளைகூட அதிகரிப்பதற்கான வீரியத்துடன் ஒரு தேவி விக்கிரகம்!

ஓங்கி உயர்ந்து நிற்கும் ரவுத்திர குணத்திலும் நேசத்தின் வெகுதூர மாற்றங்கள். உருட்டி விழிக்கும் முட்டைக் கண்களில் தீர்ப்புகளின் அபார கணிப்புத் தன்மை. வேண்டுமா வேண்டாமா எனும் சந்தேகங் கள் ஒன்றும் கார்த்தியை சிறிதுகூட தொட்டுப் பார்க்கவில்லை. தன் வீட்டு நினைவோடும் காளி விக்கிரகத்துடனும் அவள் மாப்பிளா மாளிகைக்குள் வந்தாள்.

யாரும் கவனிக்காத வேளையில் முஸ்லியாரகம் வீட்டின் மூலைகளில் ஒன்றில் தேவி விக்கிரகத்தை ஸ்தாபித்துவிட்டாலும் அதனுடைய இருப்பு என்னவோ வேகமாகத்தான் இருந்தது. யாரோ உள்ளே வந்திருப்பதாக விக்கிரகம் வந்ததிலிருந்தே ஆயிஷாவுக்குத் தோன்றத் தொடங்கியது. அடுத்த வீட்டு பீபாத்துவையோ, வெளியே விளையாடச் சென்ற குழந்தைகளையோ, மறைந்து கடந்து சென்ற நாயையோ, வேறு எதையோ தேடுவதுபோல்தான் அவள் அறைக்கு அறை தேடிச் சுற்றி வந்தாள்.

''குஞ்ஞுவி, ருக்கியா. அங்கே யாரு உள்ளே போனது?''

அவள் இடையிடையே குழந்தைகளை அழைத்து விசாரித்தாள். யாரையும் கண்டுபிடிக்க முடியவில்லை என்றாலும் புலப்படாத எதுவோ தங்களுடைய வீட்டில் மட்டுமல்ல, மனத்திலும் புகுந்து விட்டது என்று ஆயிஷாவால் உணர முடிந்தது. கார்த்தியின் வருகை முதலே எதிர்க்கமுடியாத உணர்வுகள் அவளின் உட்புறங்களில் அணிவகுப்பு நடத்திக்கொண்டிருந்தன. முஸலியாரகம் வீட்டின் மூலை முடுக்குகள் அசாதாரணமான வெளிப்பாடுகளுடன் பிரதி பலித்துக் கொண்டிருந்தன.

வழக்கமாகக் கையாண்டு கொண்டிருந்த பத்தாயத்துக்கு உள்ளே இருந்துதான் பெரியதொரு மண் குடமும், நாக உருவங்களும், சில செப்புத் தகடுகளும் கண்டெடுக்கப்பட்டன. இப்படிச் சில பொருள்கள் அதனுள்ளே இருந்ததை யாரும் இதுவரையில் கவனிக்கவே இல்லை. என்ன செய்வது என்று தெரியாமல் ஆயிஷாவும் குழந்தைகளும் சேர்ந்து அவற்றையெல்லாம் தூக்கிச் சென்று சேமிப்பு அறையின் மூலையில் வைத்தபின், அந்த அறையின் கதவை எவ்வளவுதான் முயற்சி செய்து சாத்தினாலும் தானே திறந்து கொள்ளும் நிலையாகிவிட்டது.

'இந்தப் பொருள்களெல்லாம் எப்படி இங்கே வந்தது?' எனும் கார்த்தியின் கேள்வி ஆயிஷாவிடம் திடுக்கிட வைக்கும் புரிதல்களை உண்டாக்கியது. பிறந்து வளர்ந்த இந்த வீட்டின் உள்ளேயே அந்நிய மான பலவும் வைக்கப்பட்டுள்ளன என்பது அவளுக்கு சந்தேகத்தை எற்படுத்தியது. குழந்தை விளையாட்டையும், குதூகலச் சிரிப்பையும் இழந்து குழப்பமான எண்ணங்களில் மூழ்கிய ஆயிஷா மவுனியானாள்.

பூத்துதிர்ந்த தன்னுடைய இளம்பருவ நினைவுகளிலிருந்து பெரியம்மாவைப் பற்றிய சில சித்திரங்கள் அவளுக்கு மெல்ல மெல்ல தெளியத் தொடங்கின. வெறும் எலும்புக்கூடும் அதில் ஒட்டியிருந்த சில நீலநிற நரம்புகளுமாக இருந்தது இறுதிகாலத்திய பெரியம்மாவின் உருவம். ஒரு துடிப்பாக மட்டுமே வீட்டில் நடமாடிக்கொண்டிருந்த அவர் சில பிரத்யேக இடங்களை மிதிக்கவோ, அசுத்தம் செய்யவோ சம்மதித்ததில்லை.

சிலகாலமாகவே பல் தேய்ப்பதற்கும் வாயைக் கொப்பளித்துத் துப்புவதற்கும் அடுக்களை முற்றத்தில் ஒரு செங்கல் துண்டு பயன் பட்டுக் கொண்டு கிடந்தது. வராந்தாவிலிருந்து மிதித்து இறங்குபவர் களுக்கு தன் முதுகைக் காட்டுவதைத் தவிர மற்ற எந்தவொரு நிலைப்பாட்டுக்கும் அந்த கல்துண்டுக்கு இடமில்லை.

''அய்யோ, இது சித்ரோட*க் கல்லாச்சே.''

பார்த்த மாத்திரத்திலேயே கார்த்தி இப்படி எதிரொலித்ததும் அங்கு புதியதொரு பிரச்னை உற்பத்தியாயிற்று. அடுக்களை வராந்தாவி

---

* தெய்வக் கல்.

விருந்து கல்லை துள்ளி மிதித்து முற்றத்தில் இறங்குவதற்கு முயன்ற ருக்கியா மூக்கு அடிபட்டு கவிழ்ந்து விழுந்தாள். அந்த சித்ரோடக் கல் முகம் திரும்பி இடம் மாறிக் கிடந்தது. சித்ரோடக் கல்லில் தலை குப்புற விழுந்த இரண்டாவது நபர் சாமான்கள் வாங்கிவரும் கோயக்குட்டிதான்.

பல் தேய்த்து துப்புவதற்கும் மிதித்துத் தாண்டுவதற்கும் முடியாத ஓர் இடம்தான் அப்புறம் அந்தக் கல்லின் இடமாயிற்று. உயிர்ப் புள்ளதொரு பொருளைப் போல் நினைத்துதான் எல்லோரும் அதை வலமாக்கி ஒதுங்கி நடக்கத் தொடங்கினார்கள்.

அப்துல் ரஹ்மானோடு சேர்ந்து சாவக்காட்டுக்குப் போன மாமுட்டி நெருக்கடி மிக்க செயல்களில் மூழ்கியிருந்தான். வெளியூரிலிருந்து சாவக்காட்டுக்கு வந்துள்ள ஒரு சேட்டோடு தொடர்புகொள்ள வேண்டும். இந்தி மட்டுமே அறிந்த அவனுக்கு எந்த விதத்திலாவது விஷயங்களை சொல்லிப் புரியவைக்க வேண்டும். வியாபார உறவிலுள்ள தெளிவான அம்சங்களை இனம்பிரித்து ஒவ்வொன்றுக் கும் தனித்தனி ஒப்பந்தங்கள் போடவேண்டும். இதுதான் அவனுடைய முக்கியமான பணி.

இப்போது தொடங்கப் போவது, பொன்னானியில் ஆட்டப்படும் தேங்காய் எண்ணெயை முதன்முதலாக வெளிநாட்டுக்கு அனுப்பும் வியாபார உறவாகும். சந்தேகத்தை நிவர்த்தித்துக் கொள்ளவோ விவரம் அறிந்து கொள்ளவோ பழைய கூட்டாளிகள் யாரும் இப்போது இல்லை. புதியதொரு பாதையைத்தான் இதற்காக வெட்டித் திறக்கவேண்டும்.

மாமுட்டியும் அப்துல் ரஹ்மானும் கொப்பரை வியாபாரத்தின் ஒரே மண்டலத்திலேயே செயல்பட்டுக் கொண்டிருந்தாலும், இரண்டு பேரும் நெருங்கிய கூட்டாளிகளாகவும் இருந்தார்கள். புதிய உலகங்களை தேடிப் பிடிக்கும் அப்துல் ரஹ்மானின் பேராசைக்கு மாமுட்டி கப்பலோட்டியாக முன்னால் நிற்கவேண்டும். அப்துல் ரஹ்மான் எதையாவது சுட்டிக் காட்டினால்போதும், மாமுட்டி இடுப்பையும் தலையையும் ஆட்டி முறுக்கிக்கொண்டு துள்ளிப் புறப்பட்டு விடுவான். கையாலும் மெய்யாலும் செய்யவேண்டிய ஆரம்ப வியாபாரங்களில் எந்தவொரு தாத்பரியங்களும் மாமுட்டியை ஒதுக்கியதில்லை.

காரியங்கள் பாதிவரையில் தீர்ந்ததும் சாவக்காட்டிலிருந்து திரும்புவதற்கு மாமுட்டி தயாராகிக் கொண்டிருந்தான். அவனுடைய கை காலைப் பிடித்து மாமுட்டியை தடுத்து நிறுத்தினான் அப்துல் ரஹ்மான்.

''இன்னொரு நாளும் இருங்க பாயி. புதுப் பொண்ணு வீட்டில இருக்கிறதால இப்படிச் செய்யலாமா?''

புதுப்பெண் விஷயத்தைக் கூறி கேலி செய்ததும் மாமுட்டிக்கு முகமே சிவந்து விட்டது. முகத்திலும் மனத்திலும் சிவப்புக் கதிர்களை யணிந்து ஊருக்குத் திரும்பும் முதல் நாள் முழுவதும் சாவக்காட்டு கடைத் தெருவில் சுற்றித் திரிந்தான்.

சிறுவர்களின் சுறுசுறுப்போடு பெரியதொரு மனிதன் கடைத் தெருக்களில் வளைந்து நெளிந்து விளையாடுகிறான். கண்ணையும் கையையும் ஆட்டிக் காட்டி நடைபாதை வியாபாரிகள் மாமுட்டியை தங்களிடம் கவர்ந்தார்கள்.

புதுப்பெண்ணுக்காக நூற்றுக்கணக்கான பரிசுப் பொருள்களை அவன் தேர்ந்தெடுக்க வேண்டியதிருந்தது. பட்டு மூடாக்கையும், கண்ணாடி வளையல்களையும் தொட்டுத்தடவி நோக்கும்போது கார்த்தியின் உடலையே ஸ்பர்ஸித்ததுபோல் மாமுட்டி சிலிர்த்தான். எடுக்க எடுக்க திருப்திப்படாத வியாபாரங்கள்தான் அவனைச் சுற்றிலும் எழும்பின. கடைத்தெரு முழுவதையும் அப்படியே தூக்கிக் கொண்டுபோய் பொன்னானியில் குதித்தால் என்ன? பொறுமையிழந்த மாமுட்டி சில நிமிஷங்களில் அப்படியும் சிந்திக்காமல் இருந்ததில்லை.

முஸலியாரகம் வீட்டின் முற்றத்தில் நின்றால் அலறி ஆர்ப்பரிக்கும் பொன்னானி கடல் கண்முன்னால் தெரியும். வெகுதூரத்திலுள்ள ஒரு நீர்க் கோட்டிலிருந்து இழை எடுத்து சுருக்கம் நீக்கி முரட்டு கம்பளிக் கட்டுகளைப் போல் கடல் அலைகள் ஆர்ப்பரித்து வருவதும், கடற்கரையை அணைப்பதற்காக தம் உடலை வருத்தி அவை இணைவதும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஒவ்வொரு அலையும் மணல் மார்பகங்களை மோதி மூடும்போது கார்த்தியின் கண்களிலிருந்து இரண்டிரண்டு குருவிகள் திமிறிப் பறக்கின்றன. தூணில் சாய்ந்து நிற்கும் அவளுக்கு அலைகளின் பொறுமையின்மை மிகவும் அதிகரித்து விட்டதாகத் தோன்றியது.

மாமுட்டி இன்றைய இரவே திரும்பி வருவான் எனும் விவரங்களோ காரணங்களோ இல்லாமல் அன்றிரவையும் மன உறுதியுடன் கழித்துக்கொண்டிருந்தாள். வானத்திலும் கடலிலும் பார்வைகளை மேயவிட்டு, வீட்டு முற்றத்திலிருந்து வெளியே போகாமல் அவனை எதிர்பார்த்து நின்றாள் கார்த்தி.

அஸ்தமனச் சூரியனின் அந்திச் சிவப்பைப் பார்க்கும் போதெல்லாம் அவனுடைய சுடர்விடும் தன்மைகள் நிமிஷந்தோறும் மாறிக் கொண்டிருந்தன. அழகியைப் போன்றதொரு மேகபிம்பத்தில் இருந்து தங்கக் கதிர்கள் இற்று இற்று விழுகின்றன. பறந்து பரவும் பறவைக் கூட்டங்கள் வெள்ளி இழைகளாக பரிணமித்து ஓடுங்குகின்றன.

வாசல் தூண்களைத் தாண்டி மாமுட்டி வரும்போது கார்த்தியின் நீண்ட நயனங்கள் மேற்கே நீந்திக்கொண்டிருந்தன. பறம்பிலிருந்து பறித்தெடுத்த சில பூக்கள் அவள் கைகளில் எஞ்சியிருந்தன. மாமுட்டியைக் கண்டதும் பூக்களின் இதழ்களைச் சிதைத்து உட்குழல்களைப் பிரித்து கைகளில் வைத்து கசக்கத் தொடங்கினாள் அவள். சிவப்பு நீரைச் சொரியும் சிதைந்த பூக்கள் ஒவ்வொன்றாக கைகளிலிருந்து கீழே விழுந்தன. மாமுட்டி அவளை விட்டுவிட்டுச் சென்று இரவுகள் பல கடந்துவிட்டனவல்லவா!

பேசுவதற்கான வார்த்தைகள் கிடைக்காமல் என்ன செய்ய வேண்டும் என்று தெரியாமல் சிறு குழந்தையைப் போல் மாமுட்டி கார்த்திக்கு முன்னால் நின்று சுற்றினான். 'ஹாய், ஹாய்' எனும் விசில் சத்தங்களாக அவனுடைய மகிழ்ச்சி வெள்ளம் வெளியே வழிந்தது. கார்த்தி சத்தமில்லாமல் சிரித்ததும் அதலுடைய ஒலிக்கதிர்கள் கடல் அலைகளில் வெள்ளியாக உருகிற்று.

''உனக்குக் கொடுப்பதற்காகவே நான் பலதையும் கொண்டு வந்திருக்கிறேன் பார்.''

பெரியதொரு கட்டிலுடைய தங்க இழைகளை அறுத்துக் கொண்டே மாமுட்டி சொன்னான் :

''இது புத்தம் புதிய புடைவைகள். இது முகத்திரை, இது சேலை, சாந்து, கண்மை, கண்ணாடி அப்புறம் எல்லா லொட்டு லொடுக்கு சாமான்களும் இந்தப் பெட்டியில் உண்டு. வாசனை சோப்பும் கூட...

இதோ, இந்த சின்ன பாட்டிலைப் பார்த்தாயா? அரபி நாட்டுலேர்ந்து வந்த அத்தராக்கும். அதிகமாக பூசிக்காதே!''

மூச்சை இழுத்துக்கொள்ள ஒரு நிமிஷம் நிறுத்தியபோது அவளை உற்று நோக்கினான் மாமுட்டி. இப்போது அவள் கண்களில் பக்குவமடைந்த உயிர்ப்பு. அவன் திடீரென்று சோர்வடைந்த வனாகி கட்டுப்பாட்டின் அங்கிகளில் வலிந்து புகுந்தான். வார்த்தை களின் சிதறல் உதட்டின் தலைப்பிலிருந்து மார்பின் கருவறைக்குள் அமிழ்ந்து போயின.

''எங்கே போகிறோம்னுகூட சொல்லாம போன ஆளுதானே நான்? உன்னைப்போய் நான் விளையாட்டு பொம்மைகளை வைச்சு மிரட்டலாமா? இது என்னோட முட்டாள்தனமில்லாம வேற என்ன?''

அவளுடைய கண்களில் ஆராதனையின் தீபங்கள் உயர்ந்தன. அதி லிருந்து வற்றப்பட்ட பந்தம்போல் கார்த்தியின் முகம் ஒளிர்ந்தது.

''மேலே புல்லாரத் தறவாட்டில் உனக்குன்னு இருந்த எல்லாமும் இங்கும் வேணும். எந்தவொரு பொருளும் குறையக் கூடாது. உனக்கு அதெல்லாம் வேண்டாததாகவும் இருக்கலாம். ஆனாலும் உன்னை தூக்கி வந்தவனோட பிடிவாதம்தான் இது.''

மாமுட்டி மற்றுமொரு மூட்டையைப் பிரித்தபோது புத்தம் புதிய காசு மாலையும் தங்க வளையல்களும் மின்னின. இப்படிப்பட்ட ஆபரணங்களை அணிந்திருந்த கார்த்தியை ஒரு முறை அவன் பார்த்திருக்கிறான். குடும்ப வகையைச் சேர்ந்த பகவதி சேவைக்கு பூஜைசெய்ய பன்னியூர் கோயிலுக்குப் போகும் நேரத்தில். மேலே புல்லாரத் தறவாட்டின் சேமிப்பு அறையில் அமர்ந்திருந்தபோது பதிந்துவிட்ட அந்தப் பார்வை இப்போதும் அவன் மனத்தில் உள்ளது.

கார்த்தியின் அமைதித் தன்மைக்கு பெரும் சுழலில் அகப்பட்டதுபோல் சட்டென்று குழப்பம் ஏற்பட்டது. நினைவுகளின் உறைநிலைகளைப் போல் தன் முன்னால் கிடக்கும் ஆபரணங்களைத் தொடுவதற்கும் அவள் தயங்கினாள். பின்பு, மெல்ல மெல்ல கைவிரல்கள் நீண்டு வந்தன. இறந்துகிடக்கும் தந்தையின் நெற்றியை தொடுவதைப் போல் நடுங்கியவாறே அவற்றைத் தொட்டாள்.

''தறவாட்டுல இல்லாததுக்காகவா, நான் போய் வந்தேன்?''

வார்த்தைகளைத் தொடர்ந்து நீண்ட மவுனத்தில் அந்தக் கேள்வி அவளையே மீண்டும் ஆக்கிரமித்தது.

''உங்க தறவாட்டுல பழக்கப்பட்டது எதுவும் உனக்கு வேண்டாமா?''

மாமுட்டிதான் கேட்டான். வேண்டாம் என்று சொல்லக்கூடிய தைரியம் நீராவியாக மாறுவதை கார்த்தி அறிந்தே இருந்தாள். காசு மாலையிலும் தங்க வளையல்களிலும் தழுவிச் செல்லும் அவளுடைய கண்கள் என்னவோ ஒரு குறையைத் தேடுவதாகச் சந்தேகம் பிறந்தது.

''நீ அணியறதக்கு இன்னும் ஏதாவது பாக்கி இருக்கிறதா?''

''ம். இருக்கிறது.''

கார்த்தி உறுதியாகச் சொன்னாள்.

''என்னது அது?''

அவள் சத்தமிடவில்லை.

''எதுவாக இருந்தாலும் நான் நிறைவேத்தி தர்றேன். சொல்லு, என்னது அது?''

மாமுட்டியின் குரல் சிதறியது. அவன் கேள்வியை மீண்டும் கேட்டாலும் கார்த்தியின் உதடுகள் முணுமுணுக்க மட்டுமே செய்தது. என்றாலும், மனம் கேட்டுக்கொண்டே இருந்தது. இதயத்தில் அணியக்கூடிய தன்னுடைய தெய்வங்கள் எல்லாம் எங்கேயுள்ளன?

''பகவதி... தாயே, பகவதி...''

குரலை உயர்த்தி கேவினாள். அதோடு சேர்ந்து கடலின் சுழலிலிருந்து மீண்டு வருவதைப் போல் கார்த்தி வியர்த்துக் குளித்திருந்தாள். அவளுடைய கண்கள் முகத்திலிருந்து பிதுங்கி வெளியேறி குழப்பத்தோடு பறந்து சென்றன. மேலே புல்லரித் தறவாட்டிலுள்ள வடிவத்தைப் போல் ஆக மொத்தத்தில் தீப்பிழம்பாகிறாள் பகவதி.

பயந்துபோன மாமுட்டி சட்டென்று அவளைப் பிடித்துக் குலுக்கினான். அவளுடைய துக்கத்துக்கு காரணம் கண்ணீரின் ஈரமல்ல என்றும் அக்னியின் கதிர்கள்தானென்றும் தோன்றியது. கரங்களைப் பற்றி சமாதானப்படுத்திக் கொண்டிருந்தபோது மனைவியின் பெரு மூச்சுகளின் வெப்பத்தை மாமுட்டியின் உள்ளம் அறிந்தது.

பதினொன்று

அவரு முஸ்லியார் விழித்தெழுந்ததும் குழந்தைகளும் பேரப் பிள்ளைகளும் சூழ்ந்து நின்று சிரிப்பாய் சிரித்தார்கள்.

''என்ன நாய்ங்களே...?''

வழக்கமான 'கொஞ்சல் திட்டு'தல் முஸ்லியாரின் வாயிலிருந்து அனாவசியமாக வெளியே வந்தது. சிரிப்பில் கொஞ்சி குழையும் பிள்ளைகள் சொல்வது என்னவென்று அவருக்குச் சிறிதும் புரியவில்லை.

''நீங்க கொச்சுண்ணி தம்புரானா?''

''என்ன சொல்றீங்க?''

''பின்னென்ன, நீங்க கொச்சுண்ணி தம்புரான்னு சொல்லிக்கிட்டு முண்டைக் கோமணமா கட்டிக்கிட்டு தூக்கத்துல நடந்தீங்களே ஏன்?''

கேட்டுக்கொண்டிருந்தபோதே அவரு முஸ்லியாரின் உள்ளத்திலும் அப்படியொரு பெயர் எழும்பி வந்தது. மறதி என்னும் சகதிக் குழியிலிருந்து கிடைத்த நினைவின் கனகத்தைப்போல் அது கிடந்து மின்னுகிறது. ஒளிப் பரவலில் மனம் கூசினாலும் உணர்ச்சியின் குமிழிகள் பெருத்தபோது அவருடைய முப்பாட்டனின் பெயர்தானே அது என்று புரிந்தது.

குழந்தைகள் சொன்ன கதையை அனுசரித்து அவரு முஸ்லியார் உச்ச மயக்கத்திலிருந்து அடித்துப் பிடித்து எழுந்துகொண்டார். கிழிந்த துண்டை எடுத்து தோளில் வேட்டியைப் போல் போட்டுக்/

கொண்டார். இல்லாத கொம்பு மீசையை முறுக்கி மேலே வற்றினார். இடதுபுறமாக சுற்றிய முண்டுவை* வலது புறமாக மடித்து கீழ் மூலையை இடையில் பின்னோக்கிச் சுற்றி கீழ்ப்பாய்ச்சாக உடுத்தினார். இறுமாப்புடன் நான்கு முறை படுக்கையறையில் இங்குமங்குமாக நடந்தார். பின்பு வெளியே சென்று மடோலத்து** வீட்டின் சில மர்ம இடங்களில் தட்டிப் பார்த்தார். காதைப் பொருத்தி துடிப்புகளுக்காகக் காத்திருந்தார். பரிசோதித்த இடங்களிலெல்லாம் பெரிய கல்துண்டுகள் தரையிலோ சுவரிலோ பதிக்கப்பட்டிருந்தன.

பல நூற்றாண்டுகள் பழக்கமுள்ள தறவாட்டை இடித்துவிட்டு புதுப்பித்த மடோலத்து வீட்டுக்கே இப்போது நூற்றைம்பது வருஷத்திய பழக்கமுண்டு. அதனுடைய இந்த நிலைக்கும் நிலையற்ற தன்மைக்கும் குடும்பத் தலைவர்களாக இருந்த கற்சிலைகளிடமும் சிற்ப வடிவங்களிடமும் யாரும் எந்தவொரு நெருக்கத்தையும் கொடுத்திருக்கவில்லை.

மதியத் தூக்கத்திலிருந்து துள்ளியெழுந்ததும் தான்தான் கொச்சுண்ணி தம்புரான் என்று தனக்குத்தானே அறிவித்த தாத்தாவோடு சேர்ந்து குழந்தைகளும் இணைந்துகொண்டார்கள். அவர்களுக்கு இவருடைய செயல் மிகவும் சுவாரசியமாகவே இருந்தது. பெட்டிகள் இணைக்கப்பட்ட புகைவண்டி இன்ஜின்போல் அவரு முஸலியாரும் பிள்ளைகளும் பள்ளிவாசலை நோக்கி ஊர்வலம் போனார்கள். பள்ளிவாசலை அடைந்த முஸலியார் பின் முற்றத்திலிருந்த குளத்தில் இறங்கி உடலைச் சுத்தப்படுத்திக் கொண்டார். உள்ளங்கைகளை இணைத்து தாமரை மொட்டைப் போல் குவித்தார். கூம்பிய கைகள் மார்பின் நடுவிலிருந்து நெற்றிக்கு உயர்ந்தது. தலைகுனிந்து சிறிது நேரம் நின்றவர் பாதாளத்தை நோக்கி தாழ்வதைப் போல் சட்டென்று சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்.

பள்ளிவாசலின் மேல் விதானத்திலுள்ள பிரபஞ்சக் கதிர்களின் வேறுபாடான மற்றம்தான் அவரை தழுவிக்கொண்டிருந்தது. பள்ளிவாசலுக்குள் செல்லும் சரளைக்கல் பாதையும் உடைந்த

---

* கேரள மக்கள் அணியும் வேட்டி.

** குடும்பப் பெயர்.

படிக்கட்டுகளும் வழக்கம்போல் அவருக்கு இடைஞ்சலில்லாமல் இடமளித்தன.

மிக நீண்ட தூக்கத்தில் நடக்கும் வியாதிக்கு தன் கணவனை விட்டுக் கொடுக்க மனமில்லாமல் மறியும்மையும் குழந்தைகளுக்குப் பின்னாலேயே நடந்துகொண்டிருந்தாள். என்றாலும் அவரை விலக்குவதற்காகவும் பிடித்து நிறுத்துவதற்காகவும் அவருடைய கைகள் துடித்தன. கொச்சுண்ணி தம்புரான் என்று அறிவித்த நிமிடம் முதல் நெருங்க முடியாததொரு அந்நியத்தன்மை மறியும்மையை கணவனிடமிருந்து விலக்கிக் கொண்டு இருந்தது.

உறக்கத்தில் நடப்பவரான அவரு முஸலியாரைப் பற்றி அவருக்கு நன்றாகவே தெரியும். இதைவிடவும் பெரிய கூத்தை அவர் காண்பித்தாலும் மறியும்மா அச்சுறப் போவதில்லை. வலிப்பு நோயைப் போன்று கோபத்தால் உணர்விழந்து கூரைக்கு தீயிட வெறியேறியலைந்த முஸலியாரையும், இருபது முறை தான் உடுத்திருக்கும் முண்டுலேயே மலம் கழித்துவிட்டு குழந்தையைப் போல் அழுத முஸலியாரையும் அவர் கையாண்டதுண்டு.

அப்படிப்பட்ட மறியும்மையின் குரல் மூலம்தான் பயத்தின் வாள் முனைகள் மின்னி மறைந்தன. 'கொச்சுண்ணித் தம்புரானா?'

தூக்கத்தில் நடக்கும் வியாதிக்குப் பின் படுக்கையறையில் அவரு முஸலியாராக மறுபிறவி எடுத்தாலும், கணவனைச் சுற்றி அந்நிய ஆத்மாவின் மெல்லிய நிழல் உருவம் உண்டென்று மறியும்மைக்குத் தோன்றியது. கணவரின் மரணத்தைப் பற்றியுள்ள எதிர்பார்ப்பு அதிர்ச்சிகள் அவருடைய இரத்த நாளங்களை பயமுறுத்திக் கொண்டிருந்தன.

சுத்தமான முஸ்லிமாக விழித்தெழுந்த அவரு முஸலியார் தன்னுடைய இடைமுண்டு வசம் மாறி சொருகப்பட்டிருந்ததைக் கண்டார்.

அப்படி அவர் அதைப் பார்க்கவில்லை என்றால் குழந்தைகள் சொன்ன கதையை வெறும் விளையாட்டாகத்தான் ஒதுக்கிவிட்டிருப்பார். சிறு பிள்ளைகள், தங்களைவிட சிறு பிள்ளையாகத்தான் தன்னையும் கருதுகிறார்கள் என்று முஸலியாருக்கு பல சமயங்களிலும் தோன்றுவதுண்டு. குழந்தையாக்கியும் விளையாட்டுப் பொருளாக்கியும்தான் தங்கள் பாட்டனுடன் அவர்களின் பேச்சும் செயல்பாடும் எல்லாம்.

இடுப்பு மணியினுடையதும் சிலம்பினுடையதுமான ரவுத்திரமான கிண்கிணி குலுக்கம் அவரு முஸலியாரின் உணர்வு மண்டலத்தை குழப்பமாக்கியது. கொச்சுண்ணித் தம்புரானின் கதையைக் கேட்டதும் அவருடைய சிந்தனைகள் குவியத் தொடங்கியதும்கூட முஸலியாரகம் வீட்டில் நடந்த நிகழ்வுகளினால்தான்.

நேற்றுதான் நடந்தது போலிருந்தது. மாமுட்டி அங்கே ஒரு சாத்தானாக மாறியது. தன்னிடம் எப்போதும் அன்போடும் ஆதரவோடும் உரையாடக்கூடிய அவன் பல்லை நறநறத்துக் கொண்டு அலறினான்:

''தூளாக்கினா உங்களுடைய முகமே அழிஞ்சுபோயிடும். அப்பா இல்லாதவனாகிவிடுவீங்க. இப்போ நாம தூளாக்கினாலும் நம்ம தந்தையோட அப்பாக்களுக்கும் அப்பாக்கள் எல்லோரும் பூஜித்துத் திரிந்த பொருளுங்களல்லவா இவை?''

புதிய மனைவிக்காக வீட்டின் இன்னொரு தோட்டத்தில் காளி கோவிலைக் கட்டியதை அறிந்ததும், பயந்து, ஆக்ரோஷப்பட்டு கேட்பதற்குச் சென்றவர்தான் அவரு முஸலியார். முஸலியாரின் ஆரம்பகட்ட ஆக்கிரமிப்புகளுக்கெல்லாம் மாமுட்டி தலை வணங்கியவனாகத்தான் பொறுமை காத்தான்.

''இதுக்காகத்தான் அவள் குப்பாயம்* அணிஞ்சாளோ?''

''இப்போதும் தான் குப்பாயம் அணியிறா!''

''இதுக்காகத்தான் அவளுக்கு நான் கலிமா சொன்னேனா?''

''அவ இப்போதும் தொழுதுண்டுதானே இருக்கிறா?''

''ஒடைச்சிப் போடுடா, கே... மவனே. அம்பலமாவது கோயிலாவது. எல்லாத்தையுமே நான் தூள் தூளாக்கிடுவேன்.''

மாமுட்டியின் கண்கள் சிவப்பதையும், இழுத்துவிடும் சுவாச மூச்சில் தோள் எலும்புகள் பர்வதங்களாவதையும் மட்டும் முஸலியார் கவனித்தார். அதன்பின் வந்த சிதறலில் தெறித்த கெட்ட வார்த்தைகள் அவனுடையதுதானா என்றுகூட அவரால் நம்பமுடியவில்லை.

---

* முஸ்லிம் பெண்கள் அணியும் நீண்ட அங்கி.

''தூளாக்கினா உங்களோட முகமே சீரழிஞ்சிடும். அப்பா இல்லாதவ னாயிடுவீங்க.''

குழந்தைகள் சொன்ன சம்பவத்தைப்பற்றிச் சிந்திக்கும்போது அந்த வார்த்தைகளுக்கு கூர்மை அதிகரித்துள்ளன என்று முஸ்லியாருக்குத் தோன்றியது. கொச்சுண்ணி தம்புரான் எனும் பெயர் ஆத்மாவிலிருந்து பழுத்து விழுகிறது. அணுக்களை கசியவிட்ட தன் உடலை நோய் பீடித்திருக்கிறது.

முஸ்லியார் ஜபமாலை எடுத்து சர்வசக்தி படைத்தவனின் பேரில் ஸ்தோத்திரங்களை முணுமுணுத்தார். இத்தனை ஆண்டு வாழ்க்கை யில் தோன்றாத தன்னம்பிக்கைக் குறைவு அவருடைய குரலை மென்மைப்படுத்தியது.

இரவு வெகுநேரம்வரையில் தன்னை இருளவைக்கும் உயிர்த் துளிகளின் மேலேயே முஸ்லியாருக்கு சந்தேகமுண்டாயிற்று. அவர் உறக்கத்துக்கே பயந்தார். உருவமாற்றம் பெற்று தன்னுள்ளே இருக்கும் ரகசிய தாதுக்கள் கொச்சுண்ணி தம்புரானாக பரிணமிக்க முடியுமோ?

மார்க்கம் அதிகரித்ததற்குப் பின்பும் காளிபக்தனாகத் திரிந்த கொச்சுண்ணித் தம்புரானின் கதை முஸ்லியாரின் உணர்வில் எங்கேயோ படிந்துவிட்டிருக்கிறது. யாரிடமிருந்து எங்கேயிருந்து என்றைக்கு தனக்கு இந்த விவரம் கிடைத்தது என்றும் இப்போது நினைவிலில்லை.

தொழுகை முடிந்தவுடன் கொச்சுண்ணித் தம்புரான் காளிக் கோயிலுக்குச் சென்று சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தாராம். அந்த 'ஹறாமாயதை' பொறுத்துக்கொள்ள முடியாத மதவாதிகள் பின்னாள் களில் அந்தக் கோயிலை இடித்துத் தள்ளிவிட்டு, அதனுடைய எஞ்சியவைகளால் கட்டப்பட்டு எழுந்தவைதான் மடோலத்து வீட்டுக்கு அருகிலுள்ள ஈமான் பள்ளிவாசல். அங்கேதான் அவரு முஸ்லியார் ஐந்து வேளையும் 'பாங்க்' அழைக்கிறார்.

கொச்சுண்ணித் தம்புரானின் உம்மா காளி விக்கிரகத்தையும் கருப்பு கற்சிற்பங்களையும் படுக்கைக்கு அடியில் மறைத்து வைத்திருந் தாராம். பின்பு, யாரோ ஒரு மதக்குருவின் உபதேசத்தின்படி

அவருடைய சிறியமகன் அவற்றையெல்லாம் எடுத்து மடோலத்து வீட்டின் பின்புறத்தில் எறிந்தானாம். விழும் வேகத்தில் சின்னா பின்னமான அந்த விக்கிரகங்களிலிருந்து சூடான இரத்தம் பீறிட்டு வடிந்ததாம். அதன்பின்தான் அந்தக் கிழவி ஊமையும் செவிடு மானாளாம். அவருடைய படுக்கை விரிப்பில் அவள் இறக்கும் வரையில் இரத்தக் கரையின் பயங்கர வடுக்கள் வெளிப்பட்டுக் கொண்டிருந்தனவாம்.

தோன்றிய இடம்கூட தெரியாத இப்படிப்பட்ட கதைகளெல்லாம் புத்தம் புதியதாக முஸலியாரின் மனத்தில் தெளிந்து வந்தன. அவர் மனம் பறை கொட்டித் தாழ்ப்பாளிட்டது. மூச்சிரைக்கும் நாயைப் போல் உறக்கத்தைப் பாதுகாத்து விழித்திருந்தார். உறங்காமல், நினைக்காமல் இரண்டு இரவுகளை அவரு முஸலியார் தள்ளினார். தானொரு முழுமையான முஸ்லிம்தான் என்பதை அல்லாவின் மேல் அவர் மீண்டும் மீண்டும் உறுதி செய்தார்.

மூன்றாம் இரவையும் பிடித்து நிறுத்த தன்னால் அசாத்தியமாகி விடுமோ என நினைத்தவர், தான் எதற்கும் இயலாதவனாகி விட்டோமே எனவும் முஸலியாரால் உணரமுடிந்தது. தன்னுடைய கண்கள் மட்டுமல்ல மூளையும் அவரை இகழ்ந்தது. மூன்று தலைமுறைகளின் சுமை முழுவதும் கண் இமைகளை அடைந்து உறக்கத்துக்குள் இழுத்துச் செல்கிறது. தூக்கத்தின் மந்திர உபதேசங்கள் மூளைக்குள் தாளம் போடுகின்றன.

ஆண்டுகளின் தடைகளைக் கடந்து அவரு முஸலியார் பின்னோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தார். சிறுவயதில் வெல்லத்துக்காகப் பிடிவாதம் பிடித்தபோது வாப்பா பிருஷ்டத்தில் சூடு வைத்தது வரையில் அவர் துல்லியமாக உணர்ந்தார். ஆனா, ஆவன்னா படிக்கும் காலத்தில் பாப்பு வாத்தியார் சொல்லிக்கொடுத்த ஈரடிக் கவிதைகள் மனத்துக்குள் வந்தன. பாடிப் பார்த்தபோது ஒருவரிகூட தவறாமல் நினைவில் இருந்தன.

நினைவுப் பெட்டகத்தின் மூலம் வேகமாக பின்னோக்கி நழுவி பல தலைமுறைகளைக் கடந்து அக்குடும்பத்தின் பிதாமகனான கொச்சுண்ணி தம்புரானிடம் சென்று சேர்ந்ததை அவரு முஸலியார் சட்டென்று புரிந்துகொண்டார். அப்போதும் ஓர் ஆண் நாயின்

துல்லியத்தோடுதான் அவருடைய நிறைவான உணர்வு நிலை இடம் மாறி நிலைத்திருந்தது.

உணர்வற்ற நிலையின் தாதுக்கள் பெருகிச் சேர்ந்துதான் கொச்சுண்ணித் தம்புரான் முஸ்லியாரின் உடலை வசப்படுத்தியிருந்தன. அதனுடைய அறிகுறி எனும் வகையில்தான் இடைமுண்டும் வலம் திரும்பி இருந்தது. மேலுதட்டிலும் முடிகள் முளைத்தன. தசைகள் தளர்ந்தன. இறுதியில் அவரு முஸ்லியார் எனும் உணர்வுபூர்வமான உருவத்தினால், அதன் உடலுக்கு உள்ளேயே தப்பிக்க முடியாத நிலையாகி விட்டது. அது உடனே ஒரு கடிகாரத்துக்குள்ளே சென்று சேர்ந்தது. தன்னை அடிமைப் படுத்திக் கொண்ட கொச்சுண்ணித் தம்புரானின் கதைகளெல்லாம் அவரு முஸ்லியாரின் கடிகாரத்துடிப்புகளில் பதிந்திருப்பதைக் காணமுடிந்தது.

கொச்சுண்ணித் தம்புரான் மின்சாரத்தைப் போல் தீவிரத்தன்மையுடன் படுக்கையிலிருந்து எழுந்து வந்தார். முண்டின் முனையை எடுத்து தட்டுச்சுற்றி மாடிவீட்டின் கதவுகளை ஒவ்வொன்றாக தள்ளித் திறந்தார். காலத்தின் கண்ணியில் ஒரு கடைக்கண்ணாக எஞ்சிய அவரு முஸ்லியாரின் விவேகம் கடிகாரத்திலிருந்து விடுதலை பெற்று கொச்சுண்ணித் தம்புரானை பின்தொடர்ந்தது.

நடுநிசி நேரத்தின் கதிரணுக்கள் நிலவில் பொங்கி வழிகின்றன. கொச்சுண்ணித் தம்புரான் மிக வேகமாக பள்ளிவாசலுக்கான வழியில் வேகமாக நடந்தார். பள்ளிவாசலிலுள்ள மீஸான் கற்களின் இடத்திலிருந்து ஒவ்வொரு ஆத்மாக்களும் எழுந்து நின்று சலாம் போட்டன. பள்ளிவாசல் குளத்தில் முங்கிவிட்டு தம்புரான் நிமிர்ந்தார். ஆயிரம் கண்களிலிருந்து வழியும் கண்ணீர்க் கோடு களைப்போல் தண்ணீர் அவரிலுள் பிரிந்து வடிந்தன.

'தேவி மகாமாயே! உனக்கு நேர்ந்த காயங்களெல்லாம் புத்தம் புதியதாக அப்படியே இன்னும் இருக்கின்றனவே! ஒன்றுகூட உலரவில்லையா!''

அவர் வருத்தப்பட்டு அழுதார். பள்ளிவாசலின் வெளி வராந்தாவில் தாங்கலாகக் கொடுத்திருந்த தேவி விக்கிரகம் மெல்ல எதிர்ச் செயல் புரிந்தது. அதனுடைய உடலின் காயங்களிலிருந்து இரத்தம் கொப்பளித்தது. சக்தியினுடையதும் கனிவினுடையதுமான கலப்பு உணர்வு கண்களில் வழிந்தது. வெளி வராந்தாவிலிருந்து துள்ளி

எழுந்து பள்ளிவாசலின் மேற்கூரையைப் பிய்த்துக் கொண்டு அது வெளிவந்து விடுமோ என்று தோன்றியது.

சாஷ்டாங்கமானதொரு நமஸ்காரத்திலிருந்து விடிவு பெறுவதற்குள் கொச்சுண்ணித் தம்புரானின் உடல் ஆலிலையைப் போல் ஆடிக் கொண்டிருந்தது. பள்ளிவாசலுக்குள் சுற்றுச்சூழலே மாறியிருந்தது. வித்தியாசமான ரகசிய இடங்களில் தாங்கலாகவும், படிக்கட்டாகவும், சிறுநீர் வாய்க்காலாகவும் பயன்பட்டுக்கொண்டிருந்த கற்சிற்பங்க ளெல்லாம் விழிப்பு பெற்றுவிட்டன. வெட்டுக்காயங்களும் வடுக் களும் மறைக்கப்படாதவைகளாக இருந்தன. பிணைத்து நிறுத்தப் பட்ட உயிர்ப்பு வடிவங்களைப்போல் அவைகள் விடுதலைக்காக தீப்பொறியாயின.

இந்தத் தேவதைகளெல்லாம் தன் மனத்துக்குள்ளும் விலங்கிடப் பட்டுள்ளன என்று கொச்சுண்ணித் தம்புரான் அறிந்தார். மனமில்லா மல் செய்த சாஷ்டாங்க நமஸ்காரங்கள் அவருக்கு துக்க நிவாரணம் பெற உதவவில்லை. இனிமேல் ஒன்றும் செய்வதற்கு இல்லை எனும் வருத்தமான முகபாவத்துடன் அவர் பள்ளிவாசலிலிருந்து வெளியேறி நடந்தார்.

உறக்க நடை முடிந்து விழித்தெழுந்த அவரு முஸலியாருக்கு இன்றைய புரிதல் நிலையானதுதான் வாழும் தன்மையின் உச்சத்திலுள்ள ஒரு மெல்லிய பரப்புமட்டும்தான் என்று தோன்றியது. அந்த பரப்புக்குக் கீழே தங்கள் உரிமையை நிலை நாட்டுவதற்கு கொச்சுண்ணித் தம்புரான் வரையிலுள்ள யார் யாரெல்லாமோ விழித்துக்கொண்டும் இருக்கி றார்கள். தூக்கத்தில் நடக்கும்போது தன்னை தடுத்து நிறுத்தாதற்காக அவரு முஸலியார் மறியும்மையிடம் சங்கடப்பட்டுள்ளார், அவமானம் அடைந்துள்ளார், கண்ணீரும் சிந்தியுள்ளார்.

''உங்களுக்கு நான் என்ன வேண்டுமானாலும் செஞ்சு தர்றேன். ஆனா, நீங்க நீங்களா ஆகணும்... கொச்சுண்ணித் தம்புரானா ஆகும்போது என்னால உங்களுக்கு ஒண்ணும் செய்யமுடியாது. என்னால அந்நிய புருஷன தொட...''

இதயம் தூள் தூளானாலும் மறியும்மை மனம்விட்டு பேசினாள்.

முதல் நாள் இரவு நடந்த நிகழ்வுகளெல்லாம் ஒரு பார்வையாளனுக்கு ஏற்பட்டது போல் அவரு முஸலியாருக்கு நினைவில் இருந்தது.

பள்ளிவாசலில் 'பாங்க்' கூப்பிடும்போதும் தொழும் போதும் வராந்தாவி லுள்ள கருஞ்சிலைகளை அவர் பயத்துடன் உற்றுநோக்கினார். இவ்வளவு காலமும் இப்படிப்பட்ட சில பொருள்களின் இருப்பே பள்ளிவாசலுக்குள் கவனிக்கப்படாமல் இருந்துள்ளன.

மறுநாள் இரவிலும் அவரு முஸலியார் தூக்கத்திலிருந்து எழுந்து எங்கேயோ பாய்ந்து சென்றார். தன்னுள் புகுந்திருக்கும் கொச்சுண்ணித் தம்புரானின் மறுபிறப்பைத் தடுக்க முடியவில்லை என்பது முடிவாகிவிட்டது. ஓர் அருள்வாக்கின் வேகத்துடன் சலங்கை முழக்கத்துடன் கொச்சுண்ணித் தம்புரானாக பேசத் தொடங்கினார்:

'வாழ்க்கை வேணுமென்றால் சிலசமயம் நம்பிக்கையை ஒதுக்க வேண்டியதாகும். அதே மாதிரி நம்பிக்கை வேணுமென்றால் வாழ்க்கையையும்... நான் ரெண்டையுமே நேசிச்சேன். அதனால் ஏதாவது எனக்குக் கிடைச்சுதா...?''

கொச்சுண்ணித் தம்புரானின் பலப் பிரயோகத்தில் சுழன்றோடிய அவரு முஸலியார், பறம்புகளையும் வாய்க்கால்களையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு பொன்னானி முகத்துவாரத்தை அடைந்து அமர்ந்தார்.

கடலைத் தேடும் ஆற்றின் உணர்வோட்டம் தீயைப்போல் பரவிச் சிதறியது. என்னென்னவோ அனுபவங்களைப் புதுப்பிப்பது போல் கடலின் உள்ளாழங்களுக்கு அவைகள் விரல்களை நீட்டின. விடைபெற்றுக் கொண்டிருக்கும் முழு நிலவு பூமியில் மங்கலாக விழுந்தது. சுழன்றடிக்கும் காற்றிலுள்ள நீர்த்துளிகள் தண்ணீரைவிட அடர்த்தியாக இருந்தன.

அந்த அளவுக்கு நீர்த்திவலைகளுள்ள சூழலிலும் நீண்ட தூரம் வரையில் ஒரு தீக்குண்டம் ஆற்றோரத்தில் அலைந்து திரிந்து பற்றத் தொடங்கியது.

தண்ணீரும் தீயும் பரஸ்பரம் கட்டுப்பாடானவைகள் அல்ல. அவை மாயைகள்தானென்று தோன்றும் காட்சி.

அக்னி குண்டத்தின் விளிம்போரம் பூணூல் அணிந்த ஒரு கூட்டத்தினர் அரை நிர்வாணத்துடன் குனிந்து அமர்ந்திருந்தார். ஹோமத்துக்கான குச்சிகள் இல்லாமல், கனம்மிக்க மரக்கிளைகள்தான் தீக்குண்டத்தில்

எரிந்தன. ஆவணப் பலகையின் வழவழப்பில்லாமல் கரடு முரடான தரைதான் அவர்களின் இருப்பிடமாக இருந்தது.

தெளிவான தேர்ந்தெடுப்பின் கலக்கம் அந்த மனிதர்களின் முகங்களைப் பிய்த்து எறிந்தது. கொஞ்சதூரத்திலிருந்து குளம்படிகளின் சத்தம் மிக உயர்ந்த நிலையை எட்டியது. பின்பு திடீரென்று தாழ்ந்தது. சில நிமிடங்கள் வட்டமிட்டுவிட்டு மீண்டும் அது அதிகரித்தது.

அங்கே ஒன்றிணைந்தவர்கள்தான் அந்தப் பிரதேசத்து வீடுகளில் எஞ்சி இருந்தார்கள். திப்பு சுல்தான் நாட்டைப் பிடித்ததும் பெரும்பான்மை பிராமணர்களும் நான்காம் வேதத்தை ஏற்றுக் கொண்டு இஸ்லாமாகி விட்டார்கள். பரம்பரை பரம்பரையாக கேள்விப்பட்டதினால் உண்டான ஜுர துன்பத்தில் சமூகமொத்தமும் சேர்ந்து நடுங்கின. நம்பூதிரிகள் ஒருவருக்குப் பின் ஒருவராக முன்னேக்கி வந்து சுன்னத்து செய்து கொண்டார்கள். அந்தஸ்துடைய திப்புவின் குதிரை சக்தி பெரும் தெய்வீக அதிகாரங்களை அவர்களுக்குப் பதிந்து கொடுத்தது.

நோய் பீடித்த ஒரு அம்மன்* திருமேனிதான் இல்லத்திலிருந்து ஓடிப்போய் முதன் முதலாக மார்க்கத்தைத் தழுவினார். குடும்பத் தலைவரின் கொடுமைகளை பல மாதங்களாக பொறுத்தே அவர் ஒரு நாயைப்போல் இல்லத்தில் படுத்திருந்தார். ஒரு தம்பளர் சுடு தண்ணீர் வைத்துத் தருவதற்கோ, வலியால் துவளும் கால்களை தடவிடக் கொடுப்பதற்கோ கூட யாரும் அருகில் இருந்ததில்லை.

மார்க்கத்தைத் தழுவின பின் அம்மன் திருமேனியின் முதல் ஆசையே மனைவி கல்யாணியுடன் சேரவேண்டும் என்பதுதான். அவர்மேல் இரக்கம் தோன்றிய திப்புவின் பணியாட்கள் இரவோடு இரவாக கல்யாணியை தேடிப் பிடித்து அவன் முன்னே கொண்டுவந்து சேர்த்துவிட்டார்கள். உடனே அவளுக்கு அங்கி அணிவித்து, திருமேனியின் துணைவியாக்கி அவனுடன் அங்கேயே தங்க வைத்துவிட்டார்கள்.

---

* நம்பூதிரிகள் இனத்தில் சிறிய தந்தையை அம்மன் திருமேனி என்றழைப்பார்கள். பெரிய திருமேனிக்கு அடிமைகளைப் போல இருப்பவர்கள்.)

பற்றிப் படர்ந்த மார்க்கம் தழுவலின் செய்தி இல்லங்களுக்குள் குழப்பத்தைத் தோற்றுவித்தது. நீறுபூத்த நெருப்பாக வாழ்ந்து கொண்டிருந்த கொஞ்சம் வாய் செத்தவர்கள் இதுவே தங்களின் தப்பிக்கும் வழி எனக் கண்டு மனம் குளிர்ந்தார்கள்.

போகப் போக பலப் பிரயோகத்தினுடையதும் இறுதி எச்சரிக்கை யினுடையதுமான வதந்திகள் பரவின. முடிவு செய்ய பலமில்லாத சில குடும்பத் தலைவர்கள் ஜோதிடர்களை அழைத்து அறிவுரை பெற்றார்கள். நடைமுறைக்கானதையும் பயத்தினுடையதுமான வேகங்களால் திருப்பப்பட்டு அவர்கள் இவ்வாறெல்லாம் கூட பேசத் தொடங்கினார்கள்.

''இதுவொரு சைவ மதத்தின் ஆக்கிரமிப்பாக்கும். பவிஷ்ய புராணத் தில் இப்படியொரு குலத்தின் உதயம் சொல்லப்பட்டும் இருக்கிறது. மொட்டையடிக்கப்பட்ட தலையும், தலைப்பாகையும், செதுக்கிக் குறுக்கப்பட்ட தாடியும் அவர்களின் தனிப்பட்ட தன்மைகளாகும். மகம்மது என்பதுதான் அந்த தர்ம ஸ்தாபிகளின் பெயராக்கும்.''

''ஒண்ணும் சந்தேகப்பட வேணாம். குடும்பத்தோட சேர்ந்து புதிய மதத்தை வற்புறுத்திக்கொள்ளலாம். ரசி அப்படித்தான் சொல்லுது. வியாழ பகவானின் பார்வையும் சுக்கிரனின் உச்ச நிலையும் நல்லாவே இருக்கின்றன. மத மாற்றத்தால பெரும் ஐஸ்வர்யமே உண்டாகும். தடுப்பதற்கு முயற்சிக்க வேணாம். அது ஆபத்தைத்தான் உண்டாக்கும்.''

இருந்தும் பிரமணிய நேசத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு சிலபேர்கள் மறைந்து திரிந்தார்கள். அப்படிப் பட்டவர்களையும் விட்டுவிடக்கூடாது என்பதற்கான உத்வேகம் திப்புவைவிட மதம் மாறிய நம்பூதிரிகளுக்கு இருந்தது.

''அவங்க பிரச்னைகளை உண்டாக்குவாங்க. அவங்களோட வாழ்க்கைக்கு மட்டுமல்ல, ஆத்மாவுக்கு மட்டுமல்ல, பரலோக ஜீவிதத்துக்கும் சேர்த்தே...''

இவ்வாறான பயம் கலந்த கிசுகிசுப்புகள்தான் புதிய விசுவாசிகளிட மிருந்து திப்புவுக்குக் கிடைத்துக்கொண்டிருந்தன. அவனுடைய

குளம்படி வட்டம் ஓடிப்போனவர்களுக்காக ஊர் முழுவதும் தேடித் திரிந்தன.

இறுதியாக மேற்கொள்ளப்படும் இந்தத் தேடுதல் வேட்டை அதிகநேரம் நீண்டு நிலைக்காது என்று அந்தப் பூணூல்காரர்களுக்கு நன்றாகவே தெரியும். அடங்கிப்போவதற்கான நேரக் கட்டுப்பாடும் நெருங்கி வருகின்றது. லாட சத்தத்தின் வளையங்கள் அவர்களை மையப்படுத்தி சுருங்கி வருகின்றன.

''நேரமாயிட்டுது. வேணும்கிறவா சீக்கிரமா அக்னி நதியில இறங்கி மறுகரைய அடையலாம். ஆமாம், பிராம்மணியத்தோட மோட்ச உலகத்துக்கு வேண்டாதவா பூணூலை அறுத்து தீயில போட்டு, பொசுக்கிட்டு திரும்பிப் போயிடலாம். அதுவும் வெற்று வாழ்க்கையை நோக்கி.''

உருக்கு போன்ற பலத்த குரலில் ஒருவன் நிறுத்தி நிறுத்திப் பேசினான். யாரும் யாரையும் நிர்ப்பந்திக்கவில்லை. அதற்கான நேரமும் இருக்கவில்லை. இதயப் பக்கவாட்டுகளில் ஆடும் துலாக்கோலின் தட்டுகளை ஒவ்வொருவரும் தாமாகவே பரிசோதித்துக் கொண்டார்கள்.

வானவில்லின் மென்மைகளும், பூவிதழ்களும், பெண்ணின் வயிற்றின் நடுவே உருகி இறங்கும் குளிர்ந்த நீரின் அருவிகளும், சிலரின் ஒப்பிட்டு நோக்கும் கருவியில் கெட்டிப்பட்டு தாழ்ந்தன. அப்படிப்பட்டவர்கள் பூணூலை அறுத்து அக்னியில் எறிந்துவிட்டு தலையைத் தாழ்த்திக் கொண்டு திரும்பினார்கள். பிராமணியத்தின் கனவு ஜொலிப்பில் கண்கள் கூசின. சிலருக்கு உடை போடுவதற்கான தேவையே தோன்றவில்லை. அக்கூட்டத்தினர் அக்னி நதியில் இறங்கி நீந்தத் தொடங்கினார்கள். எலும்புகளும் சதைகளுமான வராமான மேல் அங்கிகளை தீக்கொழுந்தில் போட்டுவிட்டு ஆத்மாவுடன் எங்கோ நீந்தி மறைந்தார்கள்.

கொச்சுண்ணியின் இதயப் பக்கவாட்டுகளில் தராசின் தட்டுகள் ஒன்றோடு ஒன்றைப் போலவே மாறி மாறி மேலும் கீழும் ஆடிக் கொண்டிருந்தன. அவரால் திடீரென ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. நம்பிக்கைகளின் சங்கல்ப ஜொலிப்பில் மோகம் கொள்ளும் அவர் அடுத்த நிமிடம் வாழ்வின் பூந்தோட்டங்களிலும் பசுமை

அழுகுகளிலும் தன்னையே இழந்தார். இறங்கிக் குளித்தவர்களும் திரும்பிப் போனவர்களுமாக அக்னிநதியின் கரையில் ஆட்கள் காணாமல் போனார்கள். கொச்சுண்ணிக்கு மட்டும் வாழ்க்கையின் அழகும் தன்னையே எரித்துக்கொள்ளும் தீயின் ஜ்வாலிப்பும் எடைபோட்டதால் மனம் வலித்தது. குளம்படி சத்தம் அருகில் வந்து அவரை சூழ்ந்துகொண்டது.

பன்னிரண்டு

அவரு முஸலியாரின் இரவுச் செயல்பாட்டையும் அதைத் தொடர்ந்துள்ள செய்திகளையும் அருகிலுள்ள முஸ்லிம்கள் அறியத் தொடங்கி விட்டார்கள். தூக்கத்தில் நடக்கும் நேரத்தில் பின்தொடர்ந்து நடந்தவர்களிடமிருந்துதான் விஷயம் கொஞ்சம் கொஞ்சமாக கசியத் தொடங்கியது. குர்ரான் வசனங்களை மட்டும் உதட்டில் உச்சாடனம் செய்யும் முஸலியாரை முற்றிலும் வித்தியாசமாக சில இரவுகளில் அவர்கள் கண்டார்கள். ஆற்றின் முகத்துவாரத்திலும் பள்ளிவாசலின் முற்றத்திலும் தளர்ந்து நடக்கும் முஸலியார் கோபம் பீரிடும் கோமரத்தின்* நடன தாளங்களை அவ்வேளைகளில் வெளிப் படுத்தினார்.

தங்களுக்கு வேதம் கற்றுக்கொடுத்தும் கன்னத்து நடத்தியும் வந்த நபரா இவர் என்பதையே அவர்கள் கண்டதில்லை. 'தேவி மகாமாயே' எனும் சரண அழைப்பையும் நெஞ்சிலிருந்து முன் நெற்றிக்கு உயரும் கும்பிய கைகளையும் அவர்கள் கண்டதில்லை. விரல்கள் தூவும் சைகை அர்ச்சனைகள் ஏதோவொரு விக்கிரகத்தை இலக்காக்கிக் கொண்டுதான் என்பதில் சந்தேகமில்லை.

பொன்னானி கடைத்தெரு முழுவதும் இதே பாட்டாக இருந்தாலும், அறிந்தவர்கள் யாரும் வெளிப்படையாக பேச தைரியப்படவில்லை. இதயத்தின் அடிவேரையே பிடுங்கிச் செல்லும் அச்சங்களுடன் முஸ்லிம்கள் தங்களுக்குள் மெல்ல கிசுகிசுத்துக் கொண்டார்கள். மாமுட்டி தன் வீட்டுத் தோட்டத்தில் கோயில் எழுப்பியதின்

---

* சாமியாடி

பின்னால்தான் இப்படியொரு சம்பவம். பள்ளிவாசலில் பாங்கு கொடுப்பதையும் தொழுகையையும் செய்து கொண்டிருந்த முஸ்லியாரை சந்தேகம் எனும் கலவல் கண்களுடன் அவர்கள் தயங்கி நோக்கினார்கள்.

பக்கத்து வீடுகளிலிருந்து கசிந்துவரும் கிசுகிசுப்புகளில் மனம் நொந்துபோன மரியும்மா ஒருநாள் இரவில் முஸ்லியாரிடம் வெளிப்படையாகவே கேட்டாள்:

''நீங்க ஒரு முழுமையான முஸ்லிம்தானே?''

''அப்புறம்?''

''ஜனங்க சொல்றாங்க. ராத்திரியில நீங்க ஒரு நாத்திகராயிடறீங்கன்னு.''

வார்த்தைகள் செவியை அடைந்ததும் அவரு முஸ்லியாரின் நடுமார்பில் ஒரு பாலம் இறுகியது. மிக ஆழமானதொரு பள்ளத்தாக்கிற்குள் என்பதுபோல் இதயம் நிலைதடுமாறி விழுந்தது. இஸ்லாத்தின் கடும் நோன்பாளராகத்தான் இத்தனை காலமும் பொன்னானியில் அவர் அறியப்பட்டு இருந்தார்.

தாயே தன் மகனை ஒதுக்குவது போன்று ஓர் ஏளனத்துக்குரிய நிலையில் முஸ்லியாருக்கு வெறி அதிகரித்தது. திடீரென்று கையில் கிடைத்த தட்டத்தைச் சுழற்றி வீசி மரியும்மையின்மேல் போட்டு வேகமாக அருகில் இழுத்தார். முடியைப் பிடித்து கழுத்தில் அடித்து ஓரேயடியாக கீழே தள்ளினார். அடிக்கும்போது இடையிடையே அவர் சின்னக் குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தார்.

அவரு முஸ்லியாரின் பலவீனமான கைகளால் அடியையும் குத்தையும் மறியும்மை பெற்றுக்கொண்டாள். தன்னை முஷ்டியால் குத்திக் கொண்டு இருக்கும்போதும் கணவனை அவள் குழந்தையைப் போல்தான் சமாதானப்படுத்தினாள். வழியும் கண்ணீர்க் கோட்டை துடைத்தெடுத்தாள். வெதும்பும் உதடுகளைக் கட்டுப்படுத்தி மொட்டைத் தலையில் வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தாள். தன்னுள் எட்டு பிள்ளைகளை உற்பத்தி செய்த அந்த மனிதரை அவள் தன் இளைய சந்ததியைப் போல் மார்போடு அணைத்துக்கொண்டாள்.

அப்பழுக்கற்ற சுத்தமான அந்த முஸ்லியாரும் தன்னுடைய விம்மல்களை அடக்குவதற்கோ, கௌரவமாக நடிப்பதற்கோ சிறிதும் முயற்சி செய்யவில்லை.

இது அல்லாவின் சோதனையோ என்று கருதி மனத்தை அடக்கிக் கொள்ள முடியாத நிலையில்தான் அவர் இருந்தார். தனக்குள் தோன்றும் கூச்சத்தைத் தடுக்கப் பார்த்தாலும் தடுக்க முடியவில்லை. அறுந்து போகாத ஜென்மாந்தர உறவுகள்! நினைத்துப் பார்க்கும்போது தன் மனம்தான் பகையாக எரிகிறது.

தான் முஸ்லிம்தான் எனும் பரிபூர்ண தன்மை இல்லையென்றால் இந்த வாழ்க்கையே இனி வேண்டாம். நாத்திகர் எனும் களங்கத்தை ஏற்று இனி ஒரு நிமிடம்கூட தான் உயிர் வாழப் போவதில்லை. சுத்தமற்ற மனத்தையும் உடலையும் பலியிட்டு அல்லாவின் சொர்க்கத்தில் மறுபிறவி எடுப்பதுதான் இதற்கான வழியாகும்.

கட்டுப்படாத எண்ணங்களிடம் அவரு முஸ்லியார் ஆக்ரோஷ மடைந்தார்.

மாலை மயங்கி அந்தியானதும் அவர் பெரும் கொடுவாளுடன் வெளியே சென்றார். ஆரவாரிக்கும் கடலலைகள் காலடி வீழ்ச்சிகளுக்கு பொறுமையை இழக்க வைத்தன. விசாலமான மணல் பரப்பில் அவர் தனக்கான கல்லறையை தோண்டினார். 'கஅபா'வை நோக்கி நேருக்கு நேராக நின்று 'அல்லாஹு அக்பர்' குரலில் முழங்கினார். அவை கடல்காற்றை மார்பில் புகுத்தி அரபுநாட்டிலுள்ள பசுமைத் தீவுகள் வரையில் பயணம் செய்தது. கடற்கரையைத் தாண்டிவரும் அமிர்தப் பிரவாகத்தில் ஆயிரம் பேரீச்சம் மரங்கள் பழம் பழுத்து பொழிந்து கொண்டிருந்தன.

கொடுவாளால் தனக்குத்தானே காயம் ஏற்படுத்திக்கொண்டதால் இரத்த நாளங்களிலிருந்து இரத்தம் கொட்டி அவரு முஸ்லியார் சோர்வடைந்தார். தன்னுடைய இரத்தத்தில் விழிகளைப் பதித்த அவர் பள்ளிவாசல் வராந்தாவில் கிடக்கும் உடைந்த விக்கிரகங்களில் துளித்துளியான இரத்தத்தைக் கண்டார்.

அப்படியானால், இது தன் இரத்தம் வரையில் ஊடுருவிவிட்ட மனச் சுத்தமில்லாமையின் கலவையோ?

இஸ்லாமின் பரிபூர்ணத்தன்மையை அடைய இந்தப் பிறவியையே முடித்துக்கொள்ள வேண்டியது வருமோ?

நினைவில்லாதவராக மணல் பரப்பில் துவண்டு படுத்திருந்த அவரு முஸ்லியாரை மீன் பிடிப்பவர்கள்தான் கண்டுபிடித்தார்கள். இருளில் ஆளை அடையாளம் காண்பதற்கு சிரமமாகத்தான் இருந்தது. தான் பிடித்த மீன்களோடு சேர்த்து பெரியதொரு சுறாவைப் போல்தான் ஒரு 'ஐயிக்காரன்'* முஸ்லியாரை தோளில் போட்டுக்கொண்டு நடந்தான்.

கடைத்தெருவை அடைந்ததும் ஆளை அடையாளம் கண்டு கூட்டம் கூடியது. நூற்றுக்கணக்கான டார்ச் விளக்குகளும் தீப்பந்தங்களும் மடோலத்து வீட்டை லட்சியமாக்கி இருளில் நீந்திச் சென்றடைந்தன.

---

* கடற்கரையோரம் வசிக்கும் மீனவன்.

பதிமூன்று

மடோலத்து வீட்டின் உட்புறங்களில் எழும்பிய கூட்டு அழுகையைக் கேட்டுக்கொண்டுதான் முஸ்லியாருக்கு நினைவு தப்பியது. தான் முழங்கிய தக்பீர் சத்தங்கள் எங்கேயோ எதிரொலித்து மிகவும் மென்மையாக திரும்பி வந்தது. ஆத்ம அழுத்தத்தால் புழுங்கிப் பழுத்த லட்சக்கணக்கான பேரீச்சம் பழங்கள், தூதைத் துவரங்கள் அருளிய மொழியில்லாத அறிவு உணர்வுக்குள் நுழைந்துவரும் ஒலியின் வெள்ளி இழைகள்.

எலும்பு மஜ்ஜையையும் இரத்தத்தையும் புதுப்பிப்பதற்கு முடியவில்லை என்றாலும் புலப்படாத ஓர் ஆறுதலால்தான் சுகமாகிறோம் என்று மட்டும் முஸ்லியாருக்குப் புரிந்தது.

''என்ன ஏதாவது சாத்தான் புடிச்சிட்டுதோ?''

விபத்தை அறிந்த மாமுட்டி, முஸ்லியாரைப் பார்க்க வந்திருந்தான்.

''இல்ல, குழந்தே!''

முஸ்லியார் எதிர்ப்பில்லாத ஒரு சிரிப்பு சிரித்தார். அமைதியாக மாமுட்டியின் கையைப் பற்றினார். கோபமும் பகையும் தன்னுள் ஏற்படுத்தியிருந்த செயலைக்கூட மறந்து அவர் ஆச்சரியமடைந்தார். தன்னை மூடியிருந்த ஆசுவாசத்தின் நெருக்கம் நட்பின் ஈரங்களை மட்டும் சுரக்கின்றன. அதில் குதூகலித்து மாமுட்டியோடு நகைச்சுவை சொல்லிக்கொண்டிருக்கும்போது மதத்தினுடையதோ, பண்பாட்டினுடையதோவான கட்டுகள் அவரிடமிருந்து விலகி நின்றன.

பதினான்கு

கடைத்தெருவுக்கும் பண்டகசாலைக்கும் போய்வரும் மாமுட்டி என்னென்னவெல்லாமோ சம்பவ விகசிப்புகளை எதிர்பார்த்திருந்தான். மனைவிக்காக விக்கிரகம் நிறுவிய பிரச்னை எளிதாக முடிகிற விஷயம் இல்லை என்று அவனுக்குத் தெரியும். பிரச்னைகள் என்பவை எப்போதும் மாமுட்டியின் ஓர் உணர்ச்சி வேகமாகவே இருந்தன. சாதாரண விவகாரங்களில் தன்னை இழந்து மூடிக் கொள்ளக்கூடிய உயிர் உறையும் இடமல்ல தன் உள்ளுக்குள் உள்ளது.

நெட்டியும் மோதியும் அடித்துப் பிடித்துக் கொண்டும் இருந்த நேரம் முடிந்துபோய் மீண்டும் அமிர்தம் சுரக்கும் கடைத்தெருக்காரர்களின் நட்பை மாமுட்டி அனுபவித்திருக்கிறான். அதற்காக அவன் பேராசைப்பட்டு தேடியும் திரிந்திருக்கிறான்.

ஆனால், நாள்களும் மாதங்களும் கழிந்தாலும் எங்கும் எதுவும் அசைய வில்லை. நல்ல பழக்கமுள்ள பொன்னாணிக்காரர்கள் எல்லாம் விரிசல்படாத மௌனக் கவசம் உடையவர்களாக இருந்தார்கள். பேசி முடிக்க வேண்டியதும், அடித்துத் தீர வேண்டியதுமான என்ன வெல்லாமோ கெட்ட எண்ணங்கள் அவர்களின் மனங்களில் மறைந் திருக்கின்றன என்று மாமுட்டிக்குத் தோன்றியது.

தன்னை நேருக்கு நேராகச் சந்திக்கும் கடைத்தெரு மாப்பிளாக்க ளெல்லாம்கூட பொறுமையிழந்து தன்னிடமிருந்து ஒதுங்கினார்கள். நேருக்கு நேராகப் பார்க்காமலும் முகம் காட்டாமலும் வார்த்தைகள் புலம்பலாக மாறின. முஸ்லியாரகம் வீட்டின் வழியையே யாரும் இப்போது கவனிப்பதில்லை.

புதியதொரு சூரியனாக தங்கள் கிராமத்தில் உதித்த தன் மனைவியினிடமா இவர்களுக்கு இத்தனை விரோதம்? இந்து கோயில் கட்டச் சொன்னதால் இரண்டு திட்டாவது திட்டியிருக்கலாம். நான்கு தட்டாவது தட்டி இருக்கலாம். அப்படி அவர்கள் செய்திருந்தால் தன் மனம் அமைதியாகி இருக்கும்.

ஆனால் இப்போது மவுன ஆயுதங்களின் கூர்மையை அல்லவோ முதன்முதலாக அனுபவிக்கிறான். எண்ணிக்கையில் அடங்காத இடங்களில் முனை முறிந்து, பெயர்கள் இல்லாத நாளங்களில் விஷம் சுரந்து அது தன்னை சோர்வடையச் செய்கிறதே!

அதே நேரத்தில் என்னவென்று சொல்ல முடியாத பயபீதிகளால் குழம்பத் தொடங்கிவிட்டார்கள் கடைத்தெரு மாப்பிளைக்கள். மறுபக்கத்தில் முஸலியாரகம் வீட்டிலுள்ள சம்பவ விகசிப்புகளும், அவரு முஸலியாரின் உறக்கத்தில் நடக்கும் கதைகளும் அவர்களின் ஒற்றுமையுணர்வுகளைப் பயமுறுத்தின. தர்மீகத்திலும் உணர்ச்சி வயப்பாட்டிலுமான ஒழுங்கற்ற தன்மைகளால் அவர்களால் தங்கள் மனங்களையே புரிந்துகொள்ள முடியவில்லை.

பிரச்னைக்கான பரிகாரத்துக்கு வழி தெளிவாகாமல் அவர்களின் மவுனங்கள் நீண்டுகொண்டே போயின. செய்துமுல்லாக்கா இவற்றைப் பற்றி கேள்விப்பட்டு விவரம் பெற வந்தான்.

பள்ளிவாசல் வளாகத்தில் நடந்த பெரியதொரு பஞ்சாயத்தில் அவன் மட்டும்தான் உரக்கப் பேசினான்:

''என்ன, நீங்க ஒண்ணும் பேசல? இப்பவே போயி அவனோட கோயில இடிக்க இங்க ஆளுங்க இருக்கிறாங்களா இல்லையா? சொல்லுங்க, ஆளுண்டா? எவ்வளவு காலத்துக்குத்தான் இந்த தாந்தோன்றித்தனத்த பொறுத்துக்க முடியும்?''

ஆட்கள் உண்டென்று கூறி புறப்படுவதற்கும்கூட தயாராக இருந்தார்கள். செய்யக்கூடாததை எல்லாம் மாமுட்டி செய்திருக்கிறான். பள்ளிவாசல் முற்றத்தில் கூடி இருந்தவர்களுக்கெல்லாம் அது தெரியும். இருந்தும் உயிரை இழந்தவர்களைப்போல் மர்மமான முகபாவங்களுடன் பொன்னானி மாப்பிளாக்கள் திகைத்து நின்றார்கள். மாறிமாறி கேள்வி கேட்ட முல்லாக்கா கடைசியில் தனக்குத்தானே நிறுத்திக்

கொண்டு மவுனமானான். ஊர்க்காரர்களுக்கு நடுவே தனிமைப்படல் என்பது அவனை பீதியடையச் செய்தது.

''நான் திரும்பிப் போறேன். இங்க யாருக்கும் இதைப்பற்றி வருத்தமில்ல. நம்பிக்கையும் இல்ல. என்னால இத பொறுத்துக்கவும் முடியல.''

முல்லைக்கா நடந்து மறைந்துபோனதும் கடைத்தெரு மாப்பிளாக்கள் கூட்டம் அனாதைகளைப்போல் எஞ்சியிருந்தார்கள். அது தொழுகைக்கான நேரமாகவும் இருந்தது. அவர்கள் வரிசை வரிசையாகச் சென்று உடல் சுத்தம் செய்துகொண்டு பள்ளிவாசலுக்குள் நுழைந்தார்கள். சர்வ வல்லமையாளனின் முன்னால் முழங்காலிட்டார்கள். நெற்றியை தொடர்ந்தாற்போல் தரையில் மோதி இதய வேதனையுடன் எல்லாவற்றையும் அர்ப்பணித்தார்கள். அடையாளம் காணமுடியாத தங்களுடைய சுய நிலையையும் பலவீனத்தையும் மறக்க முயன்றார்கள்.

மாமுட்டி கட்டிய கோயிலை இடித்துத் தகர்க்க தங்களால் முடியாது என்று அவர்களுக்குத் தெரிந்தே இருந்தது. அதைப் பற்றிய நினைவுகள் மெல்லக் கூடும்போது பெருங்குரலில் அவர்கள் அல்லாவை அழைத்து அழுதார்கள். மாமுட்டியை மறக்கும்படியான எண்ணத்துக்காக அவர்கள் எப்போதும் அல்லாவிடம் பிரார்த்தித்தார்கள்.

ஆனால், அது முற்றிலும் நிகழக்கூடியதுதான் என்று அவர்களுக்கு தெரிந்தே இருந்தது. இறப்பானாலும், பிறப்பானாலும் முதலில் வந்து நிற்கும் பொன்னானி நாயகனை மறக்க முடியுமோ? அவன் பரம கருணையாளன்தான் என்றாலும் அல்லா அதற்கு துணை நிற்க மாட்டாரே. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஊருக்குள் கடல் புகுந்தபோது அவன் எட்டுபேர்களையல்லவா அலைகளிலிருந்து காப்பாற்றினான். ஐந்தாறு மாதங்களுக்கு முன்னால்தான் எரியும் வீட்டிலிருந்து இரண்டு பிஞ்சு குழந்தைகளை தூக்கிவந்து உலகத்தைக் காண்பித்தான். மாமுட்டியைச் சுற்றி இப்படிப்பட்ட வராளமான சம்பவங்கள். பொன்னானி மாப்பிளாக்களின் மனத்துக்குள் அலை மோதின.

சொந்த ஊர்க்காரர்களுடன் மனம் திறந்து பேசிய காலத்தை மாமுட்டி மறந்தே போயிருந்தான். மவுனத்தால் காயப்படுத்தும் முனைகள் எங்கே சென்றாலும் அவனை வேட்டையாடின. ஒழுங்கற்று

இணைந்திருக்கும் மவுனத்தின் முனைகளில் மோதி உடைந்து மாமுட்டியின் வாக்குகளும் குரல்களும் பிணங்களாயின.

கடைத்தெருக்காரர்களுடன் வியாபார காரியங்களைப் பேசும்போது மட்டும் ஒரு விஷயத்தை கவனித்திருந்தான். தங்களுடைய உரையாடலில் அமைதித்தன்மையின் இடைவேளைகளுக்குத்தான் மிகவும் முழுமை கிடைக்கிறது. அப்படிப்பட்டதான சலுகைகளில் தான் அவர்கள் தனக்கு எதிராக ஆயுத நகர்வுகளை நடத்துகிறார்கள்.

ஏதாவது கலந்து பேசலாமென்றால், பீரானையும் கொஞ்சம் நாள்களாக காண முடியவில்லை. தான் வீட்டிலுள்ள நேரங்களில் அவன் ஏதாவது காரியங்களுக்காக வெளியே போயிருப்பான். அவன் வீட்டுக்குள் வரும் சந்தர்ப்பங்களில் தான் வெளியே போகவேண்டியதாக இருக்கும். இப்படிப்பட்ட தற்செயலான நிகழ்வுகள் சில தினங்களாக ஒரு நியதிபோல் மீண்டும் மீண்டும் நடக்கின்றன. எல்லா சாகசங்களுக்கும் தன்னுடன் பங்கு போட்டுக் கொள்பவனான அப்துல் ரஹ்மானும் இப்போது திரும்பிக்கூட பார்ப்பதில்லை. சேட்டுவைப் பார்த்து விஷயத்தை முடித்துவிட்டு சவக்காட்டிலிருந்து திரும்பிய போதுதான் அவனை கடைசியாகப் பார்த்தது. அதன்பின் இப்போது பாக்கு வியாபாரத்தில் பங்கு பெறுவதற்காக வேறொரு ஆளை அனுப்பி இருக்கிறான்.

வாக்குறுதியோ எதிர்வாக்குறுதியோ இல்லாமல் நடத்தப்பட்டு வந்த வியாபாரத்திலிருந்து திடீரென்று விலகுவதற்கு என்ன நேர்ந்தது?

சரி அவன் அப்படியே இருந்து கொள்ளட்டும். எல்லாருமே என்னை எதிர்க்கட்டும். ஊர் முழுவதும்கூட தனக்கு எதிராகவே நிற்கட்டும். ஆனால் ஒருநாள் இவர்களெல்லாம் தங்கள் செய்யும் தவறான குற்றங்களுக்கு சமாதானம் கூறிக் கொண்டு நிச்சயம் திரும்பி வருவார்கள்.

மாமுட்டி அனுதாபத்தின் காயங்களை சொறியத் தொடங்கி இருந்தான். வேதனையிலும் ஒருவகை சுகத்தைத் தேடி அந்த நேரத்துக்காக அவன் காத்திருக்கத் தொடங்கினான்.

வேலையெல்லாம் முடிந்ததும் பண்டகசாலையில் சிறிது நேரம் இடுப்பைச் சாய்க்கும் வழக்கம் உண்டு. கொப்பரையும் மட்டையும்

கூம்பாரமாகக் குவியும் சுற்றுச் சூழலின் மணத்தில்தான் வியாபார விஷயங்களை அவன் கணக்கு பார்ப்பது. மனத்தின் எங்கேயோ உள்ள உட்புறத் துடிப்புகள் அன்றைய நாளில் அவனை பண்டகசாலை யிலேயே கட்டி நிறுத்தியிருந்தன. ஒவ்வொரு முறையும் எழுவதற்கு முயற்சிக்கும் மாமுட்டி மீண்டும் மீண்டும் தயங்கி அங்கேயே அமர்ந்து விட்டிருந்தான்.

அவனுடைய உணர்வில் மிகமெதுவாக எங்கேயோ சிந்தனைகள் கருகுவதுபோல் தோன்றின. கவனித்தபோதுதான் தன் சுவாசத்தையே தடைப்படுத்தும் புகைமண்டலம் உயருவது பண்டகசாலை மாடியில் தான் என்பது புரிந்தது.

அந்த விபத்தின் தீப்பொறிகள் தன் மனத்துக்குள்ளா வெளியிலா என்று சந்தேகிப்பதற்குள் அக்னிக் கொழுந்துகள் நெருங்கி விட்டிருந்தன.

பண்டகச்சாலை சரிவில் பற்றியிருந்த தீப்பொறிகள் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியிருந்தன. துள்ளிக் குதித்து எழுந்ததும் மாமுட்டி தீப்பிடித்து வெடிக்கும் சாற்றுக் கழிகளைத்தான் முதலில் கண்டான். அவற்றிலும் பயங்கரமான தீக்குண்டம் அதற்குள் அவனுக்குள்ளும் தாண்டவமாடின.

கையில் கிடைத்த சாக்குத் துண்டுகளால் தீக்கூடுகளை மாறிமாறி அணைத்தவாறே அவன் இங்குமங்கும் ஓடித் திரிந்தான். பற்றியெரிந்த சாற்றுக் கழிகள் வளைந்து உடைந்தன. புகை மண்டலங்கள் ரகசிய ஆலோசனைகள் நடத்தும் மட்டைக் குவியல்களை சுழற்றி மிதித்தன. வெளியேயுள்ள கிணற்றிலிருந்து தண்ணீரை இறைத்து வீசினான். தீ படர்ந்தும் படராமலிருந்த பொருள்களின்மேல் மீண்டும் மீண்டும் நீருற்றி நனைத்தான்.

அங்குமிங்கும் புகையை அழிக்கும் மிச்சங்களாக தீப்பிடித்தலும் அமிக்கப்படலும் இருந்தாலும், மாமுட்டியின் உள்ளத்தில் தீக்கொழுந்துகள் புதிய சிகரங்களுக்குள் ஏறிக்கொண்டிருந்தன. பண்டகசாலையில் தீ படரக்கூடிய வாய்ப்புகள் பற்றி எவ்வளவு சிந்தித் தும் அவனுக்குப் புலப்படவில்லை. வெளித் திண்ணையிலும் மேல் தட்டின்மேலும் ஏறி எட்டிப் பார்த்தான். தேங்காய் மட்டை குவியல்களிலும் தேடித் திரிந்தான். எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

தீப்பிடித்தலுக்குக் காரணமாக இருக்கும் ஏராளமான சந்தேகங்கள் மனத்தில் குழம்பும்போது வெளியே வெளிப்பறம்பில் சிறியதொரு ஓசை. வெறிபிடித்த துரோகச் சுரத்துடன் மாமுட்டி ஒரே குதிப்பில் அங்கே சென்று சேர்ந்தான். தென்னங்கன்று குழிக்குள் சுருண்டு அமர்ந்திருந்த இரண்டு ஆண் நாய்கள் மின்னல் வேகத்தில் தப்பித்து ஓடுவதைத்தான் அவனால் காணமுடிந்தது.

பண்டகசாலையைச் சுற்றிலுமுள்ள பறம்புகளில் அவன் நெட்ட நெடுகிலும் பக்கவாட்டுகளிலும் பாய்ந்து சென்று நோக்கினான். குனிந்து அமர்ந்திருக்கும் சாத்தானாகவும் ஆயுதம் ஏந்திய மனிதக் கூட்டங்களாகவும் பல பொருள்கள் அவன் கண்முன்னால் இருளில் சிற்பங்களாயின. பறம்பின் வடக்கு மூலைக்குச் சென்று சேர்ந்ததும் மாமுட்டியை கண்டுவிட்டு தென்பக்க இருளில் புதிய உருவங்கள் சில திரும்பி ஓடின. வானத்தில் மின்னும் நட்சத்திரங்களில்கூட திருடர்கள் கனல்களாக மறைந்திருக்கலாம் என்று சந்தேகம் பிறந்தது.

முஸலியாரகம் வீட்டின் படுக்கையறைக்குச் சென்றபின்புதான் தன்னுடைய கைகளில் தீக்காயம் பட்டிருக்கிறது என்று மாமுட்டிக்குப் புரிந்தது. கார்த்தியின் மார்பில் விரல்களை ஓட விட்டபோதுதான் மார்பகங்களிலுள்ள குளிர்ச்சி இறங்கி தீக்காயங்களை சூடாற்றிக் கொண்டிருந்தது.

என்றாலும் அந்த நிலையில் அதிக நேரத்தை அவளிடம் தொடருவதற்கு அவனால் முடியவில்லை. அவளுடைய அரவணைப்பு வளையத்திலிருந்து திமிறி வெளியேறி அறையில் உலாத்தத் தொடங்கினான். ஜன்னல் கம்பிகளின் வழியே இருளுக்குள் உற்று நோக்கினான்.

பண்டகசாலையில் ஏற்பட்ட தீப்பிடித்தலைப் பற்றி வீட்டில் யாரிடமும் கூறவே இல்லை. கேள்விகளுக்கு ஒன்றும் பதில் கொடுக்கவில்லை என்றாலும் குளிர்விக்கும் குளிர்க் காற்றைப்போல் கார்த்தி அவனையே சுற்றிச் சுற்றித் திரிந்து கொண்டிருந்தாள்.

அமைதிப்படுத்திக் கொண்டிருக்கும் அவளுடைய பார்வையும் பேச்சும் மிக அதிகமான மூலாதாரத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய சந்தர்ப்பமாகத்தான் இருந்தது. அந்த அளவுக்கு பகைமை முற்றக்கூடிய சூழலில்தான் நாள்கள் நகர்ந்து கொண்டிருந்தன என்றாலும் அவளிடம்

நெருங்கும்போதும் அவளுடைய கை வளையத்துக்குள் அகப்படும் போதும் தான் ஆக மொத்தத்தில் குழப்பமாகிவிடுகிறோம் என்பதும், இதயத்தின் மூலையிலுள்ள தீச்சட்டியில் புகை எழும்புகிறது என்பதும் அவனுக்குப் புரிந்தது.

நேசம் ததும்பும் கார்த்தியின் வார்த்தைகளிலும் பாவனையிலும் தான் எதற்காக கல்லாகப் படுத்திருக்கிறோம் என்பதும், உருகாமல், எண்ணத்தால் கனிவு கொள்ளாமல் வெளித்தள்ளப்பட்டிருக்கிறோம் என்பதும் புலப்பட்டது.

எந்தவொரு பகையாளியோடும் மோதுவதற்கு அவள் அளிக்கும் பணிவிடையே போதுமல்லவா! ஊரோடும் ஊராரோடும் சவால்விட்டு நிலைத்து நிற்பதற்கும் அவளுடைய அரவணைப்பே போதுமல்லவா! இருந்தும் அவளுடைய கைவளையத்தின் தழுவலில் நான் முட்டாளாகி விடுகிறேன். மனம் தளர்ந்துவிடுகிறேன். தோற்கடிக்கப்பட்டுவிடுகிறேன். கார்த்தி அளிக்கும் அன்பை திருப்பமுடியாமல், அவள் வெளிப்படுத்தும் முதிர்ச்சியை வெல்லமுடியாமல் மீண்டும் மீண்டும் தோற்கடிக்கப்படுகிறேன்.

மற்றொருநாள் நடுநிசியில் முஸ்லியாரகம் வீட்டின் அடுக்களைப் பகுதியில் தீப்பற்றிக்கொண்டது. ஆம்பளை என்கிற வகையில் மாமுட்டி மட்டுமே அப்போது வீட்டில் இருந்தான். வெட்டிப்போட்ட வாழைத் தண்டுகளைப் போல் ஆயிஷாவும் குழந்தைகளும் கால்மாடு தலைமாடாக குறுகிப் படுத்திருந்தார்கள்.

தீ நாளத்தின் முணுமுணுப்பைக் கேட்டுவிட்டு துள்ளியெழுந்த மாமுட்டி முதலில் அடுக்களைப் பகுதிக்குப் போக முயற்சி செய்யவில்லை.காரணம் தீக்கொழுந்துகளுக்குப் பின்னால் பகையாளியின் பல்லும் நகமும் மறைந்திருக்கின்றன என்று அவனுக்கு நூறு விழுக்காடும் உறுதியாகி இருந்தது. இம்முறை பதிலடி கொடுக்க வேண்டுமென்று சிந்தித்ததும் பித்தத் திரவங்கள் இரத்தத்துக்குள் அடித்துப் பிடித்து ஏறின. அதிலிருந்து உற்பத்தியாகும் சக்தியையும் தளர்ச்சியையும் ஒரே நேரத்தில் மாமுட்டி அனுபவித்தான்.

தம்பிடித்த மூச்சிரைப்புடன் அவன் மாடியின் மேலுள்ள மரப்படிகளில் ஏறினான்.இரும்பினால் ஆனதாக இருந்தாலும் இருபக்கமும் தீட்டப்பட்டதொரு வாள் அங்கே கிடந்தது. பெரிய யானைச் சங்கிலியையும்,

யாருடைய தலையாக இருந்தாலும் ஒரே அடியில் உடைக்கக்கூடிய துடுப்பையும் தேடி எடுத்துக் கொள்ளவேண்டும். இனிமேல் மூன்றையும் கைவசம் தயாராக வைத்திருக்க வேண்டும். இதில் சிறிதுகூட அலட்சியம் காட்ட அவன் தயாரில்லை.

அடுக்களைக்குள் பதுங்கிச் சென்றபோது ஆயுதத்தைப் பயன்படுத்த ஒரு நிமிஷம் தாமதித்து விட்டான்.

அடுத்த நிமிடத்தில், கார்த்தி ஸ்டூலில் ஏறி சாற்றுக் கோலில் பிடித்த தீயை அணைத்துக் கொண்டிருந்ததைத்தான் அவன் பார்த்தான். தேவைக்குத் தகுந்தாற்போல் அவளுடைய கைகால்கள் நீண்டு வளர்ந்ததாக மாமுட்டிக்குத் தோன்றியது. அவள் சிறியதொரு ஸ்டூலில் நின்றுகொண்டுதான் பற்றியெரியும் மேற்கூரையை சாக்குத் துண்டால் அடித்து தீயை அணைக்க முயன்றாள்.

பாம்பாட்டிக்கு மயங்கும் பாம்புப் படத்தைப்போல் தீப்பொறிகள் திடீர் திடீரென்று படம் தாழ்த்துகின்றன. கொழுந்துகள் சிறிதும் மிஞ்சவில்லை. புகைப்படலங்கள் அவள் முகத்தைச் சுற்றி வளைத்து தெளிவற்றவளாக்கின.

புகைத் திரைக்குள்ளே சிரித்துக்கொண்டிருந்தாள் கார்த்தி. உடல் முழுவதும் வியர்த்துக் குளித்து உடுத்தியிருந்த புடைவை உடலோடு ஒட்டியிருந்தது. ஈரமாகிவிட்ட சதையை ஆடைகள் அனுபவித்துக் கொண்டிருந்தன. கீழே இருந்த படிகளின் மூலம் பார்க்கும்போது மார்பகங்களின் எடுப்பு நம்ப முடியாததாகத் தோன்றியது.

புகையின் மெல்லிய இழைகளை கைவீசி ஒதுக்கிவிட்டு அவள் மெல்ல மெல்ல மாமுட்டிக்கு அருகே இறங்கி வந்தாள். கண்கள் கலங்கி சிவந்திருந்தன. அமைதி தழுவியிருந்தது. பணிமுடித்ததனால் ஏற்பட்ட மகிழ்ச்சி கன்னங்களை மலரச் செய்திருந்தது.

கார்த்தி நெருங்க நெருங்க புகைச் சூழலின் சமரில் மாமுட்டி பின்னோக்கி இழுத்துக்கொண்டிருந்தான். மனத்திலுள்ள பயத்தோடு கைகளிலுள்ள ஆயுதங்களை அவன் மறைப்பதற்கும் முயன்றான். வாளையும் சங்கிலியையும் பின்புறமாகத் தள்ளினான். படகுத் துடுப்பை மூலையில் எறிந்தான்.

''அணையாத அடுப்பிலேர்ந்து ஓலைக்கட்டுல தீப்பிடிச்சி இருக்கலாம்.''

மிகவும் இயல்பாகத்தான் அத்தீப்பிடித்தலைப் பற்றி கார்த்தி பேசத் தொடங்கினாள். காண்பது எதையும் நம்பமுடியாமல் மாமுட்டி அவளையே உற்றுநோக்கிக் கொண்டிருந்தான்.

ஜன்னலுக்கு அப்பால் நழுவிய குழப்பமான கண்கள் சட்டென அங்கேயே நிலைத்து நின்றன. கும்மிருட்டின் உள்பிரிவிலிருந்து இரண்டு சாத்தான்களின் கண்கள்அப்போதே தான் சந்தேகத்துடன் தான் இருந்தோம் என்று நினைத்துக்கொண்டு அவன் மீண்டும் சம்ஹார ருத்திரனானான்.

வலதுகையில் வாளை ஏந்தினான். இடது கையில் இரும்புச் சங்கிலியைத் திரட்டி எடுத்தான். அப்போதைய அவசரத்தில் மூன்றாவதாக ஒரு கையும் முளைவிட்டதாகத் தோன்றியது.எப்படியோ படகுத் துடுப்பையும் உடலில் சேர்த்துக்கொள்ள முடிந்தது.

மாமுட்டியின் புஜதசைகளில் முண்டுகள் தோன்றின. நீல நிற நரம்புகளில் 'லாவா'* வடிந்தது. முகம் முழுவதும் சுருங்கி உடைந்து அநாகரிகமான சாயல்கள் தோன்றின. உற்று நோக்கும் கண்களுக்குள் ஜீவசக்தி முழுவதும் மையம் கொள்ளுவதாக இருந்தது. முதலும் முடிவுமாக ஓர் அடிதடிக்கு அவன் தயாராகத் தொடங்கினான்.

பூமியையே துளைக்கும் காலடிகளுடன் இலட்சியம் கொண்டு சந்தர்ப்பம் பார்த்து வெளிவாயிலுக்கு நகர்ந்து கொண்டிருக்கும் போது. கதவை வேகமாக சாத்திக்கொண்டு அதோ கார்த்தி அவன் முன்னே நிற்கிறாள். அவளுடைய உடலிலுள்ள ஒவ்வொரு அணுக்களும் உரக்கச் சிரித்துக் கொண்டிருந்தன. பெரியதொரு கறுப்புப் பூனை உருட்டிய கண்களுடன் அவளுடைய விரல்களில் பயந்து சுருண்டு கிடந்தது.

''இதை அடிப்பதற்குத்தானா வாளும் துடுப்பும்! பாவம், அது போய்க் கொள்ளட்டும்.''

---

* எரிமலைக் குழம்பு.

விட்டேற்றியானதொரு தாளத்தில் அவள் நீட்டி முழக்கிச் சிரித்தாள். மெல்லிய சந்துகள் முன்வரிசைப் பற்களுக்கு அழகுக் கூட்டின. முகத்திலிருந்து ஊற்றெடுத்த வியர்வைத் துளிகள் கண்ணீர்த் துளிகளைப்போல் தோன்றின. ஒரு துளி வியர்வை முத்து மூக்கின் முனைக்கு உருண்டு வந்து அங்கேயே நின்று மின்னியது.

அமைதியான சிரிப்பின் அடக்கங்கள் அனுதாபத்தின் பெருமூச்சாக மறுபிறப்பெடுத்தன. அவள் மாமுட்டியை வாஞ்சையுடன் முதுகில் தட்டி படுக்கையறைக்குள் நகர்த்திச் சென்றாள்.

நடந்த நிகழ்வுகளின் நிஜ நிலையைப் பற்றி அவன் சந்தேகப் படுபவனாக இருந்தான். பகையாளியின் கரங்கள் இல்லாமல் கூரைமேல் எப்படி தீப்பிடிக்க முடியும்? புரிந்து கொள்ள முடியாத செப்படி வித்தையைத்தான் கார்த்தி காண்பித்திருக்கிறாள். பகைத் தீயை அவள் மத்தாப்பூ வெளிச்சத்தைப்போல் வாயால் ஊதி அணைத் திருக்கிறாள். சாத்தானின் ஆகாரத்தை மாற்றி சிறியதொரு பூனைக் குட்டியாக்கி இருக்கிறாள். மர்மமான அவளுடைய குணங்களில் மனம் நிம்மதிப்பட்டு உறங்குவதற்கு அவனால் முடியவில்லை.

என்றாலும், ஒருமுறை கொஞ்சம் மயங்கிவிட்ட மாமுட்டி நேரம் விடிந்து வெகுநேரம் கழிந்ததையும் அறியவில்லை. பண்டகசாலைக்கு போகக்கூடிய வழக்கமான நேரம் ஆகியிருந்தது. உசுப்பி எழுப்பிய போது மனம் குழம்பியவனாக அவன் துள்ளி எழுந்தான்.

எதையும் எதிர்கொள்ளக்கூடிய வேகத்தில் அவனுடைய சதைப் பிண்டங்கள் முறுக்கேறி இருக்கின்றன. முஷ்டிகள் தொடுத்த குத்துக் களை ஏற்று கார்த்தியின் மூக்கில் இரத்தம் கசிந்தது. மேலுதட்டில் மென்மையான ரோமங்களுக்கிடையே பாதை அமைத்த இரத்தக் கோடுகளைக் கண்டு அவளைவிட மிரண்டது மாமுட்டிதான்.

''எங்கே... எங்கே... எங்கேர்ந்து ரத்தம் வருது?''

'ஒளிந்திருக்கும் ஆபத்தின் கற்பனை உருவத்தைப் போல் இரத்தத்தைக் கண்டதும் அவன் மீண்டும் மீண்டும் திகைத்தான். தான் சுருட்டி குத்திய கைமுஷ்டியின் குத்தை ஏற்றுத்தான் கார்த்தியின் மூக்கில் காயம் ஏற்பட்டதென்ற உண்மை தலைக்குள் ஏறுவதற்கு கொஞ்சம் அதிகமாகவே நேரம் எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

கார்த்தி அமைதிப்படுத்த முயற்சிக்கும் போதெல்லாம் மாமுட்டி மிகவும் குழப்பமடையத்தான் செய்தான். அவளுடைய அரவணைப்பிலிருந்து அவன் திமிறியவாறு வெளியேறினான். படுக்கையறையின் ஜன்னலில் முகத்தைப் பதித்துக்கொண்டு வெளிப்புறமாகக் கண்களைச் செலுத்தினான்.

முஸ்லியார்கம் வீட்டுக்குமேல் சூரியனின் விரல்கள் தொடத் தொடங்கிவிட்டிருந்தன. ஜன்னல்களின் மூலம் நோக்கும்போது ஆர்ப்பரித்து முழங்கும் கறுத்த கடல் தெரிந்தது. தலையிலடித்து உடைக்கும் கடல் அலைகளும் சீறி உமிழும் கடல்காற்றும் மன உளைச்சலுக்கான உச்சக்கட்ட பிரதிபலிப்புகளாகும்.

எல்லாவற்றுக்கும் அப்பால் வெகுதூரத்தில் அமைதியின் ஜல ரேகைகள் தெளிந்து தெரிந்தன. ஆனால் அங்கே சென்றால் மிக ஆழமாக இருக்கும். அதே போன்று என்னவென்றறியாத விதத்தில் தெளிவற்றதாகவும் இருக்கும். மாமுட்டி வெறுமனே தன்னை நினைத்துப் பார்த்தான். தன்னையே அழித்துக்கொள்ளும் உடலுறவில் மூழ்கிய அவன், ஆகக்கூடி காம மயக்கத்தில் மயங்கிக் கொண்டிருந்தான்.

அதன்பின் வந்த நாள்களில் இருளின் போர் முனைப்புகள்தான் தொடங்கிக்கொண்டிருந்தன. இரவு நேரங்களில் கடையைப் பூட்டிவிட்டுத் திரும்பும் மாமுட்டி ஒவ்வொரு காலடியை வைக்கும்போதும் பின்னோக்கித் திரும்பிப் பார்த்தான்.யாரோ தன்னைப் பின்தொடர்வது போலிருந்தது. வஞ்சகம் பேசும் பொய்யர்கள் அவன் பின்னால் சென்று கிண்டல் செய்து சிரித்தார்கள். எதிர்பாராத அடிகளையும் மறைந்திருந்து வெளிப்பட்ட தாக்குதல்களையும் தடுத்துத் தடுத்து அவனுடைய முஷ்டிகள் நாளுக்குநாள் சோர்ந்து வந்தன.

பதினைந்து

ஒருநாள் மாலையில் இரத்தாபிஷேகத்துடன் குந்தி களமாக புது பொன்னானி படகுத் துறையில் மயங்கிக் கிடந்தது. கட்டுமரத்தை கொண்டுவந்து ஏராளமான ஆட்கள் வேக வேகமாக அதில் ஏறினார்கள். சாவக்காட்டுக்குப் போன செய்துமுல்லாவும் திரும்பி வந்துகொண்டிருந்தான். அவன் தனிமையில் இருக்கவில்லை. அந்திச் சிவப்பை அருந்திய முகமும் கண்களுமாக பத்துபேர்கள் அவனுடன் இருந்தார்கள். அந்தச் சிவப்புத் தோற்றம் அவர்களுக்கு ஜல்லிக்கட்டுக் காளைகளின் இறுமாப்பை அளித்தது. பலமான கைகளில் வைரம்பாய்ந்த கட்டுமரம் நீர்ப்பரப்பில் நழுவிப் பாய்ந்தது. சில நிமிஷங்களுக்குள் அக்கரையை அடைந்தது.

நடப்பதாகவோ ஓடுவதாகவோ இல்லாத நிலையில் அவர்கள் மிக வேகமாக சல்லடையாகச் சலித்துக்கொண்டிருந்தார்கள். அந்திக் குருதி பழுத்து கருத்திருந்தது. பொன்னானியை நெருங்க நெருங்க கும்மிருட்டு ஊரையே கையில் தூக்கிக்கொண்டது. செய்துமுல்லாவும் அவனுடைய குழுவினரும் அந்த இரவிலேயே பிரிந்து சென்று பொன்னானியின் இரத்த நாளங்களில் மறைந்தார்கள். அவர்களுக்குப் பின்னாலுள்ள செயலும் சலனமும் இருளின் திரைகளில் மர்மமாயின.

தொழுகை முடிந்து மசூதி வளாகத்திலிருந்து திரும்பும்போது கயிற்று வலையைப் போன்றுள்ள வார்த்தைகள் மாமுட்டியை வளைத்து நிறுத்தின.

''இந்த நாய்க்கு எதுக்குடா மசூதி? கட்டி வச்சிருக்கிற கக்கூசுல போயி தொழச் சொல்லேண்டா?''

மாமுட்டி பின் வாங்கினான். பழக்கமில்லாத ஒரு முகத்தில் வெட்கமில்லா தன்மையைப் பார்த்து பொன்னானி மாப்பிளாக்கள் திகைத்தார்கள். யார் எதற்காக என்பதையெல்லாம் மாமுட்டி பார்க்க முடியவில்லை. சில காலமாகவே அவனுக்கு ஊர்க்காரர்களின் முகங்களெல்லாம் ஒரே சாயலாகத்தான் தெரிந்தன. பல மாதங்களாக உள்ள மனவேதனையால் தயார் நிலையிலிருந்த தசைகள்கூட திடீரென்று சேர்வடைந்தன. குதிரைகளாக மாறிய முஷ்டிகள் எவ்வளவு பறந்தாலும் அவனுடைய கையின் வேகம் மட்டும் அடங்கவில்லை. திரும்பி வந்தபின் மசூதி மதிலில் தன்னுடைய மேல் புஜங்களால் இடித்து இடித்து மாமுட்டி தன் மனத்தை தேற்றிக் கொண்டிருந்தான்.

முதல் மூச்சிலேயே அசிங்கமாகப் பேசியவனின் உடல் ஓர் உலகம் போன்று சுருண்டு உருண்டு தரையில் வீழ்ந்திருந்தது. அவன் வாயிலிருந்து கூடான இரத்தம் இரண்டு மூன்று கட்டங்களாக சிலைமேல் தெறித்தன. குலைதள்ளி விரிந்த இரத்த கொப்பளிப்புகளைக் கண்டதும் பண்டகசாலையிலும் வீட்டிலும் பற்றிய தீப்படர்ப்பினைத் தான் மாமுட்டி நினைத்துக்கொண்டான்.

தீயும் சிவப்பு நிறமும் வித்தியாசமான வண்ணக்கடுமைகளுடன் சில காலமாகவே வேட்டையாடத் தொடங்கிவிட்டன. எப்போதும் ஆபத்துகளையே பார்த்துக் கொண்டிருந்த மனம் இப்போது மரத்துப் போயிருந்தது. ஒருவனை பிணமாக்கி மசூதி முற்றத்தில் போட்டதின் பேரில் தனிப்பட்ட எந்தவொரு குழப்பமும் அவனுக்குள் தோன்றவில்லை.

அதன்பின் வந்த நாள்களில் செய்துமுல்லா ஒரு தீப்பிடித்த அரக்கனின் சொரூபமானான். கண்களில் பட்ட கடைத்தெரு வீடுகளிலெல்லாம் நுழைந்து கோபமென்னும் தீப்படரும் மேலங்கிகளை ஒதுக்கினான். தங்களுடைய மனத்திலும் உடலிலும்கூட தீப்படருமோ என்று சில சந்தர்ப்பங்களில் பொன்னானி மாப்பிளாக்கள் விசனித்தார்கள்.

தன் மனத்துக்குள்ளே இருக்கும் புதுப்புது விஷச் சுரப்பிகள் பற்றி காலம் செல்லச் செல்ல மாமுட்டிக்குத் தெளிவாக தெரிந்து கொண்டிருந்தது. இதற்கிடையே அவனுக்கு அதிகமான சிந்தனைகள் வியாபார விஷயங்களைப் பற்றியல்ல. முதலில் நினைவில் வந்தது கொடுக்கல் வாங்கல்களில் நிகழக்கூடாத சதிகளைப் பற்றித்தான்.

தான் வாங்கவேண்டிய பொருள்களை அடுத்த கிராமங்களிலேயே பேரம்பேசி வாங்க முடியும் எனும் விவரம் கிடைத்தால் தனக்கு உடனே சந்தேகம் தொடங்கி விடுகிறது. பண்டகசாலைக்கு தீ வைப்பதற்காக அல்ல, அந்த சாத்தான்கள் வலை விரிப்பது: தன் அழிவுக்குத்தான். அதனால் தனக்கு குழந்தை ஆசை இப்போதைக்கு வேண்டாம். அந்த ஆசை மனத்துக்குள்ளேயே இருக்கட்டும்.

வியாபாரத்தில் வரும் வருமானம் குறைந்து வந்தபோது மற்றவர் களைத்தான் மாமுட்டி சந்தேகப்பட்டான். தற்செயலாக கடை வாயிலுக்கு வந்து தாண்டிச் செல்லும் வழிப்போக்கனைக் கூட ஏதோ விஷயமுள்ளவனாகப் பார்த்து பகை கொள்ளத் தொடங்கினான். கடைவீதி மாப்பிளாக்களின் மௌனமான உதவியற்ற தன்மையை அம்முகங்களில் எழுதாத கதைகளாகத்தான் வாசித்தான். நட்பு என்னும் எண்ணத்தை பூலோகத்தில் உணர்ந்துகொள்ள வேண்டிய தருணம் இன்னும் எஞ்சி இருக்கிறது என்றுதான் கடைசியில் அவன் கண்டுபிடித்தான்.

அரபிக்கடலைத் தவிர்த்துவிட்டு பொன்னானியில் அதிகமாகப் பரவியிருந்த மாமுட்டியின் அந்த வெடிச்சிரிப்புக்கு இப்போது மார்க்கெட் போயிருந்தது. அவனுடைய மேலுதட்டின் இடது ஓரம்கூட கோணிப்போய் நாசமாகி இருந்தது. புருவங்களுக்கு மத்தி யில் சூலம் வடிவிலுள்ள மூன்று கோடுகளும் வெளிப்பட்டிருந்தன.

பாக்கு வியாபாரத்தில் நிகழ்ந்த இழப்பினைப் பற்றிச் சிந்தித்து விட்டு வெகுநேரம் கழித்துத்தான் மாமுட்டி அன்றிரவு உறங்கினான். காலையில் கண்களைக் கசக்கிக்கொண்டு எழுந்தவன் கார்த்தியைத்தான் நேரில் கண்டான். காலைக் கடன்களையெல்லாம் முடித்தபின் காளிகோயிலில் தொழுதுவிட்டு திரும்புகிறாள்.

தாயை அழித்துக் கொண்டுதான் இளஞ்சூரியனின் பிறவி என்று தோன்றியது. காய்ந்து கருத்துவிட்ட தோய்ந்த இரத்தம் அடிவானத்தில் சிதறிக் கிடக்கின்றது. பலவீனமான விழிகளுடன் சூரியக் கதிர்கள் எட்டிப் பார்க்கின்றன. வடக்கு முற்றத்தையடைந்துவிட்ட பின்பும் கார்த்தியைத் தொட முடியாமல் அவை தயங்கித் தயங்கி விலகி நிற்கின்றன.

விடியலின் சோம்பல் கொஞ்சம்கூட அவளைத் தீண்டவில்லை. அக நிறைவு மின்னும் முக பிம்பமும் அனைத்தையும் உள்வாங்கக்கூடிய

மலர்ந்த கண்களும், ஈரம் உலராத உடலோடு ஒட்டிநிற்கும் சேலைகளும், பரவிக் கிடக்கும் கூந்தல் பாரத்திலிருந்து பொழிந்து விழும் நீர்த்துளிகளுமாக எதிரில் நின்றாள் கார்த்தி.

மனைவிக்காக கோயில் கட்டியதற்குப் பின் தினந்தோறும் காணும் காட்சிதான் இது. இன்றைய தினம்வரை இந்த ஆராதனையின் ஒளிப் பரவலில் மட்டுமே இந்தக்காட்சியை அவன் நோக்கி நின்றதுண்டு. ஆனால், மாமுட்டி அன்று சட்டென முகத்தைத் திருப்பிக்கொண்டான். தன்னுடைய ஆராதனையில் பயத்தின் முட்கள்தான் இருந்ததென்று ஒரு வெறுமையோடு புரிந்து கொண்டான்.

என்னவென்று தெரியாத ஒரு வெறுப்புதான் அவனை அப்போது கோபாவேசத்துடன் தடுத்தது.

அவளுடைய பார்வைகள் தன்னைத் தேடி வருவதை அறிந்தபோது யுகத்துடன் திரும்பி நடந்தான். அவற்றை தன்னால் எதிர்கொள்ள முடியாது என்று மாமுட்டிக்கு வறக்குறைய உறுதியாகிவிட்டது.

தோல்வி என்பதே என்னவென்று அறியாததொரு உலகத்தில் தான் இவ்வளவு காலமும் வாழ்ந்துவிட்டோம். இன்றைக்கோ தோல்வி என்னும் மதுக்கிண்ணங்கள்தான் தனக்கு எங்கும் கிடைப்பதாக உள்ளன. மரியாதையில்லாமை எனும் முட்களை தன்மேல் எறியும் ஊர்க்காரர்களும் சொந்தக்காரர்களுந்தான் இப்போது இருக்கிறார்கள். இதற்கிடையே நடுநடுவே நிகழும் வியாபார இழப்புகள் வேறு.

எல்லாவற்றுக்கும் மேலாக ஒவ்வோர் இருபத்தியெட்டாம் நாளும் அனைத்திலும் சிவப்பு நிறம் அணிந்து தன் முன்னே வரும் மனைவி. அன்று அவளின் கன்னங்களும் நெற்றியும் முடி இழைகளும் மட்டுமல்ல, இதயம்வரையில் ஒரே சிவப்புமயமாகத்தான் இருக்கும். ஆரம்ப மாதங்களிலெல்லாம் தன்னம்பிக்கையுடன்தான் மாமுட்டி நினைத்திருந்தான்.

''இதோ பாரு, அடுத்த முறையில் உன்னோட அரளிப்பூக்கள் உதிர்ந்து விழுவதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். காய்முற்றி பழமாகித்தான் நீ என் அருகே வருவாய்.''

ஆனால், மீண்டும் மீண்டும் சிவப்புப் புஷ்பங்கள் பழமாகாமலேயே உதிர்ந்து கொண்டிருந்தன. படுக்கையறைக்குள் நுழையும்போதுதான்

மாமுட்டி பதற்றமடைந்தான். துளிர்த்துத் தழைத்து மின்னும் கார்த்தியின் உடலில்தான் என்ன செய்யவேண்டும் என்பதில் அவனுக்கு எந்தவொரு வடிவமும் கிடைக்கவில்லை. தன்னம்பிக்கைக் குறைவு ஆண்மையை சுருக்கிட்டு இழுத்தது. ஆறடிக்கும் அதிகமான உயரமுள்ள ஆஜானுபாகுவான மாமுட்டி முசுடு எறும்பைப்போல் சுருங்கிக் குறுகினான். மாற்றுவழி இல்லாமல் ஒரு கடமையைப் போல்தான் அவளுடைய நிர்வாணத்தில் படுத்துக் கடித்து இறுக்கினான்.

ஒவ்வொரு பெருமூச்சிலும் சோர்வுற்றுத் தளரும்போது கார்த்தி அவனை ஆசுவாசப்படுத்திக்கொண்டிருந்தாள். நேசச் சுரப்பிகள் சுரந்த உள்ளுணர்வை இளக்குவதற்கு முயன்றாள். அப்படிப்பட்ட தொடக்கங்களிலெல்லாம் தாய்மையின் முலைப்பாலைத்தான் அவள் உடலில் மாமுட்டி முகர்ந்தான். அவ்வாறு முகர்ந்த உடனேயே அவன் பயந்து விலகி பலவீனனாகி கவிழ்ந்து படுத்தான். படுக்கையறையிலிருந்து எப்படியாவது தப்பிக்க வேண்டிய வழிகளைத் தேடினான்.

மாமுட்டி கண்பார்வையிலிருந்து விலகி, தன்னிடமிருந்து ஒதுங்கி நடப்பதை பிரத்தியேகமாகக் கவனித்துக்கொண்டுதானிருந்தாள் கார்த்தி. வடக்கு பக்க முற்றத்திலிருந்து திரும்பிவந்த அவள் அவனுக்குப் பின்னாலேயே தேடி நடந்தாள். கார்த்தி உள் வராந்தாவுக்குள் நுழையும்போது மாமுட்டி படுக்கையறைக்குள் மாறினான். கார்த்தி படுக்கையறைக்குள் வரும்போது மாமுட்டி முன் வராந்தாவுக்கு போய் விட்டிருந்தான். முன்வராந்தாவை அடைந்ததும் அவள் கண்டது பாதையோரம் திரும்பி நடக்கும் மாமுட்டியைத்தான்.

மறைந்து ஓடும் சிறுவனின் குறும்புதான் அவள் மனத்தில் முதலில் உருகி வந்தது. ஆனால் பின்பு அதுவே கொதித்துப் பொங்கி சுட்டுப் பொசுக்கும் 'லாவா'வாக உருவம் பெற்றது. மனித இதயத்தை மிகமிக உயரமான கோட்டைகளை கட்டியெழுப்பி அவற்றில் தனிமைப் படுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றுதான் கார்த்தி சிந்தித்தாள். பிறந்த நாள் முதற்கொண்டே அக்கோட்டைச் சுவர்களை அடித்து நொறுக்குவதற்காக அது பாடுபடுகிறது. மற்றொரு உயிருடன் இணைவதற்காக சிறகடித்து தன்னையே அழித்து சிறகடித்துப் பறக்கிறது.

என்றாலும், ஓர் அங்குலம்கூட நகராத கொடூரமான அந்தக் கோட்டைக் கல்லில் அடிபட்டு நொறுங்கிப் போகிறாள். மிகவும் நெருக்கமுள்ளவனின் ஆத்ம வட்டத்தைக்கூட காணமுடியாமல் அதற்குள்ளே

யுள்ள பராக்கிரமும் பயனில்லாமல்போய் மழுங்கியிருக்கும் தன் தனிமைக்குள்தான் அடக்கப்படுகிறாள்.

தப்பியோடிச் செல்லும் சிறுவனின் திரும்பி வருதலைப் போல்தான் மாமுட்டியின் இரவுநேரச் செயல்பாட்டு முறையும் இருந்தது. படுக்கை அறைக்குள் நுழைவதற்கு அவன் சிறிதுநேரம் தயங்கித் தயங்கி நின்று திரும்பவும் நாடகமாடினான்.

மெத்தையில் சாயும் கார்த்தியைக் கவனிக்காமல் திடீரென ஒரு பக்கமாக ஒருக்களித்து முதுகைக் காட்டிப் படுத்தான். தூங்குவதுபோல் நடித்துவிட்டு மவுனத்தின் போர்வைக்குள் வலிந்து புகுந்தான்.

மாமுட்டியின் ஒவ்வொரு அசைவுகளையும் கார்த்தி மனத்தாலேயே பின் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருந்தாள். வந்த நிமிஷத்திலும் எழுந்துகொள்ளத் தயார் நிலையில் படுத்திருந்த அவளுக்கு தன்னுடைய மாப்பிளை அதை விரும்பவில்லை என்று தெளிவாயிற்று. துக்கத்தின் சாடைகள் இறுகமுயற்சிக்கும் போதெல்லாம் மனம் தடுமாறி எங்கெல்லாமோ சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

ஒன்று வாழ்க்கையின் நியதிகள், இல்லையென்றால் மரணத்தின் நியதிகள். இரண்டினாலும் தன்னை தனிமைப்படுத்தத்தான் செய்திருக்கிறான். அம்மாவும் சங்குமாமாவும் துணைக்கு இல்லாமல் போனதால், இறந்துவிட்ட தன் பாட்டியைத் தேடி அவள் இடுகாடுவரை சென்றதுண்டு. இருந்தும் அவளால்கூட தனக்கு உதவ முடியவில்லை என்றுதான் சொல்ல நேருகிறது.

இறந்துவிட்டதினால் எழுந்து வருவதற்கு முடியாதாம். அவளுடன் சேர்ந்து ரணம் செய்வதற்கும் முடியாதாம். மேலே புல்லரத் தறவாட்டிலும் கடந்து சென்ற நாள்களின் நிலைமை அப்படித்தான் இருந்தது.

மாமுட்டியின் விலகலைப் பற்றி பெரும் ஆச்சரியமொன்றும் தோன்ற வில்லை. அதற்குப் பதில் எதற்காக என்று தெரியாத குமைச்சலும், அவற்றையெல்லாம் அடிமைப்படுத்தும் ஒத்த அனுபவ முகிழ்வும் தான் மனத்தில் நுரை பொங்கி வழிந்தது.

கார்த்தியின் வருகையைத் தொடர்ந்து தோன்றிவந்த பயங்களெல்லாம் ஆயிஷாவிடம் மங்கி மறையத் தொடங்கின. ஒரு தோழியாக

அங்கீகரிக்க முடியவில்லை என்றாலும் நாத்தனாரின் இருப்பில் பாதுகாப்பின் வெப்பத்தை ஆயிஷா அனுபவிக்கத் தொடங்கினாள். கூரைக்குத் தீப்பிடித்தபோது இக்காக்காவைவிட மனவுணர்வோடு அவள்தான் விழித்தெழுந்து செயல்பட்டாள். என்னதான் நேர்ந்தாலும் அவளுடைய முகத்தில் பயரேகையின் கருப்புக் கோடுகள் சிறிதுகூட வெளிப்படவில்லை.

பிள்ளைகளுக்கு சுரமோ வயிற்றுப்போக்கோ வற்பட்டால் நாத்தனாரிடம் போய் விபரம் சொன்னாலே போதும். பறம்பிலுள்ள செடிகளைப் பறித்துவந்து உள்ளங்கையில் வைத்து கசக்கி உருட்டி உடனே மருந்து தயாராகி விடும். அத்தை கொடுக்கும் மருந்தை வாயில் வைக்கவேண்டியதுதான் தாமதம், உடனே பிள்ளைகளின் உடல் நலமின்மை சரியாகி விடும். மருந்து எதுவும் இல்லை என்றாலும் சிறுவனின் வயிற்றை அமுக்கிப் பிடித்து நாத்தனார் அமைதியாகக் கூறுவாள்:

''அடேய், உனக்குத்தான் வந்தவொரு தொந்தரவும் இல்லையே; நீங்க தேவதூதருங்க. தேவதூதருங்கள வயிறு வேதனைப்படுத்தாது'' என்று சொன்னதும் அழுவும் சிறுவன் உடனே சாதாரணமாகிவிடுவான். அத்தையின் வார்த்தைகளை வேதம்போல் ஏற்றுக்கொள்ளும் சிறுவன் பறம்பில் சென்று சுகமாக மலம் கழிப்பான்.

தாற்காலிகமாகக் கட்டிய கோயிலிலிருந்து நாத்தனார் பிரார்த்தித்து விட்டுத் திரும்பும்போது அதற்கான பரிகாரமும் அந்த முகத்தில் உறைந்துள்ளதாகத் தோன்றும்.

சதாநேரமும் தொந்தரவு செய்து கிரியும் இக்காக்காவிடமிருந்து சிறிது காலமாக ஆயிஷாவைப் பொருட்படுத்துவதோ கவனிப்பதோ போன்ற அன்புத் தொல்லைகள் கிடைப்பதில்லை. நாத்தனாரின் வருகைக்குப் பின் பீரான்கூட வீட்டிலிருக்கும் நேரமும் குறைவுதான். இருக்கும் நேரத்திலும்கூட கடற்கரையில் பிடிபட்ட மீனைப்போல் வெளியே துள்ளிப் போக ஒரே படபடப்புதான்.

நினைவு தெரியும் நாள்களுக்கு முன்பே உம்மாவும் வாப்பாவும் இறந்துவிட்டதும், இக்காக்காதான் எல்லாமாக இருந்தாள். ஆழ்ந்த உறக்கத்தில் வரும் கனவைப்போல் சிறியதொரு இடைவேளையில் புதுமாப்பிள்ளை தோன்றினான். அவன் இறக்கும் வரையிலான சில

ஆண்டுகளில் பிள்ளை பெறுவது மட்டுமே ஆயிஷாஷக்கு நினைவில் இருந்தது. மூன்று ஆணும் மூன்று பெண்ணுமாக ஆறு குழந்தைகளை உற்பத்தி செய்ததும் ஆயிஷாவின் கணவன் பூமிக்குள் மறைந்து விட்டான்.

ஒரே துணையான மாமட்டி தலைக்குள் தீப்பிடித்ததுபோல் நடமாடத் தொடங்கியதும், ஆயிஷா தலைசாய்த்து ஆறுதல் தேடியபோது கண் முன்னே தோன்றியவள்தான் கார்த்தி. களங்கமற்ற மனமுடையவளான அவள் அவ்விஷயத்தை அண்டை வீட்டிலுள்ள பாத்தும்மாவிடமும் வேலைக்கு வரும் ருக்கியாவிடமும்கூட சொல்லியிருக்கிறாள். தேவலோகத்திலிருந்து வந்த குரேஷியைப் போல் ஒரு நாத்தனார் வீட்டிலுள்ளபோது யாருக்குதான் அன்பு தோன்றாமல் இருக்கும்? பொறாமைக்கோ சண்டைக்கோ முயற்சி செய்யக்கூட கார்த்தியின் உயர் பண்பு அவளிடம் சம்மதிக்க வைக்கவில்லை.

அவளுடைய அழகையும் திறமைகளையும் பற்றி ஒன்றுக்கு பத்தாக எடுத்துவைத்து அண்டை வீட்டார்களிலும்கூட விலாவாரியாகச் சொல்லி இருக்கிறாள் ஆயிஷா.

''என்னோட இருக்கறப்ப எப்படிப் படுத்திருந்த குழந்தை. அவங்க கையலெ ஒடுதுளி மடந்து உள்ளே போனதும் பையன் குதிரைக்குட்டிய போலல்லவா ஓடத் தொடங்கினான்!''

கார்த்தியின் மூலிகை மருந்து பிரயோகங்கள் ஆயிஷாவிடமிருந்து ருக்கி மூலமாக அண்டை வீடுகளுக்கும் கசியத்தொடங்கின. அங்குள்ள பெண்களுக்கு அவளிடம் நெருங்குவதற்கும் மூலிகைப் பிரயோகங்களை பரிசோதிப்பதற்கும் என்னவென்று சொல்ல முடியாத அளவுக்கு ஆவல் அதிகரித்தது.

கோயில் கட்டச் சொன்னதால் ஏற்பட்ட களங்கம் முஸ்லியார்கம் வீட்டை சுற்றிச் சூழ்ந்துள்ள நேரம் இது. அதனால் ஒவ்வொரு பெண்ணுக்கும் தம் அண்டை வீட்டார்களுக்கு தெரிந்துவிடுமோ எனும் பயம்தான் கார்த்தியுடன் உறவு மேற்கொள்ள தயக்கமாக இருந்தது. என்றாலும் மறைவு துறவாக வேலிக்கு அப்பாலிருந்து கார்த்தியின் அசைவுகளை பார்த்துக்கொண்டுதான் இருந்தார்கள்.

ஒருநாள் அந்தியில் பாத்தும்மாவுக்கு வயிற்றுக்குள் உருண்டு ஏறும் குன்மத்தால் வலி ஏற்பட்டது. கைகளால் வயிற்றை அழுத்திக்

கொண்டே முஸ்லியாரகம் வீட்டுக்குள் பலவற்றையும் நினைத்தவாறே சென்றாள். அவள் ஆயிஷாவின் காதில் மெதுவாகச் சொன்னாள்.

''மகளே வயித்துல புரட்டற புரட்டல தாங்க முடியல. அவ கையிலேர்ந்து ஏதாச்சும் வாங்கியாந்து குடேன்...''

மேலே புல்லாரவளாகத்தில் அம்மம்மாவோடு சுற்றித் திரியும் போதுதான் கார்த்தி சில பச்சிலை மருந்துகளைக் கற்றுக் கொண்டது. வயிற்றில் மேலும் கீழும் புரளும் குன்மநோயைப் பற்றிய விவரம் அவளுக்குப் புதுமையாக இருந்தது என்றாலும் சரணமடைந்ததைப் போல் தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் பாத்தும்மாவைக் கண்டதும் கார்த்தியினுள் கனிவு நிறைந்தது.

எப்படிப்பட்டதொரு ஆராதனையோடும் நம்பிக்கையோடும் அந்தத் தாய் தன்னையே நோக்கிக் கொண்டிருக்கிறாள்! இவருக்கு சிகிச்சையளிக்காமல் வேறு வழியில்லை. அனுதாபக் கைகளுடன் தொட்டுப் பார்க்கும்போது கார்த்தி இவ்வாறுதான் சொன்னாள்:

''வலியாவா, இருக்கு? அப்படின்னா அதை எனக்குக் கொடுத்துடுங்களேன்.''

நம்பிக்கையின் மத்தாப்புகள் கண்களில் மின்னி மறைந்ததும் கைகளை நிலத்தில் ஊன்றி கவனத்துடன் பிடித்து எழுந்து கொண்டாள். கூப்பிட்ட உடனேயே தன்னுடைய வயிற்றிலிருந்து வெளியேறிச் சென்ற குன்மநோய் கார்த்திக்குள்ளே தொல்லையைக் கொடுக்கிறதோ என்று கவனித்துப் பார்த்தாள்.

பாத்தும்மாவின் குன்மம் குறைந்த விவரம் மவுன மொழியாக பெண்களுக்கிடையே தீயாய்ப் பரவியது. பல வியாதிகளுக்கான பரிகாரத்தையும் தேடி ரகசியமாக அவர்கள் முஸ்லியாரகம் வீட்டுக்கு சொல்லியனுப்பினார்கள். வீட்டிலுள்ள ஆண்களுக்கு சிறிய அளவில் அவளைப் பற்றித் தெரிந்திருந்தாலும், எல்லாவற்றையும் அனுசரித்து அறியாத மட்டில்தான் நடித்தார்கள். அண்டை வீட்டார்கள் தங்களைப் பற்றிய எதையும் அறிந்துவிடக்கூடாது என்பதை மட்டும் முக்கியமாக மனத்தில் பதித்திருந்தார்கள்.

தன்னை ஆராதிக்கும் ஒரு சமூகம் கண்களுக்குப் புலப்படாமல் வளர்ந்து வருவதை கார்த்தி புரிந்துகொண்டிருந்தாள். அசாதாரண

மானதொரு வஞ்சப்புகழ்ச்சியைப் போல் அவளுக்குக் கிடைத்தது என்னவோ முற்றிலும் தனிமைதான். பொன்னாலியில் வீசும் சுகமற்ற உப்புக் காற்றுகூட அவளைவிட்டு பணிவுடன் விலகிச் சென்றது. அது வாஞ்சையுடன் தன்னுள் வீசி மூடுவதை எதிர்நோக்கி அவள் வெறுமனே ஆவலுடன் நின்றாள்.

கார்த்தியின் இருப்பில் ரகசியமாக என்னவெல்லாமோ இருக்கிற தென்று மாமுட்டிக்கு தோன்றத் தொடங்கியது. இறுகி நின்ற மனத்தில் துற்றுக்கணக்கான சந்தேகங்கள் கொந்தளித்துக் கொண்டிருந்தன. அவளை தோளில் தூக்கிப்போட்டுக்கொண்டு வந்த மாமுட்டியின் பலவீனங்கள் வெகுதொலைவில் கண்ணாமூச்சி ஆடின. இவள் வந்துசேர்ந்த நாள் முதல்தான் தன்னுடைய அமைதியும் ஆரோக்கியமும் அழிந்திருக்கின்றன. ஊரிலுடையதும் ஊராருடையதுமான குணமும் மாறி இருக்கிறது. என்னவெல்லாமோ நடந்தாலும் அவளுக்கு முன்னால் அவன் சென்றுவிட்டால் போதும். சுத்த வீரனான மாமுட்டியை தைரியமில்லாதத்தன்மையும் ஒரு குழந்தையாக மாற்றி தொல்லைப்படுத்திவிடுகிறது.

சிந்தியும் தும்மியும் கொழகொழப்பான ஜலதோஷ உபாதை சில தினங்களாகவே ஆயிஷாவின் பிள்ளைகளுக்கு தொடங்கி விட்டது. மூக்கிலிருந்து இறங்கும் நீண்ட கொம்புகளை நாவின் நுனியால் நக்கப் பார்க்கும்போது அவள் பிள்ளைகளின் தலையில் கொட்டினாள். அதன்பின் பலமாகப் பிடித்துக்கொண்டு மூக்கிலுள்ள சளிக்கட்டை பலமுறை சிந்தி வெளியேற்றினாள் கார்த்தி.

குழந்தைகளுக்கு சளிக்குக் கொடுப்பதற்காக துளசியையும் நவரைப் புல்லையும் இஞ்சியையும் சேர்த்து அரைத்த கலவையை சிறிது நேரத்தில் தயாராக்கத் தொடங்கிவிட்டாள் அவள்.

முஸ்லிய ரகம் வீட்டின் முற்றத்தைத் தாண்டியதும் மூன்று நான்கு அடுக்குத் தும்மல்களால் மாமுட்டியும் அலமலர்ந்துவிட்டான். மார்பில் கட்டியிருக்கும் கபக்கட்டை சுமந்துகொண்டுதான் உள் வராந்தாவுக்கு அவன் பலகாரம் உண்ணுவதற்காக நுழைந்தான். கண்களிலிருந்து கண்ணீர் வடிந்துகொண்டும் நாசி சிவந்து வீங்கியும் இருந்தன.

நாத்தனார் தயாரிக்கும் மருந்தை கொஞ்சம் ஊற்றிக்கொண்டு மாமுட்டியை நெருங்கினாள் ஆயிஷா. பெரியதொரு விஷ

யத்தைப்போல் ஆவேசத்துடன், ''பிள்ளைங்களோட சளிக்காக பாபி தயாரிக்கிற மருந்துதான் இது. சீக்கிரம் குடிச்சுப் பாருங்க...உங்க சளியும் மாறிடும் இக்காக்கா...'' என்றாள்.

திடுக்கிட்டுப் போய் கண்களுக்குக் கூர்மையை அதிகரித்துக் கொண்ட மாமுட்டி என்னவோ சொல்ல ஆரம்பித்தான். திடீரென்று குறுகி வெளியேறிய இருமலுடன் தும்மல்களின் பிரவாகம் தொடங்கியதும் வார்த்தைகள் சிதறிப் போயின. என்றாலும், அவன் ஆயிஷா நீட்டிய மருந்துப் பாத்திரத்தை இடது கையினால் தட்டியெறிந்தான்.

தலையை நிமிர்த்திப் பார்த்தபோது வீரியமுள்ள கூர்மையான வாட்களைப் போல் கார்த்தியின் கண்கள் வாயிற்படியிலிருந்து பிரவாகித்துக் கொண்டிருந்தன. முன்னால் இருக்கும் சோற்றுப் பாத்திரத்தில் கைகளை உதறிக்கொண்டு மாமுட்டி வேகமாக வெளியேறி இறங்கிச் சென்றான்.

பதினாறு

ஆயிஷாவின் கணவன் வீட்டிலிருந்து பண்டிகை தினங்களில் பலகாரப் பொட்டலத்துடன் வரும் அமீரை மாமுட்டி காண்பதுண்டு. பெருநாள் தினத்தில் கொஞ்சம் நாணயங்களை கைகளில் கொடுப்பதுண்டு. இவ்வளவு மட்டும்தான். இதைத் தவிர வேறொரு தனித்துவம் இத்தனை காலமும் அவனுக்குத் தோன்றியதில்லை. புதுப் பொன்னானி படித்துறையைக் கடந்து பல மைல்கள் தாண்டிவரும் கணவனின் மருமகனை அந்தியாவதற்குள் திரும்ப அனுப்பி வைப்பதற்கு ஆயிஷாவுக்கு அவசரம்தான். அவன் வழியிலேயே ஆடிப்பாடி வீட்டுக்குத் திரும்பிச் செல்ல இருட்டிப் போய்விடுமோ என்பதுதான் அவளுடைய பயம்.

உணவுப் பொருள்கள் பொட்டலத்தைத் தூக்கிக்கொண்டு சோர்வோடு நடந்துவந்த அமீரை இந்தத் தடவை உடனே ஊருக்குப் போக அனுமதிக்கவில்லை மாமுட்டி.

''எப்போதும் அவனை இருட்டறதுக்குள்ள துரத்தி விட்டுவிடணுமா? ரெண்டு நாளைக்கு இங்கதான் தங்கட்டுமே.''

மாமுட்டி ஆயிஷாவை கடிந்துகொண்டான். போன தடவையும் மாமுட்டி அவனிடம் தங்கும்படி சொன்னான் என்றாலும் வீட்டில் தொந்தரவாகுமென்று கூறி அவள் அவனை அனுப்பி வைக்கத்தான் செய்தாள். படிப்பதற்கு முடியாததாலும் எந்தவொரு வேலைக்கும் புண்ணியமில்லாததாலும் வீட்டார்களுக்கும் அவனைப் பற்றி எப்போதும் புகார்தான்.

அமீரின் சோம்பல் தன்மையும் சாவதானமும் மயக்க மருந்தைப்போல் மாமுட்டியிடமும் செயல்படத் தொடங்கியிருந்தது. கடமை

உணர்வற்றதொரு சுதந்தரத்துக்கான திறந்த வெளியை அவனுடைய இருப்பில் மாமுட்டி அனுபவித்தான்.

அமீர் வீட்டில் தங்கிய நாளன்று பண்டகசாலையிலுள்ள நச்சரிப்புகளையெல்லாம் முடித்துவிட்டு வேகமாகத் திரும்பி வந்தான் மாமுட்டி. வெளியங்கோட்டை கிசுகிசுப்புகளையும் ஊர்ப் பேச்சுகளையும் கேட்டுக் கேட்டு சோர்ந்து போய் வெளித் திண்ணையிலேயே அமர்ந்தான். அந்தியாகி இருளத் தொடங்கியதும் அமீரின் தோளில் கையைப் போட்டுக்கொண்டு ``வா அமீர். நாம மணல்ல கொஞ்ச நேரம் நடந்துட்டு வரலாம்'' என்று கூறினான்.

கடற்கரை ஈரத்தில் அமீரோடு சேர்ந்து நடக்கும் மாமுட்டியும் அநாவசியமாக மூச்சு வாங்கினான். சூரியன் அஸ்தமித்த பின்பும் மிஞ்சியிருக்கும் ஒளிக்கதிர்களில் நிலவின் பிரகாசமும் கலக்கத் தொடங்கியது. அமீரின் சிவந்து சுருங்கிய உதட்டிலும் கன்னத்திலும் பெண்மையின் மினுமினுப்பை மாமுட்டி கண்டுபிடித்தான். ஒன்றையும் சொல்லவேண்டியது இல்லையென்றாலும் மாமுட்டி அவனிடம் என்னவெல்லாமோ பேசிக்கொண்டே இருந்தான்.

அமீரின் பார்வைகள் ஒருபோதும் அவனுடைய கண்களுக்குள் பதியாமல் இருந்தது. அதுவே தான் மறைத்துகொள்வதற்கான நிம்மதியையும் அவனுக்கு அளித்தது. சமீப நாள்களில் கார்த்தியின் விழிகளும் நேரிடையாகத் தன் கண்களில் பதிவதை மாமுட்டியால் சகிக்க முடியவில்லை.

இன்னும் கொஞ்சம் நடந்தபின் மாமுட்டி அமீரைப் பிடித்து இருண்ட தரையில் அமர வைத்தான். அவன் மடியில் தலையை வைத்து அலைகள் நக்கும் வகையில் கால்களை கடலைநோக்கி நீட்டிப்படுத்தான்.அமீரின் கால்களிலிருந்து புறப்படும் இனியச் சுவையை நினைவுபடுத்தும் மணத்துக்காக மாமுட்டி மேலும் மேலும் தலையை புதைத்துக்கொண்டிருந்தான்.

தனக்கு என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதையே அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. எது ஒன்றையும் தெரியாததுபோல் கடலின் வெகுதொலைவில் பார்வையைப் பதித்து அமர்ந்திருந்த அமீரின் உதடுகளையும் கன்னங்களையும் மாமுட்டியின் முகம் தேடித் திரிந்தது.

ஏதோ வேண்டாத ஒரு சுவையைத்தான் தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்று மாமுட்டியால் சட்டென்று உணர முடிந்தது. அத்துடன் அவனுடைய செயலில் அறிய முடியாத ஒரு தைரியமும் நுழைந்தது. முரடாக நிற்கும் அமீரின் ரோமக்கால்களின் வழியே கைகள் மேலும் கீழுமாக பாய்ந்து திரிந்தன.

இயற்கை அதனுடைய எல்லா குணங்களையும் பின்வாங்கிக் கொண்டு கடற்கரையிலுள்ள மண்ணில் இறுமாப்புடன் கிடந்தது. மாமுட்டியின் முகத்தை நோக்கக்கூட தைரியப்படாமல் குழப்பமானதொரு அனுபவ அறிவில் அமீர் புலம்பினான்.

''மாமுட்டிக்கா, இனிமே நாம வீட்டுக்குத் திரும்பலாம்.''

முற்றிலும் அந்நியர்களைப்போல் ஒரு வார்த்தைகூட பேசாமல் அவர்கள் கடற்கரையிலிருந்து முஸலியாரகம் வீட்டை நோக்கி மணல் வழிகளில் திரும்பி நடந்தார்கள்.

மேலும் சில நாள்கள் அவன் அங்கேயே தங்கியிருந்தால் நல்லது என்று மாமுட்டி அப்பிராயப்பட்டபோது விரக்தியான முகபாவனையில் அமீர் எதிர் விளைவுகளைத்தான் உண்டாக்கினான். அபிப்பிராயம் சொன்ன மாமுட்டியின் முகத்தையோ கேட்டுக்கொண்டு நின்ற ஆயிஷாவின் முகத்தையோ அவன் நோக்கக்கூட இல்லை.

முடிந்தமட்டில் நேரமிருக்கும்போதே பண்டகசாலையைப் பூட்டிவிட்டு வீட்டுக்குச் செல்வதற்கான உந்துதல்தான் மாமுட்டியைப் பீடிக்கத் தொடங்கியது. வீட்டையடைந்ததும் அமீரின் தோளில் கையைப் போட்டுச் சுற்றிக் கொண்டவன் கடற்கரை இருளுக்குள் வேகமாக நகர்த்தினான். அப்போதைய நிமிஷங்களுக்கு என்னவென்று சொல்ல முடியாத படபடப்பாக இருந்தது. கடற்கரை வெளிச்சம் மங்கும்போது மனத்திலுள்ள தாகங்கள் படம் விரித்து நடுங்கி நிற்கும். கிராம வெளிச்சத்தின் ரகசிய வரலாறில் என்னவென்று சொல்லமுடியாத ஒரு மயக்கம் தொடங்கும். விலக்கப்பட்டதைத்தான் தான் தேடுகிறோம் என்னும் சிந்தனை பிடிவாதத்தோடுகூடிய ஈர்ப்பை உண்டாக்கியது.

ஒவ்வொரு அடியாக வைத்து உயரும் காமத்தின் படங்கள் மிகவும் உன்னத நிலையை அடைந்துவிட்டால் போதும், பின் தளர்ந்து குழைந்துவிடும். அவ்வளவு நேரமும் மின்னிக்கொண்டிருந்த

நட்சத்திரங்களும்கூட திடீரென மாமுட்டிக்கு முன்னே நிறம் மாறி வெளுக்கும். என்னவென்று வெளியில் சொல்லமுடியாத ஒரு தொல்லையாலும் அற்பத்தனத்தாலும் அமீரும் தொந்தரவு பட்டுக்கொண்டிருந்தான்.

அதன்பின் மேலும் தாமதிக்காமல் இருவரும் ஈர மணலிலிருந்து துள்ளியெழுந்தார்கள். இருளின் வழியே துழாவிக்கொண்டு திரும்பி வரும்போது மட்டும் அமீரின் தோளைச் சுற்றியிருந்த மாமுட்டியின் கரங்கள் விலகிப் போயிருக்கும். சகிக்க முடியாத ஒரு சலிப்பு ஏற்பட்டு அமீர் நடக்கும் பகுதியைக்கூட பார்ப்பதற்கு அவன் விருப்பப்படுவ தில்லை.

சேற்றில் புரண்ட உருவங்களைப் போல் அமீரும் மாமுட்டியும் கடற்கரையிலிருந்து நடந்து வருவதை கார்த்தி கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். கால்களைக் கழுவுவதற்காக ஒரு செப்பு குடம் நிறைய தண்ணீரை அவள் கற்படிக்கட்டில் வைத்திருந்தாள். காலில் ஒட்டியிருந்த சகதி மண் எவ்வளவு கழுவியும் போகாமையால் மாமுட்டியின் முகத்தில் சுளிப்புகள் வெளிப்பட்டன. கார்த்தியின் பார்வைகளுக்கு உட்படாமல் அவன் அவசரம் காட்டி வீட்டினுள் போய்விட்டான்.

மாமுட்டியிடமிருந்து விழிகளை விலக்கிக்கொண்ட கார்த்தி அமீரை அருகில் அழைத்தாள். சில நாள்களாகவே அவளுக்கு அமீர் விஷயங்களில் கட்டாயமான கவனிப்பு இருந்தது. ''அவனுக்கு சோறு போட்டியா தத்தா, அவனுக்கு டீ கொடுத்துட்டியா தத்தா'' என்று அவள் ஆயிஷாவிடம் இடையிடையே கேட்டுக்கொண்டிருந்தாள்.

அமீர் அருகில் வந்ததும் கார்த்தி அவனை அடி முதல் முடிவரை உற்று நோக்கினாள். கழுத்து நெறிக்கப்பட்ட குருவியைப்போல் அவனுடைய விழிகள் பிதுங்கின. அவனுடைய சிரிப்பின் ஒன்றிரண்டு குமிழ்சில்லுகளை கார்த்தி ஆயாசத்துடன் துடைத்தெறிந்தாள். அதன்பின் அமைதியாக நீட்டி முழக்கும் குரலில், ''அமீரு நீங்க ரெண்டுபேரும் கடற்கரைல எவ்வளவு நேரம் நடந்தீங்க?'' என்று அவள் கேட்டாள்.

பதிலுக்கான நிசப்தம் சிறிதுநேரம் நிலவியது.

''இல்லீங்க. நாங்க சும்மா மணல்லதான் உட்கார்ந்திருந்தோம்.''

அவன் அசிங்கமாக ஒரு சிரிப்பு சிரித்தான்.

''நீங்க கடல்லேர்ந்து கொஞ்சம் தள்ளி உக்கார்ந்தீங்களா? இல்லே, நனையற மாதிரி கடலலையோடு அவ்வளவு நெருக்கமா உக்கார்ந் திருந்தீங்களா?''

''அவ்வளவு நெருக்கமா நாங்க உக்காரலீங்க.''

''அப்போ... நீங்க தண்ணியில எறங்கி நடந்தீங்களோ?''

''அது... இல்லீங்க. நாங்க அப்படியேதான் ஒரே இடத்துல உக்கார்ந் திருந்தோம்.''

''காற்றுக்காக நடக்கப் போன நீங்க மேலே ஆகாயத்தைப் பார்த்துக்கிட்டு சும்மாவா உக்கார்ந்திருந்தீங்க?''

''கடற்கரை காத்துல தண்ணீர்த்துளிங்க ரொம்பவும் இருக்குமில்லே?''

''ஏதாச்சும் தோணி திரும்பிவர்றத நீங்க பார்த்தீங்களா?''

''வேற யாரெல்லாம் காத்து வாங்க வந்திருந்தாங்க?''

கேள்விக்கணைகள் ஒரு பிரவாகம் போலவே கார்த்தியிடமிருந்து வெளியேறிக் கொண்டிருந்தன.

என்னவெல்லாமோ கேட்டும் முடிவு பெறாத திருப்தியின்மையைத் தான் அவள் அனுபவித்தாள். துளியும் உயிர்ப்பில்லாத பதில்களை அளித்துக்கொண்டிருந்த அமீரை அவள் புறக்கணித்தாள். அவ னுடைய பதில்களுக்கு மேலாக தன்னுடைய கேள்விகளில்தான் கார்த்திக்கு ஆவேசமாக இருந்தது. கடலலையின் தேடுதலைப்போல் அவை மனத்தை மோதி மூடிக்கொண்டிருந்தன.

படுக்கையறையிலும் சோர்வுத் தன்மையின் மூடுபனி வியாபித் திருந்தது. குளிர்ந்து உறைந்துவிட்ட உறக்கத்தின் கம்பிளியில் மாமுட்டி உணர்வற்று சுருண்டு படுத்திருந்தான். காதல் வெப்பத்தி னால் அவனை உஷ்ணமாக்கி எழுப்புவதற்கு கார்த்தி ஆன மட்டும் முயன்றாள். ஆனால் முடியவில்லை.

இறுதியில் தனக்குள் தோன்றும் சிவப்பு, தாய்மை ஒளியில் மறுபிறப் பெடுத்தன. அதனால் நேசிப்புடன் அவனை துன்புறுத்தாமல் ஆசுவாசப்படுத்தி படுக்கவைத்தாள் கார்த்தி. தோள்வரையில் போர்த்திவிட்டாள். தலைமாடு கால்மாடாக கிடந்த கைகால்களை ஒழுங்குபடுத்தினாள். கட்டிலின் ஓரத்தில் சாய்ந்து படுத்து அவனுடைய பாதுகாப்பிற்கான கோட்டையை உருவாக்கினாள். மழுட்டி தன் அருகில்தான் உள்ளான் எனும் உறுதியை வரவழைக்கும் வகையில் அவ்விரவு முழுவதும் அவள் உறக்கம் இழந்து அமர்ந்திருந்தாள்.

பதினேழு

மேலே புல்லரப் பறம்பு முழுவதும் சுடுகாட்டுக்குச் சமமாக ஓர் அக்னி பரவியிருந்தது. காண்பது எல்லாம் உயிரற்றும் கருகியும் கிடந்தன. பன்னிப் பறம்பின் நெஞ்சிலிருந்து புகை மண்டலங்கள் வெளியேறிக் கொண்டிருந்தன. புதியதொரு சிதையிலிருந்து எழும்பும் வெப்பக் கானல் நீர்கள். எல்லாவற்றையும் அடக்கி விலக்கியதை பிரளயத்தீ முடித்து வைத்தது.

ஆலிலை மேலுள்ள உயிரைப் போல் புத்தம் புதிய அமைதியுடன் சங்குமேனன் மட்டும் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் தளர்ந்து நடந்தான். நூற்றாண்டுகளுக்கும் மேல் வயதான பெரிய பலா மரத்தைப் போய்ப் பார்த்தான். வேலிச்சரிவில் நின்ற எட்டி மரத்தை தரிசித்தான். சர்ப்பக்காவில்* உள்ள குகைக்குச் சமமான பொந்துகளில் தொழுதான். சித்தி ரோடக் கல்லை வணங்கினான். கடைசியாக மடியிலுள்ள நிலவறையைத் திறந்து பகவதியின் முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தான்.

அனுஷ்டானங்கள்போல் இவ்வளவையும் செய்தபோதும் முகத்தில் ஆர்வமற்ற பாதுகாப்புக் கன்மை பொலிவை வற்றியது. அகந்தையின் கயிறிழுப்புகள் உடலசைவுகளை சிறிதும் அசிங்க மாக்கவில்லை.

கடைசியில் எல்லாவற்றோடும் முழுமையாக விடைபெற்று முடிந்தன. இடைவேட்டியை மட்டும் உடுத்திக்கொண்டு கையில் ஒன்றுமில்லாமல் அவன் வாசலைத் தாண்டினான். திரும்பிப் பார்க்க வேண்டிய சந்தேகம்கூட எற்படவில்லை. வயல் வரப்புகளின் வழியாக வேகமாக

---

* சர்ப்பக்காவு - நாகக் கோயில்.

நடந்தான். கடுமையான கோடைக்குப் பின் மழைமேகங்கள் ஆகாயத்தில் சூழ்ந்து கொண்டிருந்தன.

நீளும் பாதைகளும், சுவாசிக்கும் காற்றும், தென்படும் அடிவானமும் எல்லாம் ஒட்டுமொத்தத்தில் ஒன்றாகி மேனனுக்கு தரிசனம் அளித்தன. அவற்றின் உயர் பண்பில் அவனுடைய முகக்கமலம் மீண்டும் மீண்டும் ஒளிர்ந்துகொண்டிருந்தது.

சங்குமேனனுக்கு இப்போது விலங்கன்மேடுகள்* சரளைக் குன்றல்ல. அகிலாண்டேஸ்வரியின் இரட்டை மார்பகங்களாகும். சுழன்றடித்து ஆர்ப்பரிக்கும் கீழைக்காற்று வாயுப்பிரவாகம் இல்லை. ஓம்காரத் தொனிகளின் மந்திரப் பிறப்பிடமாகும். உள்ளுக்குள் பெருகும் வீரிய கர்ப்பத்தால் தன்யனாகி பரமானந்தத்துடன் அவன் பல காதங்களைத் தாண்டிக் கொண்டிருந்தான்.

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மழை பெய்திருக்கிறது என்று தோன்றுகிறது. கார்மேக முனைப்புகளிலிருந்து கருப்புப் போர் வீரர்கள் அடிவானங்களில் உரசிக்கொண்டு இறங்குகின்றனர்.

ஆற்றை நெருங்க நெருங்க குளிர்ச்சியின் நூற்கள் உடல் தசைகளை வலை பின்னி நிறுத்தின. விரிந்த நாசித் துவாரங்களின் மூலம் ஆற்றின் குளிர் முழுவதையும் சங்கு மேனன் ஆவாஹித்துக் கொண்டான். ஆற்றுக்கு அருகிலுள்ள துர்க்கைக் கோயிலை அடைந்ததும் நடையின் வேகம் சிறிது திடீரென திரும்பியது.

'தாயே மகாமாயே!'

ஒரேயொரு முறைதான் அவன் அழைக்கவேண்டியதிருந்தது. ஒரேயொரு பார்வையைத்தான் அவன் பாய்ச்ச வேண்டியதிருந்தது. காண்பதிலும் கேட்பதிலும் அவளுடைய இருப்பை அறிந்துகொள்ளும் மேனனுக்கு கோயிலில் தங்கவேண்டிய அவசியம் தோன்றவில்லை.

மலையில் மழை கவிந்ததின் வெளிப்பாடு தெரியத் தொடங்கியது. இரு கரையும் முட்டும் வகையில் பாரதப்புழை நிறைந்து ஓடுகிறது. சப்பும் சவறும் பாசியும் நிறைந்த வெள்ளம். வேனலின் படிமங்களை புதுமழை அடித்துச் செல்கிறது.

---

* ஓர் இடத்தின் பெயர்.

பயணத்தைத் தொடரவேண்டுமானால் ஆற்றைக் கடந்தே தீர வேண்டும். எந்தவொரு காரணங்களும் வழி மாற்றங்களும் ஏற்பட்டு விடக் கூடாது. பலப்பரீட்சைக்கான சந்தர்ப்பம் என்றால் பலத்தை பரிசோதிக்கத்தான் வேண்டும்.

மனத்தில் கரையுடைந்து பாயும் ஆத்மீய நதியையும் பாதையைத் தடுக்கும் பௌதீக நதியையும் ஒப்பீட்டுப் பார்த்தபோது மேனனுக்கு அற்புதம் தோன்றியது. பார்வைகளைத் தாழ்த்தியதும் கோவில் நடையில் அமர்ந்திருக்கும் சந்நியாசி தன்னை விழிகளால் அழைப் பதுபோல் தெரிந்தது. மேனனும் இயந்திரமாக அந்தப் பகுதியை நோக்கி நகர்ந்தான். இப்படியொரு மனிதனை இந்த வழியில் தான் எங்கும் பார்த்ததில்லையே எனும் எண்ணம் தோன்றியதும் தன் னையே தடுத்துக்கொண்டான்.

யாராக இருந்தாலும் என்ன உறவு இருக்கிறது? எல்லா வேறு பாடுகளையும் விளக்கிச் செல்லும் பயணமல்லவா இது?

வணங்கி நிற்கும் மேனனின் எதிரே சந்நியாசியின் கரங்கள் நீண்டன. அனுக்கிய முத்திரையில் அடைக்கலம் அளித்திருந்த கைகள் மெது வாக மேனனின் வலது கையை தேடிப் பிடித்தன. இளம் புன்னகையுடன் அவர் மேனனின் கையில் ஏதோ ஒரு பொருளைக் கொடுத்தார். அவன் கைவிரல்களை ஒவ்வொன்றாக மடக்கி சந்நியாசியே முஷ்டிக்குள்ளே இருக்கும் பொருளை மறைத்து வைத்தார். உறுதியாக ஒளிரும் அவருடைய புன்னகை பாரதப்புழையைவிட ஆழமானது என்று மேன னுக்குத் தோன்றியது. உதடுகளிலிருந்து மட்டுமல்ல நெற்றியிலிருந்தும், மார்பிலிருந்தும், கால்விரலில் இருந்தும்கூட அந்த ஆனந்தச் சிரிப்பு உடைந்து உடைந்து வழிந்தது.

மீண்டும் கவனித்தபோது ஆனந்தத்துக்குரியதான ஏதோ ஓர் உலகுக்குள் சந்நியாசி நுழைந்து விட்டிருந்தார். மடக்கிய முஷ்டிக்குள் உலகுக்குச் சம்பந்தமில்லாத பலத்த பேரானந்தம் அனுபவமடைந்தது. மேனன் அடிமுதல் முடிவரை அதை உணர்ந்து பெருமிதமடைந்தான். மொழியும் வார்த்தைகளும் அல்லாத அர்த்த ஊசிகள் மூளைக்குள் விஷயத்தை முணுமுணுத்தன. பயணத்துக்கு வேண்டியதான பாதுகாப்புதான் உள்ளங்கையிலிருந்து பெருகுகின்றது என்று அவன் புரிந்து கொண்டான்.

சுழலாகவும், மேலும் கீழுமாகவும் நிறைந்து ஓடும் பாரதப் புழையை நோக்கி மேனன் தயாராகவே நகர்ந்தான். ஆற்றோரத்திலிருந்து நீர்த்

திவலைகளுக்குள் சிறிதும் தயக்கமில்லாமல் பாதங்களை வைத்தான். உறுதியான வெள்ளிக் கம்பிளிபோல் ஆறு அவனுடைய கால்களை தாங்கி நிறுத்தியது. அதன்பின் உறுதியான காலடிகள் ஆற்றுக்கு மேலாக உல்லாசமாக நகர்ந்து கொண்டிருந்தன.

ஆற்றின் முக்கால் பகுதியை அடைந்ததும் தனக்குத்தானே ஏற்படும் சந்தேகம் மேனனின் மனத்தில் குமிழிகளிட்டன. தான் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று அவனாலேயே நம்ப முடியவில்லை. வலதுகையை விரித்து அதற்குள்ளேயுள்ள திவ்வியப்பொருளை மெல்ல நீக்கிப் பார்த்தான். வெறும் இரண்டு மூன்று துளசிக் கதிர்கள் மட்டும்தான் இருந்தன.

ஒரே நிமிஷம்தான். ஓம்காரத் தொனிகளாக இருந்த மெல்லிய காற்று திடீரென வாயுப் பிரவாகமாக மாறிற்று. அகிலாண்டேஸ்வரியின் இரட்டை ஸ்தனங்களாக இருந்த சரளைக்கல் குன்றுகள் பாறையும் மண்ணுமாக மாறின. கால்களுக்குக் கீழே உறுதியுடன் கிடந்த வெள்ளிக் கம்பிளி இயக்காற்றல் நியதிகளுக்கு ஒத்துப் போகும் சாதாரண தண்ணீராயிற்று.

பாசியும் சகதியும் சுத்தமற்றும் நுரையுடனும் வரும் ஆற்று நீருக்குள் மேனன் மூழ்கிப் போனான். ஒருவிதமாக கைகால்களை உதைத்துக் கொண்டு மூக்கிலும் காதுகளிலும் தண்ணீர் புக அவன் கரையைப் பிடித்தான். முகத்திலும் மார்பிலும் பூசியிருந்த சேற்றையும் பாசியையும் வழித்து எறிந்தான்.

சத்தியமுகங்களுக்கு எப்படிப்பட்டதொரு மாறுபாடான முகங்கள்.

சத்தியம் அசத்தியத்தைப் பற்றியும், தர்மம் அதர்மத்தைப் பற்றியும் தனக்கு எப்போதும் இருக்கக்கூடிய சந்தேகங்களை ஓவியம்போல் மனத்தில் கண்ட மேனன் சிரித்தான். வெளிச்சத்தின் புதிய கதிர்கள் அவனுடைய ஆத்மாவில் அழகைச் சொரிந்தன.

''என்னா கம்மலே, ஆத்துல முழுகினியா?'' யாரோ ஒரு வழிப் போக்கன் நலன் விசாரித்தான்.

''இல்ல சகோதரா, சந்தேகத்தில் முழுகினேன்'' மேனன் பதில் கூறினான்.

பதினேட்டு

பொன்னாணியில் வீசும் உப்புக்காற்றில் புதியதொரு குங்குமப் பூவின் இதழ்களை முகர்ந்ததால் கார்த்திக்கு மதம் ஏறிக் கொண்டிருந்தது. முஸ்லியாரகம் வீட்டின் வராந்தாவிலும் ஜன்னல் கம்பிகளிலுமாக புனுகுப் பூனையைப் போல் அவள் உறுமியவாறு நடந்தாள். நினைவுகளில் அமிர்தம் சுரக்கும் மணத்தை இதயத்தின் விளிம்பில் இழுத்து எடுக்கும்போது மார்பகங்கள் முன்னேக்கிக் குவிந்தன. கழுத்தும் நெஞ்சும் சேரும் இடத்தில் அழகானதொரு பள்ளம் உருவாயிற்று. அடர்த்தியாகிக்கொண்டிருந்த சுகந்த போதையில் இதுவரையில் உலவிக்கொண்டிருந்த பொன்னாணியின் மணம் எந்தளவுக்கு அருவருப்பாக இருந்தது என்று அவளுக்குத் தோன்றியது. நினைவு தெரிந்த நாள் முதல் மலர்ந்து கொட்டிய மலர்களெல்லாம் மீண்டும் மறுபிறப்பு எடுத்துவரும் தோற்றம்.

முஸ்லியாரகம் வீட்டின் வாயில் தூண்களைக் கடந்து காஷாய வஸ்திரமணிந்த ஒருவர் நுழைந்துகொண்டிருந்தார். அட, சங்குமாமன்!

நீண்டு இறங்கும் தாடி ரோமங்கள் கன்னங்களின் மேல் விளிம்பிலிருந்து தொடங்கிவிட்டன. தலையில் மின்னும் வழுக்கையைச் சுற்றி சூரியகாந்திப் பூ மலர்ந்து நிற்கும் வெள்ளி இழைகள். உதடுகள் பொழியும் புன்னகையை தாடி முடிகளின் அடர்வனத்திலிருந்து கண்டுபிடிப்பது சிரமமாகத்தான் இருந்தது.

கார்த்தியின் மார்பகத்தில் என்னவோ நிறைந்து குழுமின. உலகம் முழுவதும் பிறக்கும் குழந்தைகளுக்கும் சேர்த்து சுரக்கக் கூடிய அன்பு தன்னுடைய இதயத்தளத்தில் உண்டென்று அவளுக்குத் தோன்றியது.

கூச்சமில்லாதவனாக வீட்டின் முற்றத்துக்குள் சங்கு மாமன் காலடிகள் வைத்தான். எல்லா தந்திர சுதந்தரமான வாயுக்களும் அவனுடைய சுவாசத்திலும் அசைவுகளிலும் முதிர்ந்திருந்தன. வாயிற்படியில் முகம் காண்பித்த ஆயிஷாவையும் குழந்தைகளையும் அவன் அறியவில்லை.

கார்த்தியின் உச்சந்தலையில் கைகளைப் பரப்பி சங்குமேனன் சாவதானமாக தடவிக்கொண்டிருந்தான். கண் இமைகளில் நிறைந்த கண்ணீர் அணை உடைந்ததால் கார்த்தியே பெரியதொரு ஜலப் பிரவாகமானாள். அவள் அழுது பலப்பல ஆண்டுகள் கழிந்துவிட்டிருந்தன. கொஞ்ச நாளிலேயே சங்கு மாமனைக் காண்பதற்காக பிடிவாதம் பிடித்தது முதற்கொண்டு சேகரித்த அனைத்தையும் அவளுடைய கண்ணீர் சுரப்பிகளில் மறைத்து வைத்திருந்தாள். இடைவெளிவிட்டுத் தூறும் தூறலைப் போல் அவை மீண்டும் மீண்டும் பொழிந்து கொண்டிருந்தன.

தன்கீழே ஒரு கங்கை ஆறே பிரவாகிப்பதை அறிந்ததும், சங்குமேனன் ஜடாதரனைப் போல் பற்றில்லாதவனாக விழிகளை உயர்த்தி உறுதியாக நின்றான். பதற்றப்படக் கூடாது. ஒருபோதும் தான் பதற்றப்படக் கூடாது.

ஆற்றின் தண்ணீர் பரப்பு நிமிஷ நேரத்துக்குள் வெள்ளிக் கம்பளமானதையும், திரும்பவும் அது கலங்கல் நீரானதையும் மனத்துக்குள் கொண்டுவந்து, சத்தியங்கள் உண்மை இல்லாமலாகிவிட்டதால் ஆசுவாசம் தேடிக் கொண்டிருந்தான் அவன்.

''மகளே, உறுதியானவற்றுக்கு மேற்புறமாகவே நீ நீந்துவதற்கு முயற்சி செய். அழற குணம் உனக்கில்லையே!''

தன்னுடைய தத்துவப்பேச்சில் அது அடங்குவதில்லை என்பதும் அவளுக்குள்ளே இருப்பது பருவமழை என்பதும், அது பொழிந்து தான் நிற்கும் என்பதும் சங்குமேனனுக்கு தெரிந்தே இருந்தது. அதனால்தான் அவனுடைய வார்த்தைகளிலுள்ள முட்டாள்தனம் அவனை தொல்லைப் படுத்தியது. அவளுக்குள்ளே உள்ள எண்ணங்கள் முழுவதும் சுயசிந்தனையுடையதாகும். சந்தேகங்களுடையதும் செயற்கைத் தனத்தினுடையதுமான வருத்தங்கள் அவற்றில் இல்லை. சரி தவறுகளின் கடுமையான தன்மையில் வெடித்துச் சிதறவேண்டிய செயலிழப்பும் இல்லை. அழத் தோன்றும்போது அழவும்,

நேசிக்கும்போது ஆழமாக நேசிக்கவும், காதலிக்கும்போது உள்ளம் மறந்து காதலிக்கவும் அவளுக்கு தைரியம் உண்டு.

விழிநீரால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு பொய்கைக்கு நடுவில் சங்கு மேனனும் கார்த்தியும் உயர்ந்து நின்றார்கள். அவள் முகத்தில் திடீரென ஒரு சூரியன் உதித்தது. தான் நீராவியானதால் உருவான கருமேகங்களால்தான் இவ்வளவு நேரமும் பெய்து தொலைத்தது எனும் தோற்றமே அதற்கு வற்படவில்லை. வருத்தத்தின் மெல்லிய கீறல்கூட இல்லாமல் அவளின் வதனம் ஒளிர்ந்தது.

வாழ்க்கையைப் பற்றி எவ்வித சந்தேகமுமில்லாமல் வாழ்ந்து இறப்பவர்கள் மாபெரும் அதிர்ஷ்டசாலிகள்தான்...

கார்த்தியின் முகத்தை நோக்கிக் கொண்டிருந்தபோது சங்கு மேனன் மனதுக்குள் சிந்தித்தான். அவன் குரலைத் தாழ்த்திக் கேட்டான்.

''மகளே, நீ எப்படிம்மா இருக்கே?''

அந்தக் கேள்விக்கு கார்த்தி பதில் கூறவில்லை. மலர்ச்சியுடன் நின்றிருந்த அவளுடைய முகம் மேலும் சிவந்து தடித்தது.

''மகளே, இங்கே பார். சங்குமாமனிடம் ஏதாச்சும் மாற்றமிருக்கா?''

''இருக்கு.''

தன் முகத்தையே உற்று நோக்கிக்கொண்டிருக்கும் மருமகளின் கண்களில் அவன் தன்னையே தேடிக் கொண்டிருக்கிறான்.

''ஆனா, இந்த கார்த்திக்கு மட்டும் எந்த ஒரு மாற்றமும் இல்லையல்லவா? சொல்லுங்க சங்குமாமா?''

அலைகள் உலுக்கும் லாகவத்தோடுதான் அவள் கேட்டாள் என்றாலும் அதனுடைய ஆழத்தை அவன் தொட்டு அறிந்தான். கார்த்தியின் அகம்பாவமும் நாணமில்லாமையும் அப்படியேதான் இன்னமும் இருக்கின்றன. அவளிடமிருந்து பிரிந்தபின் தான் எத்தனை தடவை மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருக்கிறோம். இருந்தும் தத்துவ ஞானத்தின் மேலாடைகளை உருவிப் போட்டுவிட்டு சில சமயங்களெல்லாம் நிர்வாணமாகிவிடுகிறோமே!

மாமனும் மருமகளும் முஸ்லியாரகம் வீட்டின் முற்றத்தில் இறங்கினார்கள். குவித்து வைக்கப்பட்டிருக்கும் கருப்புக்கல் துண்டுகளில் முகத்தைத் திருப்பி அமர்ந்தார்கள். தூரத்திலிருந்து வரும் கடல் காற்றின் தணியாத உஷ்ணம் அவர்களிடம் வியர்வையின் முத்துக்களை உற்பத்தி செய்தன. காற்றின் கைகளில் வியர்வைத் துளிகளை அர்ச்சித்து குளிரின் தணிப்பை அவர்கள் திரும்ப வாங்கினார்கள்.

வந்தவனைப் பற்றி அறிவதற்காக ஆயிஷா ஆறுமுறை வாயிற் படிகளில் வந்து முக்காட்டில் மறைந்துகொண்டு எட்டிப் பார்த்தாள். அவர்களுக்குள்ளே இருக்கும் இழை நெருக்கத்தில் தலையிடுவதற்கு சக்தி கிடைக்காமல் எல்லா தடவைகளும், வெறுமனேதான் திரும்பிப் போனாள்.

கேள்விக்கணைகளால் மூச்சுத் திணறும் குழந்தையைப் போல்தான் கார்த்தியின் நடவடிக்கையும் இருந்தது. ஒன்றுவிடாமல் அவளுக்கு எல்லாமும் தெரியவேண்டும். பெரிய பலா மரத்தில் இந்த வருஷம் எத்தனை பலாப்பழம் பழுத்தன. நாவல் மரத்திலிருந்து உதிர்ந்த பழங்களின் சுவை எப்படி இருந்தது.

சக்கிப் பூனை பெற்ற காலொடிந்த கருப்புக் குட்டியின் நிலை எப்படி இருக்கிறது...?

இயல்பான தன் முதிர்ச்சியை தற்போதைக்கு மாற்றி வைத்துவிட்டு குழந்தைப் பருவ குறும்புகளுக்குள் மனப்பூர்வமாக ஓடி ஒளியத் தொடங்கியிருந்தாள் அவள். தொண்டையிலிருந்து வெளியேறிய விக்கலைப் போல் அம்மாவைப் பற்றித்தான் முதலில் விசாரித்தாள்.

சிறிது அடங்கியிருந்த சங்குமாமனின் வியர்வைத்துளிகள் மீண்டும் உறையத் தொடங்கின. ஆழிப்பரப்பின் வெகு தொலைவுக்கு அவளுடைய விழிகள் சிதறி பறக்கத் தொடங்கின. கடலில் ஆழமானதொரு நீர்ப்பரப்பை அது உள்வாங்குகிறது என்று தோன்றியது.

அர்த்தத்தின் அம்மணத்தை கார்த்தி அறிந்தாள். மார்பின் மத்தியில் ஒரு பிளவு உண்டாகி சகிக்கமுடியாத வகையில் உப்பிப் பெருத்தது. தாயைப் பற்றியும் பாட்டியைப் பற்றியுமான விசாரணைகளை அவள்

சட்டென்று நிறுத்திவிட்டாள். சிறிதுநேரம் நிலைத்திருந்த மவுனத்தின் கதிர்வீச்சு எலும்புகள் வரையில் ஊடுருவிச் சென்றபோது விஷயத்தை மாற்றினாள்.

அதன்பின் எழுந்த கேள்விகள் அனைத்தும் பெரிய பலாவைப் பற்றியும் நாவல் மரத்தைப் பற்றியும் சக்கிப் பூனையைப் பற்றி மட்டுமே இருந்தன.

உணவுக்குப் பின் விரிந்து கிடைக்கும் கனவின் சிம்புகள் போல்தான் சங்குமாமனின் இருப்பு என்பதும் கார்த்திக்கு தோன்றியது. அது எந்த நிமிஷத்திலும் ஆவிப் பொருளாகிவிடலாம். அப்படிப்பட்ட அபூர்வத் தன்மையை துக்கத்துக்கும் மவுனத்துக்கும் பலிகொடுக்க அவள் தயாராக இல்லை. சங்குமாமனுடன் பேசுவதற்கான சந்தர்ப்பம் வாழ்க்கையிலேயே இனிமேல் ஒருபோதும் ஏற்படாமலே போகலாம்.

''அப்புறம் நம்ம பாருவோட பேரப்பையன் எப்படி இருக்கிறான்? நம்ம சக்கரை மாமரத்துல ஏறி மாங்கா பறிக்க இப்போது வர்றதுண்டா?''

சங்குமாமன் பேசும்போது கீழ்த்தாடையில் விரியும் தனித்துவ முறையிலான சுருள்களைக் கவனித்தவாறு கார்த்தி கேட்டாள்:

''அவன் இனிமே கூலிக்கு மாங்காய் பறிக்கணும்கிற பிரச்னையே இல்ல. சக்கர மாமரம் நிக்கிற பறம்போட வடக்குப் பக்கம் பாருவோடதுதான். மேற்குப் பக்கம் பூராவும் வேலாயிக்கும் குழந்தைங்களுக்கும், பன்னிப்பறம்போட மேற்கு பாகங்கள் கோதைக்கும் காளிக்கும்...''

புதியதாகப் பிறந்த புன்னகையின் திருப்தியில் சங்குமேனன் நிறுத்தியதும் அவனுடைய கண்களில் ஒரு திரைப்படம் தெளியத் தொடங்கியது.

•

குத்தகையாளர்களும் வேலைக்காரர்களுமாக ஒரு பட்டாலியன் ஆட்கள் மேலே புல்லாரப் பறம்பில் திகைத்துப்போய் நிற்கிறார்கள். சொத்துவகைகளைப் பாகம் பிரித்துக் கொடுப்பதற்காக குடும்பத் தலைவர்தான் அவர்களை அழைத்திருந்தார். மேலே புல்லாரத்

தறவாட்டின் பிணத்தைத் தூக்குவதற்கு நிற்பவர்களைப் போல்தான் எல்லோருடைய முகமும் உடம்பும் இருந்தன.

''குத்தகைக்குப் பயிர் வைக்கறவங்கள்லாம் இங்க வந்து ஒதுங்கி நில்லுங்க. சரி, நீங்க எல்லோரும் இன்னியிலேர்ந்து மேலே புல்லாரத் தறவாட்டுக்கு குத்தகைய கொண்டாரவேணாம். இனிமே அந்த நிலமும் உங்களுக்கே சொந்தம்.''

உறுதியான குரலில் சங்குமேனன் அறிவித்தான்.

''அப்புறம், வேலாயி அவ புள்ளைங்க; இத்துக்குட்டியும் குழந்தைகளும்; பாரு, கோர்மன், கோதை, காளி எல்லாரும் என்கூட வாங்க. உங்க ஒவ்வொருத்தருக்குமான இடத்த நான் நிர்ணயிச்சுத் தர்றேன். உங்க எல்லோருக்குமே முன் பக்கத்துலதான் தரப்போறேன். அப்புறம் அதைச் சொல்லி சண்டைப் போட்டுக்காதீங்க.''

மீண்டும் அவனுடைய குரல் உயர்ந்து தாழ்ந்தது. ஒவ்வொரு அறிவிப்புக்குப் பின்பும் சங்குமேனனின் உதடுகள் தனக்குத்தானே சொல்லிக்கொள்வதுபோலவும், என்னவெல்லாமோ முணுமுணுக்கவும் செய்தன. கைவிரல்கள் சைகை காட்டவும் செய்தன.

மகுடிக்கு மயங்கும் பாம்புகளைப்போல் குடியானவர்களும் குத்தகைதாரர்களும் மேனனுக்குப் பின்னால் பணிவாக நடந்தார்கள். மிக விரைவில் வரவிருக்கும் ஏதோவொரு துக்கத்தை எதிர்நோக்கி தாழ்ந்த குரலில் அவர்களெல்லாம் அழுதுகொண்டிருந்தார்கள். கூச்சலின் சுருதி பெருகத் தொடங்கும்போது மேனன் சட்டென்று திரும்பி நின்று திட்டுவான். மூக்கு சிந்துதலும் தேம்புதலுமாக ஒரே தலைவேதனை.கொஞ்சம் குறைந்தால் மீண்டும் உச்சஸ்தாயில் பொங்கிவிடுவான்.

''சக்கிப்பூனைக்கும் குழந்தைகளுக்கும் வேலாயி சோறுபோடுறாளா சங்குமாமா?''

''கொடுப்பா மவளே.''

ஒன்றையும் யோசிக்க விடாமல் கார்த்தியின் மனத்தை தூபம் போட்டு மாற்றத் தொடங்கினான். அநாவசியமான அழகோடு சங்குமாமனின் உதடுகள் பொழியும் வாக்குகளைக் காண்பதற்கும் மனம் புன்னகைக்கும்போது கண்களில் ஒளிரிடும் விளக்குகளை தரிசிப்பதற்கும்

எதையாவது பேசிக்கொண்டே இருக்க வேண்டும் என்று தோன்றியது கார்த்திக்கு.

ஆனால் வார்த்தைகளை எதைநோக்கி திசை திருப்புவது? எங்கே தொட்டாலும் உருகிவிடும் காயங்களும், வேதனை வடியும் புண்களும்தான். விஷயத்தைத் தேர்ந்தெடுக்க முடியாமல் அவள் தவிக்கத் தொடங்கினாள்.

சிறிதுநேரம் இடைவெளி கிடைத்ததும் மேனனின் மனத்தில் என்னவோ பெருத்து, பேச்சு முட்டியது. சொல்லி முடிப்பதற்காக தன் கைவசமுள்ள மொழியின் பலவீனத்தைப் பற்றி சந்தேகித்தான். கடைசியில் புண்களான வார்த்தைகள் விஷமப் பிரசவம் போல் வெளியே குதித்தன.

''மகளே, அதைப் பாரு.''

சங்குமேனனின் விரல்கள் அந்தி மயங்கும் ஆகாயத்தில் ஒரு நட்சத்திரத்தைச் சுட்டின.

''அது ஒண்ணும் சின்ன நட்சத்திரமில்ல, சங்கு மாமா!''

''இல்ல, மகளே உன்னோட பாட்டிதான் அது!''

''எவ்வளவோ அனுக்கிரகம் அடைந்துதான் பாட்டி நட்சத்திரமானாள்னு உனக்குத் தெரியுமா? ரொம்ப வருஷமா பார்வை உணர்ச்சி இல்லாமலேயே படுத்திருந்தா. கடைசியில் உன்னோட அம்மாவும் போனபின்னால பணிவிடை செய்ய நான் மட்டும்தான். அப்போ திருந்தே பாட்டியோட உணர்ச்சியில்லாமையின் அலைகள் என்னை நிர்ப்பந்திக்கத் தொடங்கின.

''என்னைத் தெறந்து விடேன், என்னைத் தெறந்துவிடேன் என்று கூறி பின்னாலேயே நடப்பது போல இருந்தன. நான் என்ன செய்ய முடியும்?

''தேவையான பணிவிடைகள் செய்வேன். பார்லியை குத்தி உடைச்சு மூணு வேளையும் கஞ்சி காய்ச்சி வாயில ஊத்துவேன். தினமும் தண்ணியில முக்கி துடைத்து விடுவேன். மூத்திரத் துணியை மாத்துவேன். கடைசியில ஒரு நாள் தூக்க நேரத்துல என் தலைமாட்டுல பாட்டி வந்து நின்னா. இறுதிச் சாசனம்போல என்னவோ

முணுமுணுத்தா. அப்போதுதான் எனக்கு என்னென்னவெல்லாமோ
புரிஞ்சுது.''

சிறிதுநேர மவுனத்துக்குப் பின் சங்குமேனனின் பேச்சுக்கு மொழியும்
இலக்கணமும் இல்லாமலாகி விட்டது. கதையைக் கேட்பதற்குப்
பதில் பார்ப்பதற்குத் தொடங்கினாள் கார்த்தி.

பத்தொன்பது

இருட்டும் குளிரும் சேர்ந்து வற்படுத்திய சூழல். மேலே புல்லாரத் தறவாட்டின் வடக்கினியில்* பெரியதொரு யானைக் கட்டிலில் பாட்டி படுத்திருக்கிறாள். நரசித் துவாரங்களையும் இதயத்தையும் இணைத்துக் கொண்டிருக்கும் ஒற்றை சுவாசம் மட்டும் கயிற்றின்மேல் நடப்பதுபோல் விளையாடியது.

மூச்சுக்காற்றோடு இணைந்து ஜீவனும் பிய்த்துச் செல்ல முயற்சித்துக் கொண்டிருந்தது. வகை தொகையில்லாமல் பஞ்சபூதத் துண்டுதல்கள் மீண்டும் மீண்டும் தடைப்படுத்தின.

ஆசையினுடையதும் பொருள்களினுடையதுமான புராதன மோதல் மீண்டும் மீண்டும் செயல்பட்டன. இந்த வற்ற இறக்கத்திலேயே அவளுடைய வேதனை முடிந்திருக்கலாம். பல ஆண்டுகளாக அவளைப் பார்த்துக்கொண்டு நிற்கும் கட்டில் கால்களுக்கும் மரப் பலகைகளுக்கும் கூட அப்படித்தான் தோன்றத் தொடங்கியது.

சிறியதொரு மாங்கன்றை வெட்டிப் பிளப்பதற்குள் வியர்த்து குளித்திருந்தான் சங்கு. வியர்வை உலர்வதற்குக் கூட நேரம் கொடுக்காமல் கல்குளத்துக்குச் சென்று மூழ்கிவிட்டுத் திரும்பினான் அவன். ஈரத்துடன், இடைவேட்டியை உடுத்திக் கொண்டு ராம நாமங்களை முணுமுணுத்து பிணத்தை எடுக்கத் தயாரானான். கையில் ஒரு வால் கிண்டி தொங்கிக் கொண்டிருந்தது. ஒரு ஆள் உயரத்துக்கு வாழை இலையை வாட்டிக் கொண்டுவந்து தரையில் விரித்தான். சந்தனப்பத்திகளை பற்றவைத்து இரட்டை வாழைகளில் குத்தி

---

* வடக்கினி - நாலுகட்டு வீட்டின் வடக்குப் பக்கம்

நிறுத்தினான். அரிசியையும் நெல்லையும் கூட்டிக் கலந்து ஒரு பகுதியில் குவித்து வைத்தான். பிணத்தில் மூடுவதற்கான பட்டுத் துணியை பாதிவரையில் விரித்து தயாராக்கினான். நெய்ப் பந்தங்களை பற்றவைத்தான்.

அப்போதும் பாட்டி வடக்கினியில் படுத்து மூச்சிழுத்துக் கொண்டு தான் இருந்தாள். இதோ நான் வந்து சேர்ந்துவிட்டேன் எனும் பாவனையோடும் விரித்த உள்ளங்கைகளோடும் சங்குமேனன் அறைக்குள் வந்து சேர்ந்தான். தயாராகாத பயணிக்காகக் காத்து நிற்கும் ரிக்ஷாக்காரனைப் போல் அமைதியற்றவனாக குழம்பி நின்றான்.

சந்தேகச் சிலந்திவலைகள் மனத்தின் படிக்கட்டை தாண்டாமல் இருப்பதற்காக அவன் எச்சரிக்கையுடன் இருந்தான். முணுமுணுக்கும் உதடுகள் 'போ, போ' என்று ஆட்டிக் கொண்டிருந்ததே மறு சிந்தனையின் கிங்கரன்களாக இருந்தன.

தன்னுடைய நீண்ட கரங்களை தலைமுதல் பாதம் வரை நீட்டிப் பரப்பி பாட்டியை வாரி எடுப்பதற்குள் அவளுடைய மூச்சு நின்று விட்டிருந்தது. இவ்வுலகின் நினைவுகள் போல் சிறியதொரு உஷ்ணம் மட்டும் நெஞ்சிலும் முகத்திலும் ஒட்டியிருந்தது.

சூனியமான தன் மனதுக்குள்தான் சங்குமேனன் பாட்டியின் பிணத்தைச் சுமந்தான். அவளைக் கையாள்வதில் யாதொரு தொந்தரவும் ஏற்படவில்லை. பட்டுத்துணியில் மூடப்பட்ட சவம் சுருண்டு கிடந்தது. வாட்டிய வாழை இலையின் நீளம் மிகவும் துல்லியமாக இருந்தது. மாமர விறகிற்கும் முன்பே சவம் பற்றி எரிந்து விட்டது. யாகம் முடிந்ததுபோன்றதான தூய்மை எங்கும் பரவி இருந்தது. துர்நாற்றத்தின் வீச்சமோ மூக்கிற்கு அருவருப்போ உண்டாகவில்லை.

சிதைத்தீ பரவிக் கொண்டிருந்தபோதே சங்குமேனனின் பார்வை ஆகாயத்தில் உயர்ந்து சென்ற புதிய நட்சத்திரத்தை அடைந்தது. பாட்டி பெற்ற நற்பயனை நினைத்து இதயம் நிரம்பி வழியத் தொடங்கியது. தென்னை மரங்களுக்கு மேலே தாவும் தீ நாளங்கள் அந்த நட்சத்திரத்துக்கு சிவப்பு நிறத்தை அளித்தன.

பாட்டியின் இறுதி நாளைப் பற்றிய வர்ணனை முடிந்தபோது சங்குமேனனும் கார்த்தியும் கற்களோடு கற்களாக உறைந்த

சிற்பங்களாகி விட்டார்கள். கடற்காற்றும் கொஞ்ச நேரத்துக்கு இடைவேளை அளித்தது. ஒருவர் வெளியேற்றும் மூச்சுக் காற்றை மற்றவர் இழுத்துக்கொள்ளும் வகையிலான நிச்சலத்தன்மை அவர்களுக்கிடையே தளம் அமைத்தது. சுற்றுச் சூழலையும் அது முழுமைப்படுத்தியது. கார்த்தி தன்னுடைய நீண்டு வெளுத்திருந்த கழுத்தை மேல்நோக்கி உயர்த்தினாள். சங்குமாமன் காண்பித்துக் கொடுத்த சிறிய நட்சத்திரத்துக்கு இப்போது சிவப்புக் கதிர்கள் இணைந்துகொண்டதாக அவளுக்குத் தோன்றியது.

தான் அமர்ந்திருக்கும் கருங்கல் துண்டிலிருந்து சங்குமேனன் எழுந்துகொண்டான். கார்த்தியின் கேள்விகளும் முடிந்திருந்தன. இந்தப் பிறவியில் அவர்களுக்கிடையிலான வார்த்தைகளும் மொழியு மெல்லாம் வற்றி முடிந்துவிட்டனவாக அவன் புரிந்து கொண்டான்.

உதடுகள் ஓர் அடையாளம்தான் என்றாலும் தொடர்ந்தாற்போல் வெட்டும் கண் இமைகளால் அந்த விடைபெறலே ஒரு கடிதமாயிற்று. விழிகளைச் சட்டென்று தாழ்த்திய சங்குமேனன் திரும்பி வந்தான். ஐந்து இந்திரியங்களுக்கும் தாழ்ப்பாள் போட்டு தன்னுடைய வாழ்நிலையின் நிர்வாணத்தை மட்டும் சூழ்ந்து கார்த்தி நின்று விட்டாள்.

தான் விடைபெறும்போது கார்த்திக்கு துக்கம் இருக்கும் எனும் புரிதல் பற்றி சங்குமேனனுக்கு வருத்தமில்லை. ஒரு வகையான திருப்திதான் மேலிட்டது.

இருபது

இரண்டு நாள்கள் கழித்து திரும்பி வருவதாகச் சொல்லிவிட்டு அமீர் வெளியங்கோட்டிலுள்ள வீட்டுக்குப் போய்விட்டான். முன்றாம் நாளும் ஆளைக் காணவில்லை. வெளியங்கோடு வரைக்கும் ஓடிச்சென்று விசாரித்தால் என்ன என்று மாமுட்டி பலமுறை ஆலோசித்துப் பார்த்தான். ஆனால் இது ஒரு முட்டாள்தனத்தைப் போல்தான் இருந்தது. ஊரிலுள்ள இப்போதைய தன்னுடைய நிலையில் எந்தவொரு வீட்டுக்குச் செல்வதற்கும் மாமுட்டிக்கு சங்கோஜமாக இருந்தது.

அமீரின் வாப்பாவோடு மாமுட்டி நெருக்கமாகவும் சிநேகமாகவும் இருந்தவன். அதனால் பண்டகசாலை வேலைக்கு உதவுவதற்காக பையன் தேவை என்று கூறி ஒரு கடிதம் கொடுத்தனுப்பினால் என்ன என்றும் சிந்தித்தான். ஆனால், கடைசியில் அதற்கான நெஞ்சுறுதி கிடைக்கவில்லை.

அந்தி மங்கி இருள் கவிந்ததும் அமீர் இல்லாமையால் மாமுட்டி உச்சக் கோபமடைந்தான். அவனிடம் நட்போ களைப்போ எதுவும் தோன்றவில்லை. உண்மையில் அமீர் வந்து சேராததினால்தான் கோபமாக இருந்தது. இருந்தாலும் அவனை உடனே சந்திக்கக்கூடிய பச்சையான கவர்ச்சியும் சேர்ந்து இருந்தது.

கடற்கரையின் ஈரமண்ணை வெறுமனே குழைத்து உருட்டினான் மாமுட்டி. பின்பு, தட்டி உடைத்தான். எல்லா நட்சத்திரங்களுடனும் சேர்ந்து ஆகாயம் அவனை வசீகரிப்பது போல் நோக்குவதாக இருந்தது. இயற்கையின் மனோரம்மியத்தில் ஒரு நிமிஷம் மனம் ஒன்றிய மாமுட்டி சட்டென்று கோபமடைந்தான்.

''ஐயோ! என்னோட மூளையில இந்த மயக்கத்த ஏற்படுத்தியது எந்த இபிலீஸாக இருப்பான். ஆனா, முடியலியே. என்னால இந்த மயக்கத்த தடுக்க முடியலியே...''

அப்போது அவனைத் தொட்டுக்கொண்டிருக்கும் பொடி மணலைப் போல் சுவாசிக்கும் காற்றைப்போல், நெஞ்சில் அடித்துக்கொள்ளும் துடிப்பைப் போல் அமீருடனான கவர்ச்சியை மாமுட்டி அறிந்துதான் இருந்தான்.

அவனுடைய குரல் சாமான்யமாக உரக்கவே இருந்தாலும் கடற்காற்று அதனை சுருட்டி எடுத்துச் சென்று ஆகாயத்தின் மர்மத்துக்குள் வீசி எறிந்தது. தன்னை சுற்றி மூடக்கூடிய சுற்றுச் சூழலிலும், முன்னால் அலைமோதும் கடல் அலைகளிலும், கண் சிமிட்டும் நட்சத்திரங் களிலும் எல்லாம் என்னவோ ஒருபக்குவமில்லாமையின் சேர்க்கைகள் உண்டென்று அவனுக்குத் தோன்றிற்று.

உண்மையிலேயே தேவையாக இருந்தது இப்படிப்பட்ட எதுவும் இல்லை. எல்லாவற்றிலும் விபரீதத்தன்மையின் இடர்ப்பாடும் உண்டு. இயற்கையான அமைப்பும், மனிதனுடனான உறவும் இவை எல்லாவற்றையும் விட அழகாக இருந்தது. என் ஊர்க்காரர்களின் கட்டமைப்பும் என்னுடைய சொந்த கட்டமைப்பும் இவைகளை விடவும் பராட்டப்படக் கூடியதாகவே இருந்தது.

நான் கார்த்தியை திருமணம் செய்து கொண்டதும், அதற்கான வீரச் செயலும் இப்படி மதிக்கப்படாமல் போகவேண்டியதில்லை. மனிதன் படைக்கும் மூலப் பொருள்களை இயற்கை பின்பற்றும் நியதிகள் நக்கல் செய்து கைகொட்டி சிரித்துக் கொண்டிருக்கின்றன.

அன்றிரவு குழப்பமாகவே இருந்தது. காமத்தின் பற்களுக்கு இந்த அளவுக்கு கூர்மையுண்டென்று மாமுட்டி புரிந்து கொண்டிருக்க வில்லை. அமீரைப் பற்றி நினைக்கும்போது அந்தத் தீப்பிடிக்கும் நெருக்கமே அவன் வரவால் சட்டென கோபமாக நிறம் மாறுகிறது.

நடுநிசியில் உலாத்திக் கொண்டிருந்தபோது கார்த்தி வந்து மாமுட்டியின் கைகளைப் பிடித்தாள்.

''வேணாம்... வேணாம்...''

அவன் உதறிக் கொண்டிருந்தபோது கார்த்தியின் கைவிரல்கள் சாவதானமாக அவனைத் தடவிக் கொடுத்தன.

மேகக் கூட்டங்களால் அலங்கோலமாகிக் கிடக்கும் ஆகாயத்திலிருந்து மங்கலான கண்களுடன் விடியல் எழும்பி வந்தது. அக்கூட்டத்தில் அமீரும் வந்து சேர்ந்தான். முடிந்துவிட்ட இரவின் நிழல்களைச் சுமந்துகொண்டு பீரானும் வீட்டில் நுழைந்தான். உடல் ரீதியாகவும் மன சம்பந்தமாகவும் அளவுக்கதிகமாகச் செலவு செய்ததின் வடுக்கள் அவன் முகத்தில் மிச்சம் இருந்தன.

தூக்கம் விழித்ததும் தன்னுடைய பார்வைச் சக்தியில் அசாதாரணத் தன்மை அனுபவப்பட்டது மாமுட்டிக்கு. ஒரு கண்ணால் அமீரையும் மறு கண்ணால் பீரானையும் தனித்தனியாகப் பார்த்துக் கொண்டுதான் அவன் எழுந்து வந்தான்.

அமீரைக் கண்டதும் மார்பின் மத்தியில் ஒரு குதிரை ஓடுவதற்கு தொடங்கிவிட்டது. பொடி மணல் பரப்பின் ஈரத்தில் அமர்ந்து இரவின் மறைவில்தான் அது இனிமேல் முடிவுக்கு வரும். உடைக்க முடியாத முறுக்கில் இருந்தான் பீரான். முகம் கழுவி துடைத்துக்கொள்வதற்கான நேரத்தைக்கூட கொடுக்காமல் மாமுட்டியை அவன் பிடித்து இழுத்தான்.

''பாதாறம்பத்து கடற்கரை பக்கத்துல ஒரு படகு இருக்கு. கொச்சிலேர்ந்து துரை சரக்கோட வந்திருக்கார். மாமுட்டிக்காவ பார்க்கணும்னு சொன்னார்... மொதலெல்லாம் சரக்கு கொடுத்துட்டு போன அந்த சிவப்பு துரைய உங்களுக்கு ஞாபகம் இருக்கில்லே? அவன் என்னை... நீங்க வேகமா போகணும்.''

இந்த மூச்சில் சொல்லி முடிக்கவில்லை என்றால் பின்பு சொல்லவே முடியாது என்னும் நிலையில் பீரான் சோர்வடைந்தான். ஒரு சுமையை இறக்கி வைத்ததுபோல் அவன் நின்று மூச்சு வாங்கினான்.

கொச்சி துரையின் டார்ச் விளக்கைப் பற்றியும் அற்புதமான பொருள்களைப் பற்றியும் மாமுட்டிக்கு நினைவுக்கு வந்தது. சென்றமுறை கொண்டுவந்திருந்த சரக்குகளையெல்லாம் மாமுட்டி மூலம்தான் விற்றுத் தீர்த்தான். உடனே பாதாறம்பில் போவதற்கு எச்சரிக்கையுடன் இருந்தாலும் இதுவொரு நல்ல வாய்ப்பு என்றுதான் மாமுட்டிக்குத் தோன்றியது.

அமீரை அனுபவிப்பதற்கான பொறுமையின்மையை இரவு வரையில் பிடித்து நிறுத்தவேண்டும். மார்பில் துள்ளும் குதிரையோட்டத்தைச் சுமந்துகொண்டு கடையில் அமர்ந்திருக்கலாம் என்றாலும் அந்தி மயங்க பல யுகங்கள் ஆகும்போல் இருந்தது.

''கொச்சிலேர்ந்து துரை வந்தும்கூட உங்களுக்கு ஏன் சந்தோஷம் இல்லாம இருக்கீங்க மாமுட்டிக்கா... உங்களோட அந்த பலத்த சிரிப்பப் பார்த்துகூட எவ்வளவோ காலமாயிட்டுது...''

என்னவோ பயங்கர ஆவேசத்தைப் போல் உறைந்த நிலையில்தான் பீரான் மாமுட்டியின் தோள்களைப் பிடித்துக் குலுக்கினான்.

கொஞ்சகாலமாகவே அவன் இப்படியெல்லாம் பேசுவதில்லை. மாமுட்டி பார்த்தபோது தாமே ஆவியாவதுபோல் பீரான் வியர்த்துக் கொண்டிருந்தான். வியர்வையும் கண்ணீரும் கலந்திருக்கிறதோ என்று அறிவதற்கும் கூட முடியாத நிலையில் முகம் முழுவதும் நீராகி இருந்தது.

''பீரான்... குழந்தைங்களைலதான் சிரிக்க முடியும். இந்த மாமுட்டிக்காவோட குழந்தைகாலம் முடிஞ்சுட்டுதில்லை?''

''நீங்க பெரியவங்களாயிட்டும் சிரிச்சிக்கிட்டுதானே இருந்தீங்க, மாமுட்டிக்கா?''

''அப்போதும் நான் குழந்தையாத்தான் இருந்தேன் பீரான். இப்போ கொஞ்ச காலமாதான் பல ஆண்டுங்க பழக்கமாயிட்டது போல...''

அதைக் கூறிவிட்டு வாய்பிளந்து பல்லைக் காட்டியபோது மாமுட்டியிடமிருந்து ஒரு அருவருப்பான சத்தம் வெளியே வந்தது. அவனுடைய பல் இடுக்குளில் இவ்வளவு அதிகமான கறை பிடித்திருப்பது இப்போதுதான் முதன் முதலாக வெளியே தெரிகிறது.

''சிரித்தது போதுமா?''

அந்தச் சிரிப்பின் பயங்கர மாற்றத்தைக் கண்டு பீரான் நடுங்கி விட்டான். அவனுடைய உதடுகளில் நீலம் பரவியது. மாமுட்டி படி இறங்கியதும் பீரானின் சுழலும் கால்கள் முஸ்லியாரகம் வீட்டின் வேலி இடுக்குகளின் வழியே ஓடி மறைந்தது.

இருபத்தோன்று

அரபிக் கடலின் நீர்ப்பரப்பு சூரிய ஒளியின் பிரளயமாக உருமாறிக் கொண்டிருந்தது. மின்னி ஒளிரும் ஒளி வெள்ளம் இப்பூவுலகை பூண்டோடு அழித்து எதார்த்தமின்மையை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

கண்விழி பளிங்கு நீர்மங்களை சிறிதும் கூசச் செய்யாமல் அந்தப் பிரபாபுரம் முழுவதையும் தனக்குள் ஆவாஹித்தாள் கார்த்தி.

நிமிஷங்களுக்குப்பின் அவளுடைய விழிகள் தட்டுத் தடுமாறி தான் ஏற்படுத்திய காளிகோயிலில் சென்று பதிந்தன. கோயிலுக்குப் போகும் உபசாரத் தன்மைகளிலிருந்தெல்லாம் விடுபட்டவளாக மிகவும் இயல்பாகவே அவள் கோவிலை நோக்கி நடந்தாள். விக்கிரகத்தைப் பார்த்து வெறுமனே சுற்றி வந்தாள். கைகளை குவித்து கும்பிட வில்லை.

திரும்பி வந்த கார்த்தி, தெற்கு வாய்க்கால் படித்துறையின் சுற்றுப்புறங்களில் உலாத்தும் அமீரைக் கவனித்தாள். படித்துறையில் சென்று அவனுக்கு அருகில் அமர்ந்தாள். விடியலின் பனிப்படலங்கள் அமீரின் கண்களில் மட்டும் எஞ்சி இருந்தன.

''உன்னோட கண்களில் பனித்துளிங்க இருக்கிறதோ!''

''என்னங்க தாத்தா?''

அவனுடைய பிரதிபலிப்பு ஆச்சரியமாக தணிந்திருந்தது.

''அமீரு, நீ எப்பவாவது சூடாகி இருக்கிறாயா..? வாப்பாவிடமிருந்து அடிவாங்கும் போதாவது... விளையாட்டுப் புள்ளைங்க கேலி செய்யும்போதாவது... இல்ல மற்ற சமயங்களிலாவது?''

அவன் மறுக்கும் பொருளில் தலையாட்டினான்.

''நீ என் கூட குளத்தில் குளிக்கலாம் வா... உனக்கு நான் சொரணைய உண்டாக்கி அது எப்படின்னு உணர்த்தறேன். உன்னோட கண்களில் பனித்துளிகளைக் காணறப்போ உன்னை அப்படியே குத்திக்கிழிச்சி போட்டுடலாமான்னு தோணுது எனக்கு.''

இவ்வளவையும் சொல்லிவிட்டு கார்த்தி அவனைச் சுற்றிப் பிடித்த போது அமீரின் நரம்புகளில் சூடான இரத்தம் பாய்ந்தது. செத்த மீனின் கண்களுடன் அந்தப் பதினைந்து வயது பையன் அவளை புதியதொரு கோணத்தில் உற்று நோக்கினான். கார்த்தியின் மார்பிலிருந்து உயர்ந்த மணம் சுற்றிச் சுழன்று அவனுடைய நாசிக்குள் பரவியது. இதனுடைய மென்மையை நோக்கி உதடுகளை விரித்துக்கொண்டு அவன் கழுத்து மெல்லத் தாழ்ந்தது. அவளின் நிர்வாணத் தன்மையின் ஆழங்களைத் தாண்டுவதற்கு பொறுமையில்லாமல் தலையை நுழைத்து உருட்டினான்.

''அமீரு, நீ நல்லாவே சேற்றைப் பூசிக்கிட்டு இருக்கே. அதனால உன்னை நான் குளிப்பாட்டி விடறேன்.''

அவனை படிக்கட்டுகளில் இறக்கி புதுத்தண்ணீரில் முக்கினாள்.

''பாரு, இன்னும் கீழே இறங்கினா கல் படிக்கட்டுங்க இருக்காது. சுத்தத் தண்ணீராதான் இருக்கும். அதன் மூலமா மேலும் மேலும் நீ இறங்கிப் போனா ஜலக்கன்னிகளோட அரண்மனையை அடையலாம். அரண்மனையோட உச்சியில பார்த்தா ஏழு நிறங்களில உதித்து எழற சூரியனையும் பார்க்கலாம்.

''அவற்றையெல்லாம் பாக்கறதுக்கு எவ்வளவு இனிமையா இருக்கும் தெரியுமா?... எல்லா இடத்திலேயும் சின்னச் சின்ன குமிழிங்களோட மெல்லிய நீரோட்டங்கள் சுற்றித் திரிந்து கொண்டிருக்கும்... நூற்றுக் கணக்கான வண்ணங்கள் அங்கே நடனமாடும்!''

கார்த்தியின் கரங்கள் அமீரை பலமாகப் பிடித்து மார்போடு அணைத்தன. கால்கள் படிக்கட்டுகளில் இறங்கின. மார்பகத்தின் மினுமினுப்புகளுக்கு இடையே எரிமலையின் தீக்குழியை அறிந்து அவன் சட்டென்று முகத்தை விலக்கினான்.

''...அரண்மனைல ஆம்பிளைங்க இல்ல. காவல்காரங்க முதற் கொண்டு எல்லோருமே கன்னிப் பொண்ணுங்கதான். ஆம்பளையா நீ மட்டும்தான் அமீர்...''

இப்போது அமீரின் நாசித்துவாரங்களும் குளத்திலுள்ள தண்ணீரும் ஒரே மட்டத்தில் இருந்தன. சிறியதொரு ஆலிங்கனத்தின் பாவனை தான் கார்த்திக்கு ஏற்பட்டிருந்தது என்றாலும் அமீர் நசுங்கிவிட்டான். பெண்களிடமிருந்து ஏற்படும் காதலின் அனுபவம் இவ்வளவு கடுமையானது என்று அவன் சிந்தித்திருக்கவில்லை. அவனை தன்னோடு நெருக்க நெருக்க கார்த்தி குளப் படிகளில் இறங்கிக் கொண்டிருந்தாள்.

''...அவங்க உன்னை பூந்தோட்டத்தின் ஒய்யார அழகைக் காண அழைத்துச் செல்லுவாங்க. இனிக்கும் பழங்களையும் பலகாரங்களையும் தருவாங்க. அவங்களோட மூச்சுக் காத்துல தாது புஷ்டி மூலிகை மருந்துகளின் உஷ்ணம் உண்டாகி இருக்கும். அதை ஏற்றாலே போதும், உன்னோட கண்களில் படிஞ்சிருக்கும் பனிப் பாறைங்க உருகி ஒழுகிவிடும்... நீயும் நல்ல பையனாகிடுவே!... சுறுசுறுப்போடு கையைக் கோர்த்துக் கொண்டு நடக்கும்போது நீயே பாரேன்... அவங்க உடம்புகளிலெல்லாம் உனக்காக ஏராளமான இனிப்புப் பழங்கள் இருக்கும் அமீரு...''

தண்ணீருக்கடியில் ஒரு பிளவைப்போல் அமீரின் உறுப்புகள் சுழற்றி அடிக்கப்பட்டன. உயிரின் மூச்சுத் திணறல் குமிழிகளாக நீர்ப்பரப்பின் மேல் உயர்ந்தன. அடையாளம் அறிந்ததெல்லாம் தகர்ந்து போகும் வகையில் ஆழமான அனுபவம் தன்னுடைய ஆத்மாவும் உணர் வெல்லைகளும் இதோடு சிதறிவிடுமென்று அவனுக்குள் தோன்றிற்று.

வீரியத்தின் இறுதிச் சரடுகளை எட்டிப்பிடித்து கார்த்தியின் மார்பகக் காம்பை அவன் ஆவேசமாகக் கடித்தான்.

வேதனையின் ஆயிரக்கணக்கான சிலிர்ப்புகள்! கார்த்திக்குள் ஒரு சிறு புன்னகை படர்ந்தது. மரணத்தின் நகக் கீறல்கள் அவளுக்குள் பிரத்யேகமானதொரு கிச்சுக்கிச்சு மூட்டின.

மேலெழும்பி வந்த நீர்த்திவலைகளில் இரத்தநிறம் கலந்திருந்தது. தண்ணீர் இருக்கும் அரண்மனையில் என்னவெல்லாம் விசேஷங்கள்

என்பதை அவனிடம் சொல்லவேண்டும் போல் இருந்தது கார்த்திக்கு. அவள் மறுபடியும் மறுபடியும் சொல்ல வேண்டியதை உருப்போட்டுக் கொண்டிருந்தாள். கிள்ளிப் பிடித்து கட்டியணைத்துக் கொண்டிருந்த அமீரின் கைகளும் விரல்களும் சிறிது நேரம் கழிந்ததும் தளர்ந்து பிரிந்தன.

''...அப்படித்தான். நல்ல பிள்ளையாக ஒரு ஜலக்கன்னியோட கையைப் பிடித்துக்கிட்டு நீ மன்றைக்கு பூமிக்கு மறிவருவே அமீர்?''

பதில் கிடைக்காததால் அக்கேள்வியை அவள் பலமுறை திரும்பத் திரும்பக் கேட்டாள். தேகத்திலிருந்து வடியும் அநேகமான அருவிகளுடன் அவள் குளத்தின் படிகளை ஏறிப் பிடித்தாள். கார்த்தியின் மார்பில் ஒரு தெச்சிப்பூ குலைதள்ளி மலர்ந்தது. காதலை அடையாளம் காணமுடியாத அமீரின் உடல் குளத்தில் மூழ்கி எழும்பியது.

சிறிதுநேரமாக கார்த்தியைக் காணாத ஆயிஷா சுற்றுமுற்றும் கூப்பிட்டுக் கொண்டே நடந்தாள். குளக்கரையிலிருந்து திரும்பிய கார்த்தி அசாதாரணமான விதத்தில் யாருடைய கண்களிலும் படாமல் முஸ்லியாரகம் வீட்டின் படியைத் தாண்டி நேராக மேற்குத் திக்கை நோக்கி நடந்து மறையும்போது நுண்மணலில் ஒரு குங்கும நிறக்கோடு அவளைப் பின் தொடர்ந்தது. மார்பகத்திலிருந்து ஒழுகும் இரத்தத்துக்கு மதிய உச்சி வெயில் வேகத்தை அதிகரித்திருந்தது.

இதுவரை துரத்திலிருந்து காண்பதைத் தவிர அரபிக்கடலின் இருப்பை கார்த்தி அருகில் சென்று அறிந்தது இல்லை. கடலோடு நெருங்க நெருங்க அவளுடைய மனம் முணுமுணுத்தது.

''இதான் ஆண்மை... இதுதான் ஆண்மை...''

இருபத்திரண்டு

முன்பு எப்போதோ மாமுட்டிக்கு பொருள்களை விற்ற பழைய துரை உண்மையில் கொச்சியிலுள்ள ஒரு பங்களாவில் அமர்ந்து கொண்டிருக்கிறான். கவிழ்த்து வைத்த சீன வலைகளை உதறிப் போடுவது போல் திடீரென காற்றடித்தது. சாத்தி வைத்திருந்த பங்களாவின் கதவுகளை தள்ளித் திறந்தான் மாமுட்டி.

''என்னை எதுக்காகக் கூப்பீட்டீங்க?''

சிரித்துக்கொண்டே வாயிலை நிறைத்தபடி மாமுட்டி நுழைந்தான். கண்களைச் சிமிட்டித் திறந்த துரைக்கு ஞாபக மறதியினால் ஆளை அடையாளம் அறிந்துகொள்ள சிறிது அதிக நேரமாயிற்று. அவ்வளவு தான்...

மீண்டும் நோக்கியபோது மாமுட்டியின் தலை நான்கு துண்டுகளாகப் பிளந்து நான்கு திசைகளிலும் சிதறி விழுந்தது. அமர்ந்த இடத்திலிருந்து துள்ளி எழுந்த துரை நாலாபக்கமும் துருவிப் பார்த்தான். ஒன்றுமில்லை. பங்களாவின் கதவுகளை மூடித் திறந்து பரிசோதித்தான். ஒன்றுமில்லை. காற்று வந்த வழியையும் சென்று தேடியோடி நோக்கினான். எங்கும் எவரும் யாருமில்லை.

இருபத்து மூன்று

வரலாற்றுப் புகழ்பெற்ற பொன்னானியிலுள்ள பாதாறம்பு முழுவதும் படகுக்காரர்கள் பரப்பிவைத்த வலைகளாகவே இருந்தன. செத்துவிழுந்த பல்லாயிரக்கணக்கான மீன்களின் ஜீவதாதுக்கள் அவற்றில் புலப்படாமல் ஒட்டியிருந்தன. மேகத்தின் கருமைப் படர்ப்புகளை உருட்டும் விதத்தில் திடீரென்று காற்றடித்தது. ஒரு அலறலில் பாக்கியுள்ளது போல் அதனுடைய விசில் ஒலி எஞ்சி நின்றது. அகால மரணத்தை வற்ற அன்றைய பகல், மதியத்திலேயே காணாமல் போயிற்று.

சாவக்காட்டிலிருந்து இருள் மறைவில் வந்துசேர்ந்த செய்துமுல்லாவும் கூட்டாளிகளும் பாதாறம்பின் ஓரத்திலேயே வேகமாக நகர்ந்தார்கள். வியர்ப்பின் உப்பு வறி அவர்களின் உடலில் பட்டிருந்த காயங்களும் வெட்டுக்களும் வேதனை அளித்தன. மகிழ்ச்சி வெள்ளத்தில் அவர்கள் யாதொன்றையும் அறியவில்லை. ஆணவத்தின் பயங்கரச் சுவடுகள் பூமியைக் குத்திக் குழைத்தன. அவர்களின் மூச்சுகள்தான் கடுமேகங்களாகி பகலை மூழ்கடிப்பதாகத் தோன்றியது.

கொடுவாள், கத்தி, கடப்பாரை என இப்படிப்பட்ட கொலை ஆயுதங்களை ஒரு தோணியில் அடுக்கி வைத்தார்கள். அவற்றிலெல்லாம் இரத்தமும் சதைத் துணுக்குகளும் ஒட்டியிருந்தன. எல்லோரும் சேர்ந்து துள்ளி வரியதும் தோணி நகர்ந்தது. பெரும் பெரும் அலைகளாக கடலும் அலைந்தது.

பொழுது மறையும் வரையில் வெளிக் கடலில் தூரவிவிட்டு அதன்பின் சாவக்காட்டுக்கு வந்து சேர்வதுதான் செய்துமுல்லாவின் உத்தேசமாக இருந்தது. தாங்கள் இங்கு வந்ததோ, விஷயத்தை

முடித்துவிட்டு திரும்புவதோ பொன்னானி மக்களுக்கு அதிகமாகத் தெரியக்கூடாது. 'காஃபரி'ன் கதையை முடித்து 'தீனை' காப்பாற்றி விட்டாயிற்று. கடமையைச் செய்திருந்தாலும் மனத்தின் பதை பதைப்பு நின்றபாடில்லை. தன் கூடவேயுள்ள அடியாட்களுக்கு ஈடாக துள்ளிக் குதித்து சண்டைபோட்ட செய்துமுல்லா எல்லோரின் கவனத்தையும் தன்பக்கம் திருப்பிக் கொண்டிருந்தான்.

தோணி சிறிது வெளிக் கடலுக்குள் போனதும் உருக்குப் போன்ற ஏதோவொரு பொருளில் மோதி திடீரென திசைமாறிப் போனது. இவ்வளவு ஆழமான கடலில் இத்தனைபெரிய தூண் தலை நிமிர்ந்து நிற்கிறதே! எல்லோரும் ஒரே நேரத்தில் திகைத்துப் போனார்கள்.

செய்துமுல்லா குறுந்தாடியைச் சொறிந்துகொண்டு தண்ணீரைக் கும்பிட்டு நோக்கியபோது ஒரு தலை உயர்ந்து மேலேழும்பி வருகிறது. தலைமுடி சுற்றிலும் பரவி விரிந்து கிடந்தாலும் முகத்தின் அழகு மட்டும் ஸ்படிகமாகத் தெரிந்தது. சிவந்திருக்கும் கண்களில் கொடூரமான தீர்ப்புகள்.

கழுத்துவரையில் தண்ணீரில் மூழ்கி, உற்று உருட்டி நோக்கும் அந்தப் பெண் உருவம் எதன்மேல் காலூன்றி உறுதிப்பட்டு நிற்கிறதோ? அந்த இடத்தில் கடலின் ஆழம் எவ்வளவு இருக்கும் என்பதையும் நிர்ணயிக்க முடியவில்லை. அலையடிக்கும் கரும்பச்சை தண்ணீரின் வழியே கீழ்நோக்கிப் பார்க்கும்போது அம்மணமான உடல் ஆழங்களை நோக்கி வளர்ந்து செல்கிறது. அதனுடைய வேரே கடலின் தொப்புள் கொடியாக இருக்குமோ?

உள்பயத்தை உண்டாக்கும் பீதிக்கு இடையிலும் ஆச்சரியமான ஒரு எண்ணம் செய்துமுல்லாவையும் கூட்டாளிகளையும் கொத்திப் பிடுங்கியது. தளதளக்கும் நீர்ப்பரப்புகளுக்கிடையே முழுமையான அந்த அம்மண உடலின் பல பதிப்புகள் நூற்றுக்கணக்கில் இடை விடாமல் வெளியே பிரவாகித்துக் கொண்டிருந்தன. விபரீதமான உருவ குணங்களோடு முலையழகும் தூயவெள்ளைத் தோள்களும் வெளியில் மின்னி ஒளிர்ந்தன.

ஏற்க முடியாத ஓர் அழகு என்று புரிந்தும்கூட அவர்களால் அங்கிருந்து போக முடியவில்லை. மனம் பதறுவதை அனுசரித்து அவர்களைச் சுமந்த தோணியும் சுழலில் அகப்பட்டதைப் போல் சுற்றிச் சுழன்று

கொண்டிருந்தது. துடுப்பை உறுதிப்படுத்தி தோணியைத் துழாவிச் செல்ல முயன்றபோது நங்கூரமிட்டது போல் பார்வைகள் கொக்கி போட்டு இழுக்கின்றன.

அலைமோதி மேலும் கீழும் ஆடிய அந்தச் சிறிய தோணி பாதி வரையில் தண்ணீரில் மூழ்கிவிட்டிருந்தது. தங்களுடைய துழாவுகள் கடலின் ஆழத்தை நோக்கிதான் கொண்டு செல்கின்றன என்பதை அறிந்ததும் அந்த பலசாலிகளால் வேறொன்றையும் செய்ய முடியவில்லை. ஜீவிதப்பலத்துக்கும் சுய அழிவுக்கும் இடையேயுள்ள கயிறிழுப்பில் அவர்கள் உதவியற்றவர்களானார்கள்.

பார்வைகளை மேல்நோக்கி உயர்த்திய செய்துமுல்லா 'அல்லா'வை அழைத்து அழுதான். ஜீவிதத்தின் மகத்துவம் அவனுக்கு கண்முன்னால் மின்னலைப்போன்று உணர்த்தப்பட்டது. கடலின் வாசல்களைத் திறந்து பரமகருணாளன் அவனை தன்பக்கம் திரும்ப இழுத்தான். உறுதியாக நிற்கும் அந்தப் பெண் உடலை தொட்டுத் தடவிக் கொண்டே தாயின் மடியில் விழும் குழந்தைகளைப் போல் செய்துமுல்லாவும் கூட்டாளிகளும் கடலின் அடித்தட்டில் உதிர்ந்து விழுந்தார்கள்.

இருபத்து நான்கு

பல நாள்களுக்குப்பின் காற்றும் கொந்தளிப்பும் வெறியாட்டம் போட்டதால் ஊருக்குள்ளேயே கடல் உருவாகி, அதில் ஒரு தோணி தத்தளித்தது. பார்க்கும் இடமெல்லாம் ஒரே தண்ணீர் மயம்தான். கருமேகத்தை அப்பிக் கொண்டிருந்த அடிவானமும் இன்னுமொரு ஆழியாகி பயமுறுத்தியது.

தோணியோடு சேர்ந்து தங்கள் ஆசையையும் இழந்த ஐந்து மீனவர்கள் ஆர்வத்துடன் கடலில் முங்கி மூழ்கிப் பார்த்தார்கள். எழும்பி நிமிர்ந்தபோது கைகால்களுக்குக் கீழே கூடான ஒரு பொருள். ஐந்து பேர்களும் ஒன்றாக கைகோர்த்துக் கொண்டார்கள். பால் குடிக்கும் நாய்க்குட்டிகளைப் போல் அப்பொருளை அள்ளிப் பிடித்துக் கொண்டு கரையை இலக்காக்கி நீந்தத் தொடங்கினார்கள். முழங்கி ஆர்ப்பரித்து கடலின் மேல் எழும்பும் அலைகள் பல இடையூறுகளை உருவாக்கியும், அவர்களை வற்றிய அந்த பாதுகாப்புப்பொருள் பதறவில்லை. தாய்மையைப் போன்று முழுமையான பாதுகாப்பு. கடலின் ஆழத்திலும் இறந்துபோன உம்மாக்களைப் பற்றிய நினைவுகளை அவர்கள் உணர்ந்தார்கள். கரையின் எல்லைகளை நோக்கி அம்பு வேகத்தில் ஓடிச் சேர்ந்தார்கள்.

கடற்கரை மணலில் கால்களைப் பதித்த மீனவர்கள் கண் விழித்துப் பார்த்தபோது தங்களைக் காப்பாற்றிக் கரைசேர்த்த பெண்ணின் உடல் நிர்வாணமாகப் படுத்திருந்தது. அதுவும் உயிரோடு இருப்பதுபோல். எந்தவொரு ஆணினிடமும் காமத்தை எற்படுத்தக்கூடிய போதையுணர்வும் சதைப்பற்றும் அதற்கு இருந்தன. மின்னும் கண்களுடன் அவ்வுடலை நோக்கி நின்ற ஐந்து பேர்களும், தங்களுடைய ஆண்மை சட்டென்று உள்வாங்கி, குழந்தைகளுடையதைப் போன்று சிறியதா

வதை அறிந்து ஆச்சரியப்பட்டார்கள். தொட்டாலே எழும்பிக் கொள்ளும் காம பானங்களை கையில் வைத்திருக்கும் பலவான்கள் அவர்கள். இருந்தும் இதனுடைய இந்த அழகு போகத்துக்கு அல்ல என்பதும், ஆராதனைக்கு உரியது எனும் எண்ணமும் தெளிவாகவே அவர்களுக்குள் விளங்கியது. மிருதுவான மேனியில் சுவாசம் நின்றுவிட்டிருந்தாலும் வெதுவெதுப்பான வெப்பம் மட்டும் எஞ்சியிருந்தது. சிறிது சந்தேகப்பட்டு சோதித்தபின் அது சவம்தானென்று தீர்ப்பானதும் திடுக்கிடலோடு பயபக்திகள் இரட்டிப்பாயிற்று. அங்கேயே பெரியதொரு குழி வெட்டினார்கள். பெண் உடலுக்கு காதல் வெளிப்பாடாக சவுந்தரிய மதிப்புகள் உண்டென்று அந்தப் பிணத்தைப் புதைத்துக் கொண்டிருந்தபோது படிப்பறிவு இல்லாதவர்களான அந்த மீனவர்களும் புரிந்துகொண்டார்கள்.

கனத்துத் தொங்கும் தலையுடன் ஒரு நிமிடம் நின்றபின் அவர்கள் அங்கிருந்து திரும்பி நடந்தார்கள். அப்போது யாரோ கூப்பிடுவதுபோல் இருந்தது. அழைத்தது யாராக இருக்கும்... ஐந்து பேர்களும் ஒரே சமயத்தில் அந்த அழைத்த குரலைக் கேட்டுவிட்டு நோக்கியபோது... புதைக்கப்பட்ட பிணம் தங்கள் கண் முன்னாலேயே உயிர்த்துயர்ந்து மேலெழும்பி வந்து கொண்டிருந்தது. ஐந்து பலசாலிகளும் மீண்டும் அங்கு சென்று பிணத்தைப் புதைத்த இடத்தை விட்டுப்போக மனமில்லாமல் அந்த இரவு முழுவதும் மழையில் நனைந்து கடற்கரையிலேயே அமர்ந்திருந்தார்கள்.

மீசான்கற்களைப்போல் ஒதுக்கப்பட்ட ஐந்து பேர்களும் தங்களைக் காப்பாற்றிய பீவியை நினைத்து நேசப் பெருமூச்சுக்களை விட்டார்கள். நட்பின் மறுபக்கம் எனும் வகையில் அப்போதெல்லாம் அவர்கள் கடல்தாயைப் பழித்துதான் வசவுப்பாட்டைப் பாடினார்கள்.

''கடல்தாயே, கடல் தாயே, விபச்சாரி மகளே! விபச்சாரி மகளே!''

கோபத்தை அடக்குவதற்காக கடைவாசலின் அடைப் பலகையும் தாழ்ப்பாள் பட்டையும் கையில் கிடைக்காமையால் கடற்கரை மண்ணை வாரி கடலை நோக்கி எறிந்தார்கள். அப்படிச் செய்யவில்லை என்றாலும் அந்த ஊர்க்காரர்களுக்கு என்னவென்று சொல்லமுடியாத தன்மையில் அந்த இயற்கைச் சக்திகளில் நம்பிக்கை இல்லை. அதையும்விட அவர்களுக்கு அதிக நம்பிக்கை அவர்களை நேசித்தவர்களின் பிரேதங்களின் மேல்தான்.

விடிந்தபின் கடற்கரையில் நுண் மணலுக்கு சர்க்கரை நிறம் வந்ததும், இது பற்றி கேள்விப்பட்டவர்களும் பார்த்தவர்களுமான ஐயிக்காரர்கள் குழுமிவிட்டார்கள். தோத்திரப்பாடல் பாடும் பக்திப் பரவசத்தோடு தான், அந்த மீனவர்கள் முதல்நாள் இரவில் நிகழ்ந்த சம்பவங்களை விவரித்தார்கள். சுற்றிலும் கூடியிருந்த மக்களிடமிருந்து முன்னும் பின்னுமாக கேள்விக் கணைகள் வெளிப்படத் தொடங்கின.

''உங்க தோணி எப்போ மூழ்கிச்சு?''

''நீங்க அஞ்சுபேரும் பிடித்தப்போது கூட அந்தப் பொம்பள உடலு தண்ணியில மூழ்கலியா?''

''ராத்திரி பூராவும் ஏன் கடற்கரையிலேயே இருந்துட்டீங்க?''

''நீங்க அடக்கம் செஞ்சப்போ 'கபரு'* எவ்வளவு உயரம் இருந்தது?''

''இப்போ, எத்தனை அடி உயர்ந்திருக்கு?''

''கபருக்கு உள்ளேயிருந்தா குரல் கேட்டது?''

மக்களின் சந்தேகங்கள் முளைவிட்டு உயர்ந்தபோது பீவிக்காக காத்துக்கொண்டிருந்த அந்த வீரர்கள் பதறிப் போனார்கள்.

''என்னமோ, இதுக்குமேல எங்களுக்கு ஒண்ணும் தெரியாது. அதனால இனிமே எங்ககிட்ட ஒண்ணும் கேட்காதீங்க. ஆனா, இங்கேருந்து போகணும்னு மட்டும் எங்க மனம் சொல்லல. அதனாலதான் இங்கேயே உக்கார்ந்திருக்கோம்.''

திக்கித்திக்கிப் பேசும் குழந்தைகளைப் போல் அவர்கள் சொல்லி நிறுத்தினார்கள். இந்த அண்டம் முழுவதும் நிறைந்திருக்கும்படியான ஒரு தாய்மை ஒலிக்கு முன்னால் முரண்பாடான சம்பவம் நிகழ்ந்து அவர்கள் தையியமற்றவர்களானார்கள். அப்போது மீண்டும் அழைப்புக்குரல் கொடுத்து கபரோடு எழும்பிவந்த பீவி அவர்களை அந்த பகல் வெளிச்சத்திலும் அங்கேயே கட்டிப் போட்டாள்.

சந்தேகப் பேர்வழிகளாக கேள்விகளைச் கேட்கும் ஐயிக்காரர் களுக்கும் தங்களால் பரிகாரம் செய்யமுடியாத ஒரு சீர்கேடு

---

* கபருஸ்தான் என்றழைக்கப்படும் முஸ்லிம்களின் சமாதி.

அனுபவப்படத் தொடங்கியது. அவர்கள் எல்லோரையுமே அடக்கம் செய்யும் விதத்தில் ஆழமான வகையிலும் அசாதாரணமான விதத்திலும் 'கபர்' மேலும் உயர்ந்து நிற்கிறது.

மக்கள் கூட்டத்திலிருந்து யாரோ முஸ்லியாருடைய பெயரை உச்சரித்தபோதுதான் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான ஒரு வழி தெரிந்தது. மணல்பரப்பில் குளம்படிகளுடன் நான்கைந்து திமிர் பிடித்தவர்கள் வாயு வேகத்தில் தேடுவதற்குப் பாய்ந்து வந்தார்கள்.

குழப்பத்தின் உச்சகட்ட எல்லைகளில் வைத்துத்தான் அவரு முஸ்லியாரதானே குத்திக்கொண்டு காயம் ஏற்படுத்திக் கொண்டார். அதன் பிறகு மன அழுத்தம் குறைந்து, கொச்சுண்ணித் தம்புரானின் ஆவாஹனம் நின்றுவிட்டாலும், தன்னுடைய பிரார்த்தனை சக்திகளுக்கு அடிப்படை பலம் கிடைக்காமல் இளகுவதாக அவருக்குத் தோன்றுவதுண்டு. சர்வ சக்தியும் படைத்தவனை இதயம் வெடிக்கும் வகையில் அழைக்கும்போதும், மனத்தின் உள் அறைகளில் உருவமும் குணமும் இல்லாமல் சூனியத்தன்மைதான் எஞ்சியுள்ளது. சூனியத்தன்மையை சரிசெய்வதற்கு முயற்சி செய்தாலும் பள்ளிவாசலின் மாடியிலுள்ள உடைந்த விக்கிரகங்கள் தான் வலிந்து நுழைகின்றன.

தனக்குள் ஏற்பட்ட குழப்ப நிலையால் அல்லாவைத் தொட்டு எழுப்ப சிரமப்படும் அவரு முஸ்லியாரின் அருகில் நான்கைந்து நபர்கள் வந்து விபரம் சொன்னார்கள்.

கடலிலிருந்து வந்த பீவியின் பிரவேசத்தையும் கபரின் மேல் எழும்பி உயரும் அதன் வருகையையும் உன்னத பக்தியையும் கேட்டுக்கொண்டு நின்றபோது முஸ்லியாரின் மனத்தில் ஒரு வெளிச்சம் மத்தாப்பூவாகக் கொட்டியது. ஸ்ரீபிகளுடையதும் அவுலியாக்களுடையதுமான மஸார்கள் உயர்ந்து வருவதுண்டு என்று அவர் கேள்விப்பட்டதுண்டு. ஆனால், தன் சொந்த ஊரில் இப்போதுதான் முதன் முதலாக அப்படி ஒரு சம்பவத்தைப் பற்றி அவர் அறிந்து கொள்கிறார்.

அமைதிப்படுத்தக்கூடிய ஏற்பாடாக பீவியின் திவ்வியப் பிரவேசத்தை அந்த நிமிடத்திலேயே முஸ்லியார் மனதார ஏற்றுக்கொண்டார். செய்தி கொண்டு வந்தவர்களோடும் முத்துக்கள் சிதறும் கண்களுடன் பதறியவாறே அவரும் சேர்ந்து நகர்ந்தார்.

தலைவன் இல்லாமல் குழம்பும் கடற்கரை மக்கள் கூட்டத்துக்கு முஸலியாரின் வருகை ஒழுங்கை அளித்தது. பக்திபூர்வத்துடன் அவர் மஸாருக்கு முன்னே முழங்காலிட்டபோது மக்களும் அதை பின்தொடர்ந்தார்கள். தன்னைத் தெய்வமாக உயர்த்துகின்ற எல்லாவற்றிலும் நேசத்துடனான ஒரு தாய்மை பிம்பம் முஸலியாரின் மனத்தில் நிறைந்து வழிந்தது.

பீவி... என் பீவி...

அவரு முஸலியார் அழுதார். பள்ளிவாசல் மாடியிலுள்ள உடைந்த விக்கிரகங்களின் பிம்பத் துளிகள் பீவியின் தோளிலும் மார்பிலும் மெல்லாம் அடையாளத்தை அளித்தது என்றாலும் பக்திப் பரவசத்தில் அவர் எதையும் அறிந்துகொள்ளவில்லை.

அன்றுமுதல் வருஷாவருஷம் மணல் திட்டிலுள்ள பீவிக்கான நேர்ச்சை விழா அவரு முஸலியாரின் தலைமையில் நடக்கத் தொடங்கியது.

யானையும், அம்பாரியும், பரிசமுட்டும், கொண்டாட்டமுமாக நகரும் ஊர்வலத்தில் முஸ்லிம்களும் இந்துக்களும் சேர்ந்து அணி வகுத்தார்கள். தேங்காய் எண்ணெயும் சந்தனப் பத்தியுமாக ஊரின் மக்கள் மஸாருக்கு முன்னால் தங்கள் குறைகளைக் கூறி ஸ்தோத்திரங்களைச் சொன்னார்கள்.

படிப்படியாக நாள்கள் ஓடின. விளைச்சல்கள் பெருகின. மத நல்லிணக்கம் வளர்ந்தது.

இருபத்து நான்கு

அதுதான் முதல் பீவியின் கதை.

குடத்திலிருந்து எழும்பும் பூதத்தைப்போல் கதையின் பெரும் பள்ளத்திலிருந்து கதாசிரியர் எழுந்துகொண்டார். நான் அற்புதத்தோடு நோக்கியபோது ஸுரபியின் தடாகக் கண்களில் புன்முறுவலின் அலைகள்.

''அப்படின்னா, பீவிங்க மறுபடியும் வன் தேன்றினாங்க?''

நான் சந்தேகத்தைக் கேட்டேன்.

''மகனே, அது எதுக்குள்ளுதானே கேக்கறே? மனுஷனுக்கு நல்லவனாவதற்கான பொறுப்பு இன்னும் வரலை. ஆனா, நல்லவனா ஆவதற்கான எண்ணம் மட்டும் இருக்கு.

''அந்த எண்ணம்தான் பீவிக்களாகவும் பகவதிகளாகவும் வருகின்றன.

''ஒரு பீவியை மறப்பதற்குள் மற்றொரு பீவி. இரண்டாவது பீவியின் கதையை நீ கேட்கவேண்டாமா? சொல்றேன்.''

நான் காது கொடுத்து அமர்ந்து கொண்டிருந்தேன்.

TAM
RAMAN

Ramanunni, Ke. Pi., 1955-
Cukapi conna katai
Alief ADU CIRC
12/08

கேரள மாநிலத்தில் பொன்னானி என்ற ஊரில் 1955-ல் பிறந்தவர் கே.பி.ராமனுண்ணி. பாரத வங்கியில் உதவி நிர்வாகியாகவும், 'மாத்யமம்' என்ற மலையாள வார இதழின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். தற்போது துஞ்சன் நினைவு அறக்கட்டளையின் நிர்வாகியாகப் பணியாற்றுகிறார்.

சிறுகதைத் தொகுப்புகள் ஆறும், நாவல்கள் இரண்டும், கட்டுரைத் தொகுப்புகள் இரண்டும் வெளிவந்துள்ளன. இவற்றுடன் 'சூஃபி சொன்ன கதை' நாவலின் ஆங்கிலம் மற்றும் இந்தி மொழி ஆக்கங்களும் வந்துள்ளன.

'சூஃபி சொன்ன கதை' நாவல், இடச்சேரி மற்றும் கேரள சாகித்ய அகாதெமி விருதுகளைப் பெற்றுள்ளது.

ராமனுண்ணியின் பல சிறுகதைகள் என் மனத்தில் நீங்கா இடம்பிடித்தவை. 'சூஃபி சொன்ன கதை' எனக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. வார்த்தைகளைப் பற்றி பாரம்பரியமான புரிதல் களை புரட்டிப் போடும் மொழி என்னை ஆச்சரியப் படுத்தியது. வார்த்தைகளைக் கட்டுடைத்து விழிப் புணர்வை ஏற்படுத்துவதிலும் கவர்ச்சியூட்டுவதிலு மான தேவை குறித்து டோனி மாரிஸன் சொன்னது தான் நினைவுக்கு வருகிறது. வெறுப்பினா மரியாதைக் குறைவினாலோ நாம் ஒத வைக்கும்படியான வார்த்தைகளுக்கு இந்நா புத்துருவம் அளிக்கிறது. பழைய வார்த்தைக இட்டு நிரப்பலில் வழக்கொழிந்த சொற்க கொண்டு, ராமனுண்ணி கட்டியிருக்கும் இந்நா புதிய பொருள் நிலைகளை ஏற்படுத்தி விடுகிற

- எம்.டி. வாசுதேவன் ந

W8-BFX-180

ISBN 978-81-8368-115-5
9 788183 681155